ஸ்ரீ:

ஸ்ரீஸூக்திமாலா — மலர்–18

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

# சிறிய திருமடல்
# வ்யாக்யானம்

[திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானத்துடன்
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]


பதிப்பாசிரியர்:–

**S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,**

அட்வகேட்

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.



விலை ரூ 1—6—0 (ரூ 1—37 ந. பை)

தபாற்கூலி 25 ந. பை.

ஸ்ரீநிவாஸம் பிரஸ். புத்தூர், திருச்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2896

பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்த

# சிறியதிருமடல் தனியன்

முள்ளிச் செழுமலரோர் தாரான் முளைமதியம்
கொள்ளிக் கென்னுள்ளம் கோதியாமே—வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியை வெட்டி
மருவாளன் தந்தான் மடல்.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SA... TANJORE

---

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த
தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை

(முள்ளிச்செழுமலரோர்) ''சப்தாதி விஷயங்களின் ஸந்நிதியிலே மநஸ்ஸு பரிதபியாமல், பகவத் ப்ராவண்யத்துக்கு அநுகுணமாகத் 'திருமடல்' என்கிற திவ்யப்ரபந்தத்தை உபகரித்தருளுவதே!'' என்று ஆழ்வார் திருவடிகளில் ப்ரேமமுடையாருடைய ஈடுபாடாயிருக்கிறது. அன்றிக்கே, ஸ்வவிச்லேஷத்தில் ஸாம்ஸாரிகவிஷயங்களிலே மநஸ்ஸு பரிதபியாதபடி ஸ்வப்ரஸாதத்தை

---

## திவ்யப்ரபந்தஸாரம்

### சிறியதிருமடல் தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை:—''சப்தஸ்பர்சரூபரஸகந்தங்கள் என்னும் ஐந்து விஷயங்களின் முன்னிலையில் மனமானது கொதிப்பு அடையாமல், பகவானிடம் ஈடுபடுவதற்குத் தகுந்ததாக 'திருமடல்' என்னும் திவ்யப்ரபந்தத்தை உபகரித்தருளுவதே!'' என்று ஆழ்வார் திருவடிகளில் அன்புடையாருடைய ஈடுபாட்டை வெளியிடுவதாயிருக்கிறது இப்பாட்டு. இந்த நிர்வாஹத்தில், பகவத்பக்தர்களுக்கு பகவத்விச்லேஷத்தில் உயிர்தரிக்கைக்கு உபகரணமாயிருக்கிறது இப்பிரபந்தம் என்று தாத்பர்யம். அன்றிக்கே, ஆழ்வாரிடத்திலே ஈடுபட்டவர்கள், அவரைப்பிரிந்து இதரவிஷயங்களில் உழன்று நோவுபடாமலிருக்க, தான் சூடிக்களைந்த முள்ளிச்செழுமலர் மடலைத் தாராமல், தாம் எம்பெருமான் விஷயமாக மடலெடுக்க ஆரம்

பதவுரை:— சேழும்—செழிப்புள்ள, ஓர்—ஒப்பற்ற, முள்ளி மலர் தாரான்—முள்ளிப்பூக்களாலே கட்டப்பட்ட மாலையை உடையவராய், வள்ளல்—கொடையாளியாய், திருவாளன்—(பகவத் கைங்கர்யமாகிற) செல்வத்தையுடையராய், மருவாளன் — (கையில்) பொருந்திய வாளையுடையராய், சீர் கலியன்—கல்யாண குணங்களுடைய கலிகன்றியானவர், முளை மதி அம் கோள்ளிக்கு—உதிக்கிற சந்திரனாகிற அழகிய நெருப்புக்கு, என் உள்ளம்—என்னுடைய நெஞ்சு, கோதியாமே—பரிதபிக்காதபடி, கார் கலியை—கறுத்த கலிதோஷத்தை, வெட்டி—போக்கி, மடல் தந்தான்—'சிறிய திருமடல்' என்னும் திவ்யப்ரபந்தத்தைத் தந்தருளினார்.

---

ப்ரஸாதியாமல் தாம் மடலெடுக்க உபக்ரமித்த பாசுரமான மடலையே தந்துவிட்டாரென்றாகவுமாம்.

வ்யா:-(முள்ளிச்செழுமலரோர்தாரான்) தமக்கஸாதாரணமாய் அத்விதீயமாயிருக்கிற முள்ளிப்பூவைத் தாராகவுடையவரென்னுதல்; "வகுளத்தாரான்" என்னுமாபோலே. அன்றிக்கே, "மலரோ" என்று பாடமானபோது, நம்மபேக்ஷிதமான முள்ளிச் செழுமலர் மாலையையோ தருகிறிலர் என்றாகவுமாம். மலரென்

---

பித்த பிரபந்தமான 'சிறியதிருமடல்' என்னும் மடலையே தந்துவிட்டார் என்றும் நிர்வஹிக்கலாம்.

வ்யா:—(முள்ளிச்செழு மலரோர்தாரான்) திருமங்கை மன்னனாகிற தமக்கென ஏற்பட்டதாய், ஒப்பற்றதாயிருக்கும் முள்ளிமலர் மாலையை உடையவர். "வகுளத்தாரானை" [திருவாசிரியத் தனியன்] என்று நம்மாழ்வாரைச் சொல்லுவதுபோல். (ஓர் தாரான்) ஒப்பற்ற மாலையை உடையவர். தன்னைப்பிரியவிட்டு நோவுபடுத்தும் எம்பெருமானுடைய துளவமாலையும், விச்லேஷத்தில் தாரகரான ஆழ்வார்மாலைக்கு ஒப்பாகாது என்று கருத்து. இது அவதாரிகையில் முதல் நிர்வாஹத்துக்குப் பொருந்தும். இரண்டாவது நிர்வாஹத்துக்குச் சேர 'முள்ளிச் செழுமலரோ தாரான்' என்னும் பாடமுமுண்டு. (முள்ளிச் செழுமலரோ தாரான்) ஆழ்வார்க்கு அடியாரான நமக்கு இனியதான முள்ளிமலர்மடலை ஆழ்வார் நமக்குத் தருகின்றிலர், தம்மை நமக்கடியோமாக அறுதியிட்டிருக்கையாலே. அதற்குப் பிரதியாக மடல் பிரபந்தமாகிற மடலையே தந்துவிட்டார் என்கிறார்.

றது-மாலைக்குபலக்ஷணம். எதுக்காகத் தார்தரவேணுமென்னில்; (முளைமதியம் கொள்ளிக்கென்னுள்ளங் கொதியாமே) முளைத்தெழுந்த திங்கள் விரஹிகளாயிருப்பார்க்குத் தாபஹேதுவிறே. "போந்தவெண்டிங்கள் கதிர்சுடமெலியும்" என்றாரிறே இவரும். நாட்டார்க்கும் அப்படியே, "**चन्द्रश्चण्डकरायते**" (சந்த்ரச்சண்டகராயதே) என்று சந்த்ரமண்டலம் சண்டமண்டலமாயிருக்கை. "**तान्येवारमणीयानि**" (தாந்யேவாரமணீயாநி). முளைமதியங் கொள்ளியென்னுதல், முளைமதியமாகிற கொள்ளியென்னுதல். அங்கொள்ளி—அழகிய கொள்ளியென்னுதல். இது பஞ்ச விஷயத்துக்கு உபலக்ஷணம். "மல்லிகை கமழ்தென்றலீருமாலோ வண்குறிஞ்சி இசை தவழுமாலோ" என்றும், "வாடை தண் வாடை வெவ்வாடையாலோ மேவுதண் மதியம் வெம்மதிய

---

மடல்தரவேண்டியது எதற்காகவெனில்,—(முளைமதியம் கொள்ளிக்கென்னுள்ளங் கொதியாமே) முளைத்தெழுந்த சந்திரன் அன்புடையாரைப்பிரிந்தவர்களுக்குத் தாபத்தை அளிக்குமன்றோ. ஆகையால் முளைமதியமாகிற கொள்ளிக்கட்டை என்கிறார். இவ்வாழ்வாரும் "போந்த வெண் திங்கள் கதிர் சுடமெலியும்" [பெரிய திரு 2-7-3] என்று விரஹதசையில் தபிக்கும் சந்திரனை சூரியனாகவே அருளிச்செய்தாரன்றோ. மற்றுள்ள உலகினர்க்கும், "சந்த்ரச் சண்டகராயதே" [சந்திரன் தபிக்கும் கிரணங்களையுடைய சூரியனாகிறான்] என்கிறபடியே சந்திரமண்டலம் சண்ட (சூரிய) மண்டலமாயிருக்கும்.

"யாநிஸ்மரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே।
தாந்யேவாரமணீயாநி ஜாயந்தே மே தயா விநா ॥ [ரா-கி 1-70]

[பிராட்டியோடிருக்கும்போது அழகியவையாயிருந்தவை, அவளைப் பிரிந்தபோது அழகற்றவையாகின்றன] என்றானன்றோ ராமபிரானும். (முளைமதியங் கொள்ளி) முளைமதியமாகிற கொள்ளி என்றும் கொள்ளலாம்; முளைமதியாகிற – அம்—அழகிய கொள்ளியென்றும் கொள்ளலாம். இங்கு 'மதியம்' என்று சந்திரனைச் சொன்னது, விரஹத்தில் பாதிப்பவையான சந்திரன், மல்லிகை, குறிஞ்சிப்பண், வாடைக்காற்று, மலர்ப்பள்ளி என்னும் ஐந்து விஷயங்களுக்கு எடுத்துக்காட்டு. "மல்லிகை கமழ் தென்றலீருமாலோ வண்குறிஞ்சி இசைதவழுமாலோ" [திருவாய் 6-9-1] என்றும், "வாடை தண்வாடை வெவ்வாடையாலோ மேவுதண்மதியம்

மாலோ மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ" என்றாயிற்றே விச்லேஷத்தில் விஷயங்களின் பாதகத்வாகாரங்களிருப்பது. அது தான் விஷயாநுகுணமாயிறே இருப்பது. ஆகையால் குளிர்ந்த சந்த்ரனைக்கொள்ளிபோலே கண்டு என் ஹ்ருதயம் பரிதபியாதே, ஆழ்வார் பண்ணின உபகாரமே! (வள்ளல் திருவாளன் சீர்க்கலியன்) வள்ளல்—பரமோதாரர்; திருவாளன் - பகவத் ப்ரத்யாஸத்தியாகிற ஐச்வர்யத்தையுடையவர். (வள்ளல் திருவாளன்) இவ்வௌதார்யம் பண்ணுகைக்கு உடலான ஐச்வர்யம். (சீர்க்கலியன்) பகவத் பக்த்யாதி குணங்களையுடையவர். (கார்க்கலியை வெட்டி) கலிகன்றியாகையாலே அஜ்ஞாநாவஹமான

---

வெம்மதியமாலோ மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ" [திருவாய் 6-9-4]. என்றுமன்றோ நம்மாழ்வார் பிரிந்தாரை பாதிக்கும் விஷயங்களைக் காட்டினார். சப்தாதி விஷயங்கள் ஐந்தாயிருப்பதுபோலே இவையும் ஐந்தாயிருக்கிறபடி. "முன்னைமதியங்கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே முள்ளிச்செழுமலரோதாரான்" என்று இரண்டாம் நிர்வாஹத்தில் முன்னையும், "முன்னைமதியம் கொள்ளிக் கென்னுள்ளம் கொதியாமே தந்தான் மடல்" என்று இரண்டு நிர்வாஹத்திலும் பின்னையும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

(முன்னைமதியம் கொள்ளிக்கென்னுள்ளம் கொதியாமே தந்தான் மடல்) குளிர்ந்த சந்திரனைக் கொள்ளிபோலே கண்டு என் மனம் பரிதபிக்காதபடி ஆழ்வார் பண்ணின உபகாரமிருந்தபடியென்! இவ்வுபகாரம் செய்தவர்தான் யாரென்னில்: (வள்ளல் திருவாளன்) வள்ளல்—சிறந்த கொடையாளி; பகவானும் உதவாத தசையில் உதவினவராகையாலே, திருவாளன்—பகவத் கைங்கர்யமாகிற செல்வமுடையவர். (வள்ளல் திருவாளன்) வள்ளலென்றால், வாரிவழங்குவதற்குச்செல்வம் வேணுமே; அச்செல்வத்தையும் உடையவர் என்கிறார். செல்வமிருந்தாலும் அதை வாரிவழங்கத்தகுந்த தயாளகுணம் வேணுமே வள்ளலாகைக்கு; அதுவும் உண்டென்கிறார்,—(சீர்க்கலியன்) தயாதிகுணங்களை உடையவரான கலிகன்றி. மடல் தருவதாகில், முட்களை வெட்டி மடலைப்பறிக்கவேணுமே என்னில்,—(கார்க்கலியை வெட்டி) கறுத்ததான கலியாகிற முள்ளை வெட்டித்தந்தார் என்கை. கறுத்ததாகையாவது,— அஜ்ஞானவிருளைத் தருவதாயிருக்கை. அஜ்ஞானமளிக்கும் கலியை வெட்டினார் கலிகன்றியாகையாலே என்று கருத்து. முள்ளை வெட்ட வாள் வேணுமே;

கலியைக் கடிந்து. கலிதோஷமிறே காமபரவசராகிறது. அப்படி அப்ராப்த விஷயத்தில் காமம் வாராதபடி. (மருவாளன் தந்தான் மடல்) திருக்கையிலே மருவியிருக்கிற வாளையுடையவர், பகவத் . காமத்துக்கநுகுணமான திருமடலென்கிற திவ்ய ப்ரபந்தத்தை உபகரித்தருளினார். (மருவாளன்) பகவதநுபவத்திலுண்டான போக்யதை வடிவில் தொடைகொள்ளலாம்படியானவர். "இவளந்தண்டுழாய் கமழ்தல்". மரு—பரிமளம். மருவு — மருவுதலாய், எம்பெருமானைக் கிட்டுகையை ஸ்வபாவமாக உடையவரென்றுமாம். அன்றிக்கே, சேதநரைக்கிட்டி ஆளுகிறவரென்றுமாம். ஆகையால் சேதநரைத் தம்படியாக்கவேண்டி மடலை உபகரித்தருளினார். மாலையைத் தாராதே மடலைத்தந்துவிட்டாரென்றாகவுமாம்.

சிறியதிருமடல் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

---

அது இவரிடமுண்டோ? என்னில்,—(மருவாளன்)மருவிய வாளை உடையவர், கையிலே பொருந்தியிருக்கும் வாளையுடையவர். 'வாள்' என்றது ஸ்வாபதேசத்தில் ஞானத்தைக் குறிக்கும். மெய்ஞ்ஞானக்கத்தியாலே அஞ்ஞானவிருளை வெட்டினார் என்று தாத்பர்யம். (மருவாளன்) 'மரு' என்று பரிமளத்தைச் சொல்லுமாகையாலே, பகவதநுபவமாகிற நறுமணம் வடிவிலே முகரலாம்படியிருப்பவர். "இவளந்தண்துழாய்கமழ்தல்" [திருவாய் 8—9—10] என்ற திருவாய்மொழி காண்க. (மருவாளன்) மருவுதல் கிட்டுதலாகையாலே பரமபுருஷனைக் கிட்டுவதையே ஸ்வபாவமாக உடையவர் என்றும் பொருள் கொள்ளலாம். அன்றிக்கே, சேதனரை மருவி—தானே மேல் விழுந்து அணுகி—ஆள்கிறவர் என்றுமாம். ஆகையால் சேதனரை முள்ளிச்செழுமலர்த் தாருடைய தம்மைப்போல் ஆக்குவதற்காக மடலை அருளினார். இரண்டாவது நிர்வாஹத்தில், "மாலையைத் தாராமல் மடலைத் தந்துவிட்டார்" என்பதாகவும் கொள்ளலாம்' இதன் கருத்து பின்வருமாறு:— ஆழ்வார்க்கு அடியாராகையாலே இவர்கள் ஆழ்வார் சூடிக்களைந்த முள்ளிச்செழுமலர்மாலையை அபேக்ஷிக்கிறார்கள். "அன்னையும் அத்தனும் என்று அடியோமுக்கு இரங்கிற்றிலள். [பெரியதிரு 3—7—7] என்னும் இவ்வாழ்வார் இவர்களுக்கு அடியாளாகத் தன்னை அறுதியிட்டிருக்கையாலே, சூடிக்களைந்த முள்ளிச்செழுமலர் தாராமல் மடல் பிரபந்தத்தைத் தந்துவிட்டார் என்று கருத்து.

திவ்யப்ரபந்தஸாரம் தனியன் வ்யாக்யானம்

முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

# சிறிய திருமடல் வ்யாக்யானம்

ப்ரவேசம்

கீழ் அனுபவித்தது ஜ்ஞாநாநுபவமாகையாலே பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அது கிடையாமையாலே திருக்குடந்தையிலே சரணம்புக்கார் திருவெழுகூற்றிருக்கையிலே; இப்படி சரணம் புக்கவளவிலும் நினைவு பூரியாமையாலே, இதுக்கு ஹேதுவென் என்னில்; எம்பெருமான் தான் அஜ்ஞன் அசக்தன் அப்ராப்தனாய்த் தாழ்க்கிறதன்று; இத்தலையில் கர்த்தவ்யசேஷமுண்டாய்த் தாழ்க்கிறதன்று. இனி விலம்பஹேது இரண்டு

---

திவ்யப்ரபந்தஸாரம்

## சிறியதிருமடல் வ்யாக்யானம்

ப்ரவேசம்

திருக்குறுந்தாண்டகத்திலே "என மனத்து வந்த விதியினைக்கண்டு கொண்ட தொண்டனேன் விடுகிலேனே" [1] முதலான இடங்களிலே மானஸமான ஜ்ஞாநத்தினால் பரமபுருஷனைக் கண்டு அனுபவித்தார். வெளியிந்திரியங்களாலே அவனைக்கண்டு கட்டித் தழுவிக்கொண்டு பரிமாறவேண்டும் என்று ஆசைகொண்டு, அது கிடைக்காமையாலே அது கிடைக்கைக்காக திருவெழுகூற்றிருக்கையிலே, "செல்வம் மல்குதென் திருக்குடந்தை, அந்தணர் மந்திரமொழியுடன் வணங்க, ஆடரவமளியில் அறிதுயிலமர்ந்த பரம நின்னடியிணை பணிவன்" என்று சரணம் புகுந்தபோதும் வெளியிந்திரியங்களால் அனுபவிக்கவேணும் என்னும் எண்ணம் ஈடேறாமையாலே, இதற்குக் காரணமென்ன? என்று ஆராய்ந்தார்,—ஸர்வேச்வரனான பரமபுருஷன் இவர் நிலையை அறியாதவனாகவோ, இவர் இருக்குமிடம் வர சக்தியில்லாதவனாகவோ, இவருக்குத் தகாதவனாகவோ இருக்கையால் காலம் தாழத்துகிறானல்லன்;

தலைக்குமின்றிக்கேயிருக்கச் செய்தே இனித்தாழ்க்கிறது கூடல் செய்ய நினையாமையாலே; ஆனபின்பு "இத்தலையையழித்தாகிலும், முகங் காட்டுவித்துக்கொள்ளுவோம்" என்கிற த்வரையின் மிகுதியை, க்ருஷ்ணாவதாரத்தில் குடக்கூத்திலே அகப்பட்டு அவனைக் கிடையாமையாலே மடலெடுக்கத்துணிந்தாளொரு பிராட்டியுடைய பாசுரத்தாலே ஸ்வதசையை ஆவிஷ்கரிக்கிறார்.

மடலாவது "तुल्यशीलवयोवृत्तां तुल्याभिजनलक्षणां" (துல்ய சீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம்) என்கிறபடியே இருவரும் ஒத்த பருவத்தராய், பும்ஸ்த்வத்துக்கேகாந்தமான அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்கிற குணங்களாலே அவனும் பூர்ணனாய், ஸ்த்ரீத்வத்துக்கேகாந்தமான நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற குணங்களாலே இவளும் பூர்ணையாய்,

---

சரணம் புகுந்த இவர் இனிச் செய்யவேண்டியதொன்றில்லாமையாலே அத்தாலும் தாமதமில்லை. தாமதத்திற்குக் காரணம் இருவரிடமும் இல்லாமலிருக்க, தாமதம்செய்வது இவரோடு கூடுவதென்று அவன் நினைக்காமையாலேயே. ஆகையால் "தன் ஸ்வரூபமாகிற பாரதந்திரியத்தை அழித்துக்கொண்டாவது அவனை வரவழைத்துக்கொள்வோம்" என்கிற வேகம் பிறந்து, அவ்வேகத்தின் மிகுதியை, கண்ணனாயவதரித்தபோது குடங்களையெடுத்து ஆடின கூத்திலே ஈடுபட்டு, அவனை அடையமுடியாமையாலே மடலெடுக்கத் துணிந்த ஒரு பிராட்டியுடைய பாசுரத்தாலே தன் நிலையை வெளிக்காட்டுகிறார் இப்பிரபந்தத்தில்.

'மடல்' என்பது யாதெனில்: "துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம்" [ரா-ஸு 16—5] [ஒத்த குணம், வயது, ஒழுக்கம் ஆகியவற்றை உடையவளும், ஒத்த குலம், அழகு ஆகியவற்றையுடையவளுமான சீதைக்கு ராமபிரானே தகுந்தவர். இவருக்கும் கறுத்த கண்களையுடைய அவளே தகுந்தவள்.] என்கிறபடியே நாயகநாயகிகள் இருவரும் ஒத்த பருவத்தினராய், ஆண்மைக்குரிய அறிவு, மதிப்பு, ஆராய்ச்சி, உறுதி ஆகிய குணங்களாலே நாயகனும் நிறைந்தவனாய், பெண்மைக்குரிய நாணம் (லஜ்ஜை), மடம் (பவ்யதை), அச்சம் (பயம்), பயிர்ப்பு (பிரிவில் மேனி வெளுப்பது) என்னும் குணங்களாலே நாயகியும் நிறைந்தவளாய் இப்படி இருவரும் நிறைந்தவர்களாயிருக்கும்போது

இப்படி இருவரும் குறைவற்றவர்களாயிருக்க, தோழிமாரும் தானுமாக உத்யாநத்திலே பூக்கொய்யவென்று புறப்பட, அவனும் வேட்டைக்கென்று புறப்பட்டுச் சோலையிலே புகுர, தைவயோகத்தாலே கூடினதாகையாலே உயிர்த்தோழியுங்கூட அந்யபரையானவளவிலே யாத்ருச்சிகமாக இருவருக்கும் த்ருஷ்டி பந்தம் பிறந்து, அதுவேயடியாக ஸம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமாக, "உந்மஸ்தகரஸமாகக் கலந்த கலவியாகையாலே நற்கேட்டிலே இரண்டு தலைக்கும் அழிவுவரும்" என்று இத்தை முடிய நடத்தக் கடவதாகப் பார்த்த தைவந்தானேபிரிக்க, இருவருடைய பந்துக் களும் "புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் நினை யும் நீர்மையதன்று" என்னும்படி இருவர்வடிவிலேயும் வேறு பாடுகண்டு இருவரையும் காவல்செய்ய, அதுவேயடியாக இவர்க ளாற்றாமை சதசாகமாகப் பணைக்க, எதிர்த்தலையைக் கிடையாமை யாலே மற்றைத்தலை செய்யும் ஸாஹஸ ப்ரவ்ருத்தியாயிற்று மடலாவது.

---

நாயகியானவள் தோழிகளும் தானுமாய் தோட்டத்தில் பூப்பறிப்பதற்காகப் புறப்பட, நாயகனும் வேட்டைக்கென்று புறப்பட்டு இச்சோலைக்குள் புக, இச்சேர்த்தியானது விதிவசத்தாலே கூடியதாகையாலே உயிர்த்தோழியும் விதிவசத்தால் வேறு காரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது, நாயக நாயகிகள் இருவரும் கண்ணொடுகண் நோக்கிக்கொள்ள, அதுவே காரணமாகக்கலவி ஏற்பட, "இன்பம் தலைமண்டையிடும்படியாக ஏற்பட்ட கலவியாகை யாலே இது நெடுங்காலம் நடந்ததாகில் வெள்ளக்கேட்டால் பயிர்கள் அழிவதுபோலே, நாயகநாயகியர் இருவரும் இன்பமிகுதியைத் தாங்கமுடி யாமல் அழிவர்; ஆகையால் பொறுக்கப்பொறுக்க அநுபவிக்கச்செய்ய வேணும்" என்று இவர்களுடைய சேர்த்தியை முடிவுவரையில் இடையூ றில்லாமல் தலைக்கட்டநினைத்த தெய்வமே இவர்களைப் பிரிக்க, நாயக நாயகிகள் இருவருடைய உறவினர்களும் "புனையிழைகளணிவும் ஆடை யுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று" [திருவாய் 9-8-5] என்கிறபடியே இருவர் வடிவிலும் வேறுபாடு கண்டு, இருவரையும் காவலில் வைக்க, அதுவே காரணமாக இவர்கள் பிரிவாற்றாமை நூறு யிரம் மடங்கு அதிகரிக்க, எதிர்த்தலையைக் கிடைக்கப்பெறுமையாலே நாயகனோ நாயகியோ செய்யும் ஸாஹஸச் செயல் மடலாகும்.

இவர்கள் மடலெடுக்கிறதுக்கு ப்ரயோஜந மென்னென்னில் இவ்வுபக்ரமத்தைக்கண்டு இருவருடைய பந்துக்களும் கூட்டுதல்; அன்றியே, ராஜாக்கள் கூட்டுதல்; அன்றியே இருவர்பந்துக்களும் இருவரையுங் கைவிட, §அலக்குப்போர்போலே ஒருவர்க்கொருவர் தஞ்சமாய்க் கூடிப்போதல்; அன்றிக்கே, "மடலெடுத்து எதிர்த்தலைப் பெருமையாலே இத்தலைமுடிந்தது" என்னு மேற்றத்தைப் பெற்றுப்போதல்; இவைப்ரயோஜநமாக, *வளவேழுலகில் தங்களயோக்யதையை அநுஸந்தித்து அகலும் ஸ்வ

ஸாஹஸச்செயலாவது என்னென்னில்: எதிர்த்தலையின் ஸ்வரூபரூப குணவிபூதிகளை அழிக்க முற்படுவது. அதாவது,—நாயகனை ஒரு படத்திலே எழுதி, வைத்தகண் வாங்காமல் அதனைப்பார்த்துக்கொண்டு, நெய்யுண்ணுமல் பாலுண்ணுமல், நீராடிமையிட்டெழுதாமல் குதிரை யுருவிலேயான பனைமடலைப் பற்றிக்கொண்டு, அப்பனைமடற்குதிரையிலே உலகெல்லாம் ஊர்ந்து செல்வதாக பாவித்துக்கொண்டு, தலைவிரிகோலமாய், "இன்னான் —(பெண்ணுயிருந்தால் இன்னாள்)— என்னைக் கைவிட்டனன். அவன் அருளற்றவன்; அவன் கூடியன்; கொடியன். அவன் செய்த தீச்செயல்களுக்கோர் எல்லையில்லை" என்றெல்லாம் தெருத்தெருவாகக் கதறிக்கொண்டு, கேட்டாரெல்லாரும் நடுங்கி யிரங்கும்படியாகத் திரிந்து உழல்வதுதான் மடலூருகையாவது. எதிர்த்தலைக்குள்ள ஸ்வரூபரூபகுணவிபூதிகளை இல்லைசெய்வது அவற்றை அழிப்பதேயாகுமன்றே.

இந்த நாயகநாயகியர் இக்கொடுஞ்செயலாகிய மடலெடுப்பதைச் செய்வதற்குப் பயனென்ன? எனில்: இவர்கள் மடலெடுக்க ஆரம்பிப்பதைக்கண்டு நாயகநாயகியர் இருவருடைய பந்துக்களும் இவ்விருவரையும் சேரவைக்கக்கூடும். அல்லது மடலெடுப்பதைக் கேள்வியுற்ற அத்தேசத்து அரசன் சேரவிடக்கூடும். அன்றிக்கே இருவர் உறவினர்களும் இருவரையும் கைவிட, §ஆயுதக்குவியல்போலே ஒருவருக்கொருவர் தாரகராய்க் கூடிப்போகலாம். இவையொன்றுமில்லாவிடினும், "மடலெடுத்தபின்பும் காதலனை —(அல்லது காதலியை)— பெறமுடியாமையால் நாயகி —(அல்லது நாயகன்) முடியநேரிட்டது" என்னும் பெருமையே பிரயோஜனமாகும். "வளவேழுலகில்" [திருவாய் 1–5] என்னும்

§அலக்குப்போராவது:— வீரர்கள் கத்தி, ஈட்டி முதலான தங்கள் ஆயுதங்களை ஒன்றுக்கொன்று தாரகமாக நிறுத்திவைப்பதாலேற்படும் ஆயுதக்குவியல்.

பாவரான இவர்கள் இஸ்ஸாஹஸப்ரவ்ருத்தியில் இறங்குவானேனென்னில்; மடலெடுத்து அத்தலையை அழிக்கப் புகுகிறார்களல்லர்களே; "ஊர்வன்மடல்" என்று "चापमानय सौमित्रे" (சாபமாநய ஸௌமித்ரே) என்று வில்லைக்காட்டி வேலையை அச்சமுறுத்தினாற்போலே, அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளுகிறவர்களாகையாலே, தங்கள் துணிவைச்சொல்லவே அவன் வருமென்றுசொல்லுகிறார்களத்தனையல்லது மடலெடுக்கிறார்களன்றிறே.

---

திருவாய்மொழியில் நம்மாழ்வாரைப்போலே தங்கள் தாழ்மையை நினைத்து, மிகவுயர்ந்த பொருளான எம்பெருமானை நாம் அணுகினால் அவனுக்குத் தாழ்வாகும் என்னும் எண்ணத்தாலே அவனை விட்டு அகலும் இயற்கையை உடைய இவ்வாழ்வார்கள் இக்கொடுஞ்செயலிலே ஈடுபடலாமோ? எனில்: கடைசிவரையில் மடலெடுத்து எம்பெருமானுடைய ஸ்வரூபாதிகளை அழிக்கப்போகிறவர்களல்லவே இவர்கள். "மாசறுசோதி" [திருவாய் 5—3] என்னும் திருவாய்மொழியிலே

"ஆணையேன் தோழி உலகுதோறு அலர்தூற்றி, ஆம்
கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே" என்றும்,
"யாம் மடலூர்ந்தும் எம் ஆழியங்கைப்பிரானுடை,
தூமடல் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்" என்றும்

மடலூர்வதாக நம்மாழ்வார் பயமுறுத்தியதுபோலே இவரும் "ஊராதொழியேன் நான் வாரார்பூம் பெண்ணைமடல்" என்றும் "உலகறிய ஊர்வன் நான் மன்னிய பூம்பெண்ணை மடல்" என்றும் பயமுறுத்தி அவனை வரவழைக்க நினைத்தாரேயொழிய மடலூர்ந்து முடிக்கவில்லையே.

"சாபமாநய ஸௌமித்ரே! ஶராம்ச்சாஶீவிஷோபமாந்।
ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" [ரா-யு 21-22]

[லக்ஷ்மணா! வில்லையும் ஆசீவிஷத்தையொத்த அம்புகளையும் எடுத்துவா. கடலை வற்றச்செய்கிறேன்] என்று ஸ்ரீராமபிரான் அம்பைக்காட்டி ஆழ்கடலை அச்சமுறச்செய்த செயல்போன்றது இதுவும். அவனைப்பெற வேணுமென்பதில் தங்களுக்குள்ள உறுதியை உணர்த்தினால் அவன் தானாகவே ஓடிவருவான். என நினைத்துச் சொல்லுகிறார்களேயொழிய மடலெடுத்து முடிக்கக்கூடிய ப்ரக்ருதிகளல்லரே இவர்கள். தங்கள்

**அயோக்யரென்று அகன்றதும், விலக்ஷண வஸ்துவென்று அநுஸந்தித்திறே; குணாதிக்யமும் வைலக்ஷண்யமும் அநுஸந்தித்த படியாலேயிறே இவர்களாற்ற மாட்டாதே வழியல்லாவழி போயாகிலும் பெறவேணுமென்று மேல்விழுகிறது.**

**இவர்களுக்குமொரு ஸ்வபாவமுண்டு;—தங்களை அநுஸந்தித்தபோது அயோக்யரென்று அகலுவர்கள். அவனை அநுஸந்தித்ததுபோது தங்களையும் பாராதே மேல்விழுவர்கள்; அத்தலையை அநுஸந்திக்கச்செய்தே இத்தலை தோன்றுதிறே; அத்தாலே மேல்விழுகிறார்கள்.**

**ஆனால் அவர்கள் பிராட்டிமார் பேச்சைப்பேசுவானென்னென்னில், ஆத்ம ஸ்வரூபவைலக்ஷண்யத்தாலும், அநந்யார்ஹசேஷத்வாதிகளாலும், அந்வயத்தில் தரிக்கையாலும், வ்யதிரேகத்தில் தரியாமையாலும், ஜ்ஞாநம் விசதமானால் இவ்வாத்ம வஸ்துவும் பிராட்டி**

---

தாழ்வை நினைத்து அகன்றதும், பகவத்விஷயத்தின் சிறப்பை அநுஸந்தித்தன்றோ. அந்த குணப்பெருமையையும் விஷயச்சிறப்பையும் அனுஸந்தித்தபடியாலன்றோ அதைப் பிரிந்திருக்கப் பொறுக்கமாட்டாமல் இவர்கள் ஸ்வரூபத்துக்குத் தகாத நோன்பு, மடல் முதலான செயல்களில் ஈடுபட்டு அவனைப்பெற விரும்புகிறது.

விஷயச்சிறப்பு ஒன்றே அகல்வதற்கும், கிட்டுவதற்கும் காரணமாமோ? என்னில், விஷயச்சிறப்பைப் பார்த்துவிட்டு, தங்கள் தாழ்மையையும் அநுஸந்திக்கும்போது 'நாம் கிட்டலாகாது' என்று அகலுவர்கள். அவனை அநுஸந்திப்பதிலேயே ஈடுபட்டிருக்கும்போது தங்கள் தாழ்வை நினையாமல் அவனை அனுபவிக்க முற்படுவர். ஆராவமுதமான அவனை அனுபவிக்கும்போது தங்கள் தாழ்மை தோன்றுதன்றோ. அதனாலே மேல் விழுகிறார்கள்.

ஆயினும், தாமான தன்மையிலேயிருந்து பேசாமல், பிராட்டிமார் தசையடைந்து பேசுவானென்? என்னில்: ஆத்மாவின் ஸ்வரூபநிரூபக தர்மங்கள் பெண்களினுடைய அஸாதாரணகுணங்களைப்போலே சிறந்து விளங்குகையாலும், முக்கியமாக அநந்யார்ஹசேஷத்வம், அநந்யசரணத்வம், அநந்யபோகத்வம் என்னும் பதிவிரதைக்குரிய குணங்கள் ஆத்மாவுக்கும் பரமபுருஷனைக்குறித்து உண்டாகையாலும், விசேஷித்து ஆழ்

மாரோடொக்குமாகையாலும், இவர்களும் மயர்வறமதிநல மருளப் பெற்றவர்களாகையாலே பிராட்டி பேச்சாலே பேசுகிறார்கள்.

"கடலன்ன காமத்தராகிலும் மாதர்மடலூரார் மற்றையார் மேல்" என்று ஸ்த்ரீக்கள் புருஷர்கள்மேல் மடலூரக் கடவதல்ல வென்று லக்ஷணங் காட்டிக்கிடக்கச் செய்தே இப்பிராட்டி மடலூருவானென்னென்னில்; ஆசையொருதலைக்கேயாய் ஒருதலை லக்ஷணப்படியே ஆசையை மர்யாதையிலே நடத்தலாமாகில் அது செய்யலாவது; ஆசைமிக்கார் மடலூரு மத்தனையென்னும் ஆர்ய மர்யாதையாலே மடலூர உபக்ரமிக்கிறார்கள்.

பின்னைத் தமிழர் செய்ததுக்கு ஹ்ருதயமென்னென்னில்; ராஜாஜ்ஞையிலே ஆசையை வரம்புகட்டப்பார்த்ததுக்கு ஹ்ருதயமேது என்றறிந்ததில்லை.

---

வார்களைப்போன்ற மஹான்கள் எம்பெருமானோடு கூடினால் தரித்து நின்றும், பிரிந்தால் தரியாமலுமிருப்பதாலும், முக்திதசையில் ஞானம் விரிந்தால் இவ்வாத்மவஸ்துவும் பிராட்டிமாரைப் பெரும்பாலும் ஒத்திருக்கையாலும், இவ்வாழ்வார்கள் இவ்வுலகிலிருக்கும்போதே மயர்வற மதிநலமருளப்பெற்றவர்களாகையாலே இங்கேயே பிராட்டிமாரோடு ஸாம்ய முண்டாகையாலும் பிராட்டி பேச்சாலே பலகாலும் பேசுகின்றனர் ஆழ்வார்கள்.

"கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார்மேல்" என்றும், "கடலன்ன காமமுழந்து மடலேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்" [திருக்குறள்—1137] என்றும் தமிழ்பிரபந்தங்களிற் சொன்ன படியே ஸ்திரீகள் புருஷர்கள்மேல் மடலூரலாகாது என்று லக்ஷணம் சொல்லியிருக்கும்போது, பிராட்டி தசையை அடைந்த இவர் மடலூர லாமோ? எனில்: ஆண்பெண் இருவரில் பரம்பில்லாத ஆசை ஆண் களுக்கேயாய், பெண்களுக்கு லக்ஷணவரம்புக்குட்பட்டு ஆசை அளவு பட்டுச் செல்லலாமாகில் அது நடக்கலாம். ஆனால் அப்படியில்லையே. ஆண் பெண் இருபாலர்க்கும் ஒக்க ஆசை வரம்புகடந்து செல்வதை யன்றோ காண்கிறோம். ஆகையால், ஆசைமிகுந்தவர் யாராயினும் மட லூரலாம் என்னும் வடமொழி மரியாதையையொட்டி மடலூர ஆரம் பிக்கிறாள் இப்பிராட்டி.

மயர்வறமதிநல மருளப்பெற்றவர்கள், அறிவுடையாராகில் அநுஷ்டிக்கக்கடவதல்ல, என்று அவர்கள் நிஷேதித்த காமத்தை அநுஷ்டிக்கிறார்களோவென்னில்; அப்படி நிஷேதித்த காமமல்ல. "निदिध्यासितव्यः" (நிதித்யாஸிதவ்ய:) என்று வேதாந்தத்திலே விதிக்கிற பகவத்பக்தியைக் காமமென்கிறது; ஆகையாலே விஹிதமான வ்ருத்தி(பக்தி)யைக் காமமென்கிறது. "மடலெடுக்கையாவது தன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்கும் அவனுடைய புருஷோத்தமத்வத்துக்கும் சேருவதொன்றன்று; அவன் தானே வரக்காண்கைகாண் ஸ்த்ரீத்வமாவது" என்று விலக்குகிறவர்களைக் குறித்து, "மநோஹாரி சேஷ்டிதங்களிலே அகப்

---

ஆணையினும் பெண்ணையினும் ஆசை வரம்பு மீறுவது இயற்கையாயிருக்க, தொல்காப்பியம் முதலிய நூல்களில் தமிழர் வரம்புகட்டியதற்குக் கருத்தென்ன? எனில், அரசராணையாலே ஆசையைக்கட்டுப்படுத்துவதுபோலே, லக்ஷணவரம்புகட்டிக் கட்டுப்படுத்த நினைத்ததற்குக் கருத்து என்னவென்று அறிந்தோமில்லை. "மாறுெக்கின் அன்னநடையார் அலரேச ஆடவர்மேல், மன்னுமடலூராரென்பதோர் வாசகமும் தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம் மன்னும் வடநெறியே வேண்டினோம்" என்று இவ்வாழ்வாரே பெரியதிருமடலில் அருளிச்செய்கையாலே தமிழர் பெண்ணைசைக்குக் கட்டுப்பாடு ஏற்படுத்தியது ஆசையின் இயற்கையை அறியாமல் செய்ததே என்று கொள்ள வேண்டும்.

மயர்வறமதிநலமருளப்பெற்ற இவ்வாழ்வார்கள், "அறிவுடையவர்களாகில், அவர்கள் காமநெறியைக் கடைப்பிடிக்கமாட்டார்கள்" என்று அறிவாளிகள் தடைசெய்த காமத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் போலிருக்கிறதே என்னில்: இவர்கள் இப்பிரபந்தங்களிலே பற்றியிருப்பது அப்படித் தடைசெய்யப்பட்ட ப்ராக்ருதகாமமன்று. "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" [ப்ருஹ 4-4-5] [கேட்கத்தக்கவனும், நினைக்கத்தக்கவனுமான பரமாத்மா தியானிக்கத்தக்கவன்; காணத்தக்கவன்] என்று உபநிஷத்துக்களிலே விதிக்கிற பகவத்பக்தியை இங்கு காமமென்கிறது. "அத்யந்த பரதந்திரையான உன் பெண்மைக்கும், அவனுடைய பேராண்மைக்கும் நீ மடலெடுக்கும் காரியம் ஒட்டாது. அவன் தானே வரக்கண்டிருக்கைதான் பெண்மைக்குரியது" என்று விலக்குகிற உறவினரைக் குறித்து, "அப்பரமபுருஷனுடையதான நெஞ்சையிழுக்கும்

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# சிறியதிருமடல்

காரார்வரைக்கோங்கைக்கண்ணார் கடலுடுக்கை

பதவுரை:—கார் ஆர் வரை கொங்கை—மேகங்கள் நிறைந்துபடியப் பெற்ற (திருமாலிருஞ்சோலையும் திருவேங்கடமுமாகிற) திருமலைகளை முலையாக உடையளாயும், கண் ஆர் கடல் உடுக்கை—பரந்த கடலைச் சேலையாகவுடையளாயும்,

---

பட்டு அபஹ்ருதசித்தையானேன்; 'அவன் தானே வருகிறான், அவனுக்கு நிறக்கேடு விளைக்கவொண்ணாது' என்கிறவிதவும் செய்தற்றது. இனி மடலெடுத்து அவனைப்பெற்றல்லது தரியேன்" என்கிற தன் துணிவை, (விலக்குகிற பந்துக்களுக்குச்) சொல்லுகிறாள். மடலெடுக்கப்புக்கவள் விலம்பிக்கிறதுக்கு ஹேது வென்னென்னில்; ஹேதுக்களாலே பந்துக்களை இசைவிக்கைக்காகவும் குணாதிக வஸ்துவைக்கடுக அழிக்கலாகாதென்றும் வருகைக்கு அவகாச ப்ரதாநம்பண்ணுகைக்காகவும் விலம்பிக்கிறாள்.

வ்யா:—(காரார்வரையித்யாதி) "தாய்மார் தோழிமார் எல்லாரும் "இத்துணிவு ஆகாதுகாண்" என்று விலக்கா நிற்கச்செய்தே

---

செயல்களிலே ஈடுபட்டு நெஞ்சிழந்தேன். 'அவன் தானே வரட்டும். நாம் மடலெடுப்பது முதலான தகாத செயல்களைச் செய்து அவனுக்கு குணஹானியை விளைக்கக்கூடாது' என்னும் நிலையிலும் இருந்து பார்த்தேன். அப்படியும் வருகின்றிலன். என்றாலும் பிரிந்து உயிர்தரிக்க முடியவில்லை. இனி, மடலெடுத்து அவனைப்பெற்றாலல்லது தரிக்கமாட்டேன்" என்கிற தன் துணிவைச் சொல்லுவதே மடலெடுப்பதாகும். மடலெடுக்கப்புகுந்த இவள் நேரே மடலெடுத்து முடிக்காமல் துணிவைச் சொல்லிக்கொண்டு காலதாமதம் செய்வதற்குக் காரணமென்னவெனில்: மடலெடுக்கவேண்டிய காரணங்களைச் சொல்லி உறவினர்களைத் தன் செயலுக்கு இசையச்செய்வதற்காகவும், குணச்சிறப்பு மிக்க அவனை அவசரப்பட்டு அழிக்கலாகாது என்னும் நினைவாலும், வருவதற்கு அவகாசமளிப்பதற்காகவும் தாமதிக்கிறாள்.

விலக்காதாளொருத்தியைப் பெறுவதே!" என்று கொண்டாடுவாரைப்போலே, புருஷார்த்தங்கள் சொல்லவேண்டுகையாலே அவை பரிக்ரஹித்த சேதநரைச் சொல்லவேண்டி அவர்கள் வர்த்திக்கிற பூமியைச் சொல்லப்புக்கு அவ்வழியாலே அதுக்கபிமாநிநியான ஸ்ரீபூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள்.

(காரார் வரைக் கொங்கை) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலையாக மலைகளைச்சொன்னபடி. காரார்வரையென்கையாலேசெறிந்து மேகம் படிந்த மலையென்று மலைக்கு உயரஞ்சொல்லிற்று. மேகம் படிந்த மலையென்கையாலே முலைக்கண் கறுத்திருந்தாற்போலேயிருக்குமென்கை. மலைகளை முலையாக்கிச் சொல்லிற்றாகில் எம் மலைகளைச் சொல்லிற்றென்னில்; இருமலைகளிரண்டையும் முலையாகச் சொல்லிற்றென்னுமிடஞ் சொல்லிற்று; "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையுமென்னுமிவையே முலையா" என்று

வ்யாக்யானம்:—(காரார் வரைக்கொங்கை...நிலமங்கை) இப்போது இப்படி பூமிப்பிராட்டியைக் கொண்டாடக்காரணமென்னவெனில்: 'தாய்மார் தோழிமார் ஆகிய அனைவரும் இம்மடலெடுக்கும் உறுதி உன் தன்மைக்குச் சேராதுகாண்!' என்று தடைசெய்துகொண்டிருக்கும்போது தடைசெய்யாதவளான இப்பூமிப்பிராட்டியைப் பெற்றுவைத்தோமே' என்று கொண்டாடுவதுபோலே வர்ணிக்கிறாள். மேலும், தாம் பற்றிய காமபுருஷார்த்தத்தைச் சொல்லவேண்டிய இடத்தில், புருஷார்த்தங்கள் யாவையென்று சொல்லவேண்டியிருக்கையாலும், அவற்றைச் சொல்லும்போது அவற்றைப் பற்றும் சேதனரைச்சொல்லவேண்டுகையாலும் அவர்களைச் சொல்லும்போது அவர்கள் வாழும் பூமியைச் சொல்லவேண்டுகையாலும் இவ்வழியாலே பூமிக்கு அபிமானினியான ஸ்ரீபூமிப்பிராட்டியை வர்ணிக்கிறாள்.

(காரார் வரைக் கொங்கை) ஸ்ரீபூமிப்பிராட்டியாகிற பெண்ணுக்கு மலைகளை முலைகளாகச் சொன்னபடி. (கார் ஆர்ந்த வரை) என்கையாலே மேகங்கள் நெருங்கிப்படிந்த மலை என்று மலைகளின் உயரம் சொல்லிற்று. உத்தமஸ்திரீகளின் தனங்கள் பருத்து உயர்ந்து இருக்குமாகையாலே காரார்வரையைக் கொங்கையாக்குகிறார். 'மேகம் படிந்த மலை' என்கையாலே முலைக்கண் கறுத்திருப்பதுபோலே இம்மலையுச்சியும் கறுத்திருக்கிறது என்கை. முலைகள் இரண்டன்றோ; மலைகளை முலைகளாகச் சொன்னால் எவ்விரண்டு மலைகளைச் சொல்லிற்று என்னில்,— "தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையுமென்னுமிவையே முலையா"

பெரிய திருமடலிலே சொல்லிற்று. ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலை சொல்லுகிறதாகில் உயர்ந்த மேருப்ரப்ருதிகளைச் சொல்லாதே இவற்றைச் சொல்லுவானென்னென்னில்; முலையாவது காந்தன் படுகாடுகிடக்குமிடமிறே; அப்படியே எப்போதுமொக்க பகவத் ஸந்நிதியுள்ள தேசமாகையாலே திருமலைகளைச் சொல்லிற்று: (வரைக்கொங்கை) முலைக்குக் காடிந்யம் ஸ்வபாவமாயிருக்குமிறே; அதுவும் சொல்லுகிறது.

(கண்ணார்கடலுடுக்கை) கண்ணார் கடலென்கையாலே— தர்சநீயமான கடலென்னுதல், இடமுடைத்தான கடலென்னுதல். இடமுடைத்தாகையாவதென்னென்னில்; ஸ்ரீபூமிப் பிராட்டிக்குக் கொடுக்கும் கொய்சகமும் வைத்து உடுக்கலாம்படி பரப்பையுடைத்தாயிருக்கை. (கடலுடுக்கை) திருமேனியின் ஸௌகுமார்யத்துக்கீடாக உறுத்தாமே குளிர்ந்திருக்குமென்கை.

---

என்று பெரிய திருமடலிலே இவ்வாழ்வாரே அருளிச்செய்கையாலே, திருமாலிருஞ்சோலைமலையையும், திருவேங்கடமலையையும் முலைகளாகச் சொல்லுகிறாள். உத்தமநாயகியான ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு முலைசொல்லுகிறதாகில் மிகவுயர்ந்த மேருமலை முதலானவற்றைச் சொல்லாமல் இவற்றைச் சொல்லுவதேன்? எனில்: "நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பா" "மலரான் தனத்துள்ளான்" "சங்கு தங்கு முன்கை நங்கை கொங்கை தங்கலுற்றவன்" என்று முலையானது மணவாளன் பற்றிக்கிடக்குமிடமாகையாலே, அதற்கேற்ப எக்காலத்திலும் பகவத் ஸந்நிதியுள்ள இம்மலைகளை முலைகளாகச் சொல்லுவதே பொருத்தமுடைத்து. (வரைக் கொங்கை) உத்தம ஸ்திரீக்களின் தனங்கள் கடினத்தன்மையை இயல்பாகக் கொண்டிருக்குமன்றோ. அதற்காகவும் மலையை முலையாகச்சொல்லுகிறது.

(கண்ணார் கடல்) காண்பவருடைய கண்களை நிறையச்செய்யும் கடல்; அதாவது காணத்தக்க கடல். அன்றிக்கே, 'கண்' என்று இடமாகையாலே, இடம் நிறைந்த கடல் என்றும் கொள்ளலாம். (கண்ணார் கடல் உடுக்கை) பூமிப்பிராட்டிக்கு மிக அழகிய கடல் நீல வர்ணச்சேலையாயிருக்கிறது. இடமுடைத்தான கடல் என்னும்போது பிராட்டிக்கு முந்தானையும், கொய்சகமும் வைத்து உடுக்கலாம்படி பரந்திருக்கிறது என்றபடி. (கடலுடுக்கை) திருமேனியின் மென்மைக்குத் தக்கபடி உறுத்தாமலும், குளிர்ந்துமிருக்கும் என்கை.

சீரார் சுடர்சுட்டிச் செங்கலுழிப் பேராற்று (ப்) 1

பதவுரை:— சீர் ஆர் சுடர் சுட்டி — அழகிய கிரணங்களுடைய ஸூர்யனே திலகம் என்னும் ஆபரணமாகவுடையவளாயும், செம்கலுழி பேர் ஆறு—சிவந்து கலங்கியுள்ள பெரிய (காவிரி) ஆற்றை

---

**(சீரார் சுடர் சுட்டி) அழகிய சுடரையுடைய ஆதித்யனிவளுக்குத் திலகமென்கை. அன்றிக்கே, அணிமிகு தாமரைக்கை ஆபரணமாகக்கடவ தலைக்குத்தான் ஆபரணமாகப்பெறுகையாலே வந்த சீர்மையாகவுமாம்.**

**(செங்கலுழிப் பேராற்றுப் பேராரமார்வில்) ஸஹ்ய த்திலேவர்ஷிக்கச் சிவந்த கலக்கத்தையுடைத்தாகையாலும், மலை**

---

(சீரார் சுடர்சுட்டி) அழகிய கிரணங்களையுடைய சூரியன் இவளுக்குத் திலகமாவான். 'சுடர்' என்று கிரணங்களைச் சொல்லி சீரார்சுடர் என்று அவற்றையுடைய சூரியனைச் சொல்லுகிறது. "சீரார்" என்றது கிரணங்களுக்கு விசேஷணம். சீர்மை நிறைந்திருக்கையாவது அழகு மிக்கிருக்கை. அன்றிக்கே. "சுடர்" என்று நேரே சூரியனைச் சொல்லும் போது, "சீரார்" என்றது அவனுக்கு விசேஷணமாகிறது. சூரியனுக்குச் சீர்மையாவது:— "அணிமிகுதாமரைக்கையை அந்தோ அடிச்சியோம் தலைமிசை நீ யணியாய்" [திருவாய் 10–3–6] என்கிறபடியே பகவானுடைய திருக்கை ஆபரணமாயிருக்கவேண்டிய பிராட்டியின் தலைக்குத் தான் ஆபரணமாகப்பெறுகையாலே வந்த சீர்மையைச் சொல்லுகிறது. "ஆபரணஸ்யாபரணம் வபுஸ்தஸ்யா:" [ விக்ரமோர்வசீயம் ] [அவளுடைய மேனி ஆபரணத்துக்கும் அழகுகொடுக்கும் ஆபரணமாகிறது] என்றுப்போலே, ஆபரணத்துக்கும் அழகு கொடுக்குமவர்களன்றோ பிராட்டிமார்.

(செங்கலுழிப் பேராற்றுப் பேராரமார்வில்) பேராறுனது பிராட்டிக்கு மார்வாயிருக்கிறது. மார்பாகில் முலைகளுக்குக் கீழுள்ளதாய், சந்தனம், குங்குமம் முதலானவற்றால் பூசப்பட்டிருக்கவேண்டும், இங்கு அப்படியுண்டோ? எனில்:

"மலைத்தலைப் பிறந்திழிந்து வந்து நுந்து சந்தனம்
குலைத்தலைத்திறுத்தெறிந்த குங்குமக் குழம்பினோடு
அலைத்தொழுகு காவிரி" [திருச்சந்த-54]

பேராரமார்வில் பெருமாமழைக் கூந்தல்
நீராரவேலி நிலமங்கையென்னும் இப் 2

*பேர் ஆரம்மார்பில்-சிறந்த ஹாரம்பூண்டமார்பாக உடையளாயும், பெருமா மழை கூந்தல்—பெருத்துக்கறுத்த மேகங்களைக் கூந்தலாகவுடையவளாயும், ஆரம் நீர் வேலி—ஆவரண ஜலத்தைக் காப்பாகவுடையவளாயுமிருக்கிற நிலமங்கை என்னும் —ஸ்ரீபூமிப்பிராட்டியென்று சொல்லப்படுகிற*

---

***யிலுண்டான பொன் முதலான ரத்நங்களையுடைத்தாகையாலும், பூமியெங்கும் பரவிக்கொண்டு வருகையாலும், வி(க?)லங்கிக்கிடக்கிற***

---

*என்கிறபடியே இதுவும் மலையிலே பிறந்து கீழிறங்கி வருவதாய், மலையிலுண்டான சந்தனம் குங்குமம் முதலானவற்றை அடித்துவருகையால் கலங்கிச் சிவந்தன்றோ இருப்பது. மார்வாகில் பெரியமுத்து ரத்தினமாலைகளாலே அலங்கரிக்கப்பெற்று விளங்குமே; இங்கும் அப் படியோ எனில்;*

"................ஆளரியால்
அலைப்புண்ட யானை மருப்பும் அகிலும்
அணிமுத்தும் வெண்சாமரையோடு பொன்னி
மலைப்பண்ட மண்டத் திரையுந்து" [*பெரியதிரு* 3-8-3]

"சந்திேேனாடு மணியும் கொழிக்கும் புனற்காவிரி [*பெரியதிரு* 5-4-1]

"வேயின்முத்தும் மணியும் கொணர்ந்தார் புனற்காவிரி"
[*பெரியதிரு* 5-4-9]

"சஞ்சச்சாமர சந்த்ரசந்தந மஹாமாணிக்ய முக்தோத்கராந்
காவேரீ லஹரீகரைர் விதததீ பர்யேதி" [*ர-ஸ்த* 1-21]

*[விளங்காநின்ற சாமரங்களென்ன, பச்சைக் கருப்பூரமென்ன, சந்தன மரங்களென்ன, சிறந்த ரத்தினங்களென்ன, முத்துக்களென்ன இவற்றி னுடைய குவியல்களை அலைகளாகிற கைகளால் ஏந்திக்கொண்டு பெருகு கிறது.] என்று திருமங்கையாழ்வாரும், பட்டரும் அருளிச்செய்தபடியே இவ்வாறும் மலையிலுள்ள முத்துக்களையும், ரத்தினங்களையும் அடித்துக் கொண்டன்றோ வருகிறது. மார்பாகில் பரந்திருக்குமாபோலே இவ்வா றும் பூமியெங்கும் பெருகிப்பரந்து வருகிறபடி "செங்கலுழிப் பேராற்று" என்று பொதுவாகச்சொன்னபோதிலும், உத்தமநாயகியின் மார்வானது நாயகனை அணைத்துக்கிடப்பதையே தொழிலாக உடையதாகையாலே, இருபுறமும் அரங்கநகரப்பனை அணைத்துக் கிடக்கும் தெளிவிலாக் கலங்*

ஆருகிறஹாரங்கிடக்கிற மார்பையுடையவள். (பெருமாமழைக் கூந்தல்) பெரு-பெருத்து, மா-கறுத்த, மழை-மேகங்கள்; நீர்கொண்டெழுந்த காள மேகத்திரளே இவளுக்கு மயிர்முடி; அதாவது- இந்த்ரதநுஸ்ஸும் மின்னும் கலம்பகன் சூடினாற்போலே யிருக்கையாலே மேகத்தை மயிர்முடியென்கிறது. காந்தனுக்கு தர்சநீயமாயிருக்கையும் ஒருகால் குலைத்து நமுந்த விடாயாறும்படியாயிருக்கையும்.

(நீராரவேலி) ஆவரணஜலமே இவளுக்குக் காப்பென்னுதல், மர்யாதையென்னுதல். குளிர்த்தியையுடைத்தான சந்தநத்தோபாதி

---

கல் நீராகிய காவிரியே இங்கு மார்வாகக் குறிப்பிடப்படுகிறது. (பெருமாமழைக்கூந்தல்) பெருத்துக் கறுத்த மேகங்களைக் கூந்தலாக உடையவள். நீர்கொண்டெழுந்த காளமேகக் கூட்டமே இவளுக்கு மயிர்முடி. உத்தமப்பெண்களின் கூந்தல் கறுத்தும், அடர்த்தியாகவும், பலவர்ணக் கதம்பப்பூச்சூடியும், கணவனின் கண்களைக் குளிரச்செய்வதாகவும், அவன் ஒருதடவை (இம்மயிர்முடியைத்) தொட்டுக்கலைத்துக் கைவிட்டாலும் எல்லாத் தாபங்களும் ஆறும்படியாகவும் இருக்குமன்றோ— அப்படியே இப்பெருமாமழைக்கூந்தலும், பெருத்தும் கறுத்துமிருக்கிறது; இந்திரதனுஸ் என்னும் வானவில்லும், மின்னலுமாகிற பலவர்ணக்கதம்ப மாலையைச் சூடியுமிருக்கிறது. கண்களைக் குளிரச்செய்வதாகவும், ஒரு பாட்டம் மழை பொழிந்தால் ஸகலதாபங்களையும் ஆற்றுவதாகவுமிருக்கிறது. (பெருமாமழைக்கூந்தல்)

"கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின்
உள்கொண்ட நீல நன்னூல் தழைகொல் அன்று மாயன்குழல்"
[திருவாய் 7-7-9]

எனப்படும் "குழலழகர்" [நாச்–திரு 11–2] ஆன அவருக்குப் பொருத்தமான குழலழகியாயிருக்கிறாள் இப்பிராட்டி.

உத்தமநாயகியாகில் கட்டும் காவலுமாயிருப்பளே; அக்காவல் இவளுக்குண்டோ? எனில் உண்டென்கிறார் அடுத்தபடியாக.— (நீராரவேலி) ஆரம் நீர் வேலி, ஆரம்போல் இவ்வண்டத்தைச் சுற்றியிருக்கும் ஆவரணஜலம் ஆரநீராகிறது. ஆவரண நீர் என்பது ஆரநீராகச் சிதைந்ததென்பாருமுண்டு. ஆவரணஜலமாகிற பெரிய அகழியை ரக்ஷையாக உடையவள் என்றபடி. அன்றிக்கே, (நீராரவேலி) ஆரம் நீர் வேலி; 'ஆரம்' என்று சந்தனத்துக்குப்பெயர். 'நீர்' என்று நீர்மை, 'ஆரநீர்'

பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே அம்மூன்றும்
ஆராயில் தானே அறம்பொரு ளின்பமென்று— 3

இப் பாரோர்—இந்நிலவுகத்திலே உள்ளவர்களால் சொலப்பட்ட-சொல்லப் படுகின்ற புருஷார்த்தங்கள், மூன்று அன்றே—மூன்றல்லவா; அ மூன் றும் ஆராயில்—அம்மூன்று புருஷார்த்தங்கள் எவையென்று ஆராய்ந்தால், அறம் பொருள் இன்பம் என்று—தர்மம் அர்த்தம் காமம் என்பனவாம்.

---

**யாய் நாமத்தையுடைய கற்பே இவளுயரத்துக்கெல்லையென்கை. (நிலமங்கையென்னுமிப்பார்) பூமியைச் சொல்லப்புக்கு அதுக்கு ப்ரகாரியான ஸ்ரீபூமிப்பிராட்டியளவும்சொன்னபடி. (பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) சிறியார் பெரியாரென்னாதே, வில க்ஷணர் அவிலக்ஷணர் என்னாதே, பூமியிலுண்டான சேதநர்**

---

என்று சந்தனம்போல் குளிர்ந்த தன்மையுடைய இப்பிராட்டியின் கற்பைச் சொல்லுகிறது. 'வேலி' என்று வரம்பு அல்லது எல்லை. சந்தனம்போல் குளிர்ந்த கற்பை வரம்பாகவுடையவள்; தன் பெருமைக்கு எல்லையாகவுடையவள் இப்பிராட்டியென்கை. இவளுக்குக் கற்பாவது— "வாமனன் மண்" என்கிறபடியே அவனுக்கேயாயிருக்கை. "சந்தனம் போல் குளிர்ந்த கற்பு" என்கையாலே நாயகனுக்குத் தாபத்தைத்தரும் கற்பல்ல இவளுடைய கற்பு என்று தோற்றுகிறது. தாபத்தைத்தரும் கற்பாவது— தன் நாயகன் மற்ற மனைவியரிடம் பிரியம் வைப்பதையும் பொறுக்காதபடி அவனுக்கு ஆட்பட்டிருக்கை. இப்பிராட்டியோவெனில் பெரியபிராட்டியாரும் பெருமாளும் கூடியிருக்கும்போது மாலை சந்தனம் முதலான உபகரணங்கள்போலே விளங்கி ஸாபத்ந்யமற்றவராயிருக்கை யாலே, இவர் சந்தனம்போல் குளிர்ந்த கற்பையுடையவராகிறார். இதுவே இவருடைய பெருமைக்கு எல்லையாகிறது என்கை. இப்படிப்பட்டவள் தான் யார் என்னில் (நிலமங்கை) பூமிதேவியே இவள் என்கை. (மங்கை) முற்கூறியபடி பெண்மைக்குரிய குணங்கள் நிரம்பியிருப்பவள் என்கை. (நிலமங்கை என்னுமிப்பார்) புருஷார்த்தங்களைச் சொல்லப் புகுந்து, அதை அனுஷ்டிப்பாரைச் சொல்லுவதற்குமுன், அவர்களுக்கு இருப்பிடமான பூமியைச் சொல்லப்புக்கு அப்பூமிக்கு ப்ரகாரியான ஸ்ரீபூமிப்பிராட்டியளவும் சொன்னாராயிற்று. (இப்பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே) இப்பூமியிலுள்ளவர்களால் பற்றப்படும் புருஷார்த்தங்களாகச் சொல்லப்படுமவை மூன்றே யல்லவோ? (சொலப்பட்ட) சொல்லைச் சொன்னது, பற்றுகையாகிற செயலுக்கும் உபலக்ஷணம். (பாரோர்) சிறிய வர், பெரியவர் என்னும் வாசியில்லாமல் உயர்ந்தார் தாழ்ந்தார் என்னும் வாசியில்லாமல், சேதனர் அனைவராலும் பற்றப்படும்

பரிக்ரஹித்த புருஷார்த்தம் மூன்றன்றோ? என்கை. அன்றே என்றபடியாலே — மோக்ஷமென்றொரு புருஷார்த்தம் உண்டன் றென்னுமிடம் சொல்லுகிறது.

இப்பாரோர், (அம்மூன்றும் ஆராயில்தானே) இவற்றை ஆரா யப்புகில் நம்முடைய திருவுள்ளத்தில் கிடக்கிற காமமே புருஷார்த்த மென்றாதல்; ஏவகாரம் பாதத்தைப் பூரித்துக்கிடக்கிறதாய், ஆராயிற்றானென்றதாதல். (அறம் பொருளின்பமென்று) கீழே புருஷார்த்தத்தை மூன்றென்று சொல்லச்செய்தே இங்கெடுத்த துக்கு ப்ரயோஜநமென்னென்னில்; மோக்ஷமிதினுள்ளே ஒன் றென்று சொல்லுவாருண்டாகிலுமென்று அவர்களுக்கு இட

---

-புருஷார்த்தம் மூன்றே ன்றோ என்கை. (அன்றே) என்கையாலே, இம்மூன்றைத் தவிர நான்காமதான மோக்ஷம் என்றொரு புருஷார்த்தம் இல்லை யென்னும் விஷயத்தைச் சொல்லுகிறார். [பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் அச்சுப்பிரதிகளில் 'மோக்ஷமென்றொரு புருஷார்த்தம் உண்டென்னுமிடம் சொல்லுகிறது' என்று காண்கிறது. 'உண்டன் றென்னுமிடம்' என்பதே சரியான பாடமாயிருக்கத்தகும். 'சிக்கெனமற் றாராலுமுண்டென்பார்' என்று தொடங்கியுள்ள ஆழ்வார் ஸ்ரீஸூக்தி களையும், அவற்றின் வியாக்கியானத்தையும் காண்க.]

(அம்மூன்றுமாராயில் தானே) இவ்வுலகத்தார் அறம், பொருள், இன்பம் என்று தாங்கள் சொல்லும் இம்மூன்று புருஷார்த்தங்களையும் ஆராய்ந்துபார்த்தார்களாகில், எனக்கு இஷ்டமான 'காமம்' ஒன்றுதானே புருஷார்த்தமாயுள்ளது; அறம், பொருள் என்னும் மற்றையிரண்டும் அக்காமபுருஷார்த்தத்தை அடைவதற்காகவே ஏற்பட்டவை என்று அறி வார்கள். 'தானே' என்றது தம் திருவுள்ளத்திலுள்ள 'காமம் தானே' என்றபடி. அன்றிக்கே, "அம்முன்றும் ஆராயில்தான்" என்றாகி, ஏவ காரம் பாதத்தை நிறைத்துக் கிடப்பதாகவும் கொள்ளலாம். அவற்றை ஆராய்ந்து பார்த்தபின் ஏற்படும் நிச்சயம் யாதெனில்: (அறம் பொருள் இன்பம் என்று) அறம் பொருள் இன்பம் எனப்படும் தர்மார்த்த காமங் களே அவையென்று ஏற்படும். கீழே "மூன்றன்றே" என்று மூன்றே புருஷார்த்தம் என்று சொல்லியிருக்கும்போது, இங்கு அறம் பொருள் இன்பம் என்று தனித்தனியே சொன்னதற்குப் பயன் என்னவெனில்: "இம்மூன்றைக்காட்டிலும் வேறுபட்டதாய் மோக்ஷமென்றொரு புருஷார்த்த மில்லாவிடிலும், இம்மூன்றுக்குள்ளே ஒன்றாய் மோக்ஷமிருக்கட்டுமே" என்று சிலர் சொல்லக் கூடுமன்றோ. அவர்களுக்கும் இடமில்லாதபடி

ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவார்
சீரா ரிருகலையு மெய்துவர் சிக்சென்மற்று 4

*இவற்றினிடை—இம்மூன்று புருஷார்த்தங்களுள், அதனை எய்துவார் ஆர் ஆர்—அக் காம புருஷார்த்தத்தை அடைகின்றவர்கள் எவரெவரோ, சீர் ஆர் இரு கலையும் எய்துவர்—(அவர்கள்) சீர்மைபொருந்திய தருமம் அர்த்தம் என்கிற மற்றையிரண்டுபகுதிகளையும் அடைந்தவராவர்;*

---

**மறச் சொல்லுகிருள். (ஆராரிவற்றினிடை அதனை எய்துவார்) "நடுவண தெய்த இருதலையும் எய்தும்" என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிருரன்று; இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு, அதனை எய்துவாரென்று—தமக்குத்தேச்யமான காமத்தை யெய்துவாரென்றபடி. ஆராரிவற்றினிடை எய்துவாரென்கையாலே "பயிலுந் திருவுடையார் யவரேலும்" என்னுமாபோலே இப்புருஷார்த்தத்தை லபிப்பார் ஜந்ம வ்ருத்தங்களால்**

---

தனித்துச் சொல்லுகிருள். (ஆராரிவற்றினிடை அதனையெய்துவார்) "நடுவணதெய்த இருதலையுமெய்தும்" [நாலடியார்—அறத்துப்பால்—அதிகாரம் 12] என்றவிடத்தில் தமிழ்ப்புலவர் "அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களில் நடுவிலுள்ள பொருளை அடைந்தவர்கள் முதலாவது மூன்ருவது புருஷார்த்தங்களான அறத்தையும் இன்பத்தையும் அடைவார்கள், பொருள் இரண்டுக்கும் ஸாதனமாயிருப்பதால்" என்று சொன்னுர். "அவற்றினிடையதனை எய்துவார் சீராரிருகலையுமெய்துவர்" என்னும் ஆழ்வாருடைய பாசுரம் கீழ் எடுக்கப்பட்ட தமிழர் பாட்டை சப்தத்தில் ஒத்ததேயாகிலும் அர்த்தம் அதுவன்று, இவருக்கு உத்தேச்யம் பொருளன்ருகையாலே. "அவற்றினிடை — இம்மூன்று புருஷார்த்தங்களுக்குள், அதனை — (நான் பற்றிய) காமபுருஷார்த்தத்தை, எய்துவார்—அடைபவர், சீரார் இருகலையும் எய்துவார்—(அதற்கு ஸாதனமாயிருக்கும்) சீர்மைமிக்க அறம் இன்பம் என்னும் இரு புருஷார்த்தங்களையும் அடைந்தவரேயாவர்" என்று இவருக்குக் கருத்து. (ஆரார் இவற்றினிடை அதனை எய்துவார்) "ஆர் ஆர்" என்கையாலே இக்காமபுருஷார்த்தத்தை அடைந்தவர்கள் பிறப்பால் எவ்வளவு தாழ்ந்தவராயினும், ஒழுக்கத்தால் எவ்வளவு தாழ்ந்தவராயினும், இப்புருஷார்த்தத்தை அடையப்பெற்ற காரணத்தாலேயே மிகச்சிறந்தவர் என்கிருர். "பயிலும் திருவுடையார் யவரேனும் அவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமரே" [திரு

(தறைவுடையவரேயாகிலும் அவர்களும் சிலவரே! என்கிறார். (சீரார் இருகலையு மெய்துவர்) இத்தை லபிக்கும் ஸப்பத்தையுடைய வர்கள் இதுக்குக் கலாமாத்ரமான தர்மார்த்தங்களிரண்டையும் லபித்தாராகக்கடவர். ஸாத்யத்தை லபித்தவர்கள் ஸாதநத்தையும் அநுஷ்டித்தாராகக்கடவதிறே. இவற்றுக்குச் சீர்மை—இதுக்கு ஸாதநமாகையாலே. ஒரூருக்குப்போகவென்று ஒருவன் மநோ ரதித்தால் அவ்வூரிலே அவனைக் கண்டால் நடுவுபட்டவழியும் வந்தானாகக்கடவதிறே.

(சிக்கெனமற்றித்யாதி) அல்பாஸ்திரமென்று இப்புருஷார்த் தங்களை தூஷித்து ஆநந்தாவஹமாய், *அந்தமில் பேரின்ப மாய் நிலைநின்ற புருஷார்த்தமுண்டென்பர்கள்; இப்படி காண வொண்ணாதே. அவர்கள் வசஸ்ஸமுத்ரத்திலே கேட்டுப்போமித்

---

வாய் 3—7—1] என்றாப்போலே. (சீரார் இருகலையும் எய்துவர்) இக் காம புருஷார்த்தத்தை அடையப்பெற்ற சீரார்—ஸ்ரீமான்கள், இதன் ஒரு கலா மாத்திரமாயிருக்கும் அறம், பொருள் இரண்டையும் அடைந்தவரேயாவர் கள். ஸாத்யமாகிய இன்பத்தையடைந்தவர்கள், இதற்கு ஸாதனமான அறம் பொருள் ஆகிய இரண்டையும் இதற்குமுன் அடைந்தேயிருக்க வேண்டுமன்றோ. ஓர் ஊருக்குப் போகவேண்டுமென்று ஒருவன் ஆசைப் பட்டிருந்து, பிறகு அவனை அங்கு கண்டால், நடுவிலுள்ள வழியை அவன் கடந்தேயிருக்கவேண்டுமென்று ஸித்திக்குமன்றோ. (கலை) பதினாறில் ஒரு பகுதி. காமத்தில் ஒரு பகுதிக்கே ஒப்பானவை மற்ற இரண்டு புருஷார்த் தங்களும் என்று கருத்து. (சீரார் இருகலை) இவற்றுக்குச் சீர்மையாவது,— மிகவுயர்ந்த காமபுருஷார்த்தத்துக்கு ஸாதனமாயிருக்கும் பெருமை.

(சிக்கென மற்று ஆரானும் உண்டென்பார் என்பது தானதுவும்) உறுதியான வேறொரு மோக்ஷபுருஷார்த்தம் உண்டு என்று சில பெயர் தெரியாதபேர்கள் சொல்லுகிறார்கள் என்பதுவும். (சிக்கென) உறுதி யானது. (மற்று உண்டு) இம்மூன்று புருஷார்த்தங்களைக்காட்டிலும் வேறான மோக்ஷபுருஷார்த்தம் உண்டு. இம் மூன்றும் மிகத்தாழ்ந்தவை; நிலையல்லாதவை. ஆநந்தமளிப்பதாய், "அந்தமில் பேரின்பம்" [திருவாய் 10-9-11] எனப்படுவதான மோக்ஷபுருஷார்த்தம் உயர்ந்தது; நிலையானது என்பாருடைய வீண்பேச்சும். (உண்டென்பார் என்பது தானதுவும்)நேரில் பார்த்தவர் ஒருவருமில்லை; அவர்களுடைய வார்த்தைக்கடலிலே கேட்டுப் போகுமித்தனை. (என்பது தானதுவும்) கடல்போலே ப்ரளயமாக

ஆரானு முண்டென்பா ரென்பது தானதுவும்
ஓராமை யன்றே உலகத்தார் சொல்லுஞ்சொல்

*ஆரானும்–அறிவில் குறைந்த யாரோ சிலர், சிக்கெனமற்று உண்டு என்பார்–நிலையான (மோக்ஷமென்று) மற்றொரு புருஷார்த்தமிருப்பதாகச் சொல்லுவார்கள், என்பதுதான் அதுவும்—(அவர்கள் அப்படி) சொல்லுகிறதும், உலகத்தார் சொல்லும் சொல்-உலகத்தவர்களாலே சொல்லப்படுகிற சொல்லையும் செயலையும், ஓராமை அன்றே—ஆராயாமல் சொல்லுவதன்றோ.*

---

**தனையென்கை. ஆரானுமென்கையாலே — அவ்யபதேச்யருமாய் அவ்யுத்பந்நருமாயிருப்பார் சிலரென்கை.**

**அதுதானில்லையோவெனில்; (ஓராமையன்றே யுலகத்தார் சொல்லும்சொல்) லோகபரிக்ரஹத்தை அவர்களாராயாமல் சொல்லுகிறார்களாமத்தனை; அதொன்றல்லவென்கை. அவர்களறியாமல் சொன்னாரப்படியென்னென்னில்; (ஓராமையாமாறிதியாதி) அவர்களறியாமல் சொன்னார்களென்னுமிடம் என் உக்திமாத்ரத்தாலே அவர்கள் ப்ரமாணப்ரமேயம் இரண்டையும் அழிக்கிறேன்-நீங்கள் செய்யவேண்டுவது—செவிதாழ்த்துத்தருமித்தனை.**

---

வார்த்தைசொல்லுகிறார்களேயொழிய உண்மையில் கானல்நீராகவன்றோ இருக்கிறது! (ஆரானும்) பெயர் சொல்லத்தகாதவர்களாய், அறிவிலிகளாயிருப்பார் சிலர் என்கை. பகவானைப் பெறாத ரோஷம் இவனை நாஸ்திகவாதத்தின் எல்லைக்கு அழைத்துச்செல்லுகிறபடி.

மோக்ஷம் என்னும் அப்புருஷார்த்தம் உண்மையில் இல்லையோ? என்னில்: (ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்) **உலகத்தவ**ருடைய சொல்லையும் செயலையும் ஆராமையாலன்றோ அவர்கள் மோக்ஷமுண்டென்று சொல்லுகிறார்கள். உண்மையில் அது இல்லையே. (சொல்லும் சொல்) இது செயலுக்கும் உபலக்ஷணம். அவர்கள் ஆராய்ச்சி செய்யாமல் சொன்னார்கள் என்பது எப்படி? எனில்: (ஓராமையாமாறு அது உரைக்கேன்) அது ஓராமையாமாறு உரைக்கேன். அவர்கள் சொல்லும் வார்த்தை உலகவொழுக்கை ஆராயாமல் சொன்னது என்பதை விவரித்துக்காட்டுகிறேன். என் வார்த்தைகளைக்கொண்டே அவர்கள் சொல்லும் ப்ரமாணமான சாஸ்திரத்தையும், அப்ரமாணத்தால் அறியப்படும் ப்ரமேயமான மோக்ஷபுருஷார்த்தத்தையும் அழிக்கிறேன். (கேளாமே) நீங்கள் செய்யவேண்டியது—காதுகொடுத்துக் கேட்குமித்தனையே. கேட்டீர்களானால் நீங்களும் என் கட்சிக்குத் திரும்பிவிடுவீர்கள்.

• ஓராமை யாமா றதுவுரைக்கேன் கேளாமே
காரார் புரவியேழ் பூண்ட தனியாழித் 6
தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு

*அது ஓராமை ஆம் ஆறு உரைக்கேன்—அச்சொல் ஆராய்ச்சியற்றது என்னுமிடத்தை (உங்கட்குத் தெரியச்) சொல்லுகிறேன்; கேள் ஆமே—(அதனை நீங்கள் காதுகொடுத்துக்) கேட்கக்கூடுமே? (கேளுங்கள்;) கார் ஆர் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி—மேகமண்டலத்தில் செல்லுவதும், ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றதும், ஒற்றைச் சக்கரத்தையுடையதுமான, தேர் ஆர்—தேரிலே பொருந்தியிருப்பவனும், நிறைகதிரோன்—நிறைந்த கிரணங்களையுடையவனுமான ஸூர்யனுடைய, மண்டலத்தைக்கீண்டுபுக்கு—மண்டலத்தைக் கிழித்துக்கொண்டு அதன்வழியே போய்,*

---

(காரார்புரவி) **அதுதானுங்களுக்கேற்க உண்டேயென்று தோற்றிற்றோ? (காரார்புரவி) மேகபதத்திலே குதிரை ஸஞ்சரிக்கை யாவதென்? (புரவியேழ்) இரண்டல்ல, நாலல்ல, ஆறல்ல, எட்டல்ல, ஏழுகுதிரை பூண்கையாவதென்? (தனியாழித்தேரார்) பிள்ளாய்! இரண்டாதல் நாலாதலன்றிக்கே தனிச்சக்ரமாம். பிள்ளாய்! ஆகாசத்திலே ஒருவன் தேர்நடக்கையாவதென்? (நிறை**

---

"காதுகொடுத்துக் கேட்கிறோம்; சொல்லுங்கள்" என்ன உரைக்கிறார்,—(காரார் புரவி) மேகமண்டலத்தில் நடையாடும் குதிரைகள். மேகமண்டலம் கண்ணுக்குத் தெரிகிறதே; அதிலே நடையாடும் குதிரைகள் ஏதேனும் கண்ணுக்குத் தெரிகிறதா பாருங்கள்; (காரார் புரவி) மேகமண்டலத்தில் குதிரை நடையாடுவது என்பது நடக்கக்கூடிய காரியமா? (புரவியேழ்) சூரியன் தன் தேரில் ஏழு குதிரைகளைப் பூட்டியிருக்கிறானாம்; என்ன கட்டுக்கதை! இரண்டு, நாலு, ஆறு, எட்டு, என்றாற்போன்ற ஸமமான (இரட்டைப்படையான) எண்ணிக்கையுள்ள குதிரைகளுமல்ல; விஷமமான (ஒற்றைப்படையான) ஏழு குதிரைகளாம். ஏழு குதிரைகள்தான் பூட்டவேணுமோ? இரண்டு அல்லது நாலு அல்லது ஆறு அல்லது எட்டு அல்லது வேறு ஏதாவது எண்ணிக்கையுள்ள குதிரைகள் பூட்டினால் ஆகாதோ? (தனியாழித்தேர்) ஒரே சக்கரமுள்ள தேர். என்ன விந்தை! உலகத்தில் இரண்டு அல்லது நாலு சக்கரங்கள் பூட்டியே தேர்கள் ஓடுவதைக் கண்டிருக்கிறோம். சூரியனுடைய இவ்வாகாசத்தேர் ஒற்றைச்சக்கரத்திலே ஓடுகிறதாம். இதனின் மிக்கோரயர்வுண்டே? (தேரார் நிறைகதிரோன்) ஒரு விளக்கைப் பார்க்கக் கண்

ஆரா வமுதமங் கெய்தி அதில்நின்றும் 7
வாரா தொழிவதோன் றுண்டே அதுநிற்க
ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே— 8

*அங்கு—வெகுதூரத்திலுள்ள பரமபதத்திலே, ஆரா அமுதம் எய்தி—பரம போக்யமான அம்ருதம்போன்ற பரம புருஷனைப்பெற்று, அதில் நின்றும் வாராதொழிவது ஒன்று உண்டே—அப்பரமபதத்தில் நின்றும் என்றைக்கும் திரும்பி வாராமல் அங்கேயே கிடப்பதென்கிற ஒருபொருள் பொருத்த முடையதோ? அது நிற்க—அவ்விஷயம் ஒரு புறமிருக்கட்டும்; ஏர் ஆர் முயல் விட்டு—அழகிய முயலை விட்டு, காக்கை பின் போவதே—(உபயோகமற்ற) காக்கையின் பின்னே தொடர்ந்து போவாருண்டோ?*

---

**கதிரோன்) ஒரு விளக்கின் ஸந்நிதியிலே விழிக்கமாட்டாத அதிக்ஷுத்ரன், உஷ்ண கிரணங்களால் பூர்ணனாயிருக்கிற ஆதித்யனைச் சென்று கிட்டுகையாவதென்? (மண்டலத்தைக் கீண்டு புக்கு) ஒருவனை இங்கே உபாஸித்து அவனுடைய ராஜகுலத்தாலே ஆதித்யமண்டலத்தின் நடுவே போகிறானிறே. அங்கே ஏறப்போனால் அவ்வழிப்போக்குத்தான் இங்குப்போலே இரண்டருகும் பணையாக நடுவே போகிறானோதானென்னகை. (ஆராவமுதமங்கெய்தி) திருநறையூரிங்கே, திருவாய்ப்பாடியிங்கேயாயிருக்க ஆராவமுதமங்கேயாவதென்னென்னகை. (அங்கெய்தி)**

---

*க்ஷுத்ரம்படியிருக்கும் மிகத்தாழ்ந்த இந்த ஜீவன் கொதிக்கும் கிரணங்களால் நிறைந்திருக்கும் சூரியனைச் சென்று அடைவது நடக்கக்கூடியதா? (மண்டலத்தைக் கீண்டுபுக்கு) பரமாத்மாவை இங்கே உபாஸித்து ராஜாதிராஜனான அவனை அண்டைகொண்ட பலத்தாலே சூரியமண்டலத்தின் நடுவிலே இந்த ஜீவன் போகிறான்; அங்கே போகும்போது, போகும் வழியானது சோலைசூழ் திருவரங்கமான கோயிலுக்குள் போகும் வழிபோலே இரண்டு புறமும் மரக்கிளைகளால் மறைக்கப்பட்டு வெப்பம் படாமல் குளிர்ந்திருப்பதாய் அதன் நடுவே போகிறானோ? கொடிய வெப்பத்தையுடைய சூரியமண்டலத்தின் நடுவேபோவது ஸாத்யமோ? (ஆராவமுதமங்கெய்தி) ஆராவமுதம் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநறையூரும், அது ஒடியாடித்திரியும் திருவாய்ப்பாடியும் இங்கிருக்கும்போது ஆராவமுதத்தை அங்கே சென்று அடைவதாம்! இதென்ன அறிவுகேடு! (அங்கெய்தி) (மடலெடுத்து) அவனைப்பெறுவ*

பணமடலும் திருநறையூரும் இங்கேயாயிருக்கச்செய்தே அங்கு எத்தைக்கொண்டு எத்தைப் பெறுவதென்கை.

(அதில்நின்றும்வாராதொழிவதொன்றுண்டே) போனால் பின்னை புநராவ்ருத்தியில்லையாம். தன்னிச்சையின்றிக்கே இருக்கச் செய்தே தன் கர்மத்தாலே நரகத்தை அநுபவித்தவனும் மீளா நின்றான்; இச்சையாலே ஸுகாநுபவம் பண்ணப்புக்கவன் மீளானும். (ஒன்றுண்டே) இப்படிப்பட்டதொரு புருஷார்த்த முண்டென்று தோற்றியிராநின்றதோ உங்களுக்கு? என்கை.

(அதுநிற்க) அதுதானுண்டாக, இல்லையாக, பிணக்கென்? என்கை. (ஏரார் முயல்விட்டுக் காக்கைபின் போவதே) ஸ்த்தல ஸஞ்சாரியை விட்டு, சாகா ஸஞ்சாரியைப் பற்றுவதே! ஸுஸங் கதமுமாய் உபயோக யோக்யமுமாயிருக்கிற வஸ்து கைப்பட் டிருக்க இத்தை உபேக்ஷித்து, கைப்படாதேயிருப்பதுமாய்

---

தற்கு ஸாதனமான பணமடலும், அவனைப்பேணிப் பாதுகாக்கும் திரு நறையூரும், இங்கேயிருக்கும்போது எதைக்கொண்டு எதைப்பெறுவது?

(அதில் நின்றும் வாராதொழிவதொன்றுண்டே) அங்கு போனால் மறுபடி இங்கு மீண்டு வரக்கூடாதாம்; இதுதான் மோக்ஷமாம்; இதை என்சொல்லிச் சிரிப்பது? தன் இஷ்டப்படி நடக்க சக்தியில்லாமல் தன் கர்மவசப்பட்டு நரகத்தை அனுபவிப்பவனுக்கும் திரும்பி இங்கு வர ஸ்வாதந்திரியமிருக்கிறது. தானே விரும்பி சுகமனுபவிக்கச் சென்றவன் மீண்டுவரமுடியாதாம்; இதென்ன மோக்ஷம் வேண்டியிருக்கிறது! (ஒன்றுண்டே) இப்படி எல்லாவிதத்தாலும் பொருந்தாததாயிருக்கும் மோக்ஷம் என்னும் புருஷார்த்தம் உள்ளதென்று உங்களுக்குத் தோற்று கிறதோ? நீங்களே ஆலோசியுங்கள் என்கிறாள்.

(அதுநிற்க) அம்மோக்ஷ புருஷார்த்தம் இருந்தாலிருக்கட்டும்; இல்லாமற்போனாலும் போகட்டும்; வீண் விவாதமேதுக்கு? என்று கருத்து. (ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே) அது இருப்ப தாக ஒப்புக்கொண்டாலும், அர்ச்சாவதாரத்தைவிட்டு அதைத்தேடுவது சிறந்த முயலைவிட்டுக் காக்கையைத் துரத்தியோடுவதை ஒக்கும். (ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே) தரையிலிருக்கும் முயல் போன்றது அர்ச்சாவதாரம்; கிளையிலிருக்கும் காக்கைபோன்றது பரத்

ஏரா ரிளமுலையீர் என்றனக் குற்றதுதான்
காரார் குழலெடுத்துக் கட்டிக் கதிர்முலையை 9

ஏர் ஆர். இள முலையீர்—அழகிய இளமுலைகளையுடைய மாதர்காள்! என் தனக்கு உற்றது தான் — எனக்கு நேர்ந்த நிலையைச் (சொல்லுகிறேன் கேளுங்கள்;) கார் ஆர் குழல் எடுத்துக்கட்டி—கரிய நிறமுடைய கூந்தலை (அலைய வொண்ணாதபடி) மேலே தூக்கி முடித்து, கதிர் முலையை— ஒளிமிக்க முலைகளை,

---

கைப்படுவதொன்றென்று தெரியாதிருப்பதுமாய், கைப்பட்டாலும் உபயோக போக்யமன்றிக்கே யிருக்கிற வஸ்துவுக்கு வில்லெடுத்துத்திரிவதே! இதொரு சேதநக்ருத்யமோ? என்கிறார்.

(ஏராரிளமுலையீர்) நீங்கள் வடிவுபடைத்தது — வடிவழகாலுள்ள ப்ரயோஜநமிங்கே கொள்ளுகைக்கன்றோ வென்றுகருத்து. "கொம்மை முலைகளிடர்தீரக்கோவிந்தற்கோர்குற்றேவல்" என்னக் கடவதிறே. இச்சரீரத்தைக்கொண்டு அவதாரங்களிலும் உகந்

---

வம். முயலைப்பிடிப்பது எளிது; காக்கையைப் பிடிப்பது கடினம்; (ஏரார் முயல்—காக்கை) நன்றாகக் கைகூடியிருப்பதாய் உண்ணத் தகுந்ததாயிருக்கும் முயல் கையில் அகப்பட்டிருக்க, அதை அநாதரித்து, கையில் அகப்படாமலிருப்பதாய், 'அகப்படக்கூடிய வஸ்து' என்னும் நிச்சயமுமில்லாமலிருப்பதாய், அகப்பட்டாலும் சமைத்துண்ணத் தகுதியில்லாததான காக்கையைப் பிடிக்க வில்லெடுத்துக்கொண்டு ஓடுவதே! இது அறிவுடையார் செயலோ? என்கிறார். அர்ச்சாவதாரம் முயல் போல் ஸுலபமாகவும் போக்யமாயுமிருப்பது; பரத்வம் காக்கைபோலே துர்லபமாய் போக்யமல்லாததாயிருப்பது. (ஏரார்முயல்) ஸௌலப்யம், போக்யத்வம் ஆகிய சிறப்புமிக்க முயல்.

(ஏராரிளமுலையீர்) அழகியதாய், இளம்பருவமுள்ள ஸ்தனங்களை யுடைய தோழிகளே! நீங்கள் அழகிய வடிவு படைத்திருப்பது அவ்வழகாலுண்டாகும் பலனை இங்கேயே அனுபவிப்பதற்காகவன்றோ என்று கருத்து. "கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாமே இனிப்போய்ச்செய்யும் தவந்தானென்?" [நாச்-திரு 13-9] என்றன்றோ நம்மைப்போன்றார் சொல்லுவது. இந்த சரீரத்தைக் கொண்டு ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களுக்

தருளின நிலங்களிலும் அடிமைசெய்யாதே தேசாந்தரே காலாந்தரே தேஹாந்தரே பெறும்பேறுகிறது என்னென்புதென்கை. (என்றனக்குற்றதுதான்) இதுவெல்லாங்கிடக்க நான் முறுபாடுருவப்பட்டதொன்று கேளுங்களென்கிறுர்.

(காரார்குழலித்யாதி) என்னுத்யோகம் எதிர்த்தலையைக் கையும் மடலுமாகக் காணப்போருங்கிடீர். (காரார்குழ லெடுத்துக்கட்டி) நீலமணிபோலே நெய்த்திருண்டு ச்ரமஹரமான குழலையெடுத்துக்கட்டி. மயிர்ச்செறிவாலும் பருவத்தாலும் ரூபத்தாலும் எடுத்துக்கட்ட அரிதாயிருந்தபடி. (எடுத்துக்கட்டி). அலையப் புறப்பட்டேனுகில் அவனை விலங்கிடலாங்கிடீரென்கை. (கதிர் முலையை) யௌவநப்புகரால் மிக்க முலையை. (வாராரவீக்கி) வார் ஸபலமாம்படி வீக்கியென்னுதல், வாராலே ஆரக்கட்டி

---

கும் அர்ச்சாவதாரங்களுக்கும் அடிமை செய்யாமல் மற்றொரு சரீரமெடுத்துப்பெறும் பயன் என்னபயன்? (என்றனக்குற்றதுதான்) இப்பீடிகையெல்லாம் ஒருபுறமிருக்கட்டும்; "கஞ்சைக் காய்ந்த கருவில்லி கடைக்கணென்னும் சிறைக்கோலால் நெஞ்சூடுருவவேவுண்டு நிலையும் தளர்ந்து நைவேனை" [நாச்-திரு] என்றூப்போலே நான் மாறனம்பால் (1. மன்மதன் அம்பாலே. 2. மால்தன் (கடைக்கண்) அம்பாலே) முன்னேபாய்ந்து பின்புறம் வெளிவரும்படி எய்யப்பட்டு அதனுல் பட்ட பாட்டைக் கேளுங்கள் என்கிறுள்.

(காரார் குழலெடுத்துக்கட்டி) நான் என் கருநிறக்கூந்தலை எடுத்து முடிவதை அவன் கண்டானுகில் என்னைப்பெறுகைக்காக அவன் மடலெடுக்கத் துணிவான்கிடீர். (காரார் குழலெடுத்து) நீலமாணிக்கம்போலே வழவழப்பாயிருப்பதாய், கருநிறமுள்ளதாய், காண்பாருடையவும் களைப்பைப் போக்கவல்லதான மயிர்முடியை எடுத்துக்கட்டி. (எடுத்துக் கட்டி) மயிரின் நெருக்கத்தாலும், மயிர் நெருங்கிவளரும் படியான இவளுடைய பருவத்தாலும், கட்டாமலிருக்கும்போது மிகவும் அழகாயிருக்கையாலும் எடுத்துக்கட்ட அரிதாயிருக்கிறபடி. (எடுத்துக்கட்டி) மயிரைமுடியாமல் அலையும்படிவிட்டுப் புறப்பட்டேனுகில், அதனுலேயே அவனை விலங்கிட்டுவிடலாம்கிடீர் என்கை. (கதிர்முலையை) யௌவனப் பருவத்தால் ஒளிவிடும் முலையை. (வாரார வீக்கி) கச்சுநிறைவுபெறும்படி கட்டி. இவள் தனத்தின் ஸ்பர்சத்தாலே க்ச்சுக்கும் நிறைவேற்படுகிறபடி. ஆபரணத்துக்கும் அழகுகொடுப்பவளன்றே. அன்றிக்கே,

வாரார வீக்கி மணிமே கலைதிருத்தி 10
ஆரா ரயில்வேற்க ணஞ்சனத்தின் நீறணிந்து

வார் ஆர் வீக்கி—கச்சுநிறையும்படிநெருக்கிக் கட்டி, மணி மேகலை திருத்தி- ரத்னங்களிழைத்த அரை நூல் மாலையை ஒழுங்குபட அணிந்து, ஆர் ஆர் அயில் வேல் கண்—அழகு பொருந்திய கூரிய வேல்போன்ற கண்களிலே, அஞ்சனத்தின் நீறு அணிந்து—மைச்சுண்ணத்தை இட்டு,

---

**யென்னுதல். கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே, இக்கச்சுக்கிடந்ததில்லையாகில் அவனைப்பிச்சேற்றலாங்கிடீ ரென்கிறாள். (மணிமேகலைதிருத்தி) மணிமயமான மேகலாபரணத் தையமைத்து. அதாவது—பிராட்டி யமுனையில் தெப்பமேற வொருப்பட்டாற்போலே அவனுக்கு ஸர்வஸ்வதானம் பண்ணின படி. (ஆராரயில்வேற்கண்) அழகும் கூர்மையுமார்ந்த கண்.**

---

கச்சாலே அமுக்கிக்கட்டி. கண்டாரையெல்லாம் கொல்லும் காட்டு யானையைப்பிடித்துப் பழக்கி முகபடாமிட்டுவைப்பதுபோலே, இதையும் இக்கச்சையிட்டுக் கட்டிவைக்காவிடில் அவனை எதிர்ப்பட்டவுடன் விழச்செய்யலாங்கிடீர்; கண்ணுற்றவுடன் கலங்கச்செய்யலாங்கிடீர். (மணிமேகலை திருத்தி) ரத்தினமயமான அரைநூல் மாலையை ஒழுங்காக அணிந்து கொண்டு.

"தத்ர ஶ்ரீயமிவாசிந்த்யாம் ராமோ தாஶரதி: ப்ரியாம் ।
ஈஷத் ஸம்லஜ்ஜமாநாம் தாமத்யாரோபயத ப்லவம் ॥"
[ரா-அ 55-16]

[அங்கு ஸ்ரீதேவியைப்போல் நினைக்கமுடியாத அழகையுடையவளாய், சிறிது வெட்கப்படுமவளாய், தனக்கு இனியவளான, சீதாபிராட்டியை சக்ரவர்த்தித்திருமகன் ஓடத்தின்மேல் ஏற்றினான்.] என்று சீதா பிராட்டி யமுனையிலே ராமலக்ஷ்மணர்கள் கட்டிய தெப்பத்திலே ஏறும் போது, அவளை ஏற்றிவிடுவதற்காக எம்பெருமானுடைய ஸ்பர்சம் படப்போகும் ஸமயத்திலே ஈஷத் ஸம்லஜ்ஜமானையாய் (சிறிது வெட்க முற்றவளாய்) மிகவழகியவளாகத் தன்னை அமைத்துக்கொண்டு தன்னழகை யெல்லாம் அவனுக்குக் காட்டினாற்போலே இப்பரகாலநாயகியும் அவன் நோக்கப்போகிற தம் திருமேனியைப் பலபடியாலும் திருத்தித் தன்னழகனைத்தையும் அவனுக்குக் காட்டுகிறாள் (ஆராரயில் வேற்கண்) 'ஆர்' என்று அழகு "ஆரார்" என்றகு அழகு நிறைந்த என்றபடி. அயில்

(அஞ்சனத்தின்நீறணிந்து) அழகுக்கிடுகிறதன்றே; மங்களார்த்தமாக அஞ்சனமிட்டு. (அயில் வேல்கண் அஞ்சநத்தின்நீறணிந்து) கடைந்த பத்திரத்திலே நெய்யிட்டாற்போலே.

(காரார்குழலெடுத்துக்கட்டி) குழலெடுத்துக் கட்டிற்றிலேனாகில் எதிர்த்தலையைக் கையும்மடலுமாகக் காணலாங்கிடீரென்கை. (கதிர் முலையை வாராரவீக்கி) கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற் போலே முலையினழகைக் கச்சாலே மறைத்திலேனாகில் நான்பட்டது அவன்படுங்கிடீரென்கை. (மணிமேகலைதிருத்தி) பரியட்டத்தைப் பேணாதே புறப்பட்டேனாகில் அவஸ்த்தை அவனுக்குப் பிறக்

வேல்—கூர்மைமிக்கவேல், (ஆராரயில் வேற்கண்) அழகும் கூர்மையும் நிறைந்த கண் என்றபடி. (அஞ்சனத்தின் நீறணிந்து) இவளுடைய கண்களுக்கு அழகு செய்யவேண்டிய அவசியமில்லையன்றோ; ஆகையால் மங்களத்தின் பொருட்டு மையிட்டு. (அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து) சாணையிலிட்டுக் கடைந்த ஆயுதத்தின்மேல், துருப்பிடிக்காமலும் கூர்மைமழுங்காமலுமிருப்பதற்காக நெய்யிடுவதுபோல் கூரிய வேல்போன்ற கண்ணிலே மையிட்டபடி.

இவள் செய்த ஒவ்வொரு காரியமும் இவளுடைய பெண்மைக்கு ஏற்றனவாயிருப்பவை. இக்காரியங்களை இவள் செய்யாமல் அடக்கமின்றிப் புறப்பட்டிருந்தாளாகில் இவளுடைய அவயவஸமுதாயசோபையைக் கண்டு அவன் இவளைக் குறித்து மடலெடுக்கவேண்டி நேர்ந்திருக்கும். இவள் பெண்மைக்குச் சேரத்தன்னை ஒழுங்குபடுத்திக்கொண்டு சென்றது இவள் மடலெடுக்கும்படியான துர்த்தசையை விளைவித்தது என்பது இனி விவரிக்கப்படுகிறது;—(காரார் குழலெடுத்துக்கட்டி) இக்குழலை எடுத்துக் கட்டிவைக்காமல் அலையும்படி புறப்பட்டிருந்தால், இதன் அழகிலே மயங்கியே அவன் மடலெடுக்கத்துணிந்திருப்பான் என்கை. (கதிர்முலையை வாராரவீக்கி) கொல்லும் யானைக்கு முகபடாமிட்டாற்போலே, என்பெண்மைக்குச் சேர முலையினழகைக் கச்சாலே நான் மறைக்காமலிருந்தேனாகில், நான் பட்டபாட்டை அவன் படச் செய்திருக்கலாம் என்கை. (மணி மேகலை திருத்தி) அரை நூல் மாலையையும் அரைப்புடவையையும் ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்ளாமல், "ப்ரலம்ப காஞ்சீகுண ஹேம ஸூத்ரா" [ரா-கி 33-38] [கலைந்து தொங்கும் பொன்மயமான அரைநூல் மாலையையுடைய தாரை] என்றாற்போலே வந்திருந்தேனாகில் என் நிலை அவனுக்கு ஏற்பட்டிருக்கும் கிடீர் என்கிறாள். (ஆராரயில் வேற்

**சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன்நான்**

*சீர் ஆர் செழு பந்து கொண்டு—மிகவும் அழகிய ஒரு பந்தைக் கையிலே கொண்டு, நான் அடியா நின்றேன்—நான் அடித்துக் கொண்டிருந்தேன்; (அப்படியிருக்கையில்),*

---

குங்கிடீரென்கை. (ஆராரயில் வேற்கணஞ்சநத்தின் நீறணிந்து) பெரு வெள்ளத்திலே வாய்த்தலே படலிட்டாற்போலே கண்ணினழகை அஞ்சநத்தினலே மறைத்திலேஞகில் கண்ணுக்கிலக்காய் அவனுக்குத் தப்பவொண்ணுதுகிடீரென்றதாயிற்று.

(சீரார்செழும்பந்து) ஆரேனுக்கு ஸம்பத்துண்டாவதும் இவளுடைய ஸ்பர்சங்கொண்டிறே. "பந்தார்விரலி" என்று இவள் கைவிடாதிருக்கும் பந்திறே; ஸம்பத்துக்குக் குறையில்லையிறே. (செழும்பந்து) அழகிய பந்து. (கொண்டடியாநின்றேன் நான்) அங்யார்த்தங்கிடீர் என்னுடைய வ்யாபாரமென்கை.

---

கண் அஞ்சனத்தின் நீறணிந்து) பெருவெள்ளத்தின் தலைவாயிலே படலையிட்டு அடைத்ததுபோலே, கண்ணில் வெள்ளமிடும் அழகை மையிட்டு மறைத்து வரவில்லையாகில் வேற்கணணுக்கு இலக்கான அவன் தப்பியிருக்க முடியாது கிடீர் என்றதாயிற்று.

(சீரார் செழும்பந்து) சீர்—ஸ்ரீ:, செல்வம். எவருக்காயினும் செல்வமுண்டாவது ஸ்ரீதேவியான இவளுடைய ஸ்பர்சத்தாலன்றோ. ஆகையால் இவளுடைய கைப்பட்ட பந்து செல்வம் மிக்க பந்தாகிறது. "பந்தார் விரலி" [திருப்பாவை-18] என்று இவள் கையை விட்டுப்பிரியாதிருக்கும் பந்தாகையாலே இவளுடைய ஸம்பந்தத்துக்குக் குறையில்லையன்றோ. (செழும்பந்து) அழகிய பந்து. செழுமைமிக்க பந்து என்றுமாம்; ராமபிரான் கைபட்டு வளர்ந்த சத்ருஞ்ஜயன் என்னும் யானையைப் போலேயும், கண்ணன் கைபட்டு வளர்ந்ததாலே "பெரும்பசுக்கள்" [திருப்பாவை-21] எனப்படும் பசுக்களைப்போலேயும் இவள் கை படுகையாலே செழுமைமிக்கதாயிருக்கை. (கொண்டாடியா நின்றேன்) பந்தடித்துக்கொண்டே நின்றேன். பந்தடிப்பதென்று பெயராய், உண்மையில் அப்பரமபுருஷன் வருவானே என்று காத்து நின்றேன் நான்.

நீரார்கமலம்போற் செங்கண்மா லென்றொருவன் 11

*நீர் ஆர்கமலம் போல் செம் கண்—நீர்நிலையில் நிரம்பியிருக்கும் தாமரைப் பூப்போன்ற சிவந்த திருக்கண்களை யுடையனான, மால் என்ற ஒருவன்—திருமால் என்று சொல்லப்படுகிற ஒரு புருஷன்,*

---

(நீரார்கமலமித்யாதி) என்னுத்யோகமொன்றுமன்று என்னும்படி அவனுத்யோகமிருந்தபடி. (நீரார்கமலம்போல் செங்கண்மால்) ஒருதடாகம் பரப்புமாறத் தாமரைபூத்தாற்போலே திருக்கண்கள். ஒருதடாகத்தை ஒருதாமரையே கண்செறியிட அலர்ந்தாற்போலே யாயிற்று வடிவடையக் கண்ணாயிருந்தபடி. "கமலம்போல் செங்கண்" என்கையாலே குளிர்த்தி, மென்மை, நாற்றம், விகாஸம், எல்லாம் சொல்லுகிறது. (என்றொருவன) ஒருவனென்னும் ஆபாத ப்ரதீதியமையுங்கிடீர். இப்படிப்பட்டானென்று உள்ளபடியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை யென்றபடி. "சார்ங்கமுடையவடிகளை இன்னாரென்றறியேன்" என்கையாலே அடையாளஞ்சொல்லாநிற்கச்செய்தே அறிந்திலேனென்னும்போது உள்ள

---

(நீரார்கமலம்போல்...) நான் அவனைப் பெறுவதற்காகச்செய்த செயல்கள் ஒன்றுமேயில்லை என்னும்படியிருந்தன அவன் என்னைப் பெறுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள். (நீரார் கமலம்போல் செங்கண்மால்) நீர்நிலை முழுவதும் நிறைந்திருக்கும்படி பூத்து நிற்கும் தாமரைபோன்ற சிவந்த திருக்கண்களை உடைய திருமால் (நீரார்கமலம்) ஒரு தடாகத்தை ஒரு தாமரையே நிறைக்கும்படி மலர்ந்தாப்போலே வடிவுமுழுவதும் கண்ணாய்க் காட்சியளிக்கிறபடி "கமலம்போல் செங்கண்" என்கையாலே தாமரைக்குள்ள குளிர்த்தி, மென்மை, நறுமணம், மலர்த்தி ஆகிய எல்லாம் கண்ணுக்கும் உள்ளன என்று சொல்லுகிறது. (மால்) மயக்குமவன். கண்ணைக்காட்டி மயக்குமவன். (என்றொருவன்) 'ஒருவன்' என்று சொல்லும்படி மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே போதும் அவனைக்கண்டு மயங்குவதற்கு என்கை. 'இப்படிப்பட்டவன்' என்று அவனுக்குள்ள தன்மைகளெல்லாம் அளவிட்டறியமுடியாது என்கை. "சார்ங்கமுடைய அடிகளை இன்னாரென்று அறியேன்" [பெரிய திரு 10—10—9] என்கிறவிடத்தில் இவ்வாழ்வாரே "சார்ங்கமுடைய அடிகளை" என்று அடையாளம் சொல்லும்போதே "அறியேன்" என்றாரன்றோ. உள்ளபடியெல்லாம் அளவிட்டறியமுடியாது என்பதன்றோ இதற்கும்

பாரோர்க ளெல்லாம் மகிழப் பறைகறங்கச்
சீரார் குடமிரண் டேந்திச் செழுந்தெருவே 12

பாரோர்கள் எல்லாம் மகிழ—உலகத்தாரனைவரும் மகிழும்படி, பறை கறங்க—பறையென்ற வாத்யம் முழங்க, சீர் ஆர் குடம் இரண்டு ஏந்தி—சிறந்த இரண்டு குடங்களைக் கையிலேந்திக்கொண்டு, செழும் தெருவே—இப்பெரிய வீதியிலே,

---

படியெல்லாம் பரிச்சேதிக்கப்போச்சுதில்லை யென்றபடி (பாரோர்களெல்லாம் மகிழ) சிறியார் பெரியார் விலக்ஷணர் அவிலக்ஷணர் என்னுதபடி இருந்ததேகுடியாக ப்ரியப்படும்படிவந்து தோன்றினான். பாரோர்களெல்லாமென்கையாலே மத்யமரையும் கூட்டிக்கொண்டு ப்ரியப்படும்படிவந்து தோன்றினனென்கை. (பறை கறங்க) கொல்லுமானைக்குத் தலைப்பறையடிப்பாரைப்போலே பறையடிக்க வந்து தோன்றினான். (சீரார்குடம்) பதார்த்தங்களுக்குச் சீர்மையாவது அவனோடு ஏதேனுமொரு ஸ்பர்சமுண்டாகையிறே, சீரார்

---

கருத்து. (பாரோர்களெல்லாம் மகிழ) சிறியவர், பெரியவர், சிறந்தோர் தாழ்ந்தோர் என்னும் வித்தியாசமில்லாதபடி தன் கண்வட்டத்தில் இருப்பாரெல்லாம் தன்னை ஆசைப்படும்படி வந்து தோன்றினான். "பாரோர்கள் எல்லாம்" என்கையாலே, முதல்வரையும் கடையரையும் மாத்திரமல்லாமல் இடையரையும் மகிழ்வித்துக்கொண்டுவந்தான் என்கை.

"அஜ்ஞஸ் ஸுகமாராத்ய: ஸுகதரமாராத்யதே விசேஷஜ்ஞ: ।
ஜ்ஞாநலவதுர்விதக்தம் ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி" [நீதிசதகம்]

[அறிவற்றவனை எளிதில் திருப்திசெய்துவிடாலாம்; அறிவாளியை மிக எளிதில் திருப்தி செய்துவிடலாம். இரண்டுங்கெட்டமனிதனைப் பிரமனும் திருப்திசெய்விக்க முடியாது.] என்கிறபடியே அறிவில் உயர்ந்தோரையும் தாழ்ந்தோரையும் ரமிக்கச்செய்யலாம்; மத்யமரை (1. நடுவிலவர்களை, 2. இடையரை) ரமிக்கச்செய்ய முடியாதன்றோ. அவர்களையும் ரமிப்பித்துக்கொண்டு வந்தான் என்கை. (பறை கறங்க) மதங்கொண்டயானை பிறரை அழித்துக்கொண்டு வருகிறது என்பதை ஜனங்களுக்கு அறிவிப்பதற்குப் பெரியபறையை அடிப்பதுபோல பெண்களையழிக்கும் இவன் வருகிறான் என்பதை அறிவிப்பதற்காகவே பறை அடிக்க । வந்து தோன்றினான் போலும். (சீரார்குடம்) சீர்மைமிக்க குடம், பொருள்களுக்குச் சீர்மையாவது:—அவனோடு ஏதேனும் ஒரு

குடமென்று தன்னுடைய நோயாசையிருக்கிறபடி. (இரண்டு) ஒரு பந்தைப்புகடுவிக்க எடுத்தது இரண்டுகுடமிறே. (ஏந்தி) வ்யாபரியா நிற்கச்செய்தே, ஏந்தியென்னும்போது ஆகாசத்திலேநிற்கிறுப்போலே நிற்கையும் கையிலுமப்படியே பொருந்தியிருக்கிறுப்போலே மாறி மாறிவருகிற சடக்கிருக்கிறபடி.

(செழுங்தெருவே) அகலநீளங்களாலே குறைவற்றதெரு. "வீதியாரவருவான்" என்று வடிவைப்பாரித்துக் கொடுவந்த தெருவிறே. (ஆராரெனச்சொல்லி) "காரிகையார் நிறைகாப்பவர்யார்" என்னுமாபோலே என்னுடைய உத்யோகமிருந்தபடி கண்டதிறே. ஸ்த்ரீத்வாபிமானமுடையவர்களே! உங்கள் ஸ்த்ரீத்வத்தைக் காக்கவல்லார் காத்துக்கொள்ளுங்கள்" என்பாரைப்போலே வந்து தோன்றினனென்கை. (ஆடுமதுகண்டு)

---

ஸ்பர்சம் உண்டாவதன்றோ. அவன் கையால் ஏந்தப்பெறுகையே இவற்றுக்குச் சீர்மை. (சீரார் குடமிரண்டு ஏந்தி) அக்குடங்களுக்கு ஏற்பட்ட சீர்மைதான் என்னே! என் ஸ்தனகலசங்களுக்கு அச்சீர்மை ஏற்படவில்லையே! என்று தன் நோயாசையையும் குறிப்பாக வெளிப்படுத்துகிறாள். (இரண்டு) நான் பற்றிய ஒருபந்தைக் கைவிடுதற்காகத் தான் இரண்டு குடங்களை எடுத்தபடி. (ஏந்தி) கைக்குக்கை இரண்டு குடங்களையும் கணந்தோறும் அம்மானையடிப்பதுபோலே மாற்றிக்கொண்டிருந்தபோதும், கையின் லாகவத்தாலே ஒரு குடம் ஆகாயத்திலே நிற்பதுபோலவும் மற்றைக்குடம் கையிலே பொருந்தியிருக்கிறுப்போலேயும் தோற்றமளிக்கிறபடி.

(செழுந்தெருவே) அகலநீளங்களாலே குறைவற்ற தெரு. "வீதியாரவருவான்" [நாச்–திரு 14–5] என்கிறபடியே வீதியெல்லாம் ஒளி வீசும்படி வடிவை அலங்கரித்துக்கொண்டு வருகையாலே, அகலநீளங்களால் குறைவற்ற தெருவாயிருக்கவேண்டுமன்றோ. இல்லாவிடில் குளம்படியில் கடலை அடக்கினதுபோலாகுமன்றோ. (ஆராரெனச் சொல்லி) "காரிகையார்நிறை காப்பவர்யார்" [திருவிருத்தம் 19] என்றுப்போலே, என் முயற்சியைக் கண்டீர்களோ? 'பெண்ணுய்ப்பிறந்தோம்' என்னும் பேரபிமானத்தை உடையவர்களே! உங்கள் பெண்மையைக் காத்துக்கொள்ள வல்லவர்கள் காத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுமவனைப்போலே வந்து தோன்றினுன். (ஆடுமது கண்டு) அந்தக்

ஆரா ரெனச்சொல்லி யாடு மதுகண்டு
ஏரா ரிளமுலையா ரென்னையரு மெல்லாரும் 13
வாராயோ வென்றார்க்குச் சென்றேனென் வல்வினையால்
காரார் மணிநிறமுங் கைவளையுங் காணேன்நான் 14

ஆர் ஆர் என சொல்லி—"(எனது குடக்கூத்துக்குத் தப்பிப்பிழைக்கும் மாதர்) ஆரேனுமுண்டோ? ஆரேனுமுண்டோ?" என்று சொல்லிக் கொண்டு, ஆடும் அது கண்டு—குடக்கூத்தாடின படியைக் கண்டு, ஏர் ஆர் இள முலையார்—அழகிய இள முலைகளையுடைய மாதர்களும், என்னையரும் எல்லாரும்—என் தாய்மார்களும் தோழிமார் முதலான பெண்கள் அனைவரும், வாராயோ என்றார்க்கு—"அடீ! நீயுங்காண வரமாட்டாயோ?" என்றழைக்க, அவர்கட்கு (உடன்பட்டு), என் வல் வினையால்—எனது கொடிய பாவத்தினால், சென்றேன்—(அவர்களுடன் அவ்விடத்துக்குச் சென்றேன்; (சென்றதும்) கார் ஆர் மணி நிறமும்—(முன்பு அவனோடு கலந்ததனால் பெற்றிருந்த) நீலமணிநிறத்தையும், கை வளையும்—கையில் தங்கியிருந்த வளைகளையும், நான் காணேன்—நான் இழந்தவளானேன்;

---

அக்குடக்கூத்தாடுகிறபடியைக்கண்டு. (ஏராரிளமுலையார்) அக் குடக்கூத்துக்கண்டு குறியழியாதமுலை படைத்தவர்கள். (என்னை யருமெல்லாரும்) விலக்கக்கண்ட தாய்மாரும் மற்றுமுள்ளாரும். (வாராயோவென்றார்க்குச் சென்றேனென்வல்வினையால்) ஹிதஞ் சொல்லுவாரோடு ப்ரியஞ்சொல்லுவாரோடு வாசியற எல்லாரு மொக்க "கெடுவாய்! கெட்டாயிறே, வந்து கொள்ளாய்"

---

குடக்கூத்தை ஆடுகிற அழகைக்கண்டு. (ஏராரிளமுலையார்) அழகுமிக்க இளங்கொங்கைகளை உடையவர்கள். அக்குடக்கூத்தைக் கண்டவுடன் "இருடீகேசன் வலிசெய்ய முத்தன்ன வெண்முறுவல் செய்யவாயும் முலையும் அழகழிந்தேன் நான்" [நாச்–திரு 5–6] என்கிறபடியே அழகழிந்து நிற்கும் முலையையுடைய என்னைப்போலல்லாமல், அதைக் கண்டும் குறியழியாதிருக்கும் கொங்கைகளை உடையவர்கள். (என்னை யரும் எல்லாரும்) எம் அன்னை–என்னை. என் தாய்மாரும், மற்றுள்ள தோழிமார் முதலானோரும். 'அவனை அணுகாதே' என்று விலக்கியே போந்த தாய்மாருங்கூட அவன் அழகிலே ஈடுபட்டு என்னை "வந்து பார்" என்று கூப்பிட்டனர். (என்னையரும் எல்லாரும் வாராயோ என்றார்க்கு) நல்லது சொல்லும் தாய்மார்களும், இனியது சொல்லும் தோழிமார்களும் அனைவரும் ஒருபடியாக "கெடுவாய்! இந்நேரம்

என்றழைத்தார்கள். (வாராயோ என்றூர்க்கு) பலகாலழைத்து வாராதாரை அழைக்குமாபோலே கடுகவந்து கொள்ளாயென் கிறூர்கள்; கண்ணையங்கேவைத்து வாயாலே "வாராயோ" என் கிறூர்கள். (சென்றேனென் வல்வினையால்) "கௌரவ்யர் சொன்னபடி செய்யவேணுமிறே" என்று சென்றேன். (என் வல்வினையால்) என்னுடைய மஹாபாபத்தாலே. வல்வினையென் கிறது, இப்போது பக்தியையிறே. உத்தேச்யவிரோதி பாபமா மித்தனையிறே.

(காரார்மணி நிறமும் கைவளையுங்காணேன் நான்) அவனோடு கலந்துபெற்ற நிறமும் அத்தாலே தரித்த வளைகளும் கண்டிலேன்.

---

இதைக்காணுல் கெட்டனையே! இனியாவது வந்துபார்" என்று அழைத் தனர். (வாராய் ஓ) 'ஓ' என்பது இந்நேரம் இழந்ததற்கு வருத்தத்தைத் தெரிவிக்கும் சொல். (வாராயோ) வரமாட்டாயோ? ஒரு காலே அழைக்கும்போதும், விஷயத்தின் இனிமையாலே, பலகால் அழைத்து வாராதவர்களை அழைப்பதுபோலே அழைக்கிறூர்கள். (வாராயோ) 'ஓ' என்பது கண்ணெதிரே இல்லாதாரையும், தூரத்திலுள்ளாரையும் கூப்பிடும் சொல்லாகையாலே, தங்கள் கண்ணை அவனிடத்திலே வைத்து, வாசலில் நின்றுகொண்டே உள்ளிருக்கும் என்னை 'வாராய் ஓ' என்று உரக்கக் கூப்பிட்டார்கள். (சென்றேன்) கௌரவிக்கத்தக்க தாய்மார் சொற்படி செய்யவேணுமாகையாலே சென்றேன். (என் வல்வினையால் சென்றேன்) என் மஹாபாபத்தாலே சென்றேன். இங்கு 'வல்வினை' (கொடிய பாபம்) என்கிறது தன் திருடமான பக்தியை யாகும். தனக்கு எது உத்தேச்யமோ அதற்கு விரோதியாயிருப்பதே பாபமாகும். இவளுக்கு உத்தேச்யம் பகவத் ஸம்ச்லேஷஸுகமும், விச்லேஷ துக்கமில்லாமையும்; அவற்றில் விச்லேஷதுக்கமில்லாமைக்கு விரோதியாகிறது பக்தி. அவனைக் கிடைக்கப்பெறுதபோது, பக்தியால் இவளுடைய விச்லேஷதுக்கம் பதின்மடங்காகப் பெருகுகிறதன்றே. ஆகையால் உத்தேச்யவிரோதியான பக்தி 'மஹாபாபம்' என்று சொல்லப்படுகிறது இங்கு.

தன் விச்லேசஷதுக்கம் விருத்தியானபடியை விவரிக்கிறூள் மேலே:- (காரார் மணிநிறமும் கைவளையும் காணன் நான்) அவனோடே கலந்து பெற்ற நிறமும், கலந்ததாலே தரித்துநின்ற வளைகளையும் கண்டிலேன். (காரார் மணிநிறமும்) மேகத்தையொத்த மணிபோன்ற நிறத்தையும்,

**ஆரானுஞ் சொல்லிற்றுங் கொள்ளேன்**

*ஆரானும் சொல்லிற்றும் — (உற்றுருறவினர்களில்) ஆராவது எதையாவது நல்லது சொன்னாலும் அதையும், கொள்ளேன் — கேளாதவளானேன்;*

---

**காரார்மணிநிறக் கண்ணனோடே கலந்துபெற்ற நிறமும் அத்தாலே தரித்தவளைகளும் கண்டிலேன். தன்னிறத்தைத்தான் "காரார்மணி நிறம்" என்பானென்னென்னில் "நீலமணிபோலே ஒருவடிவிருக்கும்படியே!" என்று அவனை(ன்) வாய்ப்புலத்தக்கேட்ட வாஸனையாலே "காரார்மணிநிறம்" என்று ச்லாகிக்கிறாள். (நான்-காணேன்) எதிர்த்தலையை இக்காட்சிகாணக்கடவ நான்; அத்தலையித்தலையாய் நான்காணேன். "ஒளிவளையும்மாநிறமும் கொண்டார்" என்று எப்போதும் அவன் விரும்பிக்கொள்வது இவையிறே.**

---

அன்றிக்கே, கருமைபொருந்திய மணிபோன்ற நிறத்தையும் என்றுமாம்: "காரார் மணிநிறக்கண்ணனூர் விண்ணகரம்" என்கிறவிடத்திலே இம் மடலிலேயே நீலமேக மணிவண்ணனாகப் பேசப்பட்ட அவனோடே கலந்து அவன் நிறத்தைப்பெற்று இவளும் பசுகு பசுகென்று ஆனபடி. (காரார் மணிநிறம்) ஹிரண்யவர்ணையான இவள் தன் நிறத்தைத்தான் 'காரார் மணிநிறம்' என்பது எப்படிப் பொருந்தும் எனில்: "நீலமணி போலே ஒரு வடிவிருக்கும்படியென்" என்று தாய்மாரும், தோழிமாரும் வாய்வெருவுவதைக் கேட்ட வாஸனையாலும், தானும் அவ்வடிவையே தியானித்திருக்கையாலும் தன் நிறத்தையும் அவன் நிறமாகக்கண்டு "காரார் மணிநிறம்" என்று சிறப்பிக்கிறாள். [பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானத்தில் 'அவனை வாய்புலத்தக்கேட்ட' என்று பாடமான போது கீழுரைத்தபடி பொருள். 'அவன் வாய்புலத்தக்கேட்ட' என்றும் பாடம் உண்டு. அப்போது அவதாரிகையும் வ்யாக்யானமும் பின்வருமாறு அமையும்:— தன் நிறத்தை தானே "காரார் மணிநிறம்" என்று புகழ்ந்து கூறுவது தற்புகழ்ச்சியாகாதோ எனில்;— "நீலமணிபோன்ற உன் வடிவிருக்கும்படியே" என்று அவன் இவளைப்பார்த்து தன் வடிவைச் சிறப்பிக்கிறான் என்கை.] (நான்) பிரிவதற்குமுன் அவனை இக்காட்சிகாணவல்ல நான்; (நான் காணேன்) என்னைப் பெறுவதற்கு முன் அவனுக்குப் பிறந்த அவஸ்தைகளெல்லாம் அவனைப்பிரிந்தபின் எனக்குப்பிறக்கப்பெற்று, என் நிறத்தையும் வளையையும் காணேன். "ஒளிவளையும் மாநிறமும் கொண்டார்" [திருநெடு 23] என்கிறபடியே எப்போதும் அவன் விரும்பிக்கொள்வது இவற்றையன்றோ.

(ஆரானும் சொல்லிற்றுங்கொள்ளேன்) ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவாரும் சொல்லும் வார்த்தைகளுங் கொள்ளேன். அதாவது பிரிவாற்றுமைக்கு ஆச்வாஸஹேதுவாக வ்ருத்த கீர்த்தநம்பண்ணித் தரிக்கக்கடவதிறே. ஸ்ரீஜநகராஜன் திருமகள், ஏகாக்ஷி ஏககர்ணிகளுக்கு அகப்பட்டவன்று "பன்னிரண்டாண்டு நானும் பெருமாளும் எங்கள் மாமனுர் மாளிகையிலே ரஸித்தோங்காணுங்கோள்" என்று தன்னுற்றுமையாலே ராக்ஷஸிகளுக்குச் சொல்லித் தரித்தாளிறே; அப்படி நான் சொல்ல மாட்டாவிட்டால் பந்துக்கள் சொல்லிற்றுக்கேட்கலாமிறே; அதுவும் மாட்டிற்றிலேன்.

அதுக்கு நிபந்தநமென்னென்னில், (அறிவழிந்து) கேட்கைக்குப் பரிகரமில்லாமையாலே. (தீராவுடம்போடு) இப்படியாற்றுமை மிக்கால் "அச்சேத்யம் அதாஹ்யம்" என்னும் ஆத்மவஸ்துவைப்போலே ஆகவேணுமோ அழியக்கடவதான உடம்பு?

---

(ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன்) நன்மை சொல்லும் தாய்மாரும், இனியது சொல்லும் தோழிமாரும் சொன்ன வார்த்தைகளையும் கேட்கமாட்டாதவளானேன். அதாவது:—பிரிவாற்றுமையைத் தவிர்ப்பதற்காக நடந்த கலவியைச் சொல்லி தரிக்கலாமன்றே. சீதாபிராட்டியார் ஏகாக்ஷி ஏககர்ணிகளிடத்திலே அகப்பட்ட அன்று "பன்னிரண்டாண்டு நானும் ஸ்ரீராமபிரானும் எங்கள் மாமனுர் மாளிகையிலே ரஸித்தோங்காணுங்கோள்" என்று தன் ஆற்றுமையாலே ராக்ஷஸிகளிடத்திலுங்கூடச் சொல்லி உயிர் தரித்தாளன்றே. அப்படியே நான் சொல்லித்தரிக்கவேண்டியது தகுதியாயிருக்க அதில்லாவிடினும் பந்துக்கள் சொன்னதையாவது கேட்கலாமன்றே; அதுவும் செய்யவில்லை என்கிருள் "சொல்லிற்றும் கொள்ளேன்" என்னுமத்தாலே.

கேட்காமைக்குக் காரணமென்னென்னில்: (அறிவழிந்து) கேட்கைக்கு உபகரணமான அறிவிருந்தாலன்றே கேட்கமுடியும். (தீராவுடம்போடு) அழியக்கூடிய உடம்பு அழிந்து தொலைக்கக் கூடாதா? பிரிவாற்றுமை மிகுதியாலேற்படும் இத்துன்பத்துக்காவது ஒரு முடிவு காணலாமே! அப்படி அழிந்தும் தொலையாமல் "அச்சேத்யம் அதாஹ்யம்" [வெட்ட முடியாதது; எரிக்கமுடியாதது] என்னும் ஆத்ம வஸ்துவைப்போலே அழியாததாயிருக்கிறதே. (பேதுறுவேன் கண்டிரங்கி) இப்படி ஆற்றுமை

அறிவழிந்து
தீரா வுடம்போடு பேதுறுவேன் கண்டிரங்கி
ஏரார் கிளிக்கிளவி யெம்மனைதான் வந்தென்னைச்

*அறிவு அழிந்து—(என்) அறிவு அழியப்பெற்று, தீரா உடம்போடு—ஒழிய மாட்டாத உடம்போடு கூடி, பேது உறுவேன் - பைத்தியம் பிடித்தவள் போன்றிருந்த என்னை, ஏர் ஆர் கிளி கிளவி எம் அனை கண்டு இரங்கி—அழகிய கிளியின் பேச்சுப்போன்ற பேச்சையுடையவளான என் தாயானவள் கண்டு இரக்கங்கொண்டு, தான் வந்து — தானே (என்னருகில்) வந்து, என்னை —எனக்கு,*

---

**(பேதுறுவேன்கண்டிரங்கி) இப்படியாற்றாமையாலே அறிவுகெட்டுக் கிடக்கிற வென்னைக்கண்டிரங்கி. ஆச்ரயத்திலிரக்கம் குடிபுகுராமல் வார்த்தைசொல்லவிறே இவள்கற்றது. அவளும் ச்ராவ்யமாக வார்த்தைசொல்லக்கற்றாள்காணும்; என் தசாவிபாகமிருந்தபடி. (ஏரார்கிளிக்கிளவி) "கிளியின்பேச்சுப் பேய்ப்பாட்டு" என்னும்படி காணும் இவள் பேச்சினினிமை. (எம்மனை) இதுக்கு நிபந்தநமென்னென்னில்; பெற்றதாயாகையாலே. அதாவது-"அதிமாத்ரப்ராவண்யமாகாது" என்று நிஷேதிக்குமதுக்கு மேற்பட என்ஸத்தையை அழியவிடாளிறே. (தான்வந்தென்னை) என்னாற்றாமை கண்டபடியாலே தானேவந்து.**

---

யாலே அறிவு கெட்டுக்கிடக்ற என்னைக்கண்டு இரங்கி. (கிளிக் கிளவி) இதுவரையில் தன் ஆத்ம ஸ்வரூபத்தில் இரக்கத்துக்கே இடமில்லாதபடியாக்கிக்கொண்டு "அவன் மேல் அன்பு வைக்காதே" என்று என்னைக் கடிந்துரைத்துவந்த என் அன்னை என் நிலையிருந்தபடியைக்கண்டு இரங்கி கிளிபோலே செவிக்கினிய செஞ்சொல்லைச் சொன்னாள். (ஏரார் கிளிக்கிளவி கிளியின் பேச்சைக்காட்டிலும் அழகுமிக்க சொல்லையுடையவள் என்றுமாம். "கிளியின் பேச்சு பேயின் பாட்டு" என்று சொல்லும்படியிருக்கிறது. இவள் பேச்சின் இனிமைக்கு ஒப்பிட்டால். கடினசித்தையாயிருந்தவன் இப்படி இரங்குவதற்குக் காரணமென்ன? எனில்: (எம்மனை) என்னைப் பெற்ற தாயாகையாலே. அதாவது:—"நீ மிகவும் அவனிடம் அன்பு செலுத்துவது சரியல்ல" என்று என்னைத் தடுத்துவந்தாளேயொழிய, ஸத்தை அழியும்படியான நிலையில் மேலும் வார்த்தைகளால் துன்புறுத்தி அழிக்கமாட்டாளே. ஆகையாலே இரங்கினாள். (தான் வந்தென்னை) என் ஆற்றாமையைக் கண்டபடியாலே நான் அழைக்காமல் தானே என்னிடம் வந்து.

சீரார் செழும்புழுதிக் காப்பிட்டுச் செங்குறிஞ்சித் 16
தாரார் நறுமாலைச் சாத்தற்குத் தான்பின்னும்

சீர் ஆர் செழு புழுதி காப்பு இட்டு—அழகிய சிறந்த பாகவத ஸ்ரீபாத தூளியைக் கொண்டு ரக்ஷையிட்டு, செம் குறிஞ்சி தார் ஆர் நறு மாலை சாத்தற்கு—செங்குறிஞ்சிமலர்கள் நிறைந்த மணம்மிக்க மாலையை அணிந்துள்ள 'சாஸ்தா' என்கிற தேவதாந்தரத்திற்கு, தான்பின்னும்-தான் இதுவரை,

---

(சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) "மாயன் தமரடி நீறு கொண்டணியமுயலில் மற்றில்லை கண்டீரிவ்வணங்குக்கு" என்றிருக்கும வைஷ்ணவஸந்தாநமாகையாலே த(ா)ன் பாதரேணுவை வாங்கி ரக்ஷையாக இட்டாள். (செங்குறிஞ்சி) என்னுற்றாமையைக் கண்ட கலக்கத்தாலே த(ா)ன் பாதரேணுவை எனக்கு ரக்ஷையாக இட்டவளவில் பர்யவஸியாமையாலே, தேவதாந்தரங்களென்றால் அருவருக்குங் குடியாயிருந்துவைத்து தேவதாந்தரங்களின் காலிலே விழும்படி ஆயிற்றுக்காணும். (செங்குறிஞ்சித்தாரார் நறுமாலைச் சாததற்கு) ஒருதிருத்துழாய் பரிமாறுக தேவதையாகவேணுமோ

---

(சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) "மாயன் தமரடி நீறு கொண்டு அணியமுயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே" [திருவாய் 4–6–6] என்று நினைத்திருக்கும் வைஷ்ணவ குலத்திலே பிறந்தவளாகையாலே, பகவத்பக்தர்களின் அடிப்பொடியை வாங்கிக் காப்பாக இட்டாள். "செழும் புழுதி" என்றால் பகவானுடைய பாதரேணு; "சீரார் செழும்புழுதி என்றால் பாகவதர்களுடைய ஸ்ரீ பாதரேணு. (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு...) சிவந்த குறிஞ்சிப்புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட மணம் மிக்க மாலையையுடைய 'சாஸ்தா' என்னும் தெய்வத்திற்கு. சாத்தன் சாஸ்தா; ஐயனார் என்றும், ஐயப்பன் என்றும் சொல்லப்படும் தெய்வம். (சாத்தற்கு ஒன்று நேர்ந்தாள்) என் விரகவேதனையைக் கண்ட கலக்கத்தாலே, கைகண்ட மருந்தான தொண்டரடிப்பொடியை இட்டதிலும் திருப்தியுறாமல், மற்றோர் தெய்வம் என்றால் வெறுத்திருக்கும் குலத்திலே பிறந்த இவள், ஒரு க்ஷுத்ர தெய்வத்தின் காலில் விழும்படியாயிற்று கிடீர்! (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு) பரமபுருஷனிடம் மற்ற பலன்களைக் கேட்பதும் ஸ்வரூப விருத்தம் என்று அறிந்திருக்கும் இவள், திருத்துழாயின் மணத்தையும் கண்டறியாத தெய்வத்தின் காலிலேயோ விழவேண்டும்! என்ன பரிதாபம்!! (தான் பின்னும் நேராதனவொன்று நேர்ந்தாள்)

நேரா தனவொன்று நேர்ந்தா ளதனாலும் 17
தீராதேன் சிந்தைநோய் தீராதேன் பேதுறவு
வாராது மாமை அதுகண்டு மற்றாங்கே 18
ஆரானும் மூதறியு மம்மனைமார் சொல்லுவார்

*நேராதன ஒன்று நேர்ந்தாள்—ஒருநாளும் செய்தறியாத ஒரு அஞ்சலியைச் செய்தாள்; அதனாலும் என் சிந்தை நோய் தீராது — அப்படி செய்ததனாலும் எனது மனோ வியாதியானது தீர்ந்ததில்லை; என் பேதுறவு தீராது—எனது அறிவு கேடும் தீரவில்லை; மாமை வாராது—(இழந்த) மேனி நிறமும் மீண்டு வரவில்லை; மற்று—அதற்குமேல், ஆங்கே ஆரானும் மூது அறியும் அம்மனைமார்—அங்கிருந்த யாரோ சில பழங்கதைகளறிந்த பாட்டிமார்கள், அது கண்டு—அப்படிப்பட்ட எனது நிலைமையைக்கண்டு, சொல்லுவார்—(நோய் தீர உபாயம்) சொல்லத்தொடங்கினர்; (என்ன சொன்னார்களென்னில்;)*

---

***பின்னை? (தான் பின்னும் நேராதனவொன்று நேர்ந்தாள்) தான் வருத்த விஷயத்திலே ஓரஞ்சலி பண்ணினால் "அது ஸாதநத்திலந்வயிக்கிற்செய்வதென்" என்றிருக்கக்கடவ தான் ஓரஞ்சலியுமகப்படப்பண்ணினாள்போலேகாணும்.***

---

*இக்கலக்கத்திற்குப்பின்னும், இதற்கு முன்னும் எம்பெருமான் விஷயத்திலும் தான் ஸாதனபுத்தியுடன் செய்தறியாத ஓரஞ்சலியை இத்தெய்வத்தின் விஷயத்தில் பரிபூர்ணமாகச் செய்தே விட்டாள்! (பின்னும்) கலக்கமில்லாத காலங்களில், (நேராதனவொன்று) "பகவத்விஷயத்திலே ஓரஞ்சலி செய்தாலும் இது ஸாதனம் என்னும் புத்தி வந்துவிட்டால் ஸ்வரூபநாசம் விளையுமே! என்செய்வது?" என்று நினைத்திருக்கக்கூடிய இவள் இத்தெய்வத்தின் விஷயத்தில் ஸாதனபுத்தியுடன் ஓரஞ்சலியைச் செய்துவிட்டாளே. மகளின் தசையைக்கண்ட கலக்கத்தால் ஏற்படுவதாகையாலே இது தோஷமன்று. ராமபிரானிடமுள்ள பிரீதியாலே அயோத்திவாசிகள், எல்லா தேவர்கள் காலிலும் விழுந்தனர்; பிராட்டி திக்பாலகர்களைக் காப்பிட்டாள்; "நமோஸ்து வாசஸ்பதயே" என்றான் அனுமன் கடலைக்கடக்கும்போது. "தெய்வங்காள்" என்றார் நம்மாழ்வார். "உன்னையும் உம்பியையும் தொழுதேன்" என்றாள் கோதை. பகவத் பாகவதவிஷயப்ரீதி பெருகிவரும்போது ஏற்படும் கலக்கத்தால் உண்டாகும் இச்செயல்களால் தோஷமில்லை என்பதையும், பொங்கும் பரிவினாலேற்படும் இப்படிப்பட்ட கலக்கம் உத்தேச்யமே என்பதையும் ஆசார்யச்ரேஷ்டர்கள் அறுதியிட்டனர்.*

(அதனுலும் தீராதென் சிந்தைநோய்) பண்டேமிக்கு வருகிற நோவு தேவதாந்தரஸ்பர்சத்தால் அறமிக்கது; (தீராதென்பேதுறவு) அறிவுகுடி புகுந்ததில்லை. (வாராதுமாமை) நிறம் வருமென்கைக்கு ஹேதுவின்றிக்கே இருக்கச்செய்தே நிறம் வந்ததில்லையென்றுளிறே; "என்னுற்றமை கண்டால் நிறம்தானே வரவேணும்" என்றிருக்கிறுள்காணும். (மற்றுங்கேயாராணுமூதறியும் அம்மனைமார் சொல்லுவார்) தங்களை அழையாதிருக்கச்செய்தே மூதறிவாட்டிகளானவர்கள் சொல்லுகிறுர்கள். (மூதறியுமம்மனைமார் சொல்லுவார்) "இந்த்ரன் படிகளிருக்கும்படியென்!" என்று ஒருத்தி ஒருத்தியைக்கேட்க, "தொண்ணூற்றெட்டிந்த்ராதிகளை ஸேவித்தேன்; இந்த்ரன்படி கேட்கிறுய்; வேணுமாகில் சொல்கிறேன்" என்றுளிறே; அப்படியே பழையராய் நோய்களுமறிந்து

---

(அதனுலும் தீராதென் சிந்தை நோய்) முன்னமே அதிகமாகி வரும் மனநோய் க்ஷுத்ரதெய்வத்தின் ஸம்பந்தத்தால் மிகவும் அதிகமாயிற்று. (தீராதென் பேதுறவு) என் அறிவுகேடும் அழிந்ததில்லை. (வாராது மாமை) என் பழைய நிறம் வந்ததில்லை; நாயகனேடுகூடக் கலந்தாலன்றே நிறம் வரும்; அதற்கு ப்ரஸக்தியேயில்லாமலிருக்கையில் 'மாமை வாராது' என்று இவள்சொல்லக் காரணமென்னென்னில்: "என் நிலையைக்கண்டால் (அசேதநமான) நிறமும் இரங்கி வாராமலிராது" என்றிருந்தாள் இவள்; அது பலிக்கக்காணமையால் "நிறம் வரவில்லையே" என்று வருந்துகிறுள். (அதுகண்டு மற்றுங்கே ஆராணும் மூதறியும் அம்மனையார் சொல்லுவார்) என் நிலையைக்கண்டு, தங்களை அழையாமலிருக்கச்செய்தேயும், என்னை முன்பின் அறியாதவர்களும், அங்கிருந்தவர்களுமான மூதறிவாட்டிகள் சொல்லுகிறுர்கள். (அதுகண்டு) என் நிலையைக்கண்ட மாத்திரத்தில் இரங்கினர். (ஆராணும்) முன்பின் அறியாதவர்கள். (மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்) பழைய விஷயங்களையெல்லாம் அறியும் பாட்டிகள் சொன்னுர்கள்; "இந்திரன் எப்படியிருப்பான் தெரியுமோடி" என்று பண்டைக்காலத்தில் ஒருகிழவி இன்னொரு கிழவியைக் கேட்க, "தொண்ணூற்றெட்டு இந்திரர்களையும், அவர்களுக்கும் பாட்டனை பிரமனையும் பார்த்திருக்கிறேன்; என்னைப்போய் இந்திரனைத் தெரியுமா என்று கேட்கிறுயே; கேட்க விரும்பினுயாகில் சொல்லுகிறேன் கேள்!" என்றுள் மற்றொரு கிழவி என்பர். அக்கிழவியைப்போலே பழையராய், பெண்களுக்கு வரும் நோய்களையும் அறிந்து, நோய்களுக்குக் காரணமுமறிந்து, அவற்றுக்குப்

பாரோர் சொலப்படுங் கட்டுப் படுத்திரேல் 19
ஆரானும் மெய்ப்படுவ னென்றார் அதுகேட்டுக்
காரார் குழற்கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறிச் 20

*பாரோர் சொல்லப்படும் கட்டுப்படுத்திர் ஏல் ஆரானும் மெய்ப்படுவன் என்றார்— "குறி கேட்பதென்று உலகத்தார் ஒன்று சொல்வதுண்டு; அதைச் செய்தீர்களாகில் (இந்நோயை உண்டு பண்ணினவன்) யாராயிருந்தாலும் உண்மையாக வெளிப்பட்டுவிடுகிறான்" என்று சொன்னார்கள்; அது கேட்டு—அவர்கள் சொல்லிக்கொண்டிருந்த அந்த வார்த்தையையே கேட்டு, கார் ஆர் குழல்கொண்டை—கறுத்த மயிர் முடியை யுடையளான, கட்டுவிச்சி—குறிசொல்லுங் குறத்தியானவள் (ஒருவரும் அழையாதிருக்கத் தானாகவே வந்து) கட்டேறி—தெய்வ ஆவேசங்கொண்டு,*

---

நோய்க்கு நிதானமுமறிந்து பரிஹாரமும் பண்ணுவித்துப் போரும் மூதறிவாட்டிகள் சொல்லுகிறார்கள். (பாரோர் சொலப்படுங் கட்டுப்படுத்திரேல்) பூமியில் அறிவாரும் அறியாதாருமொக்கக் "கட்டுப்படுத்தக்கால் நோய்க்கு நிதாநம்தெரியும்" என்று சொல்லாநிற்பர்கள்; அத்தைச் செய்யுங்கோளென்ன, அதுக்கு ப்ரயோஜநமென்னென்னில், (ஆரானும் மெய்ப்படுவனென்றார்) பெண்களைத் தீப்புசெய்து முகங்காட்டாதேயிருக்கும் க்ருஷ்ணனேயாகிலும் வெளிப்படுமென்றார்கள்.

(அதுகேட்டு) "கட்டுப்படுங்கோள்" என்றார்கள் மூதறிவாட்டிகள்; இவர்களும் கட்டுப்படுப்பாராக விசைந்தார்கள்;

---

பரிஹாரமும் பண்ணுவிக்கும் மூதறிவாட்டிகள் சொல்லுகிறார்கள்: (பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்) "அறிந்தவர், அறியாதவர் என்னும் வாசியற பூமியிலுள்ளார் அனைவரும், 'கட்டுப்படுத்தினால் நோய்க்குக் காரணம் தெரியும்' என்று சொல்லுவர்; அதைச் செய்யுங்கள்" என்றனர் மூதறிவாட்டிகள். அப்படிச் செய்வதற்குப் பலன் ஏன்ன? எனில்: (ஆரானும் மெய்ப்படுவன் என்றார்) இவளை நலிபவன் எவனாயினும் வெளிப்படுவன்; பெண்களுக்குத் துன்பம் விளைத்து முகங் காட்டாமல் பெண்ணின் வருத்தமறியாமலிக்கும் கண்ணனேயாகிலும் வெளிப்படுவன் என்றார்கள். கட்டுப்படுத்துதல்—குறிகேட்டல்;

(அது கேட்டு) "கட்டுப்படுத்துங்கள்" என்றனர் மூதறிவாட்டிகள்; தாய்மார் தோழிமார் ஆகிய இவர்களும் கட்டுப்படுத்துவதற்கு இசைந்

அவ்வளவிலே தன்னை அழையாதிருக்கச்செய்தே இவர்களிசை வைக்கேட்டுத் தானே வந்து புகுந்தாள் கட்டுவிச்சி. பகவத் விஷயங்களைக் கேட்கைக்கு ருசியுண்டென்றறியுமித்தனையிறே. வேண்டுவது; ஆசார்யர்கள் தாங்களே வந்து சொல்லுவர்களிறே முன்புத்தை ஆசார்யர்கள் பகவத் விஷயஞ் சொல்லும்போது நாலிரண்டு பேருக்காயிற்றச் சொல்லுவது; அதுதானு மவர்கள் படியறிந்தால் சொல்லுவது; அங்ஙனன்றிக்கே, "ருசியுடையார்" என்று தோற்றினவளவிலே சொல்லுவர் எம்பெருமானர்; அப்படி காணுமிக்கட்டுவிச்சியும்.

(காரார்குழல்கொண்டை) கட்டுப்படுத்தினவள் சொல்லும் வார்த்தையிலுங்காட்டில் இவள்மயிர்முடியே இவளுக்கு போக்ய மாயிருக்கிறபடி. ஆசார்யர்களுடைய ஆத்ம குணங்களிலுங் காட்டில் தேஹகுணமே உத்தேச்யமாயிருக்கிறபடி. (கட்டுவிச்சி

---

தனர். அந்த ஸந்தர்ப்பத்திலே, தன்னை அழையாதிருக்கும்போதே இவர்கள் கட்டுப்படுத்துதற்கு இசைந்திருப்பதைக் கேட்டு, தானே வந்து புகுந்தாள் கட்டுவிச்சி. ஸ்வாபதேசத்தில் கட்டுவிச்சியே ஆசார்யன். பகவத்விஷயங்களைக் கேட்பதற்கு ருசியுண்டென்று அறிந்தவள விலே கிருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள் தாங்களே மேல்விழுந்து அரும் பொருள்களை உபதேசிப்பர்கள். எம்பெருமானருக்கு முன்பிருந்த ஆசாரியர்கள் பகவத்விஷயத்தை மிகச்சிறந்தவரான நால்வரிருவர்க்கே உபதேசிப்பர்கள்; அதுவும் அவர்கள் ஸ்வபாவங்களையெல்லாம் ஆராய்ந்துபார்த்தபின்பே சொல்லுவர். அப்படியல்லாமல் "பகவத் விஷயமறிய ஆசையுடையார்" என்று தோற்றினவர்க்கெல்லாம் தானே மேல்விழுந்து உபதேசிப்பர் எம்பெருமானர். இக்கட்டுவிச்சியும் அவர் போன்றவளே.

(காரார் குழல்கொண்டை) கருநிறமயிர்முடியையுடைய கட்டுப் படுத்தினவள் சொன்ன வார்த்தையைக்காட்டிலும் அவளுடைய மயிர் முடியே இத்தாய்க்கு போக்யமாயிருக்கிறபடி. ஸ்வாபதேசத்தில், ஆசார் யர்களுடைய ஆத்மகுணங்களைக்காட்டிலும் தேஹகுணமே உத்தேச்யம் என்கை. (கட்டுவிச்சி) 'இப்பெண்ணைப்பீடிப்பது இன்னதெய்வம்' என்று கட்டுப்படுத்துமவள் கட்டுவிச்சி. (கட்டுவிச்சி கட்டேறி) கட்டுவிச்சி

சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாப் 21
பேரா யிரமுடையா னென்றாள் பேர்த்தேயும்

சீர் ஆர் சுளகில் சில நெல் பிடித்து எறியா—அழகியதொரு சிறுமுறத்தில் நின்றும் சிலநெற்களைப்பிடித்தெடுத்துமுன்னேவீசியெறிந்து (குறிபார்த்து) வேரா—வேர்வையிட்டு, விதிர்விதிரா-மேனிஉடைந்து, மெய் சிலிரா—மயிர்க்கூச்செறிந்து, கை மோவா—கையை மோந்துபார்த்து, பேர் ஆயிரம் உடையான் என்றாள்—ஆயிரம் திருநாமங்களை உடையனான எம்பெருமானே (இந்நோய் செய்தவன்) என்றாள்; பேர்த்தேயும் — அதற்குமேல்,

---

கட்டேறி) தேவாவிஷ்டையானாள். அதாவது கொட்டாவி கொள்ளாதே மூரிநிமிராதே செய்தபடி. (சீரார்சுளகில்) சுளகுக்குச் சீர்மையாவது பதராறுத்து மணியும் மணியாக்கிப் பதரும் பதராக்குமதிறே. இச்சுளகும் தேவதாந்தரங்களாகிற கூளத்தையும் பதரையுமறுத்து "மணியே மணிமாணிக்கமே" என்கிற மணியைக் காட்டப்புகுகிற சுளகிறே. ஆகையால் சீரார்சுளகு. (சில நெல்பிடித்தெறியா) "அவையுஞ்சில நெல்லே!" என்கிறாள். (வேரா விதிர்விதிரா மெய்சிலிரா) பகவத் விஷயஞ் சொல்லப்புக்குத்

---

யானவள் தேவாவிஷ்டையானாள். அதாவது:— தூக்கத்திற்போலே கொட்டாவி விடாமல், சோம்பல் முறியாமலிருந்தபோதிலும், தன் நினைவறியாமல் தெய்வத்தினால் தூண்டப்பட்டு வார்த்தை சொல்லும் நிலை கட்டேறிநிற்கும் நிலையாகும். (சீரார் சுளகில்) சீர்மை மிகுந்த சுளகில். சுளகுக்குச் சீர்மையாவது—மணிநெல்லும் பதரும் கலந்திருக்கும்போது, நெல்லையும் பதரையும் பிரித்துக்கொடுக்கும் தன்மை. இச்சுளகும் மற்ற தெய்வங்களாகிய கூளத்தையும் பதரையுமறுத்து, "மணியே மணிமாணிக்கமே" [பெரியதிரு 11-8-8] என்கிற மணியைக் காட்டித்தரப்போகிற சுளகன்றோ. ஆகையால் இதுவும் "சீரார் சுளகு" எனப்படுகிறது (சில நெல் பிடித்தெறியா) "அவையும் சில நெல்லே!" என்று நெல்லையும் கொண்டாடுகிறாள். (வேரா விதிர்விதிரா மெய் சிலிரா) பகவத் விஷயத்தைச் சொல்லப்புகுந்தவுடன் சரீரம் சிதிலமாயிற்று. (வேரா) வியர்த்தது; (விதிர் விதிரா) திருமேனி உடைந்தது; (மெய் சிலிரா) மயிர்க்கூச்செறிந்தது. "மொய்த்துக் கண்பனிசோர மெய்கள்

தான் உடைகுலேபட்டபடி. "மொய்த்துக் கண்பனிசோர மெய்கள் சிலிர்ப்ப" என்னக்கடவதிறே. "मुने वक्ष्याम्यहं बुद्ध्वा" (முநே வக்ஷ்யாம் யஹம் புத்வா) "ज्ञातुमेवंविधं नरं" (ஜ்ஞாது மேவம்விதம் நரம்) என்று ப்ரச்நம்பண்ணின ஸ்ரீவால்மீகிபகவானுக்கு ஸ்ரீநாரதபகவான் ஆனவாறே சொல்லுகிறேன் என்றான். அதக்குக் கருத்தென்னென்னில்; அந்யபராய் ப்ரக்ருதிஸ்த்தரானவாறே சொல்லுகிறேனென்றானிறே. பதார்த்தங்களையுள்ளபடி அறிந்திருக்கிறவன் இனி ப்ரக்ருதிஸ்த்தனானவாறே சொல்லுகிறேனென்றது ப்ரச்நரூபத்தாலே ராமகுணங்களை ஸ்மரித்து நெஞ்சையுடைகுலையப் பண்ணினனாயிற்று; தெளிந்து நான் ப்ரக்ருதிஸ்த்தனானவாறே சொல்லுகிறேனென்றானமித்தனை

---

சிலிர்ப்ப" [பெருமாள் திரு 2-9] என்றும், "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" [பெரிய திருவ 34] என்றும்,

"ஆஹ்லாத சீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந் ।
ஸதா பரகுணாவிஷ்டோ த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி: ॥"

[ஆனந்தத்தால் வெளிவரும் குளிர்ந்த கண்ணீரை உடையவனாய், மயிர்கூச்செறியும் மேனியையுடையவனாய், எப்போதும் பரமாத்மாவின் குணத்தில் ஈடுபட்டவனாக (பக்தன்) எல்லாச்சேதனராலும் காணத் தக்கவன் என்றும் சொல்லப்படுகிறதன்றோ] "கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம்லோகே குணவாந்" [இவ்வுலகில் இப்போது குணமுடையவனாய் இருப்பவன்யார்] என்று தொடங்கி, "மஹர்ஷே! த்வம் ஸமர்த்தோஸி ஜ்ஞாதுமேவம்விதம் நரம்" [மஹரிஷியே! இப்படிப்பட்ட மனிதனை அறிய நீரே வல்லவர்] என்னுமளவாக, கல்யாணகுணக்கடலாயிருப்பவன் எவன் என்றுகேட்ட ஸ்ரீவால்மீகிபகவானிடத்தில், "முநே! வக்ஷ்யாம்யஹம் புத்த்வா தைர் யுக்த: ச்ரூயதாம் நர:" [முனிவரே! நான் அறிந்து சொல்லுகிறேன்; அப்படிப்பட்ட குணங்களோடு கூடிய மனிதன் யாரென்பதை கேட்பீராக] என்று ஸ்ரீநாரதபகவான் அறிந்து சொல்லுகிறேன் என்றனன். உடனே சொல்லவும் ஆரம்பித்து விடுகிறான். ராமனைப்பற்றி முன்னமே தெரிந்துவைத்திருப்பவனும், உடனே அவனைப்பற்றிப் பேசுமவனுமான முனிவன் 'அறிந்து சொல்லுகிறேன்' என்றதுக்குக் கருத்தென்ன?' எனில்; வால்மீகிபகவான் கேள்வி கேட்கும் முகத்தாலே குணங்களை ஒவ்வொன்றாக சொல்லச் சொல்ல ராமபிரான் ஒருவனே அக்குணங்களுக்குக் கொள்கலம்' என்றறிந்த நாரதன் அக்குணங்களிலே ஈடுபட்டு முஹூர்த்தநேரம் மயங்கிக்கிடந்

யிறே. "நினைதொறுஞ் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்னுமாபோலே. [கண்டு வணங்கினார்க்கித்யாதி] [காமனுடல் கொண்ட தவத்தாற்கு] தன்னையும் அபிமத விஷயத்தையும் சேர்த்ததுவே குற்றமாகக் காமனை தஹித்த அக்நிவர்ணனவனிறே ருத்ரன்; அவனுக்கு. [உமையுணர்த்தவித்யாதி] ப்ரச்நரூபத்தாலே "இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவனார்?" என்று உமை கேட்க, சிஷ்யாசார்ய க்ரமமறியாத தான் தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே, அவன், அவளைத் திருநாமங்களைச்சொல்லவிட்டுத் தான் கேட்டிருந்தானாயிற்று. (அங்காரலங்கலானமையாலாய்ந்து) கேட்டுக் குறிபழியாதேயிருந்தானோவென்னில்: முடியுண்ட மாலைபோலே ஓசிந்திருந்தான். திருநாம ப்ரஸங்கத்தாலே வன்னெஞ்சனான ருத்ரன் பட்டபடி கண்டால், [கண்டுவணங்கினார்க்கென்னாங்கொல்] ஸாக்ஷாத்கரித்தாரென்படுகிறார்களோ?

---

தான். 'அந்த மயக்கம் தெளிந்து சொல்லுகிறேன்' என்னும் கருத்திலேயே 'அறிந்து சொல்லுகிறேன்' என்றாராயிற்று. "நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" [திருவாய் 9-6-2] என்னும் ஆழ்வார் நிலையைப்போன்றது இங்கு நாரதன் நிலையும்.

> "கண்டு வணங்கினார்க் கென்னாங்கோல் காமனுடல்
> கொண்ட தவத்தாற்குமையுணர்த்த—வண்டலம்பும்
> தாரலங்கல் நீண்முடியான்றன்பெயரே கேட்டிருந்தங்
> காரலங்க லானமையா லாய்ந்து" [நான் - திருவ 78]

என்கிற பாசுரத்திலேயும் பக்திபரவசருடைய நிலை பேசப்பட்டது. [காமனுடல் கொண்ட தவத்தாற்கு] தன்னையும், தன் நாயகியையும் சேர்த்ததையே குற்றமாகக்கொண்டு காமனைக் கொளுத்திய நெருப்பு வண்ணனன்றோ சிவன்; அவனுக்கு [உமையுணர்த்த......] "இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவன் ஆர்" என்று கேள்விகேட்கும் முகத்தாலே தன் கணவனுக்கு உமையானவள் உணர்த்த, திருநாமச்ரவணத்தாலே ஏற்பட்ட பக்திபாரவச்யத்தாலே சிஷ்யாசார்யக்ரமத்தை மறந்து, தென்றற்காற்றும் சிறுமழைத்துளியும் மேனியிற்பட்டாப்போலே மெய்மறந்து, அவளை ஆசார்யஸ்தானத்தில் வைத்துத் தான் சிஷ்யஸ்தானத்திலமர்ந்து திருநாமம் கேட்டானாயிற்று. கேட்டுக்குறியழியாமலிருந்தானோ? எனில்: (அங்காரலங்கலானமைபாலாய்ந்து) முடியுண்ட மாலை போலே ஓசிந்து நின்றான். (கண்டுவணங்கினார்க்கென்னாங்கொல்) திருநாமம் கேட்டமாத்திரத்தில் கல்நெஞ்சனான உருத்திரன் பட்டபாட்டைக் கண்டால் நேரே கண்டவர் என்னபாடுபடுவர்?

**காரார் திருமேனி காட்டினுள் கையதுவும்** 22

*கார் ஆர் திருமேனி காட்டினுள்—(அவனது) காளமேகம் போன்ற திரு மேனியை உவமை சொல்லிக் காட்டினுள்; கையதுவும்—அவனது திருக் கையிலேயுள்ளதும்,*

---

***(கைமோவா) பாவநாப்ரகர்ஷத்தாலே "விரைகுழவுநறுந்துளவம் மெய்ந்நின்று கமழும்" என்கிறபடியே கை திருத்துழாய் நாறுமிறே. (பேராயிரமுடையானென்றுள்) நாமம் பலவுமுடை நம்பியிறே இப்படி பண்ணினுனும். (பேராயிரமுடையானென் றுள்) ஒன்று தோற்றிற்று, இரண்டு தோற்றிற்று, நாலு தோற் றிற்று, பத்து தோற்றிற்று, நூறு தோற்றிற்று, ஆயிரம் பேர் தோன்றுகின்றதீ! என்றுள். (பேர்த்தேயும் காரார் திருமேனி காட்டினுள்) ச்ரமஹரமான மேகத்தைக்காட்டி வடிவைக்காட்டி னுள். காரார்திருமேனி கண்டதுவே காரணமாகவிறே இவள் தானிப்படிப்பட்டது.***

---

(கைமோவா) அவனைப்பற்றிய நினைவின் முதிர்ச்சியாலே, "விரை குழவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும்" [திருவாய் 10–6–7] என்கிற படியே இவளுடைய கையும் திருத்துழாய் மணக்குமன்றே. அக்கையை மோந்து பார்க்கிறுள். (பேராயிரமுடையானென்றுள்) "நாமம் பலவு முடை நாரணநம்பீ" [பெரியதிரு 10–8–4] என்று இவளால் வாய் வெருவப்படுமவன்கிடீர் இப்படி இவளைப் படுத்துகிறுன் என்றுள். (பேர் ஆயிரம் உடையான் என்றுள்) இவன் பெயரைக் காண்போமென்று புகுந்தால், பெயர் ஒன்று தோன்றிற்று; இரண்டு தோன்றிற்று; நாலு தோன்றிற்று; பத்து தோன்றிற்று; பேர் ஆயிரமும் தோன்றுகின்றதீ! என்றுள். "தேவோ நாமஸஹஸ்ரவாந்" [ஆயிரம் பேருடைத்தேவன்] என்று ரிஷிகளாலும், "பேருமோராயிரம் பிறபல உடைய எம்பெருமான்" [திருவாய் 1–3–4] என்று ஆழ்வார்களாலும் புகழப்படுமவனன்றே. (பேர்த்தேயும் காரார் திருமேனி காட்டினுள்) களைப்பைப்போக்கும் மேகத்தைக் காட்டுவதன்மூலம் அவன் திருமேனியைக் காட்டினுள். இத்திருமடலிலேயே மேலே "காரார்திருமேனி கண்டதுவே காரணமாப் பேராப்பிதற்றுத் திரிதருவன்" [55] என்று இப்பிராட்டியும் தானிப் படிப்பட்டதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறுளன்றே.

சீரார் வலம்புரியே யென்றாள் திருத்துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா 23

சீர் ஆர் வலம்புரியே என்றாள் — அழகிய வலம்புரிச்சங்கமேயென்று அபிநயித்துக்காட்டினாள்; திரு துழாய் தார் ஆர் நறுமாலை கட்டுரைத்தாள் — திருத்துழாய் மலர்கள் நிறைந்த மணம்மிக்கமாலையையும் அபிநயத்துக் காட்டினாள்; கட்டுரையா — ஆக இவ்வளவும் அங்கசேஷ்டைகளாலே காட்டினபின்பு (வாய்விட்டுச் சொன்னதாவது)

---

(கையதுவும் சீரார் வலம்புரியேயென்றாள்) ஒரு கையிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை உடையவனென்றாள். [உண்பதுசொல்லிலித்யாதி] இருளிலே சந்த்ரோதயம்போலே * இருளன்னமாமேனிக்குப் பரபாகமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைச் சொன்னாள். வலம்புரிக்குச் சீர்மையாவது — [உண்பதுசொல்லில் உலகளந்தான் வாயமுதம்] உண்ணும்படி சொல்லில அவன் வாயாலேயூட்ட உண்பது. [கண்படைகொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே] அவன் வடிவைக் கடைக்கணித்துக்கொண்டு திருக்கையிலேயாயிற்று இடம் வலம் கொள்வது. ப்ரஸாதத்தைச்சூடிக் கைப்புடையிலே

---

(கையதுவும் சீரார் வலம்புரியே என்றாள்) ஒரு கையிலே செல்வம் மிக்க பாஞ்சசன்னியத்தை உடையவன் என்றாள். சீர் ஆர்—திருமேனிக்குப் பரபாகமாயிருக்கும் செல்வம்மிக்க. இருளிலே சந்திரனுதித்தாப்போலே, இருளன்னமாமேனிக்குப் பரபாகமாகமாயிருக்கும் செல்வத்தையுடைய சங்கத்தைச் சொன்னான். அன்றிக்கே, சீர் ஆர் வலம்புரி—செல்வம் மிக்க சங்கு என்று, "இந்திரனும் உன்னோடு செல்வத்துக்கேலானே" [நாச்—திரு 7–4] "சங்கரையா உன் செல்வம் சாலவழகியதே" [நாச்—திரு 7–7[ "செல்வப் பெருஞ்சங்கே" என்றும், "உண்பது சொல்லில்" [நாச்—திரு 7-8] என்னும் பாட்டில் விரிவாகவும் ஆண்டாள் அருளிச்செய்த செல்வச்சிறப்பைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். அச்செல்வச்சிறப்பு யாதெனில்: (உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்) இச்சங்கம் உண்ணும் விதத்தைச் சொல்லப்புகுந்தால், அவன் வாயாலே அமுதத்தை ஊட்ட, அத்தை உண்பது. [கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே] அவன் வடிவைக் கடைக் கண்ணால் கண்டுகொண்டு, அவன் திருக்கையிலேயே இடமாகவும், வலமாகவும் மாறிமாறிப் படுப்பது. நாயகனின் மாலையைச்சூடி, அவன்

கிடப்பாரைப்போலே. [பெண்படையாருன்மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்] இவன் பெண்களுக்குத் துறையாயிருக்கும். ஸ்ரீமதுரையிலும் திருவாய்ப்பாடியிலுமுள்ள பெண்கள் கையெடுத்துக் கூப்பிடாநின்றார்கள். [பண்பல செய்கின்றாய்] பகவத் விஷயத்திலே ப்ரத்யாஸந்நர் செய்வதும் செய்கிறிலை. அவர்கள் தனியே அநுபவியார்களிறே. [பாஞ்சசன்னியமே] நீ வந்து சேர்ந்தவிடத்துக்குத்தகாது உன் குணம்; உன் பிறப்புக்குச் சேருமத்தனை. பாஞ்சஜந்யமிறே. (திருத்துழாய்த் தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) உபயவிபூதிநாதனுக்கு இட்ட தனிமாலையைச் சொன்னாள். *தாமத்துளப நீண்முடிமாயன் தனக்கிறே இவள் மடலெடுக்கிறது.

கீழ்ச்சொன்னவையடைய ஸ்வகதமாகச் சொன்னாள். (கட்டுரையா) அவற்றைத் தன்னிலே சொன்ன வநந்தரம். (நீரேது

---

கையணைப்பிலே கிடக்கும் நாயகியைப்போலே. [பெண்படையார் உன் மேல் பெரும்பூசல் சாற்றுகின்றார்] இவன் வாயமுதம் பெண்கள் அனைவருக்கும் பொதுவானதாயிருக்கும். ஸ்ரீமதுரையிலும், திருவாய்ப்பாடியிலுமுள்ள படைபோன்ற தொகையுள்ள பெண்கள் 'ஐயோ! எங்கள் செல்வம் பறிபோகிறதே! இதுமுறையோ' என்று கையெடுத்து கூப்பிடாநின்றார்கள். [பண்பல செய்கின்றாய்] பண்பல்லாததைச் செய்கின்றாய். பகவத்விஷயத்திலே சிறிது நெருங்கினவர் செய்வதும் செய்கிறாயல்லை. அவர்களும் அடியார்கள் குழாங்களோடு உடன்கூடி அனுபவிப்பார்களேயொழியத் தனியே அனுபவியார்களே. [பாஞ்ச சன்னியமே] நீ புகுந்தவிடத்துக்குத் தகாது உன் செயலும், அதற்குக் காரணமான குணமும். உன் பிறந்தவிடத்துக்கே பொருந்துமவை. பஞ்சசனன் என்னும் அசுரனுடலிலே பிறந்த பாஞ்சசன்னியமன்றோ. (திருத்துழாய்த்தாரார் நறுமாலை கட்டுரைத்தாள்) உபயவிபூதிநாதன் என்பதைத் தெரிவிப்பதற்காக, இவ்விபூதியிலும் அவ்விபூதியிலும் மணம் மிக்கு விளங்கும் திருத்துழாயைச் சூடியிருக்கிறானன்றோ. ஒப்பற்ற அம் மாலையைக் காட்டினாள். "தாமத்துளப நீண்முடிமாயன்" [பெரியதிரு 6—5—10] என்று தன்னால் வாய்வெருவப்படுமவனுக்கன்றோ இப்பிராட்டி மடலெடுக்கிறது.

கீழ்ச்சொன்ன அவ்வளவு அடையாளங்களும், தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு சைகைகளாலே காட்டினவை. இனி வாய்விட்டுச்

நீரேது மஞ்சேன்மின் நும்மகளை நோய்செய்தான்
ஆரானு மல்ல னறிந்தே னவனைநான் 24

நீர் ஏதும் அஞ்சேல்மின்—"நீங்கள் சிறிதும்பயப்படவேண்டா; நும் மகளை நோய் செய்தான்—உங்கள் பெண்ணை (இப்படி) நோவுபடுத்தினவன், ஆரானும் அல்லன்—யாரோ ஒரு க்ஷுத்ர தெய்வமல்லன், அவனை நான் அறிந்தேன்—நோவுபடுத்தின புருஷனை (இன்னுனென்று) நான் தெரிந்து கொண்டேன்;

---

மஞ்சேல்மின்) நீங்களேதேனுஞ் சிலவென்று பயப்படாதே கொள்ளுங்கோள். தேவதாந்தரஸ்பர்சமில்லை, நீங்களஞ்சாதே கொள்ளுங்கோளென்கிருள். (நும் மகளை நோய் செய்தா னாரானுமல்லன்) இவள் நோவுபடுங்காட்டில் உங்களையும் மறக்க வேணுமோ? உங்கள் வயிற்றிலே பிறந்தாரை அவரதேவதைகளால் நோவப்பார்க்கவொண்ணுமோ? (ஆரானுமல்லன்) நாய் தீண்டிற்றில்லை.

---

சொல்லுகிருள். (கட்டுரையா) கீழ்க்கண்டபடி தனக்குள் சொல்லிக் கொண்டபின், மேலே "நும்மகளைத் தீராநோய் செய்தான் என உரைத் தாள்" [52] என்றதோடு அந்வயித்துக்கொள்ளவேணும். நடுவுள்ள தெல்லாம் கட்டுவிச்சியின் வார்த்தை. (நீரேதுமஞ்சேன்மின்) 'கருப்பன், காட்டேறி, முனியன்' என்பது போன்ற ஏதோவொன்று இவளைப் பிடித்திருக்கிறதென்று பயப்படாதீர்கள்; வேருர் தெய்வம் இவளைப் பீடிக்கவில்லை; நீங்கள் அஞ்சவேண்டிய அவசியமேயில்லை என்ருள். (நும்மகளைநோய் செய்தான் ஆரானுமல்லன்) (நும் மகளை) இவள் நோவுபட்டவுடன் உங்களையே நீங்கள் மறந்துவிட்டீர்களே; உங்கள் வயிற்றிலே பிறந்தவளைத் தாழ்ந்ததேவதைகள் நோவுபடுத்தப் பார்க்க முடியுமோ? (ஆரானுமல்லன்) நாயும் நரியும் தீண்டவில்லை இவளை. "கோமாயுவந் ம்ருகபதேர் பலிம்" [பாகவதம்] [சிங்கத்தினிரையை நரி பறித்துக்கொள்வது போல்] என்றும்,

"வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத்திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப" [நாச்-திரு 1-5]

என்றும் சொல்லப்பட்ட நிலையை அடையவில்லை இவள்.

கூரார் வேற்கண்ணீ ருமக்கறியக் கூறுகேனே
ஆரா லிவ்வைய மடியளப் புண்டதுதான் 25

*கூர் ஆர் வேல் கண்ணீர்—கூரியவேல்போன்ற கண்களையுடைய மங்கைமீர்களே! உமக்கு அறிய கூறுகேனோ—உங்களுக்கு (அவனைத்) 'தெரியச் சொல்லட்டுமா? இ வையம் ஆரால் அடி அளப்புண்டது—யாவனொருவனாலே இப்பூமியானது அளக்கப்பட்டதோ,*

---

*(அறிந்தேனவனை நான்) ஸ்வயத்நத்தாலே காணப்புக்கு* **"यतो वाचो निवर्तन्ते"** (யதோ வாசோ நிவர்த்தந்தே) *என்று மீண்ட வேதம்போலன்றியே, அவன் காட்டினவெளிச்செறிப்பாலே அவனைக் கண்டநான் அறிந்தேன். (கூரார்வேல் கண்ணீர்) அறிந்தாளாகில் இவள் ஆரென்று தலைக்கட்டப் புகுகிறாளென்று சொல்லி எல்லாருமொக்கத் தன்னை கூர்க்கப்பார்த்துக்கொண்டு நின்றவர்களை ஸம்போதிக்கிறாள். (உமக்கறியக்கூறுகேனோ) இவளுடைய நோய்க்கு தேவதாந்தரங்களின்காலிலே விழும்படி கலங்கியிருக்கும் நீங்களுங்கூட அறியும்படி வார்த்தைசொல்லவோ?*

*(ஆராலிவ்வையமடியளப்புண்டதுதான்) பூமிப்பரப்பைத் தன் காற்கீழே இட்டுக்கொண்டவரார்? "ஆரால்" என்கையாலே*

---

*(அறிந்தேனவனை நான்) தன் முயற்சியாலே காணப்புகுந்து, "யதோ வாசோ நிவர்த்தந்தே" [தை-ஆந] [எதனிடமிருந்து வாக்குகள் (அதை அறிய முடியாமல் திரும்பிவருகின்றனவோ] என்று மீண்ட வேதம்போலன்றியே, அவன் காட்டின அறிவாலே அவனைக்கண்ட நான் அறிந்தேன். (கூரார் வேற்கண்ணீர்) இவள் அறிந்துவிட்டாளாகில், அவனை யாரென்று சொல்லிமுடிக்கப்போகிறாளோ என்னும் நினைவுடன் அனைவரும் ஒன்றாகத் தன்னையே கூர்மையாகப் பார்த்துக்கொண்டு நின்றவர்களை நோக்கி, "கூர்மையுள்ள வேல்போன்ற கண்களையுடையவர்களே" என்று கூப்பிடுகிறாள். (உமக்கறியக் கூறுகேனோ) இவளுடைய நோய்க்குப் பரிஹாரமாக ஐயனார் முதலான மற்ற தெய்வங்களின் காலில் விழும்படி அறிவு கலங்கியிருக்கும் நீங்களுங்கூட அறியும்படி வார்த்தை சொல்லுகிறேன், கேட்கிறீர்களா?*

*'சொல்லுவேணும்' என்னும் ஆவல்தோற்ற இருந்தார்கள் அவர்கள். அதைக்கண்டு சொல்லுகிறாள் மேல்:— (ஆராலிவ் வையம் அடியளப் புண்டதுதான்) பூமிப்பரப்புமுழுவதையும் தன் காலின்கீழே இட்டுக் கொண்டவனார்? "ஆரால்" என்கையாலே, "ஈ பாவம் செய்தருளால்*

"பாவஞ்செய்து அருளாலளிப்பாரார்" என்றால், "அவன்" என்னவேண்டும் ப்ரஸித்தியை உபஜீவித்து நின்று சொல்லுகிறாள்;

---

அளிப்பாரார்" [திருவாய் 2-2-2] என்று கேட்டால் "அவன்" என்றே சொல்லவேண்டும் பிரஸித்தியை உட்கொண்டு கேட்கிறாள்.

"க: ஸ்ரீ: ஸ்ரிய: பரமஸத்வஸமாச்ரய: க:
க: புண்டரீகநயந: புருஷோத்தம: க: ।
கஸ்யாயுதாயுத ஸைககலாம்ஸகாம்ஸே
விச்வம் விசித்ரசிதசித் ப்ரவிபாகவ்ருத்தம் ॥
வேதாபஹார குருபாதக தைத்யபீடாத்
யாபத் விமோசந மஹிஷ்டபல ப்ரதாநை: ।
கோந்ய: ப்ரஜாபஸுபதீ பரிபாதி கஸ்ய
பாதோதகேந ஸ ஸிவ: ஸ்வஸிரோத்ருதேந ॥
கஸ்யோதரே ஹரவிரிஞ்சிமுகப்ரபஞ்ச:
கோ ரக்ஷதீமமஜநிஷ்ட ச கஸ்ய நாபே: ।
க்ராந்த்வா நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய:
க: கேந வைஷ பரவாநிதி ஸக்யஸங்க: ॥"
[ஸ்தோ-ர 12-13-14.]

[திருவுக்கும் திருவாகிய செல்வன் யார்? சுத்தஸத்வத்தை உடையவன் ஆர்? தாமரைக்கண்ணன் யார்? புருஷோத்தமன் யார்? எவனுடைய பல்லாயிரங்கோடி பாகங்களின் ஒரு பகுதியில் இவ்வுலகெல்லாம் விசித்திரமான சேதநாசேதனப் பிரிவுகளை உடையதாக இருக்கிறது? வேதங்களை அபஹரித்தது, தகப்பன் தலையைக் கிள்ளின பாவம், அஸுரர்களாலுண்டான துன்பம் முதலிய ஆபத்துக்களைப் போக்கியதாலும், மேலான பலன்களை அளிப்பதாலும், (உன்னைத்தவிர) வேறு யார் ப்ரஜாபதியான பிரமனையும், பசுபதியான சிவனையும் ரக்ஷிக்கிறார்கள்? அந்த சிவன் தன் தலையில் தரிக்கப்பட்ட யாருடைய ஸ்ரீபாததீர்த்தத்தால் பரிசுத்தனானான்? சிவன் பிரமன் முதலிய உலகம் யாருடைய வயிற்றில் லயித்திருந்தது? இவ்வுலகை யார் காப்பாற்றுகிறார்? எவனுடைய நாபியிலிருந்து (இவ்வுலகம்) உண்டாயிற்று? (உன்னைத்தவிர) வேறு எவன் இவ்வுலகை (த்ரவிக்ரமாவதாரத்தில்) அளந்தும், (அவாந்தரப்ரளயத்தில்) விழுங்கியும், மறுபடியும் உமிழ்கிறான்? இவ்வுலகம் வேறு எவனால் தலைவனை உடையதென்று ஸந்தேஹப்படவும் கூடியது?] என்று ஆளவந்தாரும் இதையடியோற்றிய 'க:' 'க:' [ஆர், ஆர்] என்று கேள்விகளை அடுக்கினாரன்றோ.

(இவ்வையம்) [மண்ணையிருந்து துழாவி வாமனன் மண்ணிது வென்னும்] பூமிப்பரப்பையடையத் துழாவியிருந்து அவன் அடிச்சுவடுமோந்தவரைப்போலே சொல்லும். விச்வாமித்ரமஹர்ஷி யாகம் காக்கப் பெருமாளெழுந்தருளுகிறபோது "ருஷியே! இங்கே தோற்றுகிற ஆச்ரமம் ஏது!" என்றுகேட்டருள, "ஸ்ரீவாமந னெழுந்தருளியிருந்து தபஸ்ஸுபண்ணின ஸித்தாச்ரமம், 'அவ னெழுந்தருளியிருந்துபோன இடம்' என்று நான் இம்மண்ணை மோந்துகொடுகிடப்பன்" என்றானிறே. அப்படியே இவ்வைய மென்று அடிச்சுவடு தோற்றுகிறபடி. (ஆராலிவ்வையமடியளப் புண்டதுதான்) இத்தால் "புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரானருளாவிடுமே" என்னுமாபோலே தன்னுடைமையையிரந்து பெறுமவனன்றோ? இவளைவிட்டுவைக்குமோ? என்றபடி. மண்ணை யிரந்து அளந்துகொள்ளுமவன் பெண்ணை நோவுபட விட்டு வைக்குமோ? என்றபடி.

---

(இவ்வையம்) [மண்ணையிலிருந்து துழாவி வாமனன் மண்ணிதுவென்னும்] [திருவாய் 4—4—1] பூமிப்பரப்பு முழுவதையும் துழாவியிருந்து அவனுடைய அடிச்சுவடு மோந்தவளைப்போலே "வாமனன் அடிச்சுவட்டு மண்ணிது" என்று வார்த்தை சொல்லுவள். விச்வாமித்ர மஹரிஷியின் யாகத்தை ரக்ஷிக்க ராமபிரான் எழுந்தருளும்போது, 'ரிஷியே! இங்கே தோற்றுகிற ஆச்ரமம் ஏது?' என்று ராமபிரான் கேட்டருள, "ஸ்ரீவாமனன் எழுந்தருளியிருந்து தவம் செய்த ஸித்தாச்ரமமிது; 'அவன் எழுந்தருளியிருந்து போன இடம்'' என்னும் காரணத்தாலே நான் இம் மண்ணை மோந்துகொண்டு "இங்கேயே வாஸம் செய்கிறேன்'' என்றா னன்றோ. இவ்விச்வாமித்திரனையும், வாமனன் மண்ணென்ற ஆழ்வாரை யும்போலே இவளும் "இவ்வையம்'' என்று அவனுடைய அடிச்சுவடு என்னும் கருத்துத் தோற்றச் சொல்லுகிறாள். (ஆராலிவ்வையம் அடி யளப்புண்டதுதான்) இத்தால், "புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடிய பிரான் அருளாவிடுமே'' [திருவிருத்தம்-69] என்றாப்போலே தன்னுடை மையை யாசித்துப் பெறுமவனன்றோ? அப்படிப்பட்டவன் தன்னுடைய வளான இவளை விட்டு வைக்குமோ? என்றபடி. மண்ணை யாசித்து அளந்து கொள்ளுமவன் பெண்ணை நோவுபட விட்டுவைப்பானோ? "மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை'' என்பவற்றில் மண்ணாசைக் கும் மேற்பட்டதாயிற்றே பெண்ணாசை என்று கருத்து.

ஆரா லிலங்கை பொடியொடியா வீழ்ந்ததுமற்று
ஆராலே கன்மாரி காத்ததுதா ளுழிநீர் 26

இலங்கை ஆரால் பொடிபொடி ஆ வீழ்ந்தது—இலங்காபுரியானது யாராலே பொடியாக்கப்பட்டு நசித்தொழிந்ததோ, ஆராலே கல் மாரி காத்தது—யாவனொருவனாலே கல்மழையானது தடுக்கப்பட்டதோ, ஆழி நீர்—கடலானது,

---

(ஆராலிலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) வரபல புஜபலங்களாலேமிக்க இலங்கை யாராலே துகளாயிற்று? (ஆரால்) தங்கள் தரமறியாதே வரத்தைக்கொடுத்து அவனாலே குடியிருப்பிழந்து கழுத்துங்கப்படமுமாய்க் கூப்பிட்டுத்திரிந்த ப்ரஹ்மாதிகளாலேயோ? புதுக்கும்பிடாகைபாலே செய்வதறியாதே செய்தபடி. இத்தால்-ஒருத்திக்காக * உண்ணாதுறங்காதொலிகடலையூடறுத்து இப்படி அரியனசெய்து கைக்கொள்ளுமவன் இவளை நோவுபட்டிருக்க விடானென்றபடி. (மற்றாராலே கல்மாரிகாத்ததுதான்) பசிக்கோபத்தாலே இந்த்ரன் வர்ஷிக்க அவ்வர்ஷம் நோக்கப்பட்டதாராலே? அவ்வர்ஷத்திலே அகப்பட்ட இடையராலும் பசுக்களாலுமோ? இத்தால் தன்னால்வந்த நலிவும் தானே பரிஹரிக்குமென்றபடி.

---

(ஆராலிலங்கை பொடிபொடியா வீழ்ந்தது) வரபல புஜபலங்களாலே மிகுந்த இலங்கை யாராலே துகளாயிற்று? (ஆரால்) தங்களுடைய சக்தியறியாமல் வரத்தைக் கொடுத்து ராவணனாலே குடியிருப்பிழந்து, கழுத்தறுபடாமல் தப்பி, கட்டிய உடையையொழிந்த எல்லாவற்றையுமிழந்து, வணங்கிய கழுத்தையும், கட்டிய கப்படத்தையும் (உடையையும்) கொண்டு எம்பெருமானைக் கூப்பிட்டுத்திரிந்த பிரமன் முதலான தேவர்களாலேயே இலங்கை பொடியாயிற்று? கும்பீடு கொண்டு அறியாத ரஜஸ்தம: ப்ரக்ருதிகளாகையாலே, ராவணனுடைய புதுக்கும்பீட்டைக் கண்டவுடன் உச்சி குளிர்ந்துபோய், தாம் செய்யும் காரியத்தின் பலனறியாமல் வரங்களைக் கொடுத்துவிட்டுத் திண்டாடினவர்களன்றோ தேவர்கள். (ஆரால் இலங்கை...) இத்தால், "உண்ணாதுறங்காதொலிகடலை ஊடறுத்துப் பெண்ணுக்கையாப்புண்டு" [நாச்-திரு 11-7] என்கிறபடியே ஒரு பெண்ணைப் பெறுவதற்காகப் படாதனபட்டவன் இவளை நோவுபட்டிருக்க விடமாட்டான் என்றபடி. (மற்றாராலே கல்மாரி காத்தது தான்) தனக்குப் படைத்த உணவையிழந்த பசிக்கோபத்தாலே இந்திரன் கல்மழைபொழிய அம்மழையிலிருந்து காப்பாற்றினது ஆர்? கல்மழையிலே நோவுபட்ட பசுக்களும்இடையருமோ தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர்? இத்தால் தன்னால்வந்த துன்பத்தையும் தானே தவிர்ப்பான் என்கை. தன்னாலே நோவுபட்ட இவளையும் அவனே ரக்ஷிப்பான் என்று கருத்து.

ஆரால் கடைந்திடைப்பட்ட தவன்காண்மின்

ஆரால் கடைந்திடைப்பட்டது — யாவனொருவனாலே கடையப்பட்டதோ, அவன் காண்மின்— அக்காரியங்களெல்லாஞ்செய்த ஒரு சிறந்த புருஷனன்றோ,

---

(ஆழிநீரரால் கடைந்திடப்பட்டது) "अप्रमेयो महोदधिः" (அப்ரமேயோ மஹோததி:) ஒருவராலும் பரிச்சேதிக்கவொண்ணாத படி பேராழத்தையுடைத்தாயிருக்கிற ஸமுத்ரத்தைக் கடைந்து, "கடைந்து கலக்குறுத்துடலுட்புகுந்து நின்றாறலறுத்தவர்" என்கிறபடியே அதில் நற்சீவனான அம்ருதத்தைக் கொண்டாரார்? கடலைக் கடையவென்று உபக்ரமித்துக் கைவாங்கின தேவர்களாலும் அஸுரர்களாலுமன்றிறே. "அன்று தேவரசுரர் வாங்க" இத்யாதியிறே. தேவர்களும் அஸுரர்களும் கைவாங்கின பின்பிறே கடலைக்கடையப்புக்கது. இத்தால் பல வடிவைக்கொண்டு உடம்புநோவ ப்ரயோஜநாந்தரபரர்க்கும் அகப்படக் கார்யஞ்செய்யு

---

(ஆழிநீர் ஆரால் கடைந்திடப்பட்டது) "ஆழங்காணவொண்ணாத கடல்" [ரா-யு 19-31] என்று ஒருவராலும் அளவிடமுடியாதபடி பேராழத்தை உடையதாயிருக்கிற கடலைக்கடைந்து, "கடலே! கடலே! உன்னைக் கடைந்து கலக்குறுத்து உடலுள் புகுந்து நின்றாறலறுத்தவர்க்கு" [நாச்-திரு 10-9] என்கிறபடியே அக்கடலின் ஸாரமான உயிர்போன்றதான அமுதத்தைக் கொண்டவன் யார்? கடலைக் கடையவேணுமென்று தொடங்கிக் கைவிட்டு நின்ற தேவர்களும் அசுரர்களுமோ கடல்கடைந்தது?

"அரங்கனே! தரங்கநீர் கலங்கவன்று குன்றுசூழ்
மரங்கள்தேய மாநிலம் குலுங்க மாசுணம் சுலாய்
நெருங்கநீ கடைந்தபோது நின்ற சூரரென்செய்தார்"
[திருச்சந்த-21]

என்றார் திருமழிசைப்பிரான்

"அன்று தேவரசுரர் வாங்க அலைகடல் அரவமளாவி, ஓர் குன்றம் வைத்த எந்தாய்" [திருவாய் 7-1-7] என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்தாரன்றோ. தேவர்களும் அசுரர்களும் கைவிட்ட பின்பன்றோ கடலைக் கடையப் புகுந்தது. இத்தால் மந்தரமலைக்குக் கீழும், மேலும், பக்கங்களிலும் பல வடிவங்களெடுத்து உடம்பு நோவும்படியாக ப்ரயோ

ஊரா நிரைமேய்த் துலகெல்லா முண்டுமிழ்ந்தும் 27
ஆராத தன்மையனு யாங்கொருநா ளாய்ப்பாடிச்

ஊர் ஆ நிரை மேய்த்து—ஊரிலுள்ள பசுக்கூட்டங்களையெல்லாம் மேய்த்தும், உலகு எல்லாம் உண்டு உமிழ்ந்தும் — உலகங்களையெல்லாம் (பிரளய காலத்திலே) அமுதுசெய்தும் (ஸ்ருஷ்டிகாலத்திலே) வெளிப்படுத்தியும், ஆங்கு ஆராத தன்மையன் ஆய்—பரமபதத்தில் திருப்தியற்றவனுயிருந்து கொண்டு (கண்ணனுயவதரித்து) ஒரு நாள்—ஒரு நாளில், ஆய்ப்பாடி— திருவாய்ப் பாடியிலே,

---

மவன் அமுதில் வரும் பெண்ணமுதை நோவுபட வைக்குமோ என்றபடி. * விண்ணவரமுதுணவமுதில்வரும் பெண்ணமுதுண் டவனிறே.

(அவன்காண்மின்) இவ்வபதாநங்களெல்லாம் செய்தவனுக்கு உங்கள் மகள் நோவுபடுமித்தனையல்லது வேறு தேவதாந்தரங்களுக்கு நோவுபடுமோ? (ஊராநிரைமேய்த்து) தங்களுக்குப் பசுக்களளவு பட்டு ஊராநிரை மேய்க்கிறுனன்றிறே. "உங்கள் தமாநிரை யெல்லாம் வந்து புகுதரும்போது" என்று கண்ணெச்சிலாம்

---

ஜநாந்தரபரர்க்கும் காரியஞ்செய்யுமவன், "அமுதில் வரும் பெண்ணமுது" [பெரியதிரு 6-1-2] எனப்படும் ஸ்ரீதேவியைப்போன்ற இவளை நோவு படும்படியாக விட்டிருப்பாரோ என்றபடி. "விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமான்" [பெரியதிரு 6-1-2] எனப் படுமவனன்றோ.

(அவன் காண்மின்) இச்செயல்களையெல்லாம் செய்தவனுக்காக உங்கள் மகள் (காதல்) நோவுபடுவாளேயொழிய மற்ற தெய்வங்களுக்கு நோவுபடுவாளோ? என்று கருத்து. (ஊராநிரைமேய்த்து) ஊரிலுள்ள பசுக்கூட்டங்களையெல்லாம் மேய்த்து. தன்வீட்டில் பசுக்கள் அளவு பட்டதாயிருப்பதாலே ஊரிலுள்ள பசுக்களை மேய்க்கிறுன் என்று சொல்லமுடியாதே. "வள்ளல் பெரும்பசுக்கள் ஆற்றப்படைத்தான் மகனே அறிவுறுய்" [திருப்பாவை 21] என்றும் "உங்கள் தம் ஆநிரையெல்லாம் வந்து புகுதரும்போது" [பெரியதிருமொழி 10-4-8] என்றும் திருஷ்டிதோஷம் படும்படியாகவன்றோ இவர்களுடைய பசுச்

படியிறே இவர்கள் கோஸம்ருத்தியிருப்பது. அப்படியிருக்கச் செய்தேயும் கோரக்ஷணத்திலே அந்வயித்தவனாகையாலே ஊரா நிரைமேய்க்கும். ஒருவன் ஒருரக்ஷணத்திலே உத்யுக்தனானால் ரக்ஷ்யவர்க்கம் பெற்றதில் பர்யாப்தனாகானிறே; அப்படியே ஊரா நிரையையெல்லாம் மேய்க்கும்.

(உலகெல்லாமுண்டுமிழ்ந்தும்) ப்ரளயத்திலகப்பட்ட லோகங்களையெல்லாம் திருவயிற்றிலே நோவுபடாமே வைத்து, அங்கே நெருக்குண்ணுதபடி வெளிநாடு காணவுமிழ்ந்தும், "ஊராநிரை மேய்த்துலகெல்லாமுண்டுமிழ்ந்தும்" என்று ஊராநிரை மேய்த்ததோடு உலகெல்லாமுண்டுமிழ்ந்தத்தோடு வாசியின்றியே இருக்கிறதுகாணுமிவர்க்கு. (ஆராததன்மையனாய்) ரக்ஷ்யவர்க்கத்தையெல்லாம் ரக்ஷித்தாலும் தானொன்றுஞ் செய்யாதானாயிருக்கிறபடி. அதாவது:— "தன்னை விச்வஸித்து உடன்கிடந்தவனை மடிதடவினவன் நெஞ்சாறல் படுமாபோலேயாயிற்று "ரக்ஷ்யவர்க்கத்தை நோவுபடக்கொடுத்து

---

செல்வப்பெருமையிருப்பது. அப்படியிருந்தபோதிலும், பசுக்களை ரக்ஷிப்பதற்க்காகவே இடைச்சாதியில் பிறந்தவனாகையாலே ஊரிலுள்ள பசுக்கூட்டங்களையெல்லாம் மேய்ப்பான். வல்லவனான ஒருவன் ஒருரக்ஷணச் செயலிலே ஈடுபட்டால் ரக்ஷிக்கப்படும் பொருள் எவ்வளவிருந்தாலும் திருப்தியுறாமல் இன்னமும்வேணும் என்பானன்றோ. அப்படியே இவனும் தன் ஆநிரையை மேய்ப்பதோடல்லாமல் ஊராநிரையையும் மேய்ப்பன்.

(உலகெல்லாம் உண்டுமிழ்ந்தும்) ப்ரளயத்தில் அகப்பட்ட உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே நோவுபடாமல் வைத்து, நெடுங்காலம் அங்கேயே நெருங்கிக்கிடப்பதைப் பொறுக்காமல் வெளியிலே உமிழ்ந்தும். (உலகு எல்லாம் உண்டுமிழ்ந்தும்) இவன் வயிற்றில் புகுந்து புறப்படாதது அணுமாத்ரமும் இல்லையென்கை. (ஊரானிரை மேய்த்து உலகெல்லாம் உண்டுமிழ்ந்தும்) அவலீலையாக அனைத்தையும் செய்கையாலே ஊராநிரைமேய்த்ததும், உலகெல்லாம் உண்டுமிழ்ந்ததும் ஒன்றாகத் தோன்றுகிறது இவர்க்கு. (ஆராததன்மையனாய்) ரக்ஷிக்கப்படவேண்டிய பொருள்களை எல்லாப்படியாலும் ரக்ஷித்தாலும், தான் ஒன்றும்செய்யாதவனாய் நினைத்திருக்கிறபடி."என்னை நம்பிக்கிடந்த உடைமைப்பொருளாகிய ஆத்மவஸ்துவை ப்ரளயம் முதலானவை நோவுபடும்படி விட்டு வைத்துப் பிறகு நான் ரக்ஷித்ததில் என்ன பயன்? காலம் தாழ்த்திக் காப்பாற்று

சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய் 28

*சீர் ஆர் கலை அல்குல் சீர் அடி செம் துவர் வாய்-அழகிய சேலையை யணிந்த அல்குலையுடையவளும், அழகிய கால்களையுடையவளும், மிகவுஞ் சிவந்த அதரத்தையுடையவளும்,*

---

நோக்குகையாவதென்னன்புகு" என்று அவன் புண்பட்டிருக்கும் படி. ஸ்ரீதண்டகாரண்யத்தில் ருஷிகள் ராக்ஷஸராலே நோவு பட்ட சரீரங்களை "एहि पश्य शरीराणि" (ஏஹி பச்ய சரீராணி) என்று காட்டி அந்யாயப்பட, "'ஒருரக்ஷகனுளன்' என்று சொல்லிப் பட்ட நோவால்வந்த லஜ்ஜையிறேயுங்களுக்கு; "गर्भभूतास्तपोधनाः" (கர்ப்ப பூதாஸ்தபோதநா:) என்று உங்கள் கையிலே உங்களை ரக்ஷித்துக்கொள்ளும் கைம்முதலுண்டாயிருக்கச்செய்தே கர்ப்ப பூதரைப்போலே உங்களுடைய ரக்ஷணத்துக்கு நீங்கள் கடவி கோளன்றியிலே இருக்கிற உங்களுக்கு வந்த லஜ்ஜை ஸஹிக்க லாம்; நோவுபடுவிகோளும் நீங்களேயாய் வந்தறிவிப்புதிகோளும் நீங்களேயாம்படி பிற்பாடராஞேமென்பதாய்க்கொண்டு லஜ்ஜை நம்மால் பொறுக்கவொண்ணுது" என்றுனிறே. அப்படியே

---

கையாலே இவற்றின் துன்பத்திற்கு உண்மையில் நானேயன்றோ காரணம்" என்று தன்னை நம்பி உறங்கிக்கிடந்த ஒருவன் மடியைத் தடவிப் பொருளை அபஹரித்தவனுடைய நெஞ்சு துன்புறுமாபோலே துன்புறுகிறபடி. ஸ்ரீதண்டகாரண்யத்தில் ரிஷிகள் ராக்ஷஸர்களாலே நோவுபட்ட சரீரங்களை "ராமனே! எங்கள் உடம்புகளை வந்துபார்" [ரா-ஆ 6-16] என்று காட்டி முறைப்பட, "'நம்மை ரக்ஷிப்பதற்கு ஒரு ரக்ஷகனிருக்கிருன்' என்று நம்பி அதனாலடைந்த துன்பத்தால்வந்த வெட்கமன்றோ உங்களுடையது. 'கர்ப்பம் போல் உன்ஞல் ரக்ஷிக்கத்தக்க தபோதனர்களான நாங்கள்' [ரா-ஆ 1-21] என்று உங்களை ரக்ஷித்துக்கொள்ளத் தவமாகிற தனம் கையிலிருந்தபோதிலும், ஸ்வரூபத்தை நோக்கி கர்ப்பத்தைப்போலே உங்களை ரக்ஷித்துக்கொள்ள வல்லமையற்றிருக்கும் உங்களுக்கு வந்த வெட்கத்தை நீங்கள் பொறுக்கலாம். 'நீங்களே துன்புற்று நீங்களே அறிவிக்கும்படி பிற்பட்டோம்' என்னும் வெட்கம் என்ஞல் பொறுக்க முடியாததாயிருந்தது" என்று, "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" [ரா-ஆ 10-9] [என் வெட்கம் ஒப்பற்றதாயிருந்து] என்னுமிடத்தில் அருளிச்செய்தானன்றோ ராமபிரான். அப்படியே இங்கும் பொறுக்க

இங்கு ஆராததன்மையனாய். (ஆங்கு) ரக்ஷணமில்லாத தேசத்திலே பிறக்கும் பரிமாற்றம். (ஒருநாள்) காலக்ருத பரிணாமமுள்ள தேசத்திலே பிறந்தபடி கேட்கலாகாதோ? (ஆய்ப்பாடி) பரமபதம்போலே காணும் திருவாய்ப்பாடியும். அவர்களுக்கு ஜந்மவ்ருத்தமில்லாதாற்போலே இவர்களுக்கும் ஜந்மவ்ருத்தமில்லாதபடி. (சீரார்கலையல்குல்) யசோதைப் பிராட்டி சாத்தின பரியட்டத்துக்கு ஸம்பத்தெங்ஙனே வந்ததென்னில்; பிள்ளை சீறாமைக்காக / அழுக்குக்கழித்து ஒப்பித்திருக்கும்; இவனுடைய பற்றுமஞ்சளும் கண்ணும் மையுமாயிருக்குமலங்காரம். அல்

முடியாத தன்மையை உடையவனானான் என்கிறது. ஆராததன்மையனாயிருந்தது எங்கிருந்துகொண்டு, எனில்: (ஆங்கு) ஆபத்துக்களிலிருந்து ரக்ஷிக்கவேண்டிய அவசியமில்லாத தேசத்திலேயிருந்துகொண்டு இது செய்தது என்கை. (ஒருநாள்...) "ந காலஸ் தத்ர வை ப்ரபு:" [பா-மோ 25-9] [பரமபதத்தில் காலம் வலிமையுள்ளதன்று] என்கிற பரமபதத்திலிருந்து செய்த ஸ்ருஷ்டி ப்ரளயங்களாகிற செயல்கள் ஒருபுறமிருக்கட்டும். காலத்தால் விகாரமடையும் தேசத்திலே பிறந்த செயல்களைக் கேளுங்கோள் என்று கருத்து. (ஒருநாள்) அதுவும் ஒரு நாளேயென்கை. (ஆய்ப்பாடி) ஒரு விதத்தில் பரமபதம்போலேயிருப்பது திருவாய்ப்பாடியும். பரமபதத்தில் நித்யமுக்தர்களுக்குப் பிறப்பில்லாமையாலும், அனைவரும் ஒருபடியான ஒழுக்கமுள்ளவர்களாகையாலும் நற்குடிப்பிறப்பு நல்லொழுக்கம் என்னும் வழக்குகள் அங்கில்லை. இங்கும் அனைவரும் தாழ்குலமான ஆய்க்குலத்தவராகையாலும், கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்பவராகையாலும் நற்குடிப்பிறப்பும் நல்லொழுக்கமுமில்லாதவர்கள். இவ்வகையிலே பரமபதத்தையொக்கும் ஆய்ப்பாடி. (சீரார் கலையல்குல்) செல்வம் நிறைந்த வஸ்திரத்தையும், இடையையுமுடைய. யசோதையின் புடவைக்குச் செல்வமென்னென்னில்: கண்ணனுடைய திருமேனியில் பூசியிருக்கும் மஞ்சளும், கண்மையும், விளையாடு புழுதியும் படிந்து அழுக்கேறியிருக்கை அதற்குச் செல்வம். கண்ணன் கோபிக்கக் கூடாதென்று தினந்தோறும் புடவையில் அழுக்கைக்கழித்து நன்றாக அலங்கரித்துக் கொண்டிருப்பாள். சிறிது பொழுதில் கண்ணனுடைய திருமேனியிலுள்ளவையெல்லாம் இவள் திருப்பரியட்டத்திலிருக்கும். இதுவே இப்புடவைக்குச் சீர்மையாவது. சீர் ஆர் என்பது அல்குலுக்கும் விசேஷணமாகையாலே அதற்குச் சீர்மையென்னென்னில்:

/ (பா) அழித்தழித்து

வாரர் வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு

*வார் ஆர் வனம் முலையாள்—கச்சணிந்த அழகிய முலைகளையுடையவளு மானயசோதை, மத்து ஆர பற்றிக்கொண்டு — மத்தை அழுந்தப் பிடித் துக்கொண்டு,*

---

*குலுக்குச் சீர்மையாவது "எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத் திடும்" என்கிறபடியே க்ருஷ்ணனையெடுத்து ஓசிந்தவிடை. முற் காலத்திலே பெரியதிருநாள் ஸேவித்த முதலிகள் "திருநாள் ஸேவித்த இரட்டை" என்று மேலைத்திருநாள் வருமளவும் அவ் விரட்டையை மடித்துக் கொடியிலேயிட்டுவைத்துப் பார்த்துப் பார்த்துக் கொண்டிருப்பர்கள். (சீரடி) மடியிலேயிருந்து இவன் தீம்புசெய்தால் தள்ளுமிறேயிழிய; தள்ளினால் இவன் கட்டிக் கொள்ளும்கால்; "அரிசினத்தாலீன்ற தாயகற்றிடினும் மற்றவள் தனருள் நினைந்தேயழுங்குழவி" என்னக்கடவதிறே. (செந்துவர்*

---

"எடுத்துக் கொள்ளில் மருங்கையிறுத்திடும்" [பெரியாழ்-திரு 1-2-9] என்கிறபடியே கண்ணனை யெடுத்தெடுத்து ஓசிந்த இடையாயிருப்பதே அதற்குச் சீர்மை. முற்காலத்திலே, பெரியதிருநாள் ஸேவித்த ஆசாரி யர்கள், "திருநாள் ஸேவித்த வஸ்திரம்" என்னும் கௌரவத்தாலே அடுத்த வருஷத்திருநாள் வரும்வரையிலும், அதை மடித்துக்கொடியிலே யிட்டுவைத்து தினந்தோறும் ஸேவித்துக் கொண்டிருப்பர்கள். பகவத் ஸம்பந்தம் புடவைகளுக்கும் சிறப்பையளிக்கிறதென்று கருத்து. (சீரடி) செல்வம்மிக்க திருவடி. அல்குலிலேயிருந்து இவன் துஷ்டத்தனம் செய்தால் கீழே தள்ளுவாளன்றோ. அப்படித் தள்ளும்போது இவன் கட்டிக்கொள்ளும் கால். ஸர்வேச்வரனுக்கும் ஆச்ரயணீயமாயிருக்கை இதற்குச்சீர்மை.

> "அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள்தன்
> அருள் நினைந்தே அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே"
> [பெரு-திரு 5-1] என்றும்,

> "ருஷா நிரஸ்தோபி சிசுஸ் ஸ்தநந்தயோ
> ந ஜாது மாதுச்சரணௌ ஜிஹாஸதி" [ஸ்தோ-ர]

[பால் குடிக்கும் சிறுகுழந்தை தாயால் கோபத்தோடு எட்டி உதைக் கப்பட்டாலும், (உதைத்த அந்தக்) காலை ஒருபோதும் விடாது] என்றும்

வாய்) காலைக் கட்டிக்கொண்டவாறே இவள் உதறுமே; உதற உதற இவன் கட்டிக்கொள்ளுமிறே; கட்டிக்கொண்டவாறே ஸ்மிதம் பண்ணும் வாய். (வாரார் வனமுலையாள்) ஸ்மிதம் பண்ணினவாறே கோபம்மாறினாளென்று முலையிலே அபேக்ஷைபண்ணுமிறே. பசல்கள் அலையாமைக்கு ஔஷதமிட்டுவைப்பாரைப்போலே கச்சையிட்டு ஆர்த்துவைக்குமிறே; "வல்லையாகில் விடுத்துக்கொள்ளுகாண்" என்னும் முலை.

(மத்தாரப்பற்றிக்கொண்டு) இவனோடு அலைபொருது காலம் போக்கவொண்ணாதே; கார்ஹஸ்த்யதர்மம் அநுஷ்டிக்கவேணுமிறே. கார்ஹஸ்த்யதர்மம் இவள்தானே அநுஷ்டிக்குப்படி அளவுபட்டிருக்குமோவென்னில்; இவன் அமுதுசெய்யும் த்ரவ்யமானபடியாலே தானே கைதொட்டுக் கடையவேண்டியிருக்கும்; ஜாத்யுசித தர்மமாகையாலும் தானே செய்யவேண்டியிருக்கும்; ஐச்வர்யமுண்டென்றால் ஸந்த்யாவந்தநாதிகளுக்கு ஆளிடுவாரில்லையிறே.

---

சொல்லப்படுகிறதன்றோ. (செந்துவர் வாய்) காலைக்கட்டிக்கொண்டவுடன் இவள் உதறுவாள்; உதறவுதற மறுபடியும் மறுபடியும் கட்டிக்கொள்ளுவனவன். அதைக்கண்டு மிகச்சிவந்த வாயாலே புன்சிரிப்புச் சிரிப்பாள். (வாரார் வனமுலையாள்) புன்சிரிப்புச் சிரித்தவுடன், கோபம் தீரப்பெற்றாளென்று முலைப்பாலுண்ணவிரும்புவன். குழந்தைகள் தின் பண்டங்களை அளவுக்கு மீறி உண்ணாமைக்காக அவற்றிலே மருந்தைக் கலந்து வைப்பாரைப்போலே, கச்சாலே கட்டிவைத்திருப்பாள் முலையை. அது குழந்தையிடம், "முடியுமாகில் அவிழ்த்துக்கொள்" என்பதுபோலே காட்சியளிக்கும்.

(மத்தாரப்பற்றிக்கொண்டு) இவனோடு போராடிக்கொண்டு காலங் கழிக்கமுடியாதே; வீட்டுவேலையைச் செய்யவேணுமன்றோ; ஆகையாலே தயிர் கடைகிறாள். வீட்டு வேலை செய்வதற்கு வேலைக்காரர்களில்லையோ? இவளே செய்யவேண்டும்படி இவர்கள் செல்வம் அளவுபட்டிருக்குமோ? என்னில்: அப்படியன்று; வள்ளல் பெரும் பசுக்கள் ஆற்றப்படைத்தான் செல்வம் அளவுபட்டிராது. பின் தானே செய்யக் காரணமென்னென்னில்: தன் செல்வப்பிள்ளையான இவன் விரும்பி அமுது செய்யும் பொருளாகையாலே தானே கைதொட்டுக் கடையவேண்டியிருக்கும்; மேலும், தன் குலத்தொழிலாகையாலும் தானே செய்யவேண்டியிருக்கும். செல்வமிருக்கும் காரணத்தினால் ஸந்த்யாவந்தனம் முதலான வர்ணதர்மங்

ஏரா ரிடைநோவ எத்தனையோர் போதுமாய்ச் 29
சீரார் தயிர்கடைந்து வெண்ணெய் திரண்டதனை

ஏர் ஆர் இடைநோவ—அழகிய இடுப்பு நோகும்படி, எத்தனையோர் போதும் ஆய்—வெகுநேரமாக, சீர் ஆர் தயிர் கடைந்து—சிறந்த தயிரைக்கடைந்து, திரண்ட வெண்ணெய் தனை—(அதில்) திரண்ட வெண்ணெயை,

---

(மத்தாரப்பற்றிக்கொண்டு) தயிர்த்தாழியிலே மத்தைநாட்டி. இரண்டிழுப்பிழுத்தவாறே இளைத்து, ஸௌகுமார்யத்தாலே தன்னாலே கடையவொண்ணாமே பிடித்துக்கொண்டு நிற்கும்நிலை. (ஏராரிடைநோவ) இவளிடைக்கழகு க்ருஷ்ணனெப்போதுமிருக்கு மிடையென்றிறே. (எத்தனையோர் போதுமாய்) கிழக்குவெளுத்த வாறே தயிர்கடையவென்றுபுக்கு அஸ்தமித்தாலும் தலைக்கட்டாது காணுமிவள் ஸௌகுமார்யம். (சீரார்தயிர்கடைந்து) தயிருக்குச் சீர்மையென்னென்னில், கடைவதுக்குமுன்னே இவனெச்சில் பட்டு, கடைகிறபோது இவனெச்சில்பட்டு, கடைந்து சமைந்தால் இவனெச்சில்படுமதிறே.

---

களை ஆளிட்டுச் செய்யமுடியுமோ? அப்படியே இவளுக்கும் இது குலத் தொழில்.(மத்தாரப்பற்றிக்கொண்டு)தயிர் கடையும் பானையிலேமத்தை நட்டு இரண்டு இழுப்பு இழுத்தவுடன், திருமேனியின் மென்மையாலே தன்னாலே கடையமுடியாமல் மத்தை அழுத்திப்பிடித்துக்கொண்டு நிற்கும் நிலையைச் சொல்லுகிறது. (ஏராரிடைநோவ) அழகு நிறைந்த இடை துன்புறும் படியாக. இவளுடைய இடைக்கு அழகாவது:— கண்ணனால் எப்போதும் அலங்கரிக்கப்பெற்றிருக்கை. (எத்தனையோர் போதுமாய்) கிழக்கு வெளுத்தவுடன் தயிர்கடையப் புகுந்தஇவள், சூரியன் மறைந்தபின்பும் கடைந்து முடிக்கமாட்டாள் திருமேனியின் மென்மையாலே. (சீரார் தயிர்கடைந்து) சீர்மைமிக்க தயிரைக்கடைந்து. தயிருக்குச் சீர்மை என்ன? எனில்: கடைவதுக்கு முன்னே தயிராயிருக்கும்போதும் இவனுடைய எச்சில்பட்டு, கடைகிறபோது மோராயிருக்கும்போதும் இவனுடைய எச்சில்பட்டு, கடைந்து வெண்ணெயானாலும் இவனுடைய எச்சில் படுமதாயிருக்கை இதற்குச் சீர்மை. எல்லா நிலைகளிலும் அவனுக்கேயாயிருக்கையன்றோ எப்பொருளுக்கும் சிறப்பு.

வேரார் நுதல்மடவாள் வேறோர் கலத்திட்டு 30

*வேர் ஆர் நுதல் மடவாள்—(கடைந்த சிரமத்தாலே) வேர்வைமிக்க நெற்றியை உடையளான அந்த யசோதை, வேறு ஓர் கலத்து இட்டு—வேறொரு பாத்திரத்திலே இட்டு,*

---

(வெண்ணெய்திரண்டதனை) கடைந்ததாகில் "வெண்ணெய் திரண்டதனை" என்னவேணுமோ? ஆயிருக்கச்செய்தே "திரண்டதனை" என்னும்போது தைவயோகத்தாலே இவன் நினைவைப் பார்த்துத் தானே திரண்டதுபோலே. * ஈட்டியவெண்ணெயுண்டானிறே இவன்றான்.

(வேரார்நுதல்மடவாள்) "கடலைக்கடைய" என்று உபக்ரமித்து தேவர்கள் இளைத்திருந்தாற்போலேகாணும் இவள் ஆயாஸத்தாலே வேர்த்தநெற்றியும் தானுமாயிருந்தபடி. சொல்லிச்சொல்லாத ஆத்மகுணங்களால் குறைவற்றிருக்கிறபடி. (வேறோர்கலத்திட்டு) வெண்ணெய் பரிமாறுங்கலத்திலே இட்டுவைக்கில் நாற்றமே

---

(வெண்ணெய் திரண்டதனை) திரண்ட வெண்ணெய்தனை. கடைந்தால் வெண்ணெய்திரளும் என்பது தானே ஸித்திக்குமே; அப்படியிருக்க, 'திரண்ட வெண்ணெய்தனை' என்று சொல்லுவதற்குக் கருத்தென்னவெனில்; இவனுக்கு வெண்ணெய்யுண்பதில் விருப்பத்தைப்பார்த்து விதிவசத்தாலே வெண்ணெய் தானே திரண்டதோ என்னும்படியாயிருக்கையைச் சொல்லுகிறார். "ஈட்டிய வெண்ணெயுண்டான்" [திருவாய் 7-7-2] என்று சொல்லப்படுமவனன்றோ இவன்.

(வேரார் நுதல் மடவாள்) தயிர்கடைகையாலே வேர்வைநீர் நிறைந்த நெற்றியையும், பெண்மைக்குரிய மடப்பத்தையுமுடைய யசோதை. கடலைக் கடையத்தொடங்கிய தேவர்கள் சிரமப்பட்டு இளைத்ததுபோலே, தயிர்கடையும்போது களைப்பாலே வேர்த்த நெற்றியையுடையவளானாள் இப்பிராட்டி. ஸௌகுமார்யமிருக்கிறபடி. (மடவாள்) பெண்மைக்குரிய நற்குணங்களால் குறைவற்றவள். "சீரடிச் செந்துவர்வாய் வாரார் வனவனமுலையாள்" என்ற விடத்தில் சாப்தமாகச் சொல்லாத ஆத்மகுணங்களாலும் குறைவற்றவள் என்கை. (வேறோர் கலத்திட்டு) வெண்ணெய் கடைந்த கலத்திலும், புழங்கும் கலத்திலும், இட்டுவைத்தால், பாத்திரத்தில் வீசும் வெண்ணெய் மணத்தைக்கொண்டே கண்ணன் அறிவா

நாரா ருறியேற்றி நன்கமைய வைத்ததனைப்
பேராார் வேற்கண்மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம் 31
ஓரா தவன்போல் உறங்கி யறிவுற்றுத்

*நார் ஆர் உறி ஏற்றி—(விரல்கூட நுழைக்கவொண்ணுதபடி) நார் நெருக்கத்தையுடைய உறியின் மேலேற்றி, நன்கு அமைய வைத்து—ஸுரக்ஷிதமாம்படி வைத்துவிட்டு, போர் ஆர் வேல் கண் மடவாள்—சண்டை செய்யும் வேல்போன்ற (கூர்மையான) கண்களையுடையளான அந்த யசோதையாளவள், போம் தனையும்—வெளியில் போகிறவரைக்கும், ஓராதவன்போல் பொய் உறக்கம் உறங்கி — ஒன்று மறியாதவன்போலே திருட்டுத்தூக்கம் தூங்கி, அறிவு உற்று—(அவள் போனவுடனே) கண்விழித்தெழுந்துபோய்,*

---

குறியாக அறியுமென்று த்ரவ்யாந்தரம் பரிமாறுங்கலத்திலே இட்டு வைத்தாள் காணும். (நாராருறியேற்றி) விரலைநுழைக்கவொண்ணாத உறியிறே. (ஏற்றி) முகவணைக்கல்லேற்றுவாரைப் போலே அருமைப்பட்டேற்றினபடி. (நன்கமையவைத்ததனை) வெண்ணெயைவைத்துக் கள்ளக்கயிற்றையுருவிச் சேமப்பட வைத்தபடி. "அழகியதாகச் சேமப்படவைத்தாளிறே" என்று க்ஷேபிக்கிறாள் கட்டுவிச்சி.

(போரார் வேல்கண் மடவாள்போந்தனையும் பொய்யுறக்கம்) எங்கேனும் வைக்கிறபோது இவன் காண்கிறானென்று பரகுபர

---

னென்று, வேறு பொருள்களை இட்டுவைக்கும் பாத்திரத்திலே வெண்ணெயை இட்டுவைத்தாள் காணும்! (நாராருறியேற்றி) நார் நிறைந்த உறி. விரலைக்கூட உள்ளே நுழைக்கமுடியாதபடி நார்நிறைந்திருக்கிறபடி. (ஏற்றி) கோயில் கோபுரம் முதலானவற்றிலே முகப்புக்கல்லை மிகமுயன்று ஏற்றுவதுபோலே மிகமுயன்று உறியை ஏற்றினாள். (நன்கமைய வைத்ததனை) வெண்ணெயை உள்ளே வைத்து, வெண்ணெய் திருடக்கள்ளர்கள் வந்தால் அகப்பட்டுக்கொள்ளும் கயிற்றைப் பொருத்திவைத்து, ஸுரக்ஷிதமாக வைத்தாள். (நன்கு வைத்ததனை) அவனுண்ணவேண்டிய வெண்ணெயை அவனுக்காகாதபடி நன்றாக வைத்தாள்! இவளும் ஒரு தாயோ? என்று யசோதையை ஏசுகிறாள் கட்டுவிச்சி.

(போரார் வேற்கண்மடவாள்) நாற்புறமும் பரகுபரகென்று பார்க்கையாகிற போரைச்செய்யும் வேல்போன்ற கண்ணையுடையவள்.

கென்று இவள் பார்க்கும்படி. (போந்தனையும்) இவனுக்கு *ஒரு பகலாயிரமூழியாயிருக்கிறபடி. வெண்ணெயில் சாபலமில்லாமல் கிடக்கிறானல்லன்; களவின் மிகுதியாலே ஆறக்கிடக்கிறபடி. (பொய்யுறக்கம்) அவனுறங்கினானென்றிறே இவளிருப்பது; யோக நித்ரைபோலே. (ஓராதவன்போலுறங்கி) "இவனுக்கு வேறொரு நினைவில்லை, உறக்கமேயோ" என்று தோன்றக்கிடந்தபடி. (அறிவுற்று) சில அசித்பதார்த்தங்களுக்கு அறிவு குடிபுகுந்தாற்போலே யிருக்க, உறங்கி உணர்ந்தானாக இருந்தபடி. அவள் போனவாறே உறங்கியுணர்வார் உணருமாபோலே உணர்ந்தபடி. நடுவேவந்து

---

இவள் என்னதான் எங்கு நன்கமையவைத்தாலும் அவன் பார்த்துவிட்டானாகில் தப்பமுடியாதன்றோ; ஆகையால் அவன் பார்க்கிறானோ என்று நாற்புறமும் பார்த்துவிட்டு உறியேற்றுகிறாள் இவள். (போந்தனையும்) அவள் அவ்விடத்தை விட்டுப்போகும் அவ்வளவு நேரமும். "ஒருபகல் ஆயிரமூழியாலோ" [திருவாய்10-3-1] என்று அவனைப்பெறாத அடியார்க்கு ஒரு பகல் ஆயிரம் கற்பகாலமாகத் தோற்றுவதுபோலே, அடியார் கைபட்ட திரவியத்தைப்பெறாத ஒவ்வொரு கணமும் ஆயிரம் கற்பகாலமாகத் தோற்றுகிறது அவனுக்கு. (போந்தனையும்) வெண்ணெயில் விருப்பமுள்ள இவன், அவள் போகும் வரையிலும் காத்திருக்கவேணுமோ? அவளிருக்கும்போதே அவள் கண்ணிலே மண்ணைத்தூவிவிட்டு வெண்ணெயைக் களவுகாணக்கூடிய இவன், போகும் வரையில் காத்திருந்தற்குக் காரணம் வெண்ணெயில் விருப்பக்குறைவோ? எனில்: வெண்ணெயில் விருப்பக்குறைவால் கிடக்கிறானல்லன்; ஏற்கனவே பலவிடங்களில் வெண்ணெய் களவுகண்டு வெண்ணெய்ப்பசி மந்தமாயிருக்கையாலே பொறுத்திருக்கிறான். (பொய்யுறக்கம்) அவன் உறங்குகிறான் என்றல்லவோ யசோதை நினைத்திருப்பது; ஆனால், உண்மையில் இவன் விழித்துக்கொண்டன்றோ இருக்கிறான். 'யோகநித்திரை' என்றும், 'கள்ள நித்திரை' என்றும், 'அறிதுயில்' என்றும் ஊழிகாலவுறக்கத்தைச் சொல்லுமாபோலே 'பொய்யுறக்கம்' என்கிறார் இத்தூக்கத்தையும். (ஓராதவன்போல் உறங்கி) 'எவ்வளவு எழுப்பினாலும் இவனுக்கு நினைவேயில்லையே; உறக்கமேயோ இவனறிந்தது' என்னும்படி கிடந்தான். (அறிவுற்று) அறிவற்ற அசேதனப்பொருள்போலே (பொய்யுறக்கம்) உறங்கின இவன் அவள் போனவுடன், பொய்யுறக்கமுறங்குவார் திடீரென எழுந்திருப்பதுபோலே எழுந்திருக்கவில்லை; அசேதனப்பொருளுக்கு அப்போதே அறிவுபுகுந்தது என்னும்படியாக வெழுந்தான்; அவள் போனவுடன், உண்மையில் உறங்கியுணர்ந்தாரைப்போலே உடம்பை

தாரார் தடந்தோள்க ளுள்ளளவுங் கைநீட்டி 32
ஆராத வெண்ணெய் விழுங்கி அருகிருந்த
மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே 33

தார் ஆர் தட தோள்கள் உள் அளவும் கை நீட்டி—மாலையணிந்த பெரிய திருத்தோள்களைத் தாழியின் அடிவரையில் புகவிட்டு, ஆராத வெண்ணெய் விழுங்கி—(எவ்வளவு உண்டாலும்) திருப்தியைத் தரமாட்டாத வெண்ணெயை அமுது செய்து, அருகு இருந்த—(அந்த வெண்ணெய்த் தாழியின்) பக்கத்தில் இருந்த, மோர் ஆர் குடம்—மோர் நிறைந்த குடத்தை, உருட்டி-(அதில் விருப்பமின்மை தோற்ற)உருட்டி, முன் கிடந்த தானத்தே முன்னே படுத்திருந்த இடத்திலேயே,

---

அவள் புகுந்தாளேயாகிலும் "உறங்கினவன் உணர்ந்தான்" என்று அவளுக்குத் தோற்றக்கிடந்தானென்றபடி. அறிவு குடிபுகுந்து மூரிநிமிர்வது, கொட்டாவி கொள்வதாயுணர்ந்தபடி.

(தாரார்தடந்தோள்கள்) மாலையோடேகூட வெண்ணெய்க் குடத்திலே கையைவிட்டான். (தாரார்தடந்தோள்கள்) * வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான். (உள்ளளவுங் கைநீட்டி) வெண்ணெயிலாழக் கையிட்டதனையும் வயிறுநிறையுமென்றிருக்கிறான் காணும் மௌக்த்யத்தின் மிகுதியாலே. "'தாரார்தடந்தோள்

---

முறித்து நிமிர்வது, கொட்டாவிகொள்வது முதலிய செயல்களைச் செய்துகொண்டே உணர்ந்தான். இவனுடைய திருட்டுத்தனத்தை உணர்ந்த அவள், போக்குக்காட்டி உடனே உள்ளே வந்து பார்த்தாலும், 'உண்மையாக உறங்கினவன் விழித்தான்' என்று தோற்றும்படி விழித்தான்.

(தாரார் தடந்தோள்கள்) வெண்ணெயிலுள்ள விருப்பத்தாலே, "தோளிணைமேலும்" [திருவாய் 1-9-7] என்கிற தோள்மாலையும் உள்ளே அழுந்தும்படி வெண்ணெய்க்குடத்தினுள் கைவிட்டான். "வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்" [திருவாய் 1-8-5] என்றாரன்றோ நம்மாழ்வாரும். (உள்ளளவும் கைநீட்டி) வெண்ணெயில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கைவிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு வயிறு நிறையும் என்றெண்ணுகிறான் சிறுபிள்ளைத்தனத்தாலே. சாதியின் மெய்ப்பாடும், சிறுபிள்ளைத்தனமும், வெண்ணெயில் விருப்பமும் இவனை இப்படிச் செய்விக்கிறது. "'தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கை

களுள்ளளவும் கைநீட்டினான்' என்று இவளறிந்தபடியெங்ஙனே" என்று ஜீயர் பட்டரைக்கேட்க, "கோயிற்சாந்தைக் குடத்தின் விளிம்பிலே கண்டாள்போலேகாணும்" என்றார். (ஆராதவெண்ணெய்) முன்பு அமுதுசெய்த வெண்ணெய் பின்பு அமுது செய்யும் வெண்ணெய்க்குக் கண்டூரமாய் காணுமிருப்பது. (விழுங்கி) வெண்ணெயை நிச்சேஷமாக அமுதுசெய்து.

(அருகிருந்த மோரார்குடமுருட்டி) வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டிறே போவது. பாகவதராருகே

---

நீட்டினான்' என்று யசோதைப்பிராட்டி அறிந்தபடி எப்படி" என்று நஞ்சீயர் ஆசார்யரான பட்டரைக்கேட்க, "இவன் தோள்களில் பூசியிருக்கும் கோயிற்சாந்தை வெண்ணெய்க்குடத்தின் விளிம்பிலே கண்டு சொல்லுகிறாள் போலும்" என்று பட்டர் அருளிச்செய்தார். (ஆராதவெண்ணெய்) எவ்வளவு உண்டாலும் திருப்தி பிறவாத வெண்ணெய். முதலில் அமுது செய்யும் வெண்ணெய், பசியை அதிகரிக்கச்செய்யும் மருந்தாகி, மேலும் மேலும் வெண்ணெய் அமுதுசெய்யத் தூண்டுகிறது ['கண்டூரம்—தீபநௌஷதம்' என்று அரும்பதவுரை.] (விழுங்கி) வெண்ணெயை மிகுதியில்லாமல் அமுதுசெய்து.

**"உண்டாய் உலகேழ் முன்னமே உமிழ்ந்து மாயையால் புக்கு**
**உண்டாய் வெண்ணெய் சிறுமனிசர் உவலையாக்கை நிலையெய்தி**
**மண்தான் சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும் பீர் சிறிதும்**
**அண்டாவண்ணம் மண்கரைய நெய்யூண்மருந்தோ மாயோனே"**

[திருவாய் 1-5-8]

என்னும் ஆழ்வாரின் அமுதமொழி இங்கு பருகத்தக்கது.

(அருகிருந்த மோரார் குடமுருட்டி) வெண்ணெய் விழுங்குவதோடு நில்லாதே இவனுடைய சிறுபிள்ளைத்தனம். "வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டதன் ஓசைகேட்கும் கண்ணபிரான் கற்ற கல்வி' [பெரியாழ்திரு 2-9-1] என்கிறபடியே வெண்ணெயிருந்த கலத்தை உடைத்து அதன் ஒலியைக்கேட்டு இன்புறுமவனன்றோ இவன். ஸ்வாபதேசத்தில் வெண்ணெய்போலினிய ஆத்மவஸ்துவை எடுத்துக் கொண்டு, வெறுங்கலம்போன்ற தேஹத்தைப்போக்கி இன்புறுமவன் என்கை. அப்படியே இங்கும் ஸாரமான வெண்ணெயை விழுங்கி, அஸாரமான மோர்க்குடத்தை உருட்டிவிடுகிறான். மிகச்சிறந்த பகவத்

ஓரா தவன்போல் கிடந்தானைக் கண்டவளும்
வாராத்தான் வைத்தது காணாள் வயிறடித்திங்கு 34

ஓராதவன் போல்—ஒரு செய்தியும் தெரியாதவன் போன்று, கிடந்தானை—படுத்துக் கொண்டிருந்த கண்ணனை, அவளும் வாரா கண்டு—அந்த யசோதையும் வந்தவுடன் கண்டு, தான் வைத்தது காணாள்—தான் (உறியிலே சேமித்து) வைத்த வெண்ணெயைக் காணாதவளாய், வயிறு அடித்து—(இத்தனையும் தின்றால் ஜரிக்குமோவென்று) வயிற்றிலே அடித்துக்கொண்டு,

---

**கழனிமிண்டரிருந்தால் அஸஹ்யமாயிருக்குமாபோலே வெண்ணெய்க்குடத்தருகே மோர்க்குடமிருந்தது இவனுக்கு அஸஹ்யமாயிருக்கையாலே உருட்டினபடி. பட்டர், ஆழ்வார்கள் திருமண்டபத்திலேயிருந்து திருமடலருளிச்செய்யாநிற்கச்செய்தே, இவ்விடத்தே "ப்ராஹ்மணர் தநத்தையெல்லாம் பாழேபோக்கினான்"**

---

பக்தர்களுக்கு நடுவில் நன்றிகொன்ற பாவிகளிருந்தால் பொறுக்கவொண்ணாதிருக்குமாபோலே, வெண்ணெய்க்குடத்தருகே மோர்க்குடமிருப்பது இவனுக்குப் பொறுக்கவொண்ணாதிருக்கையாலே அதை உருட்டித்தள்ளினான். ஸ்வாபதேசத்திலே ஸாரபூதரான ஸத்துக்களை உகந்து கொள்ளுவானென்பதும், அஸாரபூதரான அஸத்துக்களை இகழ்ந்து தள்ளுவானென்பதும் சொல்லிற்றாயிற்று. வேதத்திலும் ஸாரபூதமான உத்தரபாகத்தைப்பற்றியவர்களை "ப்ராஹ்மணோ மம தேவதா" என்று கொண்டாடியும், அஸாரமான பூர்வபாகத்தைப் பற்றியவர்களை, "அவிபச்சித:—வேதவாதரதா:" [கீதை 2-42] [வேத வாதத்திலீடுபட்ட அறிவற்றவர்கள்] என்று தள்ளியும் போந்தவனன்றோ. பட்டர், (சந்திர புஷ்கரணிக்கரையில்) ஆழ்வார்கள் எழுந்தருளியிருந்த திருமண்டபத்திலேயிருந்து திருமடலருளிச்செய்து போம்போது, இவ்விடத்திலே "ப்ராஹ்மணர் தனத்தையெல்லாம் பாழேபோக்கினான்" என்று அருளிச்செய்தார். இதற்குக் கருத்து: பூர்வபாகத்திற் சொல்லப்பட்ட யாகங்களிலே ஈடுபட்டிருக்கும் ப்ராஹ்மணர்கள் யாகத்திற்கு உபயோகியான வெண்ணெய் பால், தயிர், மோர் முதலானவற்றையே தனமாகக் கொண்டவர்களாயிருப்பவர். பரமபுருஷார்த்தமான தன்னைவிட்டு, அல்பபுருஷார்த்த ஸாதனமாக இவற்றைப் பற்றிநிற்பதைக்கண்டு, வெண்ணெய், பால் முதலானவற்றைத்தானே உண்டும், மோர் முதலானவற்றை உருட்டியும் இப்படிப் பூர்வபாகநிஷ்ட ப்ராஹ்மணர் தனத்தையெல்லாம் பாழே

என்றருளிச்செய்தார். (முன்கிடந்ததானத்தே) "ஆரேனும் காண்கிறார்கள்" என்று இவன் பதறிவிழுந்தான்; தைவயோகத்தாலே அது பழைய ஸ்தாநமாயிற்றித்தனை. (முன்கிடந்ததானத்தே) களவுகண்டானென்று சொல்லிலும் "படுக்கையோடேயோ எழுந்திருந்து களவுகண்டது" என்னும்படி கால்போட்டவிடத்தே கால்போட்டுக் கைபோட்டவிடத்தே கைபோட்டுக் கிடந்தபடி. (ஓராதவன்போல்கிடந்தானை) "வெண்ணெய் ப்ரஸங்கம் இவன் நினைவிலுமில்லையீ!" என்னும்படி. இவ்வர்த்தம் முதலிலேயறியாதானாய்க் கிடந்தபடி. தானுருட்டினமோர் படுக்கையிலேவந்து தொங்கச்செய்தேயும் அறியாதவனாய்க்கிடந்தபடி. (கண்டவளும்) * இவனைப் பெற்றவளிறே அவளும்; இவன் கிடந்தகிடையிலே இவனையே சங்கித்தாள். (வாராத்தான் வைத்தது காணாள்) வந்ததும் வாராததுமாக உறியிலே கையையிட்டாள், யாதொருபடி வைத்தாள், அக்குறிப்படியே கண்டிலள்.

---

போக்கினான் என்கை. (முன்கிடந்த தானத்தே) "ஆராவது காணப் போகிறார்கள்" என்று இவன் பதறிவிழுந்தான்; விதிவசத்தாலே அது பழைய விடமாயிற்று. [இவ்விடங்களில் 'தைவம்' என்பதும், 'விதி' என்பதும் இவனுடைய ஸத்யஸங்கல்பமேயென்று கொள்க.] (முன்கிடந்த தானத்தே) 'வெண்ணெய் திருடினான்' என்று சொன்னாலும், 'படுக்கையோடு கூட எழுந்திருந்து களவு கண்டானோ' என்று நினைக்கும்படி முதலில் காலிருந்த விடத்திலே கால்போட்டு, முதலில் கையிருந்த விடத்தே கைபோட்டுக் கிடந்தபடி. (ஓராதவன்போல் கிடந்தவனை) "வெண்ணெயைப் பற்றிய எண்ணமே இவனுக்கு இல்லையே" என்று கண்டவர் சொல்லும்படி. இவ்விஷயத்தைப்பற்றி முதலிலிருந்து ஒன்றுமே அறியாதவன்போலே கிடந்தபடி. தானுருட்டிவிட்ட மோரார் குடத்திலிருந்து மோர் படுக்கையை நனைத்துக்கொண்டு கிடக்கும்போதே, ஒன்றுமறியாதவனாய்க்கிடந்தபடி. (கண்டவளும்) இவனைப்பெற்ற வயிறுடையாளன்றோ அவளும். இவன் ஒன்றுமறியாதான்போல் கிடந்த கிடையிலிருந்தே இவனே இதைச் செய்திருக்கவேணும் என்று அறிந்தாள். (வாராத்தான் வைத்தது காணாள்) வந்ததும் வராததுமாக உறியிலே கையிட்டாள். எப்படி வைத்தாளோ அப்படியே வெண்ணெயைக் கண்டிலள்.

ஆரார் புகுதுவா ரைய ரிவரல்லால்
நீரா மிதுசெய்தீ ரென்றோர் நெடுங்கயிற்றால்
ஊரார்க ளெல்லாருங் காண வுரலோடே

*ஐயர் இவர் அல்லால்—இந்த மஹாநுபாவர் தவிர, இங்கு புகுதுவார் ஆர் ஆர்—இங்கே வந்தவர் வேறுயார்? (யாருமில்லை; இவரே திருடியிருக்க வேண்டுமென்று நிச்சயித்து) இது செய்தீர் நீராம் என்று—'இந்தக் காரியம் செய்தவர் நீர்தான்' என்று சொல்லி, தீரா வெகுளியள் ஆய்—அடங்காத கோபத்தையுடையளாய், ஓர் நெடு கயிற்றால் — கையிலகப்பட்டதொரு குறுங்கயிற்றால், ஊரார்கள் எல்லாரும் காண — ஊரிலுள்ளாரனைவரும் (இந்த எளிமையைக்) காணும்படியாக, உரலோடே-ஒரு உரலோடே,*

---

**(வயிறடித்து) "வெண்ணெயிழந்தேன்" என்று வயிறடிக்கிறாளன்றிறே; "இது இவனுக்கு ஸஹியாதொழிகிறதோ?" என்னும் வயிறெரித்தலாலேயாதல், "இன்று வெண்ணெயாகிறது, நாளை பெண்களாகிறது; இதுஎன்னாய்முடிகிறதோ?" என்றாதல். (இங்காரார் புகுதுவார்) லங்கைபோலேயிறே வெண்ணெயையரண் செய்துவைத்தபடி. (ஐயரிவரல்லால்) முதலியாரேயிறேயிது செய்வார். (நீராமிதுசெய்தீரென்ற) "உம்முடைய கைவழியே போனவித்தனையிறே வெண்ணெய், வேறு சிலருண்டோ?" என்று கையைப்பிடித்து உறங்குகிறவனைத் தூக்கியெடுத்து.**

---

(வயிறடித்து) தன் பிள்ளையாகையாலே, 'வெண்ணெயை இழந்தேன்" என்று வயிற்றிலடித்துக் கொள்ளமாட்டாளன்றோ. பின் எதற்காக வெனில்: "இது இவன் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாதே" என்னும் காரணத்தாலேயாவது, 'இன்று வெண்ணெயைக் களவுகண்டான்; நாளைப் பெண்களைக் களவு காணுவான்; கடைசியில் இது எதிலே வந்து முடியுமோ' என்னும் பயத்தினாலேயாவது வயிற்றிலடித்துக் கொள்வதாகக் கொள்ளலாம். (இங்காரார் புகுதுவார்) கடிமதிளிலங்கையைப் போலன்றோ வெண்ணெயை அரண்செய்து வைத்தாள்; அப்படிப்பட்ட இடத்தில் இவனைத்தவிர வேறு யார் புகமுடியும்? (ஐயரிவரல்லால்) முதலியாரான இவரன்றோ இது செய்வார். (நீராமிது செய்தீர்) உம்முடைய கைவழியே போனதன்றோ வெண்ணெய். (நீராமிது செய்தீர்?) நீர் மாத்திரம் செய்தீரோ? வேறுசிலர் துணையுமுண்டோ? (என்று) என்று கூறி, கையைப் பிடித்துத் தூங்குகிறவனைத் தூக்கியெடுத்து.

(ஓர் நெடுங்கயிற்றால்)வெண்ணெய் களவுகாண்பானாகவும், தான் இவனை அடிப்பாளாகவும் முன்பே கயிறுதேடிவைத்திலளிறே; கைக்கெட்டிற்றொரு கயிற்றாலே. (நெடுங்கயிற்றால்) வ்யாக்யாநம் பண்ணுமவர்கள் "கண்ணிக்குறுங்கயிறு" என்றார்களிறே. நெடுமை விபரீதலக்ஷணை. அன்றியே, இவன் திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே "நெடுங்கயிறு" என்றாளாதல். "திருமேனி நீ தீண்டப்பெற்று மாலுங்கருங்கடலேயென்நோற்றாய்" என்னக்கடவதிறே. (ஊரார்களெல்லாருங்காண) வெண்ணெய் களவு கொடுத்தாரும்

---

(ஓர் நெடுங்கயிற்றால்) இவன் வெண்ணெய் திருடப்போவதையும், தான் இவனை அடிக்கப்போவதையும் எதிர்பார்த்து முன்னதாகவே யசோதை கயிறுதேடி வைத்திருக்கவில்லையன்றோ; ஆகையாலே, கைக்குக் கிடைத்த தான ஒரு கயிற்றை எடுத்தாள். (நெடுங்கயிற்றால்) இந்த விருத்தாந்தத்தை வெளிப்படையாக அருளிச்செய்யும்போது, இவ்வாழ்வாரே "கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான்" [பெரியதிரு 11-5-5] என்று குறுகிய கயிறாக அருளிச்செய்கையாலே, இங்கு "நெடுங்கயிறு" என்றது விபரீதலக்ஷணை. அதாவது, முட்டாளை 'ப்ருஹஸ்பதி' என்றழைப்பது போலே எதிரிடையான பொருளைத்தருவது; மிகக்குறுகிய கயிறு என்றபடி. அன்றிக்கே, "நெடுமை நீளத்தில் அதிகமாயிருப்பதைக் குறிப்பதல்ல; பெருமையின் மிகுதியைக் குறிக்கிறது" என்றும் கொள்ளலாம். அதாவது,—

"மாலும் கருங்கடலே என் நோற்றாய்? வையகமுண்(டு)
ஆலினிலைத்துயின்ற ஆழியான்-கோலக்
கருமேனிச்செங்கண்மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று" [முதல்திருவ-19]

என்கிற பாசுரத்தில் பகவானுடைய திருமேனி ஸ்பரிசத்தாலே கடலுக்குப் பெருமையுண்டானதாகக் கூறியதுபோலே, திருமேனி ஸ்பரிசத்தாலே இக்கயிறும் பெருமை பெற்றதென்பதை 'நெடுங்கயிறு' என்னும் பதம் உணர்த்துகிறது. (ஊரார்களெல்லாருங்காண) திருவாய்ப்பாடியிலுள்ளார் அனைவரும் கண்ணனிடம் வெண்ணெய் திருடக்கொடுத்தவர்களும், பெண்கள் களவு கொடுத்தாருமாயன்றோ இருப்பது. அவர்கள் அனைவரும் காணும்படியாக. (ஊரார்கள் எல்லாரும் காண) அவன் எல்லாரும் காண அடிபட்டாப்போலே இவளும் எல்லாரும் காண மட

தீரா வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்தடிப்ப 36
ஆரா வயிற்றிஞே டாற்ருதான் அன்றியும்

*சிக்கென, ஆர்த்து அடிப்ப — அழுந்தக் கட்டி அடிக்க, ஆராவயிற்றிஞேடு ஆற்ருதான் — மிகவும் வயிறெரிந்து வருந்தி நிற்பவன்; அன்றியும்— மேலும்,*

---

பெண்களவு கொடுத்தாருங்காண, எல்லாருங்காண படலெடுக்க இருந்தாளிவள்; நான் அது உபதேசிக்கவிருந்தேன்; எங்களை யொழிய அடைய ஸர்வஸ்வதாநத்தே அகப்பட்டதுகாணும். அதாவது-காணலுமாய்த் தவிரலுமாயிருக்கும் மனிச்சர்காணும் கண்டது. காணுமளவும் மடலெடுத்தல்லது தரிக்கமாட்டாத நாங்கள் காணப்பெற்றிலோம்.

(உரலோடே) இவனிருந்தவிடத்தே உரலையுருட்டாதே உரலிருந்தவிடத்தே இவனை இழுத்துக்கொண்டுபோனுள். (தீராவெகுளியளாய்) இவன்பக்கல் ப்ரமேத்துக்கவதியுண்டாகிலிறே சீற்றத்துக்கவதியுண்டாவது. (சிக்கென ஆர்த்தடிப்ப) சிக்கெனக் கட்டுவதுஞ்

---

லெடுக்க இருந்தாள்; கட்டுவிச்சியாகிய நான் அதை உபதேசிக்கும்படியிருந்தேன். எங்களைத்தவிர்ந்த மற்ற எல்லாரும் அவன் தன் ரூபகுணதிகளை அள்ளியள்ளிக்கொடுத்ததைப் பருகிப்பருகி மகிழ்ந்தனர். பசியில்லாதவர்கள் உண்டு களித்தனர்; பசியுள்ள நாங்கள் பட்டினிகிடக்கிறோம் என்கிருள். அதாவது:— 'அவனைக்காண முடிந்தால் காண்கிறோம்; இல்லாவிட்டால் போகிறது' என்று நினைத்திருப்பவர்களெல்லாம் கண்டு களித்தவர்; காணும் வரையில் மடலெடுத்தாலல்லது உயிர் தரிக்கமாட்டாத நாங்கள் காணப்பெறவில்லை என்கிருள்.

(உரலோடே) என்ன செயலைச் செய்தாள்! புஷ்பஹாஸஸுகுமாரப் பச்சிளம் பிள்ளையான இவனிருந்த இடத்துக்கு உரலையிழுத்துவருவதே தகுதியாயிருக்க, உரலிருந்த இடத்துக்கு இவனை இழுத்துப்போனுள்! (தீராவெகுளியளாய்) அன்பு காரணமாக வரும் கோபமாகையாலே, அன்பைப்போலே கோபமும் முடிவில்லாததாயிருந்தது. "வெண்ணெயை அளவுக்கு மீறி உண்பதால் இவனுக்கு என் வருகிறதோ' என்னும் அன்பு நினைவுக்கு எல்லை யுண்டானுலன்றோ, இவன் வெண்ணெயுண்டதனுலுண்டான கோபத்துக்கும் எல்லையுண்டாகும். (சிக்கென ஆர்த்தடிப்ப)

செய்தாள்; சிக்கென அடிப்பதும் செய்தாள். (ஆராவயிற்றிஞேடாற்ருதான்) இவன் செய்ததென்னென்னில்; பெரிய திருநாளிலே சிறைப்பட்டிருப்பாரைப்போலே "வெண்ணெயும் பெண்களும் ஆழமோழையாய்ச் செல்லுகிற அமளியிலே நாம் புகுந்திருப்பதே!" என்றிருந்தான். (ஆற்ருதான்) ஆற்றமாட்டாதேயிருந்தான். எங்ஙனியவென்னில்; எங்கே வெண்ணெயை ஒளிக்கிருர்கள், எங்கே பெண்ணை ஒளிக்கிருர்களென்று.

(அன்றியும்) அதுக்கு மேலே பிறந்ததோரபாயங் கேட்கலாகாதோ? ஸ்நேஹிநியான யசோதைப் பிராட்டி கையாலே கட்டுண்டு அடியுண்டவடியிறே கீழ்ச்சொல்லிற்று; ப்ரதிகூலனை காளியனாலே கட்டுண்டபடி சொல்லுகிறதுமேல். நியாமிகையுமாய், ஸ்நேஹிநியுமான அவள் கையாலே கட்டுண்டது பாடாற்றலாமிறே; காளியன் செய்த செயலைக்கேளீர்.

---

சிக்கென ஆர்த்து, சிக்கென அடிப்பு; உறுதியாக உரலோடு கட்டினுள்; உறுதியாகக் கயிற்ருல் அடித்தாள்; என்ன செயலைச்செய்தாள்! (ஆராவயிற்றிஞேடாற்ருதான்) இவன் என்ன செய்தானென்ருல்: திருவரங்கம் பெரிய கோயிலிலே திருவத்யயநோத்ஸவம் நடக்கும்போது ராஜாஜ்ஞை முதலானவற்ருல் சிறைப்பட்டிருப்பார் 'திருநாளை இழந்தோமே!' என்று வருந்துவதுபோலே, வெண்ணெயும், பெண்களும் சுழிபட்டோடும் பெரு வெள்ளம்போலேயிருக்கும் கோலாஹலத்திலே நாம் இங்கு புகுந்து கட்டுண்டிருப்பதே! என்று வயிறெரிந்திருந்தான். (ஆற்ருதான்) பொறுக்க மாட்டாதேயிருந்தான். எதையெனில்: "எங்கே வெண்ணெயை ஒளித்து விடுவார்களோ? எங்கே பெண்களை ஒளித்துவிடுவார்களோ" என்னும் அதிசங்கையைப் பொறுக்கமாட்டாது இருந்தான்.

(அன்றியும்) அதுக்குமேலே பிறந்ததோர் ஆபத்தைக் கேட்கலாகாதோ? அன்புடையவளான யசோதைப்பிராட்டியாலே கட்டுண்டு அடியுண்ட அடியையன்ரே கீழே சொன்னது. எதிரியான காளியனாலே கட்டுண்டபடியைச் சொல்லுகிறது மேலே. தாயாகையாலே இவனைக் கட்டுப்படுத்த உரிமையுடையவளாய், அன்புடையவளான அவள் கையாலே கட்டுண்டதைப் பொறுக்கலாமே; காளியன் செய்த செயலைக் கேட்பீர்களாக என்கிருள்.

நீரார் நெடுங்கயத்தைச் சென்றலைக்க நின்றுரப்பி 37
ஓரா யிரம்பண வெங்கோவிய நாகத்தை

*நீர் ஆர் நெடு கயத்தை சென்று — நீர் நிறைந்த பெரியதொரு மடுவுக்குப்போய், அலைக்க நின்று உரப்பி — அம்மடுவின் வெள்ளம் வெளிவழியும்படி (தன்னேராயிரம் பிள்ளைகளும் தானுமாகத்) திளைத்துக்கலக்கி, ஓர் ஆயிரம் பணம் வெங்கோ இயல் நாகத்தை — ஆயிரம் படங்களையுடையதும் யமன் போலக் கொடிய ஸ்வபாவத்தையுடையதுமான காளிய நாகத்தை,*

---

*(நீரார் நெடுங்கயத்தை)* *** இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி, ǁ தனக்கொதுங்க நிழலாயிருக்கிற பசுக்களுக்கு நீரூட்டவேண்டும் ஜலஸம்ருத்தியையுடைய பொய்கையை தூஷித்தானாயிற்று காளியன்; தன் ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்துக்குக் குறைவறவேண்டும் ஜலஸம்ருத்தி காளியனாலே தூஷிதமாயிற்று.**

*(சென்றலைக்கநின்றுரப்பி)* **/* தன்னேராயிரம் பிள்ளைகளுந் தானுமாய்ப்பொய்கையைக் காலாலேயுழக்குவது கல்லைவிட்டெறிவதாய் ஆர்த்துக்கொள்வதானன். நால்வாயுங் கரைக்குமேலே நீர்**

---

(நீரார் நெடுங்கயத்தை) "இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டி விட்டுக்கொண்டு விளையாட" [நாச் திரு 14-1] என்கிறபடியே ǁ தனக்கு ஒதுங்கும் நிழல்போலேயிருக்கிற பசுக்களுக்கு நீரூட்டுவதற்கு வேண்டியிருக்கிற நீர்ப்பெருக்கையுடைய மடுவிலே விஷங்கலந்தான் காளியன்; தன்னால் ரக்ஷிக்கப்படவேண்டிய பசுக்களை ரக்ஷிப்பதற்கு நிறைய வேண்டிய ஜலப்பெருக்கு காளியனாலே கெடுக்கப்பட்டதாயிற்று.

(சென்றலைக்க நின்றுரப்பி) "தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருவான்" [பெரியாழ்திரு 3-1-1] என்கிறபடியே தீம்பு செய்வதிலே தன்னையே உபமானமாகக்கொண்ட இடைப்பிள்ளைகளோடு போய், கையாலும், காலாலும் கலக்குவது, பாம்பின்மேல் கல்லைவிட்டு எறிவது முதலிய செயல்களைச்செய்து, தானேசென்று வம்பையிழுத்துக் கொண்டான். (சென்று அலைக்க நின்று உரப்பி) நாற்புறமும் கரைக்கு

---

ǁ (தனக்கு ஒதுங்கநிழல்) பசுமேய்க்கிற வ்யாஜத்தாலே அவ்வழியே பெண்களையழைப்பது; அவற்றை மணற்குன்றுகளிலே விட்டுப் பெண்களும் தானுமாய்க்ரீடிப்பது, இவற்றுக்கு ஹேதுவாகையாலே பசுக்கள் இவனுக்கு ஒதுங்க நிழலென்றபடியென்று அரும்பதவுரை.

வழியும்படி நின்று உரப்பினுனையிற்று. லங்கையை அடைமதிள் படுத்தி ராக்ஷஸர் தாங்களே புறப்படும்படி பண்ணினாற்போலே. இதுக்குமுன்பண்ணின மௌக்த்யமே போந்திருக்க அதுக்குமேலே பண்ணின மௌக்த்யத்தைக்கேட்கலாகாதோ? (ஓராயிரம் பண வெங்கோவியல் நாகத்தை) காளியனன்றுகிடீர், பையல் ம்ருத்யு கிடீர். (ஓராயிரம்பணம்) "நீண்முடியைந்திலும் நின்று நடஞ் செய்து" என்னச்செய்தே "ஆயிரம்" என்கிறதென்னென்னில்; முக்தனுன அவன்மேலே காளியன் வந்தானென்னுங்காட்டில் இவனுக்காயிரமாய்த் தோற்றினபடி.

(வெங்கோவியல் நாகத்தை) இந்த யமனுக்கு வெம்மையை ஊட்டினுன்கிடீர். (வெங்கோ இயல்) வெவ்வியனொரு யமனுடைய

---

மேலே நீர்சென்று வழியும்படியாக நிலைநின்று கலக்கினுன் என்றும் கொள்ளலாம். லங்கையைச் சுற்றிவளைத்துக்கொண்டு ராக்ஷஸர்கள் தாங்களே போருக்குப் புறப்படும்படி செய்ததுபோலே, இங்கும் ஸாஹஸச்செயல் புரிந்தான். இதுவரையில் பண்ணிய சிறுபிள்ளைத்தனமே பாம்பின் சீற்றத்தைத் தூண்டிவிடப் போதுமாயிருக்க, இதற்குமேலும் செய்த சிறுபிள்ளைச்செயலைக் கேளுங்கள் என்கிறுள் மேல்;— (வெம்கோ இயல் நாகத்தை) இப்பையல் காளியனன்று கிடீர்; யமனே கிடீர் பாம்புருக்கொண்டு வந்திருப்பது என்கிறுள். வெம் இயல் கோ—கொடிய தன்மையையுடைய யமன். (ஓராயிரம் பண நாகத்தை)

"காளியன் பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு அவன்
நீள்முடி ஐந்திலும் நின்று நடஞ்செய்து" [பெரியாழ்திரு 3-9-1]

என்று காளியனுக்குத் தலை ஐந்தாகச் சொல்லியிருக்க இங்கு 'ஆயிரம் பணம்' என்பானென்னென்னில்: சிறு பிள்ளையான இவன்மேலே போரிடக் காளியன் வந்தான் என்று நினைப்பதற்குள், இவனுக்கு ஐந்து தலை ஆயிரமாய்த் தோற்றுகிறபடி; அஸ்தாநே பயஸங்கை படுத்தும்பாடு.

(வெங்கோவியல் நாகத்தை) 'கோ' என்று யமன்; 'கோ இயல் நாகம்' என்றது யமனுடைய ஸ்வபாவத்தைக்கொண்ட மற்றொரு யமன்போன்ற பாம்பு என்றும் கொள்ளலாம். 'வெம் கோ இயல் நாகத்தை' என்றதால் இந்த யமனுக்கு வெம்மையையும் உண்டுபண்ணினுன்கிடீர் தன் செயலாலே என்கிறது. அன்றிக்கே, (வெங்கோ இயல் நாகத்தை) என்றது அபூதோபமையாய், உள்ள யமன் கொடுமையில் இக்காளியனை ஒவ்வாமையால், அவனிலும் கொடியானொரு யமனுடைய தன்மையையுடைய

வாரா யெனக்கென்று மற்றதன் மத்தகத்துச் 38
சீரார் திருவடியால் பாய்ந்தான் தன் சீதைக்கு

*எனக்கு வாராய் என்று — என்னோடு போர் செய்ய வா என்றழைத்து, மற்றதன் மத்தகத்து — அதன் தலை மீது, சீர் ஆர் திரு அடியால் பாய்ந்தான்— (தனது) அழகிய திருவடியால் பாய்ந்து நர்த்தனம் செய்தவன்; தன் சீதைக்கு — தனது தேவியான பிராட்டிக்கு,*

---

**ஸ்வபாவத்தையுடைய நாகத்தை.** (வாராயெனக்கென்று) முதலிகள் லங்கையை "எனக்கு, எனக்கு" என்றாற்போலேகிடீர் * தன்னேராயிரம் பிள்ளைகளும் காளியனை "எனக்கு எனக்கு" என்று நின்றபடி; அவர்கள் நடுவே எனக்கு வாராயென்றான். (மற்றதன்மத்தகத்து) அக்காளியன் பணத்திலே. (சீரார்திருவடியால் பாய்ந்தான்) பிராட்டி திருமுலைத்தடங்களிலே வைத்துக்கொள்ளும் போதும் கூசவேண்டும்படியிருக்கிற திருவடிகளைக்கொண்டு விஷத்ருஷ்டியான பணத்திலே பாய்ந்தான். * வடிவிணையில்லாமலர் மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியிறே.

(தன்சீதைக்குநேராவனித்யாதி) பிராட்டியோடு ஸாம்யையாவேனென்று வந்த சூர்ப்பணகையை விரூபையாக்கிவிட அவள்

---

பாம்பை என்பதாகவும் கொள்ளலாம். (வாராய் எனக்கென்று) வானர முதலிகள், 'லங்கையை நானழிக்கவேணும், நானழிக்கவேணும்' என்று ஒருவருக்கொருவர் முந்திநின்றாப்போலே, தன்னேராயிரம் பிள்ளைகளான இவன் தோழர்கள் ஒவ்வொருவரும் காளியனை 'என்னோடு போரிட வா' என்று அழைத்தனர். இவன், அவர்களைக் கையமர்த்திவிட்டு, காளியனை 'என்னோடேயே போரிடவா' என்று அழைத்தான் என்கிறாள். தன் தோழர்களுக்கு ஒரு தீங்குவருவதைப் பொறுக்கமாட்டாமையால் தானே முன்னின்றபடி. (மற்றதன் மத்தகத்து) அக்காளியன் பணத்திலே. பாம்பின் வாயிலேபோய் விழுந்தான்கிடீர் இத்திம்பன் என்கை. (சீரார் திருவடியால் பாய்ந்தான்) மென்மலராளான பெரியபிராட்டியார் திருமுலைத்தடங்களிலே வைத்துக்கொள்ளும்போதும் 'கன்றிவிடுமோ' என்று பயப்படவேண்டும்படியிருக்கிற திருவடிகளைக்கொண்டு, பார்வையாலே விஷங்கக்கும் படத்திலே பாய்ந்தான். "வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" [திருவாய் 9-2-10] என்று சொல்லப்பட்டதன்றோ. (சீரார்திருவடி) திருவடிக்குச் சீர்மையாவது அதன் ஸௌகுமார்யம் (மென்மை).

(தன் சீதைக்கு நேராவள்...சிலைகுனித்தான்) 'பிராட்டியோடு ஸமமானவளாவேன்; ராமபிரானின் கைப்பிடிப்பேன்' என்று வந்த சூர்ப்

போய் கரன்காலிலேவிழ, ஸபரிகரனைய் வந்த கரனை நிரஸித்த படியைச் சொல்லுகிறது. (தன்சீதை) "राघवोर्हति वैदेहीं" (ராகவோர்ஹதி வைதேஹீம்). தனக்கு உயரஞ்சொல்லிலும் அவனைச் சொல்லித் தன்னைச் சொல்லவேண்டும்படியிருக்கும் பிராட்டிக்குக் காணும் ஸத்ருசையாவேனென்று வந்தது. (நேராவனென்று) ஸர்வலக்ஷணத்தாலும் விலக்ஷணையான பிராட்டிக்கு விரூபையாயிருக்கிற தான்காணும் ஒப்பாவனென்றுவந்தாள். (ஓர் நிசாசரி) பெற்றதாயோடே சிறுபாறென்றுவந்தவள் என்று பிணந்தின்னி என்கிறாள் காணுமிவள். (தான்) பெருமாளுக்குமேலான பிராட்டிக்குப் பெருமாளோடு மொவ்வாத தான்காணுமொப்பாவனென்று வந்தாள். (தன்சீதைக்கு நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளை)

---

பணகையைக் காதையும் மூக்கையுமறுத்து அங்கபங்கம் செய்துவிட, அவள்போய்க் கரன்காலிலேவிழ, தூஷணாதியரான துணைவரோடு வந்த கரனைக் கொன்றொழித்தபடியைச் சொல்லுகிறது: (தன்சீதை) தனக்கு எவ்விதத்திலும் தகுதியுடைய சீதை.

''துல்யசீலவயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம் ।
ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணா ॥''
[ரா-ஸு 16-5]

[ஒத்தகுணம், வயது, நடத்தை ஆகியவற்றையுடையவளும், ஒத்தகுலத்தையும் அழகையுமுடையவளுமான சீதைக்கு ராமனே தகுந்தவர்; கறுத்த கண்களையுடைய இப்பிராட்டியும் அவருக்கே தகுந்தவள்.] என்கிறபடியே.

''அப்ரமேயம் ஹிதத்தேஜோயஸ்ய ஸாஜநகாத்மஜா''[ரா-ஆ 37-18]

[யாதொரு தேஜஸ்ஸுக்கு ஜனகராஜன் திருமகள் உரிமைப்பட்டவளோ, அந்த ராமபிரானாகிற தேஜஸ் அளவிடவொண்ணாதது] என்று பிரானாகிய தனக்குப் பெருமை சொன்னாலும் அவனைச் சொல்லித் தனக்குப் பெருமைசொல்லவேண்டும்படியிருக்கும் பிராட்டிக்குத் தான் ஒத்தவளாவேன் என்றல்லவோ வந்தாள். (நேராவனென்று) பெண்களுக்குரிய எல்லா இலக்கணங்களாலும் இலங்கிநிற்கும் தேவிக்கு ஒத்தவளாக, கோரரூபிணியான தன்னையன்றோ சொல்லிக்கொண்டு வந்தாள். (ஓர் நிசாசரி) அகிலஜகன்மாதாவான பிராட்டியிடத்திலே கோபத்தோடு வந்தவள் என்னும் காரணத்தாலே, 'பிணந்தின்னும் ராக்ஷஸகுலத்தைச் சேர்ந்தவளன்றோ இவள்' என்று எடுத்துக்காட்டுகிறாள் கட்டுவிச்சி. (தான்) ராமபிரானிலும் உயர்ந்தவளான பிராட்டிக்கு, அவருக்கும் ஒவ்வாதவளான தன்னை ஒப்பாகச் சொல்லிக்கொண்டு வந்தாள்.

**நேராவ னென்றோர் நிசாசரிதான் வந்தாளைக்** 39

*நேர் ஆவன் என்று—நான் ஸமானமாவேனென்று சொல்லி, ஓர் நிசாசரி வந்தாளை—(என்னை மணந்துகொள் என்று சொல்லிக்கொண்டு) ஓடிவந்த சூர்ப்பணகையென்னும் ராக்ஷஸியை,*

---

**"त्रैलोक्यराज्यं सकलं सीताया नाप्नुयात्कलां" (த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்)** என்று பெருமாள்தாமும் தம்விபூதியும் ஒரு தட்டுக்குங்கூடப் போராதிருக்கக்காணும், தான் நேராவனென்று வந்தது. (வந்தாளை) பெருமாள் பாடேவந்தவாறே "நான் ஏகதாரவ்ரதனாயிருப்பன், அக்ருதவிவாஹராயிருக்கிற இளைய பெருமாள்பாடேபோ" என்ன; அங்கே சென்றவாறே, அவர், "நான் தாஸனாயிருப்பன், எனக்கு நீ கடவையானால் நீயும் தாஸியாயங்வயிக்குமத்தனையன்றோ? பெருமாள்பாடே சென்றாலன்றோ உனக்குப் பட்டங்கட்டி ஏகஸிம்ஹாஸநத்திலே இருக்கலாவது" என்ன; அங்கே போவது இங்கேவருவதாய்த்திரிந்தவாறே, "இவளன்றோ இதெல்லாமொட்டாதொழிகிறாள்" என்று பிராட்டியுடைய பாடேவந்து "உன்னைத் தின்னுமித்தனை" என்றுவிழ.

---

(தன்சீதைக்கு நேராவனென்று ஓர் நிசாசரிதான் வந்தாளை) "**த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத் கலாம்**" *[ரா-ஸு 16-14]* *[மூவுலக அரசு முழுவதும், சீதாதேவியின் ஒருபகுதிக்கு இணையாகாது]* என்கிறபடியே சீதையை ஒருதட்டிலிட்டால், ஸ்ரீராமபிரானும் அவர் செல்வமாகிற த்ரைலோக்யராஜ்யமும் தராசின் மற்றதட்டுக்குப் போராதபடியிருக்கும்போதுகிடீர், சூர்ப்பணகையாகிற தான் சீதைக்குசமம் என்று சொல்லி வந்தது. (வந்தாளை) சூர்ப்பணகை ஸ்ரீராமபிரானிடம் வந்தவுடன், "நான் கலியாணமானவன், ஒரே மனைவியெனும் விரதம் பூண்டவன்; விவாஹமாகாத லக்ஷ்மணனிடம் போ" என்று சொல்ல, அவன், "நான் அவருக்கு வேலைக்காரன், எனக்கு நீ உரியவளானால், நீயும் அவர்களுக்கு அடிமை செய்ய வேண்டியதுதானே; அவரிடம் சென்று மணந்தால்தான் உனக்குப் பட்டங்கட்டி, அவரோடு நீ ஒரே சிங்காசனத்திலிருக்கக்கூடும்" என்று சொல்ல, அவரிடம் போவது இவனிடம் வருவதாய்த் திரிந்தபிறகு, 'இந்த சீதையன்றோ நம் விருப்பத்தை நிறைவேறவொட்டாமல் செய்கிறாள்" என்று அவளருகில் வந்து 'உன்னைத் தின்றுவிடுகிறேன்' என்று மேல்விழ.

கூரார்ந்த வாளால் கொடிமூக்குங் காதிரண்டும்

கூர் ஆர்ந்த வாளால்—கூர்மை பொருந்திய கத்தியினால், கொடி மூக்கும் காது இரண்டும் — கொடிபோன்ற மூக்கையும் இரண்டு காதையும்,

---

(கூரார்ந்தவாளாலித்யாதி) தம்முடைய கையாலேயிறே தண்டிப்பது; "रामस्य दक्षिणो बाहुः" (ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:) தம்முடைய தோளாயிருக்கிற இளையபெருமாளை இடுவித்துத் தண்டிப்பித்தார். (கூரார்ந்தவாளால்) கூர்மைமிக்கிருக்கிற வாளாலே. முரட்டுடம்பிலே வ்யாபரியாநின்றால் ரக்தஸ்பர்சமில்லாதபடி வ்யா

---

(கூரார்ந்த வாளால் கொடிமூக்கும் காதிரண்டும் ஈராவிடுத்து) லக்ஷ்மணன் சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்ததாகச் சொல்லியிருக்க, இங்கு ராமபிரான் செய்ததாகச் சொல்லுவானேன்? எனில்: "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" [ரா ஆ34-13] [ராமனுடைய வலது கையாயிருப்பவன் லக்ஷ்மணன்] என்கிறபடியே லக்ஷ்மணன் இவருடைய கையாயிருப்பவனுகையாலே தன் கை செய்ததைத் தானே செய்ததாகச் சொல்லுவதில் தவறில்லையன்றோ.

"சூர்ப்பணகாவைச் செவியொடு மூக்கு அவள்
ஆர்ப்ப அரிந்தானைப் பாடிப்பற அயோத்திக்கரசனைப் பாடிப்பற"

"தங்கையை மூக்கும் தமயனைத் தலையும் தடிந்த எம் தாசரதி"
என்று பெரியாழ்வாரும்,

"...........மலைபோலுருவத்தொரி ராக்கதி மூக்கு
அரிந்திட்டவன் காண்மினின்றுய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே" என்றும்

"அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர்குலப்பாவைதன்னை
வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறம் கேட்கில்" என்றும்

இவ்வாழ்வாரே பெரியதிருமொழியிலும் அருளிச்செய்தனரன்றோ. (கூரார்ந்த வாளால்) கூர்மை மிகுந்திருக்கிற. வாளாலே சூர்ப்பணகையின் முரட்டு உடம்பிலே தொழில் புரியும்போது தீயதான அவளுடைய ரத்தம் தன் மேற்படாதபடி வெகு விரைவில் வேலை செய்யும்படி கூர்மை

ஈரா விடுத்தவட்கு மூத்தோனை வெந்நரகம் 40

ஈராவிடுத்து-அறுத்துத் துரத்திவிட்டு, அவட்கு மூத்தோனை—அவளுடைய தமயனான கரனை, வெம் நரகம்-இனிஇவன் வேறொரு கொடிய நரகம்போய்,

---

பரிக்கலாம் வாள். (கொடிமூக்குங்காதிரண்டு மீராவிடுத்து) பிராட்டியோடொப்பாக்கி அங்கவிசேஷங்களைப் பேணிவர அவற்றைப் போக்கிவிட்டார். (ஈராவிடுத்து) வாளின் கூர்மை சொல்லுகைக்காக "கூரார்ந்தவாள்" என்றது அங்கு; ஈர்ந்ததென்கையாலே ஈ நகைக் கரிதான உடம்பின் திண்மை சொல்லிற்றிங்கு. (ஈராவிடுத்து) பிறந்தகத்தில்நின்றும் புக்ககத்திற்கு வந்தாற்போலன்றியே புக்ககத்தில் நின்றும் பிறந்தகத்துக்குப் போம்போது ஓராதிக்யம் பண்ணிவிடவேணுமிறே. பெருமாளை ஆசைப்படச்செய்தேயும் பிராட்டிபக்கல் அபராதம் பண்ணுகையாலே விரூபையானாளிறே. ஆகையாலே இவ்விஷயத்திலே ஆசையுண்டானாலும் ததீயர் பக்கலிலே அபராதமுண்டானால் பலிக்கும்பலம், சூர்ப்பணகை பலமென்கை. இவளாசைப்பட்ட விஷயமிறே சிந்தயந்தியுமாசைப்

---

பட்டிருந்துள்ள வாள். (கொடி மூக்கும் காதிரண்டும் ஈராவிடுத்து) சீதைக்கு நேராவனென்று வந்தவளாகையாலே, காதையும், மூக்கையும் பிராட்டியினுடையவற்றைப்போலே மாயையாலே சீர்திருத்திக்கொண்டு வர, அஹங்காரஹேதுவான அவற்றை அறுத்து விட்டார். (ஈராவிடுத்து) அறுத்துத் துரத்திவிட்டு. "கூரார்ந்தவாள்" என்றவிடத்தில் வாளின் கூர்மைசொல்லிற்று; 'ஈரா' [அறுத்து] என்று இவ்விடத்தில் அறுக்க அரிதான உடம்பின் கடினத்தன்மை சொல்லுகிறது. (ஈராவிடுத்து) பிறந்த வீட்டிலிருந்து பெண்ணானவள் புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது போலன்றியே, புகுந்த வீட்டிலிருந்து பிறந்தவீடு செல்லும் போது அவளுக்கு ஒரு பெருமை செய்துவிடுவது உலகவழக்கன்றோ; அப்படியே இவளுக்கும் அங்கபங்கமாகிற பெருமையைச்செய்து அனுப்பினார்! ஸர்வலோகநாயகனான ஸ்ரீராமபிரானை ஆசைப்பட்டபோதிலும், பிராட்டியைப் பகைக்கையாலே அங்கமிழந்தாள். ஆகையாலே பகவத் விஷயத்திலே ஆசையுண்டானாலும், அவனடியார் திறத்து அபசாரமுண்டானால் சூர்ப்பணகைக்குப் பலித்த பலமே பலிக்கும் என்கை.

"காசிச்சாவஸதஸ்யாந்தே ஸ்தித்வா த்ருஷ்ட்வா பஹிர்குரும்।
தந்மயத்வேந கோவிந்தம் தத்யௌ மீலிதலோசநா॥

பட்டது. இப்படி அபராதமில்லாமையாலே அவள் பெற்றுப் போனளிறே. (விடுத்து) "तरुणौ रूपसंपन्नौ" (தருணௌ ரூப ஸம்பந்நௌ) என்று கரன்காலிலே விழும்படிபண்ணி. . .

(அவட்குமூத்தோனை) அநுகூலரானார்பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் ராகம் பலிக்குமாபோலே காணும், ப்ரதிகூலரானார் பக்கல் ஸம்பந்தி ஸம்பந்திகளளவும் த்வேஷம் பலிக்கும்படி. (வெங்

---

தச்சிந்தா விமலாஹ்லாத க்ஷீணபுண்யசயா ததா।
ததப்ராப்திமஹாது:க்கவிலீநாசேஷபாதகா॥
சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம்।
நிருச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா॥''

[வி-பு 5-3-20...22]

[(வேணுகானம் செவிப்பட்டவளவில்) வேறு ஒரு ஆய்ப்பாடிப்பெண் வீட்டுக்கு வெளியில் தந்தையைக் கண்டு, (பயத்தாலே) வாசலிலேயே நின்று, கண்களை மூடிக்கொண்டு கோவிந்தனைத் தன்மயமாகவே ஆகி தியானித்தாள். அந்த நேரத்திலேயே, பரமபுருஷனைப்பற்றிய நினைவிலு லுண்டான அழுக்கற்ற ஆனந்தத்தால் எல்லாப்புண்ணியக்குவியலையும் அனுபவித்துக் கழித்தவளாய், அவனை நேரில் கிடைக்கப்பெறாத பெருந் துக்கத்தாலே எல்லாப் பாபங்களும் (அனுபவத்தாலே) அழியப்பெற்ற வளாய், ஜகத்காரணனாய், பரப்ரஹ்மஸ்வரூபியான கண்ணனை நினைத்துக் கொண்டேயிருப்பவளாய், (இப்படி காரணமான புண்யபாபங்கள் போகப் பெறுகையாலே கார்யமான) மூச்சு அடங்கப்பெற்றவளாய் முக்தியை அடைந்தாள்.] என்றவிடத்திலே 'சிந்தயந்தீ' [கண்ணனை நினைத்துக் கொண்டேயிருப்பவள்] என்று பராசரரால் நிர்த்தேசிக்கப்பட்ட ஆய்ப் பெண்ணும், இந்த சூர்ப்பணகை ஆசைப்பட்ட பகவத்விஷயத்தையே ஆசைப்பட்டும், பாகவதாபசாரமில்லாமையாலே பெற்றுப்போந்தாளன்றோ. (விடுத்து) போகவிட்டு. "தருணௌ ரூபஸம்பந்நௌ" [ரா-ஆ 19-14] [ராம லக்ஷ்மணர்கள் வாலிபர்களாகவும், அழகு நிறைந்தவராயுமுள்ளனர்] என்று தொடங்கி இவர்களுடைய பெருமையைச் சொல்லிக்கொண்டு கரன்காலிலே விழும்படிசெய்து.

(அவட்கு மூத்தோனை) அன்புடையார் விஷயத்திலே, "கேசவன் தமர் கீழ்மேல் எமர் ஏழேழு பிறப்பும் மாசதிரிது பெற்று" [திருவாய் 2-7-1] என்கிறபடியே ஸம்பந்தி ஸம்பந்திகள் வரையில் அவனுடைய விருப்பம் வெள்ளமிடுவதுபோலே, அன்பிலாரிடம் அவனுடைய வெறுப்பும் ஸம்

சேராவகையே சிலைகுனித்தான் செந்துவர்வாய்

*சேரா வகையே சிலை குனித்தான்— (இதிலும்கொடிய) வேதனையநுபவிக்க முடியாது என்னும்படியாக ஸகல நரக வேதனைகளையும் தந்துகொண்டு வில்லை வளைத்துநின்றவன்; செம் துவர் வாய்—மிகவும் சிவந்த அதரத்தை யுடையவளும்,*

---

**நரகம் சேராவகையே சிலைகுனித்தான்) வளைந்த வில்லுங்கையுமாய் முஷ்டியிலேநின்ற பெருமாளைக்கண்ட கரன், "மேலேபோய் ஒரு நரகாநுபவம் பண்ணவேண்டா" என்னும்படி வயிறெரித்த லோடே எல்லாவநுபவமும் இங்கேயநுபவிக்கும்படி பண்ணினான். பூர்வாச்ரமத்திலே நஞ்சீயரெழுந்தருளியிருக்கச்செய்தே "பட்டர் திருமடலருளிச்செய்கிறபோது, பட்டர் இவ்விடத்துக்கு இவ் வார்த்தையருளிச்செய்தார்" என்று சொல்ல, "இவ்வார்த்தை**

---

பந்தி ஸம்பந்திகள் வரையிலும் செல்லுகிறது. (வெந்நரகம் சேராவகையே சிலைகுனித்தான்) "வளைந்த வில்லுங்கையுமாய் விற்பிடித்துநின்ற ராம பிரானைக்கண்ட கரன், அதிபயங்கரமான இக்காட்சியைக் கண்டபின்பும், வேறோர் நரகம் சென்று அனுபவிக்கவேண்டியதில்லை; இதைக்காட்டிலும் கொடிய நரகாநுபவமே இல்லை" என்று சொல்லும்படி, வயிற்றெரிச்ச லோடே எல்லா துக்காநுபவமும் இங்கே அநுபவிக்கும்படி பண்ணினான். மேல்நாட்டிலே நஞ்சீயர் க்ருஹஸ்தராய் எழுந்தருளியிருந்த காலத்தில், இவ்விடத்துக்குப் பொருளைப்பற்றி ஓர் விசாரம் வர, 'வெந்நகம் சேரா வகையே சிலைகுனித்தான்' என்றதற்கு 'நரகம் சொல்லாதபடி, வீர சுவர்க்கம் புகும்படி வில்வளைத்தான்' என்று சிலர் சொல்ல, "மத்த கத்துச் சீரார் திருவடியால் பாய்ந்தான்-தன் சீதைக்கு நேராவனென்றோர் நிசாசரிதான் வந்தாளைக் கூரார்ந்தவாளால் கொடிமூக்கும் காதிரண்டும் ஈராவிடுத்து அவட்குமூத்தோனை வெந்நரகம் சேராவகையே சிலைகுனித் தான் இராவணனை ஈரைந்து சீரார் சிரமறுத்துச் செற்றுகந்த" என்று அன்பிலார்க்குச் செய்த துன்பங்களை முன்னும் பின்னும் சொல்லும் ப்ரகரணத்திலே வீரசுவர்க்கம் புகுந்தான் என்பது பொருந்தாதாகையாலே, 'இவ்விடத்துக்கு பட்டர் எப்படி அருளிச்செய்வர்?' என்று அங்கிருந்த பட்டருடைய சிஷ்யர் ஒருவரை நஞ்சீயர் கேட்க, "பட்டர் திருமடல் அருளிச்செய்கிறபோது, இவ்விடத்துக்குப் பொருளாக, 'வில்லுங்கையுமாக ராமபிரான் நிற்கும் நிலையைக்கண்ட கரனுக்கு அதைக்காட்டிலும் கொடிய நரகாநுபவம் இல்லையென்னும்படி வில்வளைத்தான்' என்று அருளிச் செய்வர்" என்று அவர் சொல்ல, "இப்படிப்பட்ட சுவைமிக்க பொருளை

பருளிச்செய்தவரைக் காணவேணும்" என்று காணும் பட்டர் ஸ்ரீபாதத்தில் நஞ்சீயராச்ரயித்தது.

(செந்துவர்வாயித்யாதி) கரவதத்தினன்று, போய்ச்சொல்லு கைக்கு ஆளில்லாதபடி அகம்பநனொருவன் தப்பிப் பெண்ணுடை யுடுத்துப்போய் ராவணனுக்குப் பிறந்த வ்ருத்தாந்தத்தை அறி விக்க, அவன் மாரீசனையுங் கூட்டிக்கொண்டுவந்து பிராட்டியையும் பெருமாளையும் கடலுக்கு அக்கரையும் இக்கரையுமாக உடலையு முயிரையும் பிரித்தாற்போலே பிரிக்க, அதுவே ஹேதுவாக ராவணனை நிரஸித்தபடி சொல்லுகிறதுமேல்.

(செந்துவர்வாய்) "जगत्सशैलं परिवर्तयामि" (ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாமி) நாட்டுக்குத் தண்ணீர்ப்பந்தல்போலே ரக்ஷகராகக்

---

அருளிய பட்டரைக் காணவேணும்" என்னும் காதல் மிகுந்து காணும், நஞ்சீயர் பிறிதொரு காலத்தில் பட்டர் திருவடிகளிலே ஆச்ரயித்தருளினார்.

(செந்துவர்வாய்......இராவணனை ஈரைந்து சிரார் சிரமறுத்துச் செற் றுகந்த செங்கண்மால்) கரன் கொல்லப்பட்டவுடன், அந்த விருத்தாந் தத்தைச் சொல்லவும் வேறு ஆளில்லாதபடியாகி அகம்பனன் ஒருவனே தப்பிப்பிழைத்துப் பெண்ணுடையுடுத்துப்போய் ராவணனுக்கு நடந்த செய்தியை அறிவிக்க, அவன் மாரீசனையும் கூட்டிக்கொண்டுவந்து பிராட்டியையும் பெருமாளையும் கடலுக்கு அக்கரையிலும் இக்கரையிலு மிருக்கும்படி உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரிக்க, அதுவே காரணமாக ராவணனைக் கொன்ற விதத்தை விவரிக்கிறது இனி.

(செந்துவர்வாய்) மிகவும் சிவந்த வாயையுடையவள்.

"புரேவ மே சாருதத்தீமநிந்திதாம்
திசந்தி ஸீதாம் யதி நாத்ய மைதிலீம்।
ஸதேவகந்தர்வ மநுஷ்யபந்நகம்
ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்॥ [ரா-ஆ 64-78]

[முன்போலே அழகிய முறுவலையுடையவளும், குற்றமற்றவளுமான மிதிலாராஜகுமாரியான சீதையைக் கொணர்ந்து எனக்குக் காட்டவில்லை யாகில், தேவர், கந்தருவர், மனிதர், பாம்புகள் ஆகியவர்களோடு கூடிய மலைநிரம்பிய உலகை நான் தலை கீழாக்கிவிடுவேன்.] என்று

வாரார் வனமுலையாள் வைதேவி காரணமா 41
ஏரார் தடந்தோ ளிராவணனை ஈரைந்து
சீரார் சிரமறுத்துச் செற்றுகந்த செங்கண்மால் 42

*வார் ஆர் வனம் முலையாள்—கச்சு அணிந்த அழகிய முலையையுடையவளு மான, வைதேவி காரணம் ஆ—ஸீதாபிராட்டிக்காக, ஏர் ஆர் தடதோள் இராவணனை — அழகிய பெரிய புஜங்களையுடையவனை இராவணனை, சீர் ஆர் ஈரைந்து சிரம் அறுத்து செற்று—சிறந்த பத்துத் தலைகளையும் அறுத் துக் கொன்று, உகந்த-(முனிவர்களுடைய விரோதியை அழித்தோமென்று) திருவுள்ளமுகந்த, செம் கண் மால்—செந்தாமரைக்கண்ணன்,*

---

**கண்ட பெருமாள், "நாட்டையழிப்பன்" என்னப்பண்ணின முறுவ லிறே. "पुरेव मे चारुदतीमनिन्दितां" (புரேவ மே சாருததீமநிந்தித ம்) மானைக்கண்டபோது, "பெருமாளே! இம்மானைப் பிடித்துத் தர வேணும்" என்ற இரப்போடேகூடின முறுவலோடே காட்டார்க ளாகில், லோகத்தையெல்லாம் கூட்டிக் குலையாகவறுத்துப் போக விடுவனென்றாரிறே. (வாரார்வனமுலையாள்) "மலராள் தனத் துள்ளான்" என்று பெருமாள் கிடக்குமிடமிறே. (வைதேவி) "विदेहसुतां" (விதஹேஸுதாம்) என்று பெருமாள் வாய் புலற்றுங் குடிப்பிறப்பிறே. (காரணமா) அவள் ஹேதுவாக. (ஏரார் தடந்தோளிராவணனை) ஒன்றுக்கும் விக்ருதனாகாத**

---

உலகிற்கெல்லாம் ஒரு பொதுத்தண்ணீர்ப்பந்தல்போலே தாரகரான ராம பிரானையும் 'உலகையழிப்பேன்' என்று சொல்லும்படி செய்த முறுவ லன்றோ. (முன்போல் அழகிய முறுவலையுடையவளும், குற்றமற்றவளுமான சீதையை) பொன்மானைக்கண்டபோது, "பிரானே! இம்மானைப்பிடித்துத் தரவேணும்" என்று வார்த்தை சொன்ன போது இரப்போடு கூடிய முறுவலோடே கூடிய சீதையை என் முன்னே காட்டவில்லையாகில், உலகத்தையெல்லாம் ஒன்றாக வாழைக்குலையை அறுத்துத்தள்ளுவது போலே அழித்துத்தள்ளுவேன் என்றானன்றோ. (வாரார் வனமுலையாள்) "மலராள் தனத்துள்ளான்" [மூன்-திருவ-3] என்று ஸ்ரீராமபிரான் தங்கிக்கிடக்கும் இடமன்றோ. (வைதேவி) "விதேஹராஜகுமாரியை" [ரா- ] என்று ஸ்ரீராமபிரானும வாய்வெருவும் குடிப்பிறப்பை உடையவளன்றோ. (காரணமா) இப்படிப்பட்ட பெருமையையுடைய அவள் காரணமாக. (ஏரார் தடந்தோளிராவணனை). ராமபிரானையும் பிராட்டியையும் தவிர வேறொன்றையும் மதிக்காத அனுமனும்,

திருவடியும் "अहो रूपमहो धैर्यं" (அஹோரூபமஹோ தைர்யம்) என்று விக்ருதனும்படி வடிவுபடைத்தவனிறே ராவணன். (ஈரைந்து சீரார்சிரமறுத்து) பத்துத்தலையையும் ஒருகாலேயறுதே ஐயைந்தாகவறுத்து லீலைகொண்டாடினபடி. (சீரார்சிரமறுத்து) அறுப்புண்டு விழுகிற தலைகளும் "रञ्जनीयस्य विक्रमैः" (ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:) என்று பெருமாள் வீரப்பாட்டைக்கண்டு சிரித்துக்கொண்டு விழுகிறபடி. அறுப்புண்டு விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் இசிக்கக்கண்டு நிற்கிற தலைகள் "நாம் முற்பாடராகப் பெற்றிலோம்" என்றுசைப்படுகிறபடி. (செற்று) வந்தவனை

---

"அஹோ ரூபமஹோ தைர்யமஹோ ஸத்வமஹோத்யுதி: ।
அஹோ ராக்ஷஸராஜஸ்ய ஸர்வலக்ஷணயுக்ததா ॥"

[ரா-ஸு 49-17]

[இவனுடைய உருவமும், தைரியமும், பலமும், ஒளியும் என்ன ஆச்சரியம்! ராக்ஷஸராஜாவான இவன் எல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருக்கும்படியென்!] என்று மதிக்கும்படியான வடிவு படைத்தவனன்றோ ராவணன். அதைச் சொல்லுகிறது. (ஈரைந்து சீரார் சிரமறுத்து)பத்துத் தலையும் ஒரே சமயத்தில் அறுத்தால் தான் தலையறுப்புண்டு நிற்கும் வைபவத்தை அவன் காணமுடியாதன்றோ. ஆகையால் அப்பெருமையை அவனே கண்டு வயிறெரியும்படியாக ஐந்தைந்து தலைகளாக அறுத்து அதைக்கண்டு லீலாரஸமனுபவித்தபடியைச் சொல்லுகிறது. (சீரார் சிரமறுத்து) சீர்மைமிக்க தலைகளை அறுத்து. அறுப்புண்டதலைகளுக்குச் சீர்மையாவது:— அறுப்புண்டு விழும்போதும்,

"சத்ரோ: ப்ரக்யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" [ரா-யு 106-6]

[புகழ்பெற்ற வீரியத்தையுடையவனும், பராக்ரமச்செயல்களால் உகப்பிக்கத்தக்கவனுமான எதிரியான ராமபிரானுடைய] என்று ராமபிரானுடைய வீரத்தைக்கண்டு புகழ்ந்து சிரித்துக்கொண்டே விழுகை அவற்றுக்குச் சீர்மையாகிறது. அன்றிக்கே, அறுந்து விழுவதற்கு அஞ்சாமல், அதையே வீரத்திற்கு அறிகுறியாக நினைத்திருக்கையே இவற்றுக்குச் சீர்மையாகவுமாம். அதாவது:— அறுந்து விழுந்த தலைகளைக் கழுகும் பருந்தும் கொத்தித்தின்பதைக்கண்டும், அறுபடாமல் நிற்கிற தலைகள் 'நாம் முன்னதாக விழுந்து வீரப்பெயர்பெற்றிலோமே' என்று அறுந்து விழ ஆசைப்படுகை இத்தலைகளுக்குச் சீர்மை என்றபடி. (செற்று)

போரார் நெடுவேலோன் பொன்பெயரோ னாகத்தைக் 43

போர்ஆர் நெடுவேலோன் பொன் பெயரோன் ஆகத்தை— (எப்போதும்) யுத்தத்திலே பொருந்தியிருக்கிற நீண்ட வேலாயுதத்தை யுடையனான ஹிரண்யனுடைய உடலை,

---

ஓரம்பாலே கொல்லாதே சதுரங்கபலத்தைக்கொன்று குதிரைகளைக் கொன்று ஸாரதியைக்கொன்று தேரையழித்துக் கொடியையறுத்து தலையைச் சிரைத்துத் தோள்களைத் துணித்துத் தலைகளையறுத்து இவற்றையெல்லாங்கண்டு அவன் நெஞ்சாறல் படும்படிபண்ணி, பின்னையவனைக் கொன்றபடி. (உகந்த செங்கண்மால்) (உகந்த) "ருஷிகளுக்குக் களையறுக்கப் பெற்றோம்" என்றும், "ஸ்ரீவிபீஷணாழ்வான் தலையிலே அபிஷேகம் பண்ணப்பெற்றோம்" என்றும் உகந்த. (செங்கண்மால்) "ஆச்ரித விரோதிகளைப்போக்கி அவர்களுக்கு உகப்பாகப்பெற்றோம்" என்று வ்யாமோஹமும் வாத்ஸல்யமும் திருக்கண்ணிலே தோற்றினபடி.

---

சண்டை செய்யவந்தவனை ஓரம்பாலே கொன்றுவிடாமல், ரத கஜ துரக பதாதி (தேர் யானை குதிரை காலாள்) என்னும் நாலு அங்கங்களைக் கொண்ட ஸேனையை அழித்து, தேரில் கட்டிய குதிரைகளைக் கொன்று தேர்ப்பாகனைக் கொன்று, தேரையழித்து, கொடியை அறுத்து, தலையைச் சிரைத்தாற்போலே முடியைத்தள்ளி, தோள்களைத்துணித்து, தலைகளை அறுத்து, இவற்றை எல்லாம் கண்டு அவன் மனவேதனைப்படும்படி பண்ணி, பிறகு அவனைக் கொன்றபடி. (உகந்த செங்கண்மால்) (உகந்த) "ருஷிகளுக்கு விரோதியை அழிக்கப்பெற்றோம்" "ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முடிசூட்டப்பெற்றோம்" என்று மனமுவந்த. பிறர் காரியம் செய்து தானுவப்பவனன்றோ இவன்.

**"அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்।
க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ॥"** [ரா-பா-1]

[லங்கையில் விபீஷணனை ராக்ஷஸராஜாவாக அபிஷேம் செய்வித்து, ராமபிரான் தன் காரியத்தை முடித்தவனாய், கவலை நீங்கி, **உகந்தருளினான்.**] என்றாரன்றோ வால்மீகியும். (செங்கண்மால்) "அடியாருடைய எதிரிகளைப் போக்கி அவர்களை உகப்பித்தோம்" என்ற அன்பும், வாத்ஸல்யமும் திருக்கண்களிலே வெள்ளமிட்டபடி. அன்பும், வாத்ஸல்யமுமுடைய கண் சிவந்திருப்பது லோகப்ரஸித்தம். **மால்**—அன்புடையவன்.

(போரார் நெடுவேலோனித்யாதி) பிராட்டிக்காக அம்பேற்றபடி சொல்லிற்றுக்கீழ்; அப்படி க்ரமஞ்செய்யவொண்ணுதபடி ஆச்ரிதருடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தோற்றவேண்டி அதுக்கு உதவத்தோற்றின இரண்டு வடிவையொன்றாகத் தைத்துக்கொடு புறப்பட்டு அவன் விரோதியைப் போக்கினபடி சொல்லுகிறதுமேல். (போரார்) எதிரிகள் சரீரங்களிலே வ்யாபரித்துத் திரியுமத்தனை போக்கி ஓரிடத்திலேயிருக்க அவஸரமில்லை. நிணமும் சதையும் குடலும் சூழ்ந்து கழுகும் பருந்தும் பேயும் ஸேவிக்கத் திரியுமத்தனை போலேகாணும். (நெடுவேல்) "अवष्टभ्य महद्धनुः" (அவஷ்டப்ய மஹத்தநு:) என்னுமாபோலே இவனால் அடக்கிபாளவொண்ணுதாயிருந்தபடி. (வேலோன்) பட்டுக்கிடக்கும்போதும் பிடித்த வேல்விடாதே இதுவே தனக்கு நிரூபகமாயிருக்குமென்கை. (பொன்பெயரோன்

---

(போரார் நெடு வேலோன்......) கடைசி வரையில் ராவணனைத் திருத்தமுடியுமோ என்று பரீக்ஷித்துக் கடைசியில் பிராட்டிக்காகத் திருமார்விலே அம்பேற்றுப் போர்புரிந்து ராவணனைக் கொன்றதைச் சொல்லிற்று கீழே. அப்படி பொறுத்திருந்து காரியம் செய்யமுடியாதபடியாய், 'தூணிலுமிருக்கிறான்' என்று ப்ரஹ்லாதன் பிரதிஜ்ஞை செய்தவுடன் தோற்றவேண்டிய நிர்ப்பந்தத்தையுடையதாய், அதற்குத் தகுந்ததாகத்தோற்றிய நரவுருவம் சிங்கவுருவமாகிய இரண்டையும் தைத்துக் கொண்டு தூணிலே தோற்றி அடியானான ப்ரஹ்லாதனுடைய விரோதியைப்போக்கினபடியைச் சொல்லுகிறது இனிமேல். (போரார் வேல்) போரிலே பொருந்தியிருக்கும் வேல். எதிரிகள் உடம்பைப் புண்படுத்தித் திரிவதே தொழிலாயிருக்குமேயொழிய, இவ்வேலுக்கு ஆயுதசாலையிலே ஓய்வுகொள்ள நேரமில்லை. நிணமும், சதையும், குடலும் சூழப்பெற்று மாம்ஸபக்ஷிகளான கழுகும் பருந்தும் பேயும் தன்னைச் சுற்றி வரத் திரிந்து கொண்டேயிருக்கும்போலேகாணும் இவ்வேல். (நெடுவேல்) "ஆலிகந்தமிவாகாச மவஷ்ப்யமஹத் தநு:" [ரா-யு 100-12] [ஆகாயத்தை அளாவி நிற்பதுபோன்ற பெரியவில்லை அமுக்கிப்பிடித்துக்கொண்டு (நிற்கும் ராமபிரானை)] என்று சொல்லப்படும் சார்ங்கவில்லைப்போலே, எதிரிகள் மேல் ஏவிவிட்டால் பிறகு இவ்விரணியனாலும் அடக்கமுடியாததாயிருக்கை வேலுக்கு நெடுமையாவது. (வேலோன்) வேலையுடையவன்; இறந்து கிடக்கும்போதும் பிடித்த வேலைவிடாமல் வேலே தனக்கு நிரூபகமாம்படி விழுந்து கிடந்தானென்று கருத்து. (பொன்பெயரோன்)

கூரார்ந்த வள்ளுகிராற் கீண்டு குடல்மாலே 43
சீரார் திருமார்பின் மேற்கட்டிச் செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள்கொட்டி 44

கூர் ஆர்ந்த வள் உகிரால் கீண்டு—கூர்மை மிக்க நெருங்கின திருநகங்களாலே பிளந்து, குடல்—அவ்வசுரனுடைய குடலை (பிடுங்கியெடுத்து), சீர் ஆர் திருமார்பின் மேல் மாலை கட்டி—வீரலக்ஷ்மிக்கு இருப்பிடமான மார்பிலே வெற்றிமாலையாக அணிந்து கொண்டு, செம் குருதி சோரா கிடந்தானை—சிவந்த ரத்தவெள்ளம் பெருகக்கிடந்த அவ்வசுரனை, குங்குமம் தோள் கொட்டி—குங்குமத்தாலே அலங்கரிக்கப்பட்டுள்ள தனது திருத்தோளின்மேல் அறைந்துகொண்டு,

---

ஹிரண்யனென்றிறே பெபர். (ஆகத்தை) திருவுகிருக்கிரைபோரும்படி, காட்டில் பன்றிகளையூட்டியிட்டு வளர்ப்பாரைப்போலே ப்ரஹ்மாதிகள் வரங்களாலே பூண்கட்டினமார்விறே.

(கூரார்ந்த வள்ளுகிரால்) கூர்மைமிக்குச் செறிந்தவுகிர். பிராட்டிமாரோடே பரிமாறும்போது அவர்களும் கூசும்படியான ஸௌகுமார்யத்தையும் சத்ருக்களோடே பரிமாறும்போது அவர்களையழியச் செய்யவேண்டும் திண்மையையுமுடையனாயிருக்குமா

---

பொன்னுக்குப் பர்யாயம் (மற்றொரு பெயர்) ஆன ஹிரண்யநாமத்தை உடையவனன்றோ இவன். (ஆகத்தை) மார்பகத்தை; நரசிங்கனுடைய திருநகத்துக்கு இரைபோந்திருக்கும்படி, காட்டில் வேட்டையாடுவதற்காகப் பன்றிகளை இரையூட்டி வளர்ப்பாரைப்போலே, ப்ரஹ்மாதிகள் வரபலத்தாலே திண்மை பெறச்செய்துவைத்த மார்பன்றோ.

(கூரார்ந்த வள்ளுகிரால்) கூர்மைமிகுந்து நெருங்கியிருக்கும் திருநகங்களால். வள்ளுகிர்-நெருங்கிய நகம். அன்றிக்கே, வள்ளுகிர்-வண்மைமிக்க நகம். அதாவது,— பிராட்டிமாரோடே பரிமாறும்போது அவர்களும் 'திருமேனி கன்றிவிடுமோ' என்று பயப்படும்படியான திருமேனியின் மென்மையையும், எதிரிகளோடே போர் புரியும்போது அவர்களை அழியச்செய்ய வேண்டும் பலத்தையும் உடையவனாயிருப்பதுபோலே, இவையும் இரணியன் முதலானோருக்குக் கூர்மையான ஆயுதமாகவும், பிராட்டிமார் தொடக்கமான அனுகூலர்க்கு வண்மைமிக்க போக்யப்பொருளாகவுமாகின்றன. "சந்த்ரபாஸ்கரவர்ச்சஸம்" "கதிர்மதியம் போல்முகத்தான்" "முளைக்கதிரை" என்கிறபடியே அநுகூலர்க்கு ஒருபடியாகவும், ப்ரதி

போலே இவற்றுக்கும் இரண்டு புடை உண்டு போலே காணும். (கீண்டு) நரஸிம்ஹத்தின தோற்றரவிலே சீற்றத்தைக்கண்டு பையல் உடம்பு வெதும்பி, பொசுக்கின பன்றிபோலே பதஞ் செய்ய அநாயாஸேந கிழித்தபடி. (குடல்மாலை சீரார் திருமார்வின் மேற்கட்டி) சீற்றத்தின் மிகுதியாலே குடலைப் பறித்துத் திருமார்பிலே கட்டிக்கொண்டானாயிற்று. அதாவது-விஜயஸ்ரீ விளங்குகிற திருமார்விலே அதுக்கு மாலையிட்டபடி. பிராட்டியிருக்கிற திருமார்விலேகாணும் கட்டிற்று. ஆச்ரித விஷயத்தில் இத்தனை சீற்றமிவனுக்கில்லையாகில் அவள் அணையாளிறே. (செங்குருதி சோராக்கிடந்தானைக் குங்குமத்தோள்கொட்டி) ரக்தவெள்ளங் கொழிக்கும்படி கிழித்து, அவனைப் பிராட்டிமாரோடே கலக்கைக்கு அலங்கரித்த திருதோளின்மேலே சீற்றத்தின் மிகுதியாலேயெடுத்து அறைந்துகொண்டானாயிற்று. [செங்குருதி சோராக்கிடந்தானை-கூரார்ந்த வள்ளுகிரால்கீண்டு குடல்மாலை சீரார் திருமார்வின்மேல்கட்டி குங்குமத்தோள்கொட்டி ஆராவெழுந்தான்]

---

கூலர்க்கு வேறுபடியாகவுமிருப்பவையன்றோ இவனுடைய திருமேனி, அவயவங்கள், ஆயுதங்கள் முதலானவை. (கீண்டு) நரசிங்கத்துக்குத் தோன்றியவுடனுண்டான சீற்றத்தைக்கண்டு இரணியன் உடம்பு வாட்டமடைந்து, தீயில் வாட்டப்பெற்ற பன்றிபோலே பதமாயிருக்க, சிரமமில்லாமல் கிழித்தபடி. (குடல்மாலை சீரார் திருமார்வின் மேற்கட்டி) கோபத்தின் மிகுதியாலே, குடலைப்பிடுங்கித் திருமார்வின்மேலே கட்டிக் கொண்டாருயிற்று நரசிங்கன். அதாவது "சீரார்திருமார்வு" என்று விஜயலக்ஷ்மி தாண்டவமாடும் திருமார்விலே குடல்மாலையை வெற்றி மாலையாகச் சூடினபடி. சீர்ஆர்—விஜயலக்ஷ்மி விளங்கும். அன்றிக்கே, பெரிய பிராட்டியாராகிய ஸ்ரீதேவி எழுந்தருளியிருக்கும் மார்விலேயன்றோ இக்குடல்மாலையையிட்டான் என்றும் கொள்ளலாம். அடியார்க்கு விரோதிகள் விஷயத்தில் இத்தனை கோபம் இவனுக்கு இல்லையாகில் வீரபத்னியான அவள் இவனோடு அணையமாட்டாளன்றோ; அத்தாலே குடல்மாலையிட்டுக்கொண்டான் என்கை. (செங்குருதி சோராக்கிடந் தானைக் குங்குமத்தோள் கொட்டி) ரத்தவெள்ளம் பாயும்படி கிழிக்கப் பெற்றுக்கிடந்த அவனை, பிராட்டிமாரோடு அணைவதற்காகக் குங்குமத் தாலே அலங்கரிக்கப்பெற்ற தோள்களிலே அறைந்து கொண்டாருயிற்று. [செங்குருதி சோராக்கிடந்தானை-கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு குடல்மாலை சீரார் திருமார்வின் மேற்கட்டி-குங்குமத்தோள் கொட்டி ஆராவெழுந்தான்]

ஆரா வெழுந்தா னரியுருவாய் அன்றியும்
பேர்வாம ஞகிய காலத்து மூவடிமண் 45
தாரா யெனக்கென்று வேண்டிச் சலத்தினல்

ஆரா எழுந்தான்—ஆரவாரஞ் செய்துகொண்டு எழுந்தவன்; அன்றியும்—அது தவிரவும், பேர் வாமன் ஆகிய காலத்து—மிகச்சிறிய வாமனனைத் திருவவதரித்த காலத்தில், மாவலியை—மஹாபலியினிடத்து, மூ அடி மண் எனக்கு தாராய் என்று வேண்டி — 'மூவடி நிலம் எனக்குக் கொடு' என்று யாசித்து, நீர் ஏற்று—அவன் தாரை வார்த்து தத்தம்பண்ண அதனைப் பெற்று, சலத்தினல்—சிறிய அடியைக் காட்டிப் பெரிய அடியாலே அளப்பதாகிய வஞ்சனையினலே,

---

என்றந்வயம். ஆர்ப்பதுஞ் செய்தான்,—கிளருவதுஞ் செய்தான். (ஆராவெழுந்தானரியுருவாய்)"**अवाक्यनादरः**"(அவாக்யநாதர:) என்று எதிர்த்தலையில்லாமையாலே வார்த்தை சொல்லானென்று ப்ரஸித்தனயிருக்கிறவன் "ஆச்ரித விரோதியைப் போக்கப்பெற்றோம்" என்னும் ஹர்ஷத்தாலே ஆர்த்துக்கொண்டான்.

(அன்றியுமித்யாதி) இப்படியழியச்செய்யவேண்டும் ப்ராதிகூல்யமேயன்றியே, ஆநுகூல்யலவமுடையவனயிருக்குமிறே மஹாபலி; அதாவது - ஔதார்யகுணமென்பதொன்றுடையனகை யால் அவனைச் சடக்கென அழியச்செய்யவொண்ணமையாலும், தேவர்களுக்காக அவனையழியச்செய்யவேண்டுகையாலும், "அவன்

---

என்று அந்வயம். (ஆரா எழுந்தான்) ஆர்த்து எழுந்தான்; சப்தம்செய்து கொண்டு கிளர்ந்தெழுந்தான். (ஆராவெழுந்தான் அரியுருவாய்) "அவாக்ய நாதர:" [சாந் 3-14] [வார்த்தை சொல்லாதவன்; ஆதரவில்லாதவன்] என்று தான் வார்த்தை சொல்லத்தக்கவர் ஒருவருமில்லாமையால் எவரிடமும் வார்த்தை சொல்லாதவனென்று பிரஸித்தனயிருக்கிறவன் "அடியாருடைய எதிரியைப் போக்கப்பெற்றோம்" என்னும் ஆநந்தத்தாலே சப்தம் செய்தான்.

(அன்றியும்...) இரணியனைப்போலேதீமையேயுடையனயினும் அழித்து விடலாம்; அப்படியல்லாமல் சிறிது நன்மையையும் உடையவனயிருப்ப னன்றே மாவலி; ஆகையால் அவனை வெல்லுவது கடினமன்றே. அப்படிப்பட்டவனையும் வென்றபடியைச் சொல்லுகிறது இனிமேல். அதாவது:—வண்மைக்குணம் என்னும் நற்குணமொன்றை உடையவனயிருப்பா னன்றே மாவலி; ஆகையால் அவனை இரணியனைப்போலே விரைவில் அழித்துவிடமுடியாது; தேவர்களுக்காக அவனை வெற்றிகொண்டேயாக

கொடுக்கஉகப்பன்" என்னுமத்தை நினைத்துத் தன்னையிரப்பாளனுக்கி அவன்பக்கலிலே சென்று நீரேற்று பூமியைவாங்கி இந்த்ரனுக்குக் கொடுத்தபடி சொல்லுகிறது.

(அன்றியும் பேர்வாமனாகிய காலத்து) நாட்டில் வாமநர்களெல்லாம் வளர்ந்தருளினவிடமென்னலாம்படி சிறுத்திருக்குமென்னுதல், வடிவேயன்றியே பேரும் வாமநனாகிய காலம். (மூவடிமண் தாராய்) "மஹாபலீ! எனக்கு மூவடிமண் தரவேணும்" என்றான். அவனும் "தருகிறோம்" என்றான்; "அங்ஙனாகவொண்ணாது (தாராய்)" என்றான் § வளைப்பாரைப்போலே. (எனக்கென்று) ஒன்றையும் "எனக்கு" என்னாதவன் காணும், "எனக்கு" என்றான், பரார்த்தமாகையாலே. (வேண்டிச் சலத்தினால் நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை) வேண்டிக் கையிலே நீர்

---

வேண்டும்; ஆகையால் 'அவன் கொடுப்பதிலே ஸந்தோஷமடைவான்" என்னும் குணத்தை நினைத்து, அதற்குத் தக்கவாறு தன்னை யாசகனாக்கிக் கொண்டு அவனிடம் சென்று தானே நீரேற்று பூமியை வாங்கி இந்திரனுக்குக் கொடுத்தபடியைச் சொல்லுகிறது.

(அன்றியும்பேர் வாமனாகிய காலத்து) பேர் வாமனன்-பெருவாமனன்; உலகத்திலுள்ள மற்ற வாமனர்களெல்லாம் நெட்டையானவர்கள் என்னும்படி அவ்வளவு குட்டையாயிருப்பவனென்கை. அன்றிக்கே, வடிவில் குட்டையாயிருப்பவர்களெல்லாம் குட்டையனென்று பெயர் வைத்துக் கொள்வதில்லையே; இவன் அப்படியல்லாமல், வடிவில் குட்டையாயிருப்பதோடு 'வாமனன்' [குட்டையன்] என்னும் பெயரையும் உடையவனாயிருந்தான் என்கை. (காலத்து) உயர்ந்தவன் தாழநின்ற இதுவும் ஒரு காலமே! என்கை. (மூவடிமண் தாராய்) "மாவலீ! எனக்கு மூவடிமண் தரவேணும்" என்றான் வாமனன்; அவனும் 'தருகிறோம்' என்றான்; "'தருகிறோம்' என்று போக்குக் காட்டினால் போதாது; இப்போதே தரவேணும்" என்றான் § மலையாளத்தில் வளைப்பாரைப்போலே. (எனக்கென்று) ஒன்றையும் 'எனக்கு' என்னாமல், 'பக்தாநாம்' [பக்தர்களுக்கு] என்று இருப்பவன்காணும் 'எனக்கு' என்கிறான் பிறர்க்காக யாசிக்கையாலே. (வேண்டிச் சலத்தினால் நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை)

---

§ கொடுத்த கடனைக் காலத்தில் தராமல் திரியுமவன் முன் கடன் கொடுத்தவன் கோடு கிழித்தால், கடனைக்கொடுத்தே அக்கோட்டைத் தாண்டிப்போகவேணும் என்னும் மலையாள தேச வழக்கு வளைப்பெனப்படும்.

நீரேற் றுலகெல்லாம் நின்றளந்தான் மாவலியை 46
ஆராத போரி லசுரர்களுந் தானுமாய்க்
காரார் வரைநட்டு நாகங் கயிறுகப் 47
பேராமல் தாங்கிக் கடைந்தான் திருத்துழாய்த்

*நின்று—நிமிர்ந்து, உலகு எல்லாம் அளந்தான்—லோகங்களை யெல்லாம் அளந்து வசப்படுத்திக் கொண்டவன்; ஆராத போரில்—முடியமாட்டாத தேவாஸுர யுத்தத்திலே, அசுரர்களும் தானும் ஆய் — அஸுரர்களும் தானுமாக, கார் ஆர் வரை நட்டு — மேகம் படிந்த மந்தரமலையைக் கொண்டுவந்து (மத்தாக) நாட்டி, நாகம் கயிறு ஆக—வாசுகி நாகத்தைக் கடை கயிறுகச்சுற்றி, பேராமல் தாங்கி—அம்மலையானது மேலும், கீழும், பக்கவாட்டிலும் ஆடாதபடி தாங்கிக்கொண்டு, திரு துழாய் தார் ஆர்ந்த மார்வன் கடைந்தான்—திருத்துழாய் மாலையணிந்த திருமார்பையுடையனாய்க்கொண்டு கடைந்தவன்;*

---

**விழுந்தவாறே சிறுகாலைக் காட்டிப் பெரிய காலாலே லோகமுடைய அளந்துகொண்டான். [மாவலியை மூவடி மண் தாராயெனக்கென்று வேண்டிச்சலத்தினால் நீரேற்றுலகெல்லாம் நின்றளந்தான்] என்று அந்வயம்.**

**(ஆராதபோரிலித்யாதி) தேவர்களும் அஸுரர்களுமாய்க் கடலைக்கடையப்புக்குமாட்டாதேதான் கடலைக்கடைந்தபடி சொல்லுகிறது. (ஆராதபோரில்) இவர்களுக்காராதே இருக்குமென்னுதல்;**

---

"எனக்கு மூவடி மண்தா" என்று யாசித்துக் கையிலே தானநீர் விழுந்தவுடன், நெடியவனாய் வளர்ந்து, சிறியகாலைக்காட்டி யாசித்துப் பெரியகாலாலே அளந்துகொள்ளுகையாகிற வஞ்சனையாலே உலகமெல்லாம் அளந்துகொண்டான். [மாவலியை மூவடிமண் தாராயெனக்கென்று வேண்டிச் சலத்தினால் நீரேற்று உலகெல்லாம் நின்றளந்தான்] என்று அந்வயம்.

(ஆராதபோரில்......) தேவர்களும் அசுரர்களுமாகக் கடலைக் கடையப் புகுந்து, கடையமுடியாமலிருக்கும்போது தான் கடல் கடைந்தபடியைச் சொல்லுகிறது. (ஆராதபோரில்) நிறைவேற்றமுடியாத (கடைகிற) செயலில். போர்—வ்யாபாரம், செயல். கடைகிறதாகிற செயலை தேவாசுரர்கள் நிறைவேற்ற முடியாமலிருந்தபோது. **ஆராத**—நிறைவேற்ற முடியாத. அன்றிக்கே, ஆராமை-திருப்திபிறவாமையாய், ஆச்ரிதர்க்காக எத்தனை செய்தாலும், 'நின்னடியார்க்கென் செய்வனென்றேயிருத்தி நீ' என்கிறபடியே திருப்திபிறவாமலிருப்பவனாகையாலே தனக்குத் திருப்தி

தனக்காராமெயிருக்குமென்னுதல். (அசுரர்களும் தானுமாய்) தேவர்களும் அஸுரர்களுமாய் என்னவேண்டியிருக்க, எதிர்த்தலையான அஸுரர்களைச்சொல்லி, பின்னைத் தன்னைச் சொல்லுவானென்னென்னில், ஆநுகூல்யலவமுடையார், "தான்" என்னுஞ் சொல்லுக்குள்ளே அடங்குகையாலே தன்னைச்சொல்லிற்று. (காரார் வரை நட்டு) மந்தரத்தில் படிந்த மேகம் அலசாதபடி கொடுவந்து நாட்டின நொய்ப்பமிருந்தபடி. (நாகம் கயிறாக) சேதநனிறே; மலையிலே சுற்றிக் கடையாநின்றால் தனக்கு அது வ்யஸநமாயிராதே, இவன் கரஸ்பர்சத்தாலே வந்த ஸுகத்துக்கு அந்த வ்யாபாரத்தாலே போக்குவிட்டிலனாகில் அவனாலிது உண்டறுக்கவொண்ணாதபடி இருக்குமிறே. (பேராமல் தாங்கிக்கடைந்தான்) கீழுடையாமே மேல் கொந்தளியாமே பக்கத்தில் சாயாமே கடைந்தபடி. (திருத்துழாய் தாரார்ந்தமார்வன்) கடலைக்கடைகிற போது தோளுந் தோள்மாலையுமாய் நின்று கடைந்தபடி.

---

பிறவாத கடைகிற செயலிலே என்றும் பொருள் கொள்ளலாம். (அசுரர் களும் தானுமாய்) தேவர்களும் அஸுரர்களுமாய் என்று சொல்ல வேண்டியிருக்க, எதிரிகளான அசுரர்களைச் சொல்லி, பின்னர் தன்னைச் சொல்லக் காரணமென்? என்னில்: சிறிது ஆனுகூல்யமுடையவர்களான தேவர்களையும் தானாக அபிமானித்திருக்கையாலே 'தானுமாய்' என்கிறது. (காரார் வரைநட்டு) மேகம் படிந்த மந்தரமலையை மத்தாக நாட்டி. மலையில் படிந்த மேகம் கலையாதபடி கொண்டுவந்து நாட்டின திறமையிருக்கும்படி. (நாகம் கயிறாக)நாகம்—பாம்பு; கம்—ஸுகம்; அகம்—துக்கம்; நாகம்—சிறந்த ஸுகம். நாகப்பாம்பு சேதனனாகையாலே மலையிலே சுற்றிக் கடைந்தால் அது துன்பமாயிருக்கும் என்றே தோற்றும் நமக்கு. உண்மையில் இப்பரமபுருஷனுடைய கை தொட்டதாலே மிகப்பெரிய ஸுகத்தை அனுபவித்து அந்த ஸுகத்துக்குப் போக்கு விடவில்லையாகில் தரிக்கமாட்டாமையாலே, கடைகயிறின் செயலைச்செய்வதன் மூலம் போக்கு விட்டு தரித்தான் என்று கருத்து. (பேராமல் தாங்கிக் கடைந்தான்) கீழே அமுங்காமல் ஆமையாய் நின்றும், மேலே கிளம்பாமல் மேலே ஒருருக்கொண்டு அமுக்கிப்பிடித்துக்கொண்டும், இருபுறமும் இரண்டு உருக்களை எடுத்துக்கொண்டு லாகவமாகக் கடைவதன் மூலம் பக்கங்களில் ஆடாமலும் தாங்கிநின்று கடைந்தான். (திருத்துழாய் தாரார்ந்த மார்வன்) கடலைக்கடையும் போது தோளும், தோள்மாலையுமாய், மாலையிலிருந்து ஒரு இதழும் உதிராதபடி நின்று அநாயாஸமாகக் கடைந்தபடி.

தாரார்ந்த மார்வன் தடமால் வரைபோலும் 48
போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்றலறி

*தடம் மால் வரைபோலும் போர் ஆனை—மிகப்பெரிய மலைபோன்ற மதங் கொண்ட யானை, பொய்கை வாய்:கோள் பட்டு நின்று அலறி—நீர் நிலத் திலே முதலையின் வாயிலகப்பட்டு நின்று வருந்தி,*

---

**(தடமால் வரையித்யாதி) ப்ரயோஜநாந்தரபரர் கார்யஞ்செய்த படி சொல்லிற்றுக்கீழ்; அநந்ய ப்ரயோஜநனான ஸ்ரீகஜேந்த்ராழ் வான் முதலையின் கையிலே அகப்பட, அவனகப்பட்டமடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலையவந்து விழுந்து அவன் விரோதியைப்போக்கி அவனபிமதஞ்செய்து கொடுத்தபடி சொல்லு கிறதுமேல். (தடமால் வரைபோலும்) "தடம்" என்றும் "மால்" என்றும் சொல்லுகையாலே, பருத்து உயர்ந்த மலைபோலே யிருக் கிறவன். இப்பெருமை சொல்லுகிறதிங்கென்னென்னில்; பெரியது நோவுபட்டாலாற்றமாட்டாதென்கைக்காக. (போரானை) யுத்தோந் முகனாய்த்திரிகிறானன்றிறே; செருக்காலே மலைகளோடே பொருது திரிகிறபடி.**

---

(தடமால் வரைபோலும்...) மற்ற பயன்களை விரும்புமவர்களான தேவர்கள் காரியத்தைச் செய்தபடி சொல்லிற்றுக்கீழே. தன்னையே பயனாகக்கொண்ட ஸ்ரீகஜேந்திராழ்வான் முதலையினிடத்திலே அகப்பட, அவன் அகப்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து விழுந்து, அவனுடைய விரோதியான முதலையைப்போக்கி, அவனுக்குப் பிரியமான கைங்கர்யத்தைக்கொண்டு தன்னைக் கொடுத்தபடியைச் சொல்லுகிறது மேல். (தடமால் வரைபோலும் போரானை) தடமால் வரை-பருத்து உயர்ந்த மலை. அதுபோல் ஆனையென்கிறது. இவ்வுடம்புப் பெருமை இங்கு எதற்காகச் சொல்லுகிறது என்னில்: விரலுக்குத் தகுந்த வீக்கமாகையாலே, பெரியவுடம்பைக் கொண்ட யானையின் நோவு மிகப் பெரிதாயிருக்கும் என்று காட்டுவதற்காகச் சொல்லுகிறது. (போரானை) போர்புரியும் யானை. ஸாத்விகனான இக்கஜேந்திரன் பிறருடன் வலிந்து போர்செய்து திரிகிறான் என்று பொருள் சொல்லமுடியாது; ஜாத்யுசித மாக, மதச்செருக்காலே மலைகளை முட்டிக்கொண்டு திரிகையாகிற போரைச்சொல்லுகிறது.

**நீரார் மலர்க்கமலங் கொண்டோர் நெடுங்கையால் 49**
**நாரா யணாஓ! மணிவண்ணா நாகணையாய்!**

*ஓர் நெடு கையால் நீர் ஆர் கமலம் மலர் கொண்டு—நீண்ட ஒரு துதிக்கையினால் அப்போதலர்ந்த தாமரைப் பூக்களை எடுத்துக்கொண்டு, ஓ நாராயணா! மணி வண்ணா நாக அணையாய்—"நாராயணனே! நீலமணி வண்ணனே! அநந்தசயனனே!*

---

(பொய்கைவாய்) வெளிநிலமாகில் எதிரிகளைத் துணிக்குமிறே, தன்னிலமல்லாத நீர்நிலத்திலே. (கோட்பட்டு)சத்ருவான முதலையின் கையிலே அகப்பட்டு. (நின்று) அவன் நீருக்கிழுக்க இவன் கரைக்கிழுக்க, சில நாளெல்லாஞ்சென்று முதலையின் வ்யாபாரமேயாய்த் தன் வ்யாபாரமற்று நின்றபடி. (நீரார்மலர்க் கமலங்கொண்டோர் நெடுங்கையால்) செவ்வி மாறாத தாமரைப்பூவைப்பிடித்த கையத்தனையுமொழிய நீரிலே யழுந்தினானாயிற்று. (நாராயணா ஓ) / ஸர்வஸ்வாமியானவனே! என்றபடி. (மணிவண்ணா) விடாய்த்

---

(பொய்கைவாய்) வெளிநிலமாகில் எதிரிகளை அழித்துவிடக்கூடிய வலிமை பெற்றதாயிற்றே. தன் நிலமல்லாத நீர் நிலமாகையாலும், எதிரியான முதலைக்குத்தன் நிலமாகையாலும் நலிவுபட்டது. (கோட்பட்டு) எதிரியான முதலையின் கையிலே அகப்பட்டு. (நின்று) அந்த முதலை நீரைநோக்கியிழுக்க இக்கஜேந்திரன் கரையை நோக்கியிழுக்க இப்படி சிலகாலம் கழிந்தபிறகு முதலையின் செயலேயாய், தன் சக்தியெல்லாம் ஓய்ந்து செயலற்று நின்றபடி. (நீரார்மலர்க்கமலம் கொண்டோர் நெடுங்கையால்) மலர்த்தி மாறாத தாமரைப்பூவை எம்பெருமானுக்காகப் பிடித்த துதிக்கையையொழிய மற்றெல்லாவுடம்பும் நீரிலே அழுந்தப்பெற்றான். (நீரார் மலர்கமலம்) பறித்து நெடுநேரமானபின்பும். எம்பெருமானுக்காகப் பறித்ததாகையாலே நீரிலேயே நின்றதுபோலே மலர்ந்து விளங்கிற்று. (நாராயணாஓ) நரஸமூஹங்களான நாரங்களுக்கெல்லாம் ப்ராப்ய ப்ராபகமானவனே! நரஸமூஹத்தில் நான் சேர்ந்தவனல்லேனோ? என்னை ரக்ஷிக்காவிடில் உன் நாராயணத்வம் ஸித்திக்க வழியுண்டோ?' 'முதலையை அழித்து ப்ராணபத்தைப் போக்கவேண்டுமென்றோ நீ விரும்புவது?'' என்னில்: (மணிவண்ணா) உன் நீலமணி போன்ற மேனியைக் காணவன்றோ

---

/ எந்தாய்! என்றான் என்று க்வசிததிக பாடம்.

சி—13

**வாராய் என்னுரிடரை நீக்கா யெனவெகுண்டு** 50
**தீராத சீற்றத்தாற் சென்றிரண்டு கூருக**

*வாராய் என் ஆர் இடரை நீக்காய் என — "வந்தருளவேணும்; எனது பெருந்துக்கத்தைப் போக்கியருளவேணும்" என்று கூவ, (அக்கூக்குரலைக் கேட்டு) வெகுண்டு—(முதலையின் மேல்) கோபித்து, தீராத சீற்றத்தால் சென்று — அடங்காத அக்கோபத்தோடே (பொய்கைக் கரைக்கு) எழுந்தருளி, இரண்டு கூறு ஆக—இருதுண்டமாகப்,*

---

*தார்க்குத் தண்ணீர் வார்க்குமவனன்றோ நீ. இவ்வடிவை யாசைப்பட்டார்க்குக் காட்டுமவனன்றோ நீ யென்கை. (நாகணையாய்) உன்னுடம்பை யாசைப்பட்டார்க்குக் கொடுக்குமவனல்லேயோ நீயென்றான். (வாராய்) என்னுடைய ஆர்த்தி தீரும்படி அழகிய வடிவைப் பாரித்துக்கொண்டு இங்ஙனே எழுந்தருளவேணும். (என் ஆரிடரை நீக்காய்) இப்போதிவன் "ஆரிடர்" என்கிறது-து:க்க நிவ்ருத்தியைப் பண்ணாய் என்கிறானல்லன்: இப்பூ செவ்விமாறுங் காட்டில் திருவடிகளிலே இடுவித்துக்கொள்ளாயென்றபடி.*

---

நான் ஆசைப்பட்டிருப்பது. தாபத்ரயங்களால் தாஹமெடுத்துத் தவிப் பார்க்குத் தண்ணீர்போன்ற திருமேனியை தானம் செய்பவனன்றோ நீ! "பக்தாநாம்" [ஜிதந்தே] [பக்தர்களுக்கே உன் ஸ்வரூபரூபாதிகள்] என்கிற படியே வடிவை ஆசைப்பட்டார்க்குக் காட்டுமவனன்றோ நீ; அப்படி யிருக்க எனக்குக் காட்டாமல் ஒளிக்கலாமோ? (நாகணையாய்) உன் னுடம்பை ஸர்வகாலமும் அனுபவிக்க ஆசைப்பட்டிருக்கும் திருவனந் தாழ்வானுக்கு உடம்பு கொடுப்பவனுயிற்றே நீ. (வாராய்) என்னுடைய வருத்தமெல்லாம் தீரும்படி அழகிய வடிவைப் பேணிக்கொண்டு இவ்விடம் எழுந்தருளவேணும். (என் ஆரிடரை நீக்காய்) இப்போது இவன் 'ஆரிடர்' [பெரிய துன்பம்] என்கிறது முதலையால் வந்த துன்பத் தைப்போக்கவேணும் என்பதற்காகவல்ல. இப்பூ வாடுவதற்குள் திருவடி களிலே இடுவித்துக்கொள்ளவேணும் என்பதற்காகவே. ப்ராப்த சேஷியின் திருவடியிலே கைங்கர்ய விச்சேதமே இங்கு பெருந்துன்பமாகிறது.

**"நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந।**
**கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ॥"**

(என) என்று இப்ரகாரத்திலே இவன் சொல்ல. (என வெகுண்டு)ஸர்வேச்வரன் இவ்வார்த்தை செவிப்பட்டவாறே கோபித்தருளினன். (தீராதசீற்றத்தால்) "முதலையின் கையிலே அகப்படக்கொடுத்து அகப்பட்டவன் நோவுபட்டதுக்குப் பின்பு அவனை ரக்ஷித்து என்செய்தோமானோம்" என்று இன்னும் தீராதே கிடக்கிறதிறே. (சீற்றத்தால் சென்று) வாஹநத்தின் மேலன்றுபோலே காணும் சென்றது, கோபத்தின்மேலேகாணும்; கோபம் வழிகாட்டச் சென்றுனித்தனே. தானறிந்து சென்றுனன்று காணும்.

---

[மதுஸூதனு! நான் இவ்வுடம்பின் உறுதிக்காக வேண்டுகிறேனல்லேன்; என் கையிலிருக்கும் தாமரைகளை உன் திருவடிகளில் இடுவதற்கே வேண்டுகிறேன்] என்பதல்வோ கஜேந்திரனின் வார்த்தை.

(என) என்று இம்முறையாலே இவ்வானை சொல்ல. (என வெகுண்டு) ஸர்வேச்வரன் இவ்வார்த்தை செவிப்பட்டவுடன் முதலையின்மேல் கடுங் கோபங்கொண்டான். (என) "பகவதஸ் த்வராயை நம:" [ர-ஸ்த] என்று பட்டர் அநுஸந்தித்த த்வரையைச் சொல்லுகிறது. (வெகுண்டு) "கோப மாஹாராயத் தீவ்ரம்" [ரா-ஆ 24-34] [கடுங்கோபத்தை வரவழைத்துக் கொண்டான்] என்கிறபடியே தன் விஷயமான அபசாரமாகில் கோபம் வந்தேறியென்னும்படியிருக்கும்; "கோபஸ்ய வசமேயிவாந்" [ரா-யு59-136] [கோபத்திற்கு வசப்பட்டான்] என்கிறபடியே பாகவதவிஷயமான அபசாரமாகில் கோபமே ஸ்வரூபமென்னும்படியிருக்கும். இங்கே பாகவதோத்தமனுன கஜேந்திரன் விஷயமான அபசாரமாகையால் வெகுளிக்கு வசப் பட்டான். (தீராத சீற்றத்தால்) ஆனையை ரக்ஷித்தபின்பும் தீராத கோபத்தால். "முதலையின் கையிலே அகப்படவிட்டு, அகப்பட்டவன், துன்புற்றதற்குப்பின் அவனை நாம் ரக்ஷித்ததால் என்ன பயன்?" என்று, இன்றும் தீராதே கிடக்கிறதன்றே கோபம். துரியோதனுதியரை அழிப்பது முதலான காரியங்கள் அனைத்தையும் செய்தும் "நாதிஸ்வஸ்தமநாயயௌ" [மனக்குறை நீங்காதவனுகவே சென்றுன்] என்கிறபடியே, "த்ரௌபதி கோவிந்தா எனக் கூப்பிடக் கண்டிருந்தோமே" என்னும் குறையோடேயே பரமபதம் சென்றுனன்றே. (சீற்றத்தால் சென்று) கருடவாஹனத்தின்மேலே செல்லவில்லை போலே காணும். கோப வாஹனத்தின்மேலே சென்றுன் போலேகாணும். கோபவசப்பட்டவனுகையாலே கோபம் வழிகாட்டச் சென்றுனித்தனே. தானறிந்து சென்று

**ஈரா வதனை யிடர்கடிந்தா னெம்பெருமான்** 51
**பேரா யிரமுடையான் பேய்ப்பெண்டீர் நும்மகளைத்**
**தீரா நோய்செய்தா னெனவுரைத்தாள் சிக்கெனமற்று** 52

ஈரா—(முதலையை)பிளந்து, அதனை இடர் கடிந்தான் எம்பெருமான்—அந்த கஜேந்திராழ்வானுடைய துன்பத்தைப் போக்கடித்த எம்பெருமான், பேர் ஆயிரம் உடையான் — (இப்படிப்பட்ட அளவற்ற காரியங்களுக்கு வாசகமான) ஸஹஸ்ர நாமங்களையுடையவன்; (அவ்வெம்பெருமான் தான்) பேய் பெண்டீர்—அறிவுகெட்ட பெண்களே! நும்மகளை-உங்கள் மகளுக்கு, தீரா நோய் செய்தான் என உரைத்தாள்-(இப்படிப்பட்ட) தீராதநோயை உண்டுபண்ணினன்காண்மின் என்று சொல்லி முடித்தான் (கட்டுவிச்சி);

---

(இரண்டு கூறுகஈரா) ஆனைக்கும் நோவு வாராமல் முதலையை இருபிளவாம்படி திருவாழியாலே பிளந்தருளினபடி. (அதனை யிடர்கடிந்தான்) அப்படி நோவுபட்டிருக்கிற ஸ்ரீகஜேந்த்ராழ்வானை, அம்முதலை பிடித்த ஸ்ரீபாதத்தைத்தன்திருக்கைகளாலே யொத்துவது, திருப்பவளத்தாலே யூதுவது, திருப்பரிவட்டத் தலையாலே யொத்துவதானன். (எம்பெருமான்) ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கன்றிக்கே இவள் தான் பெற்றாளாம்படி தோற்ற இக்கட்டுவிச்சி என்னையனே! என்கிறாள். (பேராயிரமுடையான்) இப்படி ஆச்ரித ரக்ஷணத்துக்காகச் செய்த அபதாநங்களுக்கு வாசகமான திரு

---

னல்லன். (இரண்டு கூறுக ஈரா) முதலையைப் பிடித்திழுத்தால் ஆனை நோடுபடுமன்றோ; ஆகையால் முதலையை இருபிளவாம்படி திருச்சக்ரத்தாலே பிளந்து, முதலையின் பற்றைத் தானே விடும்படி செய்தான். (அதனை இடர்கடிந்தான்) அப்படித் துன்புற்ற ஸ்ரீகஜேந்திரனை, அம்முதலை பற்றிய திருவடியைத்தன் திருக்கைகளாலே ஒத்துவது, திருவாயாலே ஊதுவது, மென்மைமிக்க திருப்பரிவட்ட நுனியாலே ஒத்துவது முதலிய செயல்களைச் செய்து, முதலையால் பட்ட துன்பத்தைத் தவிர்த்தான். கைங்கர்யாபாவம் கஜேந்திரன் நினைவாலே இடர். பகவான் நினைவாலே முதலையால் பட்ட துன்பம் இடராகிறது. (எம்பெருமான்) ஸ்ரீகஜேந்திராழ்வான் பெற்ற பேற்றை, தானே பெற்றதுபோலே 'என் அப்பன்' என்கிறாள் இக்கட்டுவிச்சி. (பேராயிரமுடையான்) இப்படி அடியாரை அளிப்பதற்காகச் செய்த செயல்களைத் தெரிவிக்கும் கணக்கற்ற

நாமங்கள் எண்ணிறந்தவற்றையுடையவன். ஆச்ரிதர் இவ்விஷயத்திலிழிகைக்குப் பலதுறையுண்டானாற்போலே அவர்களநுஸந்திக்கைக்கும் பல திருநாமங்களையுடைய்வன்.

(பேய்ப்பெண்டீர்) "ஸர்வேச்வரனடியாக வந்தது இந்நோய்" என்றாலும் "தேவதாந்தரஸ்பர்சமுண்டு" என்று அதிசங்கை பண்ணுகிற அறிவுகேடிகளிறே நீங்கள். (நும் மகளை) உங்கள் வயிற்றிலே பிறந்தவளை. உங்கள் வயிற்றில் பிறந்தவள் பரதேவதைக்கு நோவு படுமித்தனையல்லது அவர தேவதைக்கு நோவுபடுமோ? (தீராநோய் செய்தானெனவுரைத்தாள்) இந்நோய் தீரும்படி யென்னென்று விசாரிக்கிறவர்களுக்கிறே "தீராநோய்செய்தான்" என்கிறது. "இவளுக்கு ஸர்வேச்வரனடியாக் வந்தநோயாகிறது தீரிற் செய்வதென்" என்று அவர்கள் பயப்படுகிறார்களாகக் கருதி "தீராநோய்" என்கிறாள் காணும். இப்போது தீராநோய்

---

திருநாமங்களை உடையவன். "ஸஹஸ்ரசீர்ஷா" என்றாப்போலே "ஆயிரம்" என்றது "அநந்தம்" என்றபடி. "பேருமோராயிரம் பிறபல உடைய எம்பெருமான்" என்றார் நம்மாழ்வாரும். அடியார் இவ்விஷயத்தில் அனுபவிக்க இழிவதற்கு எண்ணிறந்த குணங்கள், ரூபங்கள், விபூதிகள் முதலான பல துறைகள் உண்டானாற்போலே, அவர்கள் அனுஸந்திக்கப் பல திருநாமங்களை உடையவன்.

(பேய்ப்பெண்டீர்) "ஸர்வேச்வரனைப் பெறாததாலே வந்தது இந்நோய்" என்று நான் சொன்னாலும், "தேவதாந்தரங்களால் வந்ததாயுமிருக்குமோ" என்று ஐயமுறும் அறிவிலிகளன்றோ நீங்கள். அன்பின் மிகுதியாலே இவ்வறிவுகேடு. (நும்மகளை) உங்கள் வயிற்றிலே பிறந்தவளை. பரம வைஷ்ணவர்களான உங்கள் வயிற்றில் பிறந்தவள் பரதேவதைக்கு நோவு படுவாளேயொழிய எதிலோர் தெய்வத்துக்கு நோயுறுவாளோ? (தீரா நோய் செய்தான் என உரைத்தாள்) "இந்நோய் எப்படித் தீரும்?" என்று கேட்கிறவர்களுக்கு, "தீராதநோய்" என்கிறாள். "உற்ற நல்நோய்" [திருவாய் 4-6-1] என்கிறபடியே பகவத்பக்தியாகிற இந்நோய் மிகவும் உத்தேச்யமாகையாலே "ஸர்வேச்வரனாலே வந்த இந்நோய் தீர்ந்து விட்டால் என் செய்வது?" என்று கேட்கிறார்களாக நினைத்து, "தீராத நோய்" என்கிறாள். ஆத்மா உள்ளவரையில் பரமபதத்திலும் தொடரு

ஆரானு மல்லாமை கேட்டெங்க ளம்மனையும்
போரார்வேற் கண்ணீரவனுகில் பூந்துழாய் 53
தாரா தொழியுமே தன்னடிச்சி யல்லளேமற்று

எங்கள் அம்மனையும்-(அதற்குமேல்) என்னுடைய தாயானவள், மற்று ஆரானும் அல்லாமை சிக்கென கேட்டு—வேறு எந்த க்ஷுத்ரதெய்வமும் இந்த நோய்க்குக் காரணமல்லவென்பதை உறுதியாகக் கேட்டுக்கொண்டு, போர் ஆர் வேல் கண்ணீர்!—யுத்தத்திலே பொருந்தின வேல்போன்ற கூரிய கண்களையுடைய தோழிமார்களே! அவன் ஆகில்—(இந்நோய் செய்தவன்) அந்த எம்பெருமானேயாகிற பக்ஷத்தில், பூ துழாய் தாராது ஒழியுமே—இவள் விரும்பிய திருத்துழாய்ப் பிரஸாதத்தைத் தந்தருளாமற் போவனோ; தன் அடிச்சி அல்லளோ—(இவள்) அவனுக்கு அடிமைப்பட்டவளன்றோ; மற்று—வேறொருவனும்,

---

என்கிறது பக்தியையிறே. யாவதாத்மபாவியான நோயிறே. ப்ராப்திதசையிலுமநுவர்த்திக்குமிறே.

(எனவுரைத்தாள்) தென்றலும் சிறுதுளியும்பட்டாற் போலே இருக்கிறதுகாணும் தனக்கினிதானபடி. (உரைத் தாள்) என்றும் இந்நோய் கொண்டாலாகாதோ இவள் புகுந்திப்படி பரிஹாரஞ் சொல்லப்பெறில்?

கட்டுவிச்சி அப்படி சொன்னாளாகில் உங்கள் தாய்மார் செய்ததென்னென்னச் சொல்லுகிறாள்மேல்; (சிக்கெனமற்று

---

மதாகையாலே தீராதது என்கிறாள். இப்போது பிரிவில் வருத்தத்தை விளைக்கையாலே 'நோய்' என்கிறது.

(எனவுரைத்தாள்) தென்றலும், அதிலே கலந்து வரும் நீர்த்துளியும் பட்டாற்போலே தாயான தனக்கு இக்கட்டுவிச்சியின் வார்த்தை இனிதா யிருக்கையால் அதை அநுவதிக்கிறாள். (உரைத்தாள்) அவள் உரைத்தபடி தான் என்! இவளுடைய வார்த்தையைக் கேட்பதற்காகவாவது, மகள் எப்போதும் இந்நோய் கொள்ளலாம் என்று தோற்றுகிறது.

கட்டுவிச்சி இம்மாதிரி சொன்னாளாகில் உங்கள் தாய்மார் சொன்ன தென்? என்னச் சொல்லுகிறாள் மேலே:— (சிக்கென மற்றாரானுமல்லாமை

ரானுமல்லாமை கேட்டெங்களம்மனையும்) "இந்நோவு பேராயிரமுடையானடியாகவந்தது" என்று சொன்னாள் கட்டுவிச்சி. என்னைப்பெற்ற தாயாரும் "தேவதாந்தர ஸ்பர்சமில்லையிறே" என்று பலகாலுங்கேட்டு(போரார்வேல் கண்ணீர் அவனுகில் பூந்துழாய் தாராதொழியுமே) பெண் பிள்ளைகள் பதறுகிற பதற்றத்தைக்கண்டு நோவுக்கு நிதாநம் ஸர்வேச்வரனுனபின்பு, நீங்களிப்படி பதறவேணுமோ? "புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடியபிரானருளாவிடுமே" என்னுமாபோலே அவனுகையும் நம்முடைய அபேக்ஷிதம் செய்யானென்கையும் **"अग्निनासिञ्चेत्" (அக்நிநாஸிஞ்சேத்)** போலே அஸங்கதமன்றே? **"रामो द्विर्नाभिभाषते" (ராமோத்விர் நாபிபாஷதே)** இதிவத். (தன்னடிச்சியல்லளே) அபேக்ஷித மானவை தானுகச்செய்யாதொழிந்தாலும் காலைக்கட்டி யாகிலும் செய்வித்துக்கொள்ள ப்ராப்தியில்லையோ? என்று

---

கேட்டெங்களம்மனையும்) "இந்நோய் பேராயிரமுடையானாலே வந்தது" என்று சொன்னாள் கட்டுவிச்சி; என்னைப்பெற்ற தாயாரும் "மற்றொரு தெய்வத்தின் ஸ்பரிசம் இல்லையே" என்று ஒரு தடவைக்குப் பல தடவை யாகக் கேட்டு நிச்சயித்துக்கொண்டு. (போரார் வேல் கண்ணீர் அவனுகில் பூந்துழாய் தாராதொழியுமே) (போரார் வேல் கண்ணீர்) போர்புரியும் வேல் போன்ற கண்ணையுடையவர்களே! இது அவர்களுடைய பதற்றத் தைக்காட்டுகிறது. இங்கு இப்படி கூப்பிடுகையாலே 'எதுக்கு இப்பதற் றம்?' என்று அவர்களைக் கேட்டதாகக் கருத்து. (அவனுகில் பூந்துழாய் தாரா தொழியுமே) "புவனியெல்லாம் நீரேற்றளந்த நெடியபிரான் அருளாவிடுமே" [திருவிருத்தம்-69] என்கிறபடியே நாம் பற்றியிருப்பது அவனாயிருக்கையும், நம்முடைய விருப்பத்தை அவன் செய்யான் என்று சொல்லுகையும் **"அக்நிநா ஸிஞ்சேத்"** [நெருப்பாலே நனைக்கவேண்டும்] என்பதுபோலே முன்னுக்குப்பின் முரண்பட்டதன்றோ. **"ராமோ த்விர் நாபிபாஷதே"** [ரா-அ 18-30] [ராமன் இருவகையாகப் பேசமாட்டான்] என்று அவனே அருளிச்செய்கையாலே, **"ஏதத் வ்ரதம் மம"** [சரணு கதரை ரக்ஷிப்பது என் விரதம்] என்ற அவன், இவள் விரும்பும் பூந்துழாய் தாராதொழியான்; நீங்கள் பதறவேண்டா என்கை. (தன்னடிச்சியல்லளே) அப்படியே அவன் இவள் விரும்பியதைத் தானுகத் தாராவிடிலும் அவன் அடியைப்பற்றி வேண்டியதைப் பெறுவித்துக் கொள்ளக்கூடிய உறவில் லையோ? ஆகையால் இவள் விருப்பம் நிறைவேறுவது நிச்சயம் என்று

**ஆரானு மல்லனே யென்றொழிந்தாள் நானவனைக்** 54
**காரார் திருமேனி கண்டதுவே காரணமாப்**

*ஆரானும் அல்லனே என்று ஒழிந்தாள்—வேறொருவனும் இந்நோய் செய்தவனன்றே என்று சொல்லிவிட்டு விசாரமற்றொழிந்தாள் (தாய்); நான்—நானென்றால், அவனை—அவனது, கார் ஆர் திருமேனி கண்டதுவே காரணம் ஆ—கரிய திருமேனியை ஸேவித்ததே ஹேதுவாக,*

---

இப்படி தோழிமார்க்குச்சொல்லி. (மற்றாரானுமல்லனே யென்று) தேவதாந்தரமான (வே)நாய் தீண்டிற்றில்லையிறே என்று தானே தெளிந்து நிர்ப்பரையானாள். எம்பெருமானோடே ஸம்பந்தமுடைய இவளுக்கு நான் கரையவேணுமோ?'' என்று தளப்பமற்றாள். என்று அவள் செய்ததென்னென்னில், (ஒழிந்தாள்) ஒழிந்தாள்.

(நான்) என்பந்தாடலிலே அவனைக்கையும் மடலுமாகக் காணக்கடவதாக உத்யோகித்துப் புறப்பட்டு அவன் குடக்கூத்திலே தோற்றநான். (அவனை) தன்வடிவழகைக்காட்டி என்னை அநந்யார்ஹையாக்கினவனை.

---

இம்மாதிரியாகத் தொழிமார்க்குச் சொல்லி. (மற்றாரானுமல்லனே என்று)

**“வானிடை வாழுமவ் வானவர்க்கு**
**மறையவர் வேள்வியில் வகுத்த அவி**
**கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து**
**கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப”**

[நாச்-திரு 1-5]

என்றாப்போலே, மற்றோர் தெய்வமாகிற நாய் இவளைத் தீண்டவில்லையே என்று தானே தெளிந்து மனச்சுமையற்றவளானாள். “எம்பெருமானோடே ஸம்பந்தமுடைய இவளுக்காக நான் வருந்தவேண்டிய அவசியமில்லை' என்று மனந்தளும்பாதவளானாள். என்று சொல்லி அவள் செய்தது என்னென்னில்: (ஒழிந்தாள்) கையொழிந்தாள்.

(நான்) என் பந்தாட்டத்தாலே அவனை மடலெடுக்கச் செய்ய முற்பட்டுப்புறப்பட்டு, அவன் குடக்கூத்திலே தோற்று மடலெடுக்கவிருக்கிற நான். (அவனை) தன் வடிவழகைக்காட்டி என்னைச் சிந்தைமற்றொன்றின் திறத்ததல்லாதவளாக்கினவனை.

**பேராப் பிதற்றுத் திரிதருவன் பின்னையும் 55**

*பேரா பிதற்று பின்னையும் திரிதருவன்— (பெண் ஆணுக) உருமாறி வாய்வெருவிக்கொண்டு அதற்குப்பின்னும் திரியா நின்றேன்;*

(காரார்திருமேனி கண்டதுவேகாரணமா) அவனுடைய ச்ரமஹரமான திருமேனியைக்கண்டதுவே ஹேதுவாக. ரிஷிகளையும் ஆழ்வார்களையும்போலேயாயிற்று திருத்தாயாரு மிவளும்; அவன் ஸ்வரூபகுணஜ்ஞாநமாயிற்று ரிஷிகளுக்கு, திவ்யவிக்ரஹத்திலும் விக்ரஹகுணத்திலுமாயிற்று ஆழ்வார் களுக்கு. குணஜ்ஞாநத்திலகப்பட்டார்க்கு ஆற்றலாமிறே. வடிவழகிலகப்பட்டார்க்கு ஆற்றவொண்ணாதிறே, அப்படி குணஜ்ஞாநமுடையவளாயிற்று திருத்தாயார்; ஆகையாலே தரித்திருந்தாள்; அவ்வடிவழகிலேயகப்பட்டவர்களுக்குப் பெற்றல்லது தரிக்கவொண்ணாதிறே. (பேரா) ஆண் பெண்ணானபடி. (பிதற்று)பெண்ணான தன்மையைத்தானு மிழந்தபடி. (திரிதருவன் பின்னையும்) பின்னையுமடக்கம் குடிபோனால் நசிக்கவிறேகண்டது, அப்படிச்செய்யாதே

(காரார் திருமேனி கண்டதுவே காரணமா) காண்பார் கண்களைக் குளிரவைக்கும் திருமேனியைக் கண்டதுவே காரணமாக. ரிஷிகளைப் போல் ஸ்வரூபகுணாநுபவத்திலே ஈடுபட்டவள் திருத்தாயார். ஆழ்வார்களைப்போலே திவ்ய மங்களவிக்ரஹத்திலும், அவ் விக்ரஹகுணத்திலும் ஈடுபட்டவள் இப்பிராட்டி. ஸ்வரூபகுண ஜ்ஞானத்திலே ஈடுபட்டவர்களுக்குப் பிரிந்தாலும் குணஜ்ஞானத்தாலே தரிக்கலாம். வடிவழகில் அகப்பட்டு அது கிடைக்கப்பெறாதவர்களை ஆற்றவல்லது ஒன்றுமில்லையே. ரிஷிகளைப்போலே குணஜ்ஞானமுடைய வளாகையாலே திருத்தாயார் தரித்திருந்தாள். அவ்வடிவழகிலே அகப் பட்ட இவளுக்கு அதைப் பெற்றாலல்லது தரிக்கமுடியாதன்றோ. (பேரா) உருப்பெயர்ந்தேன்; திருமங்கை மன்னனுகிற ஆணுருவம்போய் பரகால நாயகியாகிய பெண்ணுருவம் பெற்றேன். (பிதற்று) பெண்ணின் தன்மை யான அடக்கத்தையும் இழந்து அலற்றத் தொடங்கினேன். (திரிதருவன் பின்னையும்) பெண் அடக்கத்தையிழந்த பின்பு அழிவதே நலமன்றோ. அப்படியும் செய்யாமல், நரகாநுபவம் செய்வதற்காக எடுக்கும் யாதநா சரீரம்போலே கழிக்கவும் முடியாததாய், துன்புறுத்துவதான சரீரத்தோடு

**ஈராப் புகுதலு மிவ்வுடலைத் தண்வாடை**
**சோரா மறுக்கும் வகையறியேன் சூழ்குழலார்** 56
**ஆரானு மேசுவ ரென்னு மதன்பழியை**

*தண்வாடை—குளிர்ந்த காற்றானது, இ உடலை ஈரா புகுதலும்—(எனது இவ்வுடம்பைப் பிளந்துகொண்டு உள்ளே புகுந்து, சோரா மறுக்கும்—சோர்வை யுண்டாக்கித் துன்பப்படுத்துகின்றது; வகை அறியேன்—துன்புறுத்தும் முறைகளை விவரித்துச்சொல்ல அறிகின்றிலேன்; சூழ் குழலார் ஆரானும் — நிறைந்த கூந்தலையுடைய பெண்கள் யாராகிலும், ஏசுவர் என்னுமதன் பழியை—அலர் தூற்ற, அத்தால்வரும் அபவாதத்தை,*

---

யாதநாசரீரம்போலே பின்னையுந்திரிந்தேன். (ஈராப்புகுதலும்) புகுந்து ஈருகிறதில்லை; ஈர்ந்துகொண்டு புகுரா நின்றது. (இவ்வுடலை) பண்டே தொட்டார்மேலே தோஷமாம்படி விரஹக்ருசமானவுடலையென்னுதல், பிரிவுக்குச் சிளையாத உடம்பென்னுதல். (தண்வாடை) நஞ்சூட்டின ஆயுதம்போலே குளிர்த்தியையுடைத்தான வாடை. (சோராமறுக்கும்) சோரவும் பண்ணாநின்றது. மறுக்கவும் பண்ணாநின்றது. (வகையறியேன்) திரள சோரப்பண்ண

---

அடக்கமிழந்த பின்பும் திரிந்தேன். (ஈராப்புகுதலும்) வாடைக்காற்று புகுந்த பின்பு உடலைப்பிளந்தாலும் சிறிதுநேரம் துன்பமில்லாமலிருக்கலாமே; அதற்கும் இடமில்லாதபடி புகுகின்றபோதே உடலைப்பிளந்துகொண்டு புகுந்தது. (இவ்வுடலை) ஏற்கனவே தொட்டால் படக்கென்று மூச்சு நின்று தொட்டவர்மேல் கொன்ற தோஷத்தை உண்டாக்கும்படி விரஹத்தால் மெலிந்திருப்பதான இந்த உடலை என்று கருத்தாகவுமாம்; அன்றிக்கே, அவனைப் பிரிந்தவுடன் முடியவேண்டியிருக்க, பிரிவுக்கும் முடியாமலிருக்கும் இவ்வுடம்புக்கு இந்த தண்டனை தகுந்ததே என்று கருத்தாகவுமாம். (தண்வாடை) பனிமலைப்பக்கத்திலிருந்து (வடக்கிலிருந்து) வீசும் வாடைக்காற்று இமற்கையிலேயே குளிர்ந்திருப்பதாய், விரஹதாபத்தால் வேகின்றவர்களுக்கு அஸஹ்யமான ஆயுதம்போலேயிருக்கும் அது மேலும் குளிர்த்தியூட்டப்பெற்று, விஷம் தடவின ஆயுதம்போலே துன்புறுத்துகிறது. (சோராமறுக்கும்) மூர்ச்சையடையவும் செய்கின்றது; உணர்ந்தபோது துன்புறுத்தவும் செய்கின்றது, (வகையறியேன்) மயங்கவும் செய்கிறது, துன்புறுத்தவும் செய்கின்றது என்று மொத்தமாகச்

நின்றதென்று சொல்லுமித்தனையொழிய செய்கிறவகைகள் பேச்சுக்குநிலமல்ல.

(சூழ்குழலார்) வாடை உடம்பிலே பட்டாலும் மயிர் முடியும் அழகுங் கலையாதேயிருக்குமவர்கள். (ஆரானும்) என்செயல் பொல்லாதென்று இருக்கக்கடவாரில்லை; எங்கேனும் சிலவரென்கை. அவ்யுத்பந்நருமாய் அவ்யபதேச்யருமாய் இருப்பார் சிலரென்கை. (ஏசுவரென்னுமதின் பழியை) அவர்கள் அலர்தூற்ற அத்தால் வரும்பழியை. இவளாற்றாமைக்கு அவனுதவினபடி பொல்லாதென்னுதல், அவன் பிரிந்தால் இவளாறியிராதே இங்ஙனே படுகிறதென்னென்னுதல் செய்வர்களிறே. (வாராமல் காப்பதற்கு) அவன் ஸ்வரூபத்துக்கும் நம் ஸ்வரூபத்துக்கும் நிறக்கேடு வராமைக்கு. (வாளாவிருந்தொழிந்தேன்) குனியக் குறுணி பற்றுகிற காலத்திலே, இரண்டு மருங்கும் மணி

---

சொல்லலாமேயொழிய இன்ன இன்ன வழிகளில் மயங்கவும் துன்புறுத்தவும் செய்கின்றது என்று விவரித்துப் பேசிமுடியாது.

(சூழ்குழலார்) இவ்வாடைக்காற்று உடம்பிலே பட்டாலும் மயிர் முடியும் அழகும் குலையாமலிருக்கப்பெற்ற பாக்கியவதிகள்; இவனிடம் காதல்நோய்ப்படாதவர்கள் என்று கருத்து. (ஆரானும்) என்னுடைய இச்சிறந்த செயலைத் தவறானது என்று நினைக்கக்கூடியவர் எனக்குத் தெரிந்தவர்களில் ஒருவருமில்லை; எனக்குத் தெரியாதாரில் எங்கேனும் ஒருசிலர் இருக்கலாமன்றோ; அவர்கள். அறிவற்றவர்களுமாய், வாய் கொண்டு பேசத்தகாதவர்களுமாயிருப்பார் சிலர் என்று கருத்து. (ஏசுவரென்னுமதின் பழியை) அவர்கள் நாயகனையும், நாயகியாகிற இவளையும் நிந்திக்க, அதனால் வரும் அபவாதத்தை. 'இவள் இப்படி ஆற்றாமை மிக்குப் படும்போது அவன் உதவுகின்ற முறை அழகாயிருக்கிறது!' என்று அவனையும், 'அவன் பிரிந்திருந்தால், இவள் பொறுத்திருக்க வேண்டியிருக்க, இப்பாடு படலாமோ?' என்று இவளையும் அலர்தூற்றுவரன்றோ. (வாராமல் காப்பதற்கு) இப்படி அவன் சீர்மைக்கும், நம் சீர்மைக்கும் தாழ்வு வாராமலிருப்பதற்கு. (வாளாவிருந்தொழிந்தேன்) உடம்பு நோவக் கதிரறுக்கக்கூட வேண்டியிராதே, குனிந்தால் குறுணி நெல் கிடைக்கக்கூடியகாலத்திலே பட்டினி கிடப்பாரைப்போலே, அவதரித்து அனைவர்க்கும் எளியனாய்க் குடக்கூத்தாடிப்

வாராமல் காப்பதற்கு வாளா விருந்தொழிந்தேன் 57
வாராய் மடநெஞ்சே வந்து மணிவண்ணன்
சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளித் 58
தாரான் தருமென் றிரண்டத்தி லொன்றதனை

வாராமல் காப்பதற்கு—வாராமல் தடுத்துக்கொள்வதற்காகவே, வாளா இருந்தொழிந்தேன்— (இதுவரை) ஒன்றும் செய்யாமலிருந்துவிட்டேன்; மட நெஞ்சே— "அறிவு கெட்டுக் கிடக்கிற மனமே!" வாராய்—(தூது போக) எழுந்திரு; வந்து—அவ்வெம்பெருமான் பக்கலிலே சென்று, மணி வண்ணன் — நீலமணிபோன்ற வடிவையுடையனான அவ்வெம் பெருமான், நமக்கு அருளி-நம்மேல் க்ருபை பண்ணி, சீர் ஆர் திரு துழாய் மாலை-சீர்மைமிக்க திருத்துழாய் மாலையை, தரும் தாரான் என்ற இரண்டத்தில் ஒன்றதனை—தருவன் தரமாட்டான் என்ற இரண்டு வார்த்தைகளில் ஏதாவதொரு வார்த்தையை (அவன் சொல்லும்படி நான் சொல்லியனுப்புகிற சொல்லை)

---

சர்காண மடலைக்கொண்டு புறப்படப்பெறுதே அருமந்த காலத்தைப் பாழேபோக்கினேன்.

(வாராய்) எழுந்திராய். (மடநெஞ்சே) இப்போது பவ்யமான நெஞ்சேயென்கிறதன்று; அறிவு மாண்டுகிடக்கிற நெஞ்சே! என்றபடி. அவனை நோக்கி எல்லாமுண்டாயிற்றிறே; எழுந்திராய். (வந்து) சென்றென்றபடி. வரவு செலவைக் காட்டுமிறே; அவன் பக்கலிலே சென்று.

---

போந்த சமயத்திலே பேசாமலிருந்தேன். அவன் நெடுந்தெருவே கூத்தாடுவதைத் தெருவின் இரண்டு வரிசைகளிலும் நின்று கண்டுகொண்டிருக்கும் மனிதர்கள் காணும்படியாக மடலையெடுத்துக்கொண்டு புறப்படாமல், பழிவருமோ என்னும் அச்சத்தாலே அருமருந்தனைய காலத்தைப் பாழடித்தேன்.

(வாராய்) இனிமேலாவது எழுந்திருப்பாயாக; (மடநெஞ்சே) பிரிந்து செயலற்றுக்கிடக்கும் இந்நெஞ்சை, மடப்பத்தையுடைய—எனக்கு பவ்யமான- நெஞ்சே! என்று விளிப்பது பொருந்தாதாகையால், அறிவுகெட்டுக் கிடக்கும் நெஞ்சமே! என்று கூப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். அவன் ஸ்வரூபத்துக்குத் தாழ்வு வரக்கூடாதென்று பார்த்ததால் நாம் படவேண்டியதெல்லாம் பட்டாயிற்று; இனியாவது எழுந்திராய். (வந்து)

(மணிவண்ணன்) தன்னைப் பிரிந்தார் மடலெடுக்கும்படி பண்ணவல்ல வடிவுபடைத்தவன். (சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளி) அநந்யப்ரயோஜநரிட்ட மாலை. "மிக்க சீர்த் தொண்டர்" ப்ரயோஜநாந்தரபரரிட்டதாகில் அவர்கள் நெஞ்சில் அபிஸந்தியாலே சுறு(ருள்) நாறுமென்கை. (நமக்கருளி) ப்ரணயித்வம் போயிற்றிறே நம்மாற்றாமைக்கு உதவாதபோதே; இனி க்ருபைபண்ணிலுண்டித்தனையிறே. (தாரான் தருமென் றிரண்டத்தி லொன்றதனை) தரிலுமாம், தாராதொழியிலுமாம். இரண்டிலொன்று அமையும் நமக்கு. அதாவது, தந்தானாகில் அத்தாலே தரிக்கிறோம், இல்லையாகில் முடிந்து பிழைக்கிறோம். (ஆரானு

---

சென்று என்று கருத்து. ஓரிடத்திற்கு வருவது மற்றோரிடத்திலிருந்து செல்லுவதைக் காட்டுமன்றோ. தானிருக்கவேண்டியவிடம் அவனிருக்குமிடமேயாகையால் அங்கு செல்லுவதும் வருகையாகிறது இவளுக்கு. (மணிவண்ணன்) தன்னைப் பிரிந்தவரை மடலெடுக்கும்படி பண்ணவல்ல திருமேனியை உடையவள். (சீரார் திருத்துழாய்மாலை) மற்றொரு பயனை விரும்பாத பெரியாரிட்ட மாலையாகையாலே சீர்மைமிக்கிருக்கும் துளவமாலை. "மிக்கசீர்த்தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே" [பெரியதிரு 11-1-9] என்கிறபடியே அநந்யப்ரயோஜனர் இட்ட துளவமாலை நித்யஸூரிகளிடும் 'சூட்டுநன்மாலைகள்' [திருவிருத்தம்] போலே விலக்ஷணமான மணமுடையதாயிருக்கும் 'காமாத்மாந:' [கீதை] எனப்படும் பிரயோஜநாந்தரபரரிடுவது, அவர்களுடைய நெஞ்சில் பலாபிஸந்தியாகிற[மற்ற பலன்களில் விருப்பமாகிற] அக்நிஸ்பர்சத்தாலே பொசுங்கின நாற்றமடிக்கும் "அஹங்காரம் அக்னிஸ்பர்சம்போலே" [ஸ்ரீவசந-181] "சுறு (சுருள்)நாறுத பூ" [ஸ்ரீவசன-287] என்ற ஸ்ரீஸூக்திகள் காண்க. (நமக்கு அருளி) என்னோடு கூடியிருந்து பரமப்ரணயியாயிருந்த நிலையிலே நான் வேண்டாமென்றாலும் நிர்ப்பந்தித்து எனக்குத் தன் மாலையைக் கொடுப்பான் அவன்; என்னைப் பிரிந்து என் ஆற்றாமையைக் கண்டிருந்தும் எனக்கு உதவாதபோதே அவனுடைய ப்ரணயித்வம் போயிற்று; ஆகையால், மனமிரங்கிக் கொடுத்தால் ஒருவேளை கிடைக்கலாம். (தாரான் தருமென்றிரண்டத்திலொன்றதனை) முன் நிலையை நினைத்து கிருபைபண்ணித் தந்தாலும் சரி, ஸ்வாதந்திரியத்தாலே தராமலிருந்தாலும் சரி; இரண்டிலொன்றை அறிந்துவந்து நீ சொன்னால் போதும்; அதாவது:—மாலை தந்தானாகில் அதனால் உயிர் தரிக்கிறோம்; இல்லையாகில் உயிரைவிட்டுத் துன்பம் தீரப்பெறுகிறோம். (ஆரானுமொன்னாதார் கேளாமே சொன்னக்கால்) ஆனால் அவனைக்

ஆரானு மொன்ஞுதார் கேளாமே சொன்னக்கால் 59
ஆராயு மேலும் பணிகேட் டதன்றெனிலும்
போரா தொழியாதே போந்திடு நீ யென்றேற்குக் 60
காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்

ஒன்ஞுதார் ஆரானும் கேளாமே சொன்னக்கால் — அவனை யுகவாதவர்கள் எவரும் கேளாதபடி நீ சொன்ஞயாகில், பணி கேட்டு — அவ்வார்த்தையைக் கேட்டு, ஆராயுமேலும் — (அன்புடன்) விசாரித்தாஞகிலும் சரி, அது அன்று எனினும் — 'அவளைப்பற்றியே நமக்குத் தெரியாது' என்று மறுத்தாலும் சரி, நீ போராதொழியாதே போந்திடு — நீ இங்கே வாராது அங்கேயே தங்கிவிடாமல் உடனே வந்து சேர்ந்துவிடு, என்றேற்கு — என்றுசொன்ன என்பேச்சுக்கு உடன் பட்டு, கார் ஆர் கடல் வண்ணன் பின் போன — கரிய கடல் வண்ணன் பக்கலிலே சென்ற, நெஞ்சமும் — எனது மனந்தானும்,

---

மொன்ஞுதார் கேளாமே சொன்னக்கால்) அவன் குணத்தை யழிக்க இருப்பாருமுண்டு; அவர்கள் கேளாமே செவியிலே அவனுக்குச் சொல்லு. அவனையழித்து இவள் மடலெடுத்துப் புக்கபடி,- அவனையுகவாதார் கேளாமேயென்கிருளிறே. (ஆராயுமேலும் பணிகேட்டு) உன்னைக் கண்டபோதே "அவளென்பட்டாள்? அவளுளளே? அவ்வாச்ரயம் இன்னும் நமக்குக் கிடைக்குமோ?" என்று திருவுள்ளமாஞனே

---

கேட்கும் போது ஒரு விஷயத்தில் நீ ஜாக்ரதையோடு இருக்கவேண்டும்; அதாவது:— அவன் குணத்தை அழிக்கும் விரோதிகள் பலருண்டு; அவர்கள் கேளாமல் செவியிலே நீ சொல்லு; அவன் ஸ்வரூபகுண விபூதிகளை அழித்து மடலெடுக்கப்போகும் நிலையிலிருக்குமிவள், இந்நிலையிலும் 'அவனுடைய விரோதிகள் கேளாதபடி சொல்லு' என்று பரிவு தோற்றச் சொல்லுகிறபடி காணீர்! ஆற்ருமையாலே ஸ்வரூபத்தை அழித்துக்கொண்டு மடலெடுக்கும்போதும் ஸ்வரூபம் வெளிப்படுகிறது; பரிவேயன்ரே இவ்வாழ்வார்களுக்கு ஸ்வரூபம். (ஆராயுமேலும் பணி கேட்டு) உன்னைக் கண்டபோதே "அவள் என்ன பாடுபட்டாள்? அவள் இன்னமும் உயிரோடிருக்கிருளோ? உயிரோடிருந்தாலும், நிறமிழந்து தர்மிமாத்ரமாய்க்கிடப்பாள் என்பது நிச்சயம். நான் சென்று கூடும் வரையில் அந்த தர்மி நிலைத்து நிற்குமா? அதை நான் கிடைக்கப் பெறுவேஞ?" என்று கேட்டாஞகிலும் நீ அதை நன்ருகக்கேட்டு என்

யாகிலும். (அதென்றெனிலும்) அங்ஙனன்றியே துஷ்யந்தனைப்போலே நாம் அங்ஙனைக்கொப்பாளொருத்தியை அறியோமே என்றானாகிலும். (போராதொழியாதே). அறிந்திலேனென்றானென்றால் அவன் திருவுள்ளத்துக்கேற அறிவித்து மறுமாற்றங்கொண்டு போரவேணுமென்று நில்லாதே. (போந்திடுநீ) என்னுற்றாமை கண்டும் மறந்தவனைப்போலன்றியே நீபோந்திடு. (போராதொழியாதே போந்திடுநீயென்றேற்கு) நானன்றானேகிடீர் இந்நெஞ்சு தன்னை அங்கே தங்கப்பண்ணினேன். அதாவதென்னென்னில்; பெருங்குடி புதுக்குடிமகனைப் 'பழையபையலைப் போலே வரம்பிலும் வாய்க்காலிலும் சூடுபொகடாதே கொள்' என்னுமதுவேயடியாக அவ்விடங்களாகாதே களவுக்குஸ்த்தானமென்று செய்யாநிற்கும். "போராதொழியாதே

நிலையைச் சொல்லு: "ஆராயுமேலும் கேட்டுப்பணி" என்று அந்வயம்; அன்றிக்கே, (பணிகேட்டு ஆராயுமேலும்) என்று கூட்டி 'நான் உன் மூலமாகச் சொல்லும் வார்த்தையைக்கேட்டு ஆராய்ந்தருளுவானேலும்' என்றும் கொள்ளலாம். (அதன்றெனிலும்) அப்படி ஆராய்ந்தருளாமல் துஷ்யந்தனைப்போலே, 'நான் அப்படியொருத்தியைக் கண்டறியவும் மாட்டேன்' என்றாலும். 'பணி' என்பதை முதல் நிர்வாஹத்தில் இரண்டிடத்திலும் கூட்டிக்கொள்ளவேணும்; அவன் எது சொன்னாலும் நீ சொல்லவேண்டியவற்றைச் சொல்லிவிடு என்று கருத்து. (போராதொழியாதே) 'அறியேன்' என்றாலும் அவன் நெஞ்சில் படும்படி தெரிவித்து, பதில் தெரிந்து கொள்ளவேணும் என்று அங்கேயே நின்றுவிடாமல். (போந்திடு நீ) என் ஆற்றாமை கண்டும் மறந்தவனைப் போலன்றியே நீயாவது திரும்பிவந்து விடு. (போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு) நானே இப்படுபாவி நெஞ்சுக்கு வழிசொல்லிக் கொடுத்து அங்கு தங்கும்படி பண்ணினேன். 'தங்கிவிடாதே' என்று நான் சொன்னதையே பற்றிக்கொண்டு 'தங்கினால் லாபமிருக்கிறது' என்று நினைத்துத் தங்கிவிட்டது. இது எதைப்போலவென்னில்: ஊரில் நிலமுள்ள பெரியதனக்காரன், தன் குடியானவன் நெற்கதிர்களை வரப்பிலும் வாய்க்காலிலும் திருட்டுத்தனமாகக் குவித்து வைத்துத்தான் எடுத்துப்போவதையறிந்து, அவனை நிறுத்திவிட்டு புதுக்குடியானவனை வேலைக்கமர்த்தி, "நீயும் பழைய பையலைப்போலே வரப்பிலும் வாய்க்காலிலும் கதிர்களைக் குவித்து வைக்கக்கூடாது காண்" என்று சொன்னால், அவ்வார்த்தையின் கருத்தறிந்து கொண்டு, வரப்பிலும் வாய்க்காலிலும் குவித்து வைப்பதே நாம் களவு செய்யத் தகுந்த வழி என்று அறிந்து கொண்டு, பழங்குடியானவனைப்போலே புதுக்குடியானவனும் களவுபுரியத் தொடங்குவன். அதுபோலே, இந்நெஞ்சும் 'திரும்பிவராம

போந்திடு நீ'' என்றேன்நான், அவ்விஷயத்தைக் கண்டால் போராதொழியவாகாதே அடுப்பதென்று அது அங்கே நின்றது. (காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது) என்னுற்றுமைகண்டு கண்ணுங் கண்ணீருமாய்ப்போன நெஞ்சு அவனைக்கண்டவாறே அவன் வடிவழகிலே துவக்குண்டு என்னை மறந்தது.

லிருந்து விடாதே' என்று நான் சொன்னதைக்கொண்டு, 'கண்டால் திரும்பிவரக்கூடிய விஷயமன்று பகவத் விஷயம்' என்றறிந்துகொண்டு அங்கேயே தங்கிவிட்டது. [பெருங்குடி—நிலச்சொந்தக்காரன்; புதுக்குடி மகன்—புதிய குடியானவள்; பழையபையல்—பழைய குடியானவன்; சூடு—நெற்கதிர்க்குவியல்.] (காரார் கடல் வண்ணன் பின்போன நெஞ்சமும் வாராதேஎன்னைமறந்தது) என் ஆற்றுமை கண்டு கண்ணீர் விட்டுக்கொண்டுபோன என் நெஞ்சு, அவனைக்கண்டவுடன் அக்கடல் நிறவண்ணனின் வடிவழகிலே ஈடுபட்டு என்னை மறந்தது. இக்கருத்தையே,

''மடநெஞ்சமென்றும் தமதென்றும் ஓர்கருமம்கருதி
விடநெஞ்சையுற்றுர் விடவோவமையும் அப்பொன்பெயரோன்
தடநெஞ்சம் கீண்டபிரானுர் தமதடிக்கீழ் விடப்போய்த்
திடநெஞ்சமாய் எம்மை நீத்தின்றுதாறும் திரிகின்றதே''
[திருவிருத்தம்-46]

''அன்னம்செல்வீரும் வண்டானம் செல்வீரும் தொழுதிரந்தேன்
முன்னம்செல்வீர்கள் மறவேல்மினே கண்ணன் வைகுந்தனே
டென்நெஞ்சினுரைக் கண்டாலென்னைச் சொல்லியவரிடைநீர்
இன்னஞ்செல்லீரோ இதுவோ தகவென்றிசைமின்களே''
[திருவிருத்தம்-30]

என்று நம்மாழ்வாரும்,

''நீரிருக்க மடமங்கைமீர்! கிளிகள் தாமிருக்க மதுகரமெலாம்
நிறைந்திருக்க மடவன்ன முன்ன நிரையாயிருக்க வுரையாமல் யான்
ஆரிருக்கிலு மென்னெஞ்ச மல்லதொரு வஞ்சமற்ற துணையில்லை யென்
ருதரத்திநெடு தூதுவிட்ட பிழையாரிடத் துரைசெய் தாறுவேன்
சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரில் விரும்பியே கொடுதிரும்பியே வருதலின்றியே
வாரிருக்கு முலைமலர் மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே
மயங்கி யின்புறமுயங்கி யென்னையுமறந்து தன்னையு மறந்ததே''
[திருவரங்கக்கலம்பகம்]

என்று பிள்ளைப் பெருமாளையங்காரும் அருளினர். ஆழ்வார் போன்ற பக்திபரவசர்களுடைய நெஞ்சு அவர்கள் தம்மாலேயே விலக்கப்பட்டாலும் பகவத்விஷயத்திலேயே ஈடுபடும் என்று இவற்ருல் காட்டப்படுகிறது.

வாராதே யென்னை மறந்ததுதான் வல்வினையேன் 61
ஊரா ருகப்பதே யாயினேன் மற்றெனக்கிங்கு

*வாராதே—திரும்பி வருதலின்றியே, என்னை மறந்ததுதான்—என்னை மறந்து அங்கேயே தங்கிவிட்டதே! வல் வினையேன்—கொடும்பாவியாகிய நான், ஊரார் உகப்பதே ஆயினேன்—ஊரார் ஆநந்திக்கும்படியாகவே நிலை குலைந்தேன்; எனக்கு இங்கு மற்று—எனக்கு இங்கு வேறு எவரும்,*

---

*(கடல்வண்ணன் பின்போனநெஞ்சமும் வாராதேயென்னை மறந்தது)* **"रामं मेऽनुगता दृष्टिः"** (ராமம் மேநுகதா த்ருஷ்டி:) *இத்யாதிவத்.*

(வல்வினையேன்) *என்னெஞ்சும் எனக்கு உதவாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன்.* (*ஊராருகப்பதே யாயினேன்*) *தங்களபிமதஸித்தி ஸாதநாநுஷ்ட்டாநத்தாலே யென்றிருக்குமவர்களைப்போலே, என்னபிமதத்துக்கும் நானுத்ஸாஹிக்கும்படியானேன், ஊரார்வார்த்தை; '"அவ*

---

(கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்தது) கடல் கொண்ட பொருள் மீளுமோ? *"ராமனை என் கண் பின்தொடர்ந்தது; இன்றளவும் திரும்பவில்லை" [ரா-அ 42-34]* என்று தசரதன் சொன்னது போலே.

(வல்வினையேன்) என் நெஞ்சும் எனக்கு உதவாதபடியான மஹா பாபத்தைப் பண்ணினேன். **"மத்பாபமேவாத்ர நிமித்த மாஸீத்"** [என் பாபமே ராமன் வனஞ்செல்லக் காரணமாயிற்று] என்ற பரதாழ்வானைப் போலேயும், **"மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி"** [என்னுடைய பெரிய பாபமொன்று இருக்கிறது] என்ற சீதாபிராட்டியைப் போலவும் தன்னை நொந்து கொள்கிறாள். (ஊரார் உகப்பதே ஆயினேன்) தாங்கள் விரும்பியதைப் பெறுவதற்கு அதற்குரிய உபாயங்களை அனுஷ்டித்துத்தான் ஆகவேணும் என்று நினைத்திருப்பவர்கள் விரும்பியதுபோலே, நான் விரும்பியதைப்பெற நான் முயற்சிசெய்யும் நிலையை அடைந்தேன். 'ஊரார்' என்று இவளிடம் ஆதரவற்றவர்களைச் சொல்லுகிறது. 'எல்லாவற்றுக்கும் எம்பெருமானே உபாயம்; நாம் அனுஷ்டிக்குமது எதுவும் அவனைப்பெற உபாயமல்ல' என்று முன்பெல்லாம் சொல்லுவள் இவள்; இவளை

ஆராய்வா ரில்லை அழல்வாய் மெழுகுபோல் 62
நீரா யுருகுமென் னாவி நெடுங்கண்கள்
ஊரா ருறங்கிலுந் தானுறங்கா வுத்தமன்றன் 63

*ஆராய்வார் இல்லை—பேச்சுத்துணை இல்லை; என்ஆவி—எனது ஆத்ம வஸ்து, அழல் வாய் மெழுகுபோல் நீர் ஆய் உருகும்—நெருப்பினருகே வைத்த மெழுகுபோல் நீர்ப்பண்டமாக உருகாநின்றது; நெடு கண்கள் தான்—நீண்ட கண்களும், ஊரார் உறங்கிலும் உறங்கா—ஊரிலுள்ள எல்லாரும் உறங்கும்போதிலும் உறங்கமாட்டா; உத்தமன் தன்-அப் புருஷோத்தமனுடைய,*

---

னாலேபேறு' என்றிருந்த இவள் கண்டாயே உண்டபடி, இவளைப்போலே உண்ணுமத்தனை அவன் கை பார்த்திருந்தவர்கள்'' என்பர்களேயவர்கள்.

இப்படி ஆற்றாமைமிக்கால் சிலபேரோடே உசாவித் தரிக்க வேண்டாவோவென்னில்; (மற்றெனக்கிங்காராய்வாரில்லை) என்னெஞ்சமெனக்கு உதவாதிருக்க வேறு நமக்கு இங்கு உசாத்துணையுண்டோ? ''மற்றில்லை'' என்கையாலே இன்னமும் அவனேவந்து ஆராயில் ஆராயுமத்தனையென்கை. ''அவ்வருளல்லனவருளுமல்ல'' என்றும், ''வையகத்துப்

---

இடித்துக்காட்டும் நேரம் வருமோ? என்று எதிர்பார்த்திருந்த அவர்கள் இப்போது சொல்லுகிறார்கள்,—'''அவனாலே பேற்றைப் பெறவேணும்' என்று நினைத்திருந்த இவள் அநுபவிக்கும்படியைப் பார்த்தீர்களா! 'அவனே உபாயம்' என்பவர்களெல்லாம் அப்படித்தான் படவேணும்; அவர்களும் நம் வழிக்குத் திரும்பியே தீருவர்கள்'' என்று தங்கள் ஆசை தீரச் சொல்லும்படியான நிலையை அடைந்தேன்.

இப்படிப் பிரிவாற்றாமை மிகுந்தால் சிலருடன் வார்த்தைசொல்லி உயிர்தரிக்கக்கூடாதோ? எனில்: (மற்றெனக்கிங்காராய்வாரில்லை) என் நெஞ்சமே எனக்கு உதவாதிருக்க, வேறொரு பேச்சுத்துணை இங்கு யாருளர்? "மற்று இல்லை" என்கையால் இனியும் அவனேவந்து என் குறையை ஆராய்ந்தால் உண்டு; இல்லையேல் வேறு கதியில்லை என்றதாகிறது. "அவ்வருளல்லன அருளுமல்ல" [திருவாய் 9-9-6] என்றும், "வையகத்துப் பல்லார் அருளும் பழுது" [முதல்திருவ 15] என்றுமன்றோ

பல்லாரருளும்பழுது'' என்றுமிறே இவர்கள் தாங்களறுதியிட்டிருப்பதும். (அழல்வாய் மெழுகுபோல் நீராயுருகுமென்னுவி) நெஞ்சு உதவாதென்னலாமோ. நெஞ்சைப்பிடித்து தரித்திருக்கவேண்டாவோ? என்னில், அக்நிஸகாசத்திலே மெழுகுபோலே இற்றுப்போகா நின்றது என்னுடைய ஆத்மவஸ்து.

(நெடுங்கண்களூராருறங்கிலும் தானுறங்கா) இப்படி ஆற்றாமை விளைந்ததாகில் நித்ரையாலே அத்தைப் போக்கிறுலோவென்னில், ''ஆயுமமருலகுந்துஞ்சிலும்'' என்கிற படியே எல்லாருமுறங்கிலும் என் கண்களுறங்குகிறதில்லை. (நெடுங்கண்கள்) கண் பரப்பெல்லாம் தலைச்சுமையாயிற்று. * அஸிதேக்ஷணையிறே. (ஊராருறங்கிலுந் தானுறங்கா) ''ஊரும் நாடுமுலகமுந் தன்னைப்போல்'' என்று இவள் பிறந்த

---

இவ்வாழ்வார்கள் முடிவுகட்டியிருப்பது. (அழல்வாய் மெழுகுபோல் நீராயுருகும் என்னுவி) கையாலாகாதவர்களைப்போலே 'என்னெஞ்சும் எனக்குதவவில்லை' என்னலாமோ? நெஞ்சை பலாத்காரமாகப் பிடித்து நிறுத்தி தரித்திருக்கவேண்டாமோ? என்னில்: நெருப்பின் முன்னிலையில் மெழுகு போலே இவ்விரஹ வேதனையாலே என்னுடைய ஆத்மாவானது உருகிப் போகும்போது நான் எப்படி நெஞ்சைப் பலாத்கரித்துப் பிடித்து நிறுத்துவது?

(நெடுங்கண்கள் ஊராருறங்கிலும் தானுறங்கா) இப்படிப் பிரிவாற்றுமை ஏற்பட்டதாகில் தூக்கத்தாலே அதனை மறந்திருக்கலாகாதோ? என்னில்: **''ஆயும் அமருலகும் துஞ்சிலும் நீ துஞ்சாயால்''** [திருவாய் 2-1-1] என்கிறபடியே தூங்காமல் ஸதாதர்சனம் பண்ணும் தேவர்கள் தூங்கினுலும் என் கண்கள் உறங்குவதாயில்லை. (நெடுங்கண்கள்) அவனை அகப்படுத்துவதற்குக் காரணமாயிருந்த கண்ணின் பரப்பெல்லாம் எனக்குத் தலைப்பாரத்திற்கே ஆயிற்று. 'அஸிதேக்ஷணு' [ரா-ஸு 16-5] [கறுத்த கண்களையுடைய சீதாபிராட்டி] என்று கூடியிருக்கும்போது அவனையும் ஈடுபடுத்தவல்ல கண்களன்றோ இவளுடையது. (ஊராருறங்கிலும் தானுறங்கா) ''தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே'' [திருவிருத்தம் 97] என்கிற படியே இவளுக்குக் கண்ணுறக்கமில்லை என்பது ஸித்தம். ''ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்'' [திருவாய் 6-7-2] என்கிறபடியே இவள்

பேரா யினவே பிதற்றுவன் பின்னையும்
காரார் கடல்போலுங் காமத்த ராயினார் 64
ஆரே பொல்லாமை யறிவார் அதுநிற்க
ஆரானு மாதானு மல்ல ளவள்காணீர் 65

பேர் ஆயினவே — திருநாமங்களாயுள்ளவற்றையே, பிதற்றுவன் — வாய் வந்தபடி சொல்லிக்கொண்டிரா நின்றேன்; பின்னையும் — மேலும், கார் ஆர் கடல் போலும் காமத்தர் ஆயினார் — ஆழ்ந்த கடல்போலே அளவுகடந்த காமத்தையுடையவர்கள், ஆரே — ஆர்தான், பொல்லாமை அறிவார் — ஸ்வரூப விரோதமறிவர்கள்? அதுநிற்க — அது ஒருபுறமிருக்க, ஆரானும் ஆதானும் அல்லள்காணீர்-ஸாமாந்யமான ஒருத்தியல்லள்; (அறிவு மிக்கவள்)

---

ஊரிலே உறங்கியறிவாருமில்லையிறே. இப்படியிருக்கிற அவர்களுறங்கிலும் என் கண்களுறங்காவென்கிறார்.

(உத்தமன்) உறக்கமறும்படி தன் தாழ்ச்சியைக்காட்டி அகப்படுத்தின மேன்மையையுடையவன். (பேராயினவே பிதற்றுவன்) இப்படி அபிமதகாலத்தில் உதவாதொழிந்தால் அவனை நினையாதிருக்கவிறேயடுப்பது. அது மாட்டாதே அவன் திருநாமங்களை அடைவுகெடச் சொல்லா நிற்பன்.

(பின்னையும்) அதுக்குமேலேயும் சில ஹிதஞ்சொல்ல. (காரார் கடல்போலும் காமத்தராயினார் ஆரேபொல்லாமை

---

பிறந்த ஊரிலுள்ளாரும் உறங்கியறியார்கள். அவர்கள் ஒருவேளை உறங்கினாலும் என் கண்கள் உறங்கமாட்டா என்கிறாள்.

(உத்தமன்) ஸௌலப்யமாகிற பெருமையையுடையவன்; நான் தூக்கமற்றுப்போகும்படி தன் நீர்மையைக்காட்டி என்னை வசப்படுத்தின பெருமையை உடையவன்; (பேராயினவே பிதற்றுவன்) இப்படி விரும்பிய போது உதவாவிடில் அவனை நினையாதிருப்பதன்றோ சிறந்தது. அதுவும் முடியாமல் அவன் திருநாமங்களைப் பிதற்றுவேன்; கிரமமில்லாமல் சொல்லுவேன். அத்யந்த பக்தியுக்தர்களால் முறையறிந்து பரிமாற முடியாதன்றோ.

(பின்னையும்) அதுக்குமேலேயும் சில நல்வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அதாவது:—"இப்படி பிரிவாற்றாமையாலே என் முயற்சியில்

அறிவார்) இங்ஙன் சொல்லலாமோ? பத்துமாஸமாறியிருந்திலளோ ஸ்ரீஜநகராஜன் திருமகள்? அப்படியிராவிடில் பொல்லாதாகாதோ? என்னில், பேராழமான கடல்போலே ஆசை கரைபுரண்டு போராநிற்க "பொல்லாங்கு சொல்லுவர்கள்" என்று ஆறியிருக்கப்போமோ? ஆறியிருந்தவர்களுக்கு ஆசை அளவுபட்டதாமித்தனையிறே. ஸ்வரூப ஜ்ஞாநத்தாலே ஆற்றலாமோ அவ்வடிவைக் காணவேணுமென்னுமாசை கரைபுரண்டிருப்பார்க்கு? ஸ்வரூப ஜ்ஞாநத்தால் ஆற்றிருண்டாகில் அவராசை மட்டமாமித்தனையிறே.

(அதுநிற்க) இது நீ துணிந்தமையித்தனை யென்ன வேண்டா, இதுக்கு சிஷ்டாசாரமுண்டென்கை; பழையருமாய் விலக்ஷணருமாயிருப்பார் அநுஷ்டித்தார்களென்கை. (ஆரானுமாதானுமல்லள்) சைதந்யம் குறைந்தவளுமல்லள்

---

ஈடுபடலானேன் என்று நீ சொல்லலாமோ? ஜனகராஜன் திருமகள்பிரிந்து பத்துமாதம் பொறுத்திருக்கவில்லையோ? அப்படி நீயும் இல்லாவிடில் உன் ஸ்வரூபத்துக்கு இழுக்கன்றோ?" என்று, அவர்களுக்கு பதிலுரைப்பதற்காக 'மேலும்' என்று தொடங்குகிறாள். (காரார் கடல்போலும் காமத்தராயினார் ஆரே பொல்லாமை அறிவார்) நீர் நிறைந்து ஆழ்ந்திருக்கும் கடல்போலே ஆசை கரைபுரண்டு பெருகாநிற்க 'ஊரார் தூற்றுவார்கள்' என்று பொறுத்திருக்கமுடிமோ? பிரிந்துபொறுத்திருந்தவர்கள் ஆராயிருந்தால் என்ன? அவர்களுக்கு ஆசை என்னைவிடக் குறைவானது என்றே கொள்ளவேண்டும். காண்பார் கண்ணையும் நெஞ்சையும் கொள்ளைகொள்ளும் கண்ணனின் கார் மேனியைக் காணவேணும் என்னும் ஆசை கரைபுரண்டிருக்கும் என் போன்றவர்க்கு ஸ்வரூபஜ்ஞானத்தால் பொறுக்கமுடியுமோ? **"தத் தஸ்ய ஸத்ருசம் பவேத்"** [என்னை அழைத்துச்செல்வது அவருக்கே தகுந்தது] என்று ஸ்வரூபஜ்ஞானத்தால் சீதாபிராட்டிபோல்வார் பொறுத்திருந்தாரெனில், அவர்களுடைய ஆசை என்னுடையதைவிட மட்டமானதென்றே முடிவுகட்டவேண்டும். நான் செய்வது தவறென்னலாகாது.

(அது நிற்க) 'நீ செய்து விட்டதால் தவறாகாது என்று ஸ்தாபிக்க முடியாது' என்று சொல்லவேண்டா; இதற்கு நல்லோர்களின் ஒழுக்கமும் ப்ரமாணமாக உண்டு; பழையவர்களுமாய், சிறந்தவர்களுமாயிருப்பவர்கள் காதலுக்காகப் பெண்மையை அழித்துக்கொண்டு நடந்துகாட்டியிருக்கிறார்கள். (ஆரானுமாதானுமல்லள்) ஆரானுமல்லள்-அறிவுகுறைந்தவளுமல்லள்; ஆதானுமல்லள்-அசேதனத்தைப்போலே அறிவற்றவளுமல்லள். அவள்

வாரார் வனமுலை வாசவ தத்தையென்று
ஆரானுஞ் சொல்லப் படுவா ளவளுந்தன் 66
பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள் 67
ஊரா ரிகழ்ந்திடப் பட்டாளே மற்றெனக்கிங்கு

வார் ஆர் வனம் முலை வாசவதத்தை என்று — கச்சணிந்த அழகிய முலையையுடைய 'வாசவதத்தை' யென்று, ஆரானும் சொல்லப்படுவாள்- எல்லாராலும் புகழ்ந்து சொல்லப்பட்டவளானவள், அவளும் — அந்த வாஸவதத்தை தானும், தன் பேர்ஆயம் எல்லாம் ஒழிப — தனது சிறந்த தோழிகளையெல்லாம் விட்டிட்டு, பெரு தெருவே — பெரிய தெருவழியே, தார் ஆர் தட தோள் தளைகாலன் பின் போனாள் — மாலை யணிந்த பெரிய தோள்களையுடையனும் விலங்கிடப்பெற்ற கால்களையுடையனுமான வத்ஸ ராஜனின் பின்னே புறப்பட்டுப்போனாள்; ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே — (அவள்) ஊராராலே நிந்திக்கப்பட்டாளோ? (இல்லை). இங்கு — இப்படிப்பட்ட எனது அவஸ்தையிலே, எனக்கு — (இத்துணிவுடைய) எனக்கு,

---

அசித்கல்பையுமல்லள். (அவள் காணீர்) அவளைக் கேளுங்கள். (வாரார் வனமுலை) தன்னால் தரித்துத் தாங்கவொண்ணாத முலையென்று பருவம் மிக்கிருக்கிறபடி சொல்லுகிறது. காந்தன் தாங்குதல், அது பெறாதபோது வாராலே தரித்தல் செய்யுமித்தனை. (வாசவதத்தையென்று ஆரானுஞ் சொல்லப் படுவாள்) ப்ரஸித்தையன்றோ? விலக்ஷணரெல்லாங் கொண்டாடப்பட்டவளன்றோ? ஸ்ரீஜனகராஜன் திருமகள் ஓலக்கத்திலும் குறைவற்றளொருத்தியென்று கொண்டாடப்படுமவ

---

காணீர்) அவள் ஒழுக்கத்தை நான் சொல்லக் கேளுங்கள். (வாரார் வனமுலை) தன்னாலே தரித்துநின்று தாங்கமுடியாததாய், வாராலே கட்டி வைக்கவேண்டிய முலை என்று பருவம் நிரம்பியிருக்கிறபடியைச் சொல்லுகிறது. நாயகன் தாங்கவேணும்; அது கிடையாதபோது வாராலே கட்டி வைக்கவேணும். (வாசவதத்தை என்று ஆரானும் சொல்லப்படுவாள்.) மிகவும் பிரசித்தையன்றோ? சிறந்தவர்கள் அனைவராலும் கொண்டாடப் படுமளவன்றோ. ஸ்ரீஜனகராஜன் திருமகள் கோஷ்டியிலும் குறைவற்றவள் ஒருத்தி என்று கொண்டாடப்படுமளவன்றோ. (அவளும்) இப்படி காதலனை

என்றே? (அவளும்) இத்துணிவு துணிந்தேன் நானேயல்லேன், அவளும் துணிந்தாளென்கை. (தன் பேராயமெல்லா மொழிய) உங்களை இசைவிக்கைக்காக இத்தனை வார்த்தை சொன்னேன் நான்; தோழிமாருடைய பெரிய திரளைக் கடுக விட்டு நின்றாளித்தனையன்றே? நெருப்பில் காலிடவொண்ணாதாற்போலே தோழிமார் திரளில் கால்பொருந்திற்றே அவளுக்கு? (பெருந்தெருவே) தோழிமாரைவிட்டு ஒரு மூலையிலே இருந்தாளோ? பெருந்தெருவேயன்றே போனதென்கை. (தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனாள்) விலங்கிட்டிருக்கிற வத்ஸராயன் பின்னே போகிறவிவள், தோளும் தோள்மாலையுங்கண்டு அவனையாசைப்பட்டுப் போனாற்போலேயன்றே போனது? (ஊராரிகழ்ந்திடப்பட்டாளே) அப்படி அவன்பின்னே போனவளை ஊரார் கொண்டாடின வித்தனையல்லது பழிசொன்னாருண்டோ?

---

அடை.ய முறைதவறி முயன்றவள் நான்மட்டுமல்ல; அவளும் இத்துணிவு கொண்டாள் என்கிறாள். (தன் பேராயமெல்லாம் ஒழிய) உங்களை விடத் துணியாமல், உங்களை இசையவைப்பதற்காக இத்தனை வார்த்தைகள் சொன்னேன் நான். காதலனுக்காகத் தன் தோழிகளின் பெரியகுழுவை விரைவிலே விட்டு நின்றாளன்றே அவள். நெருப்பிலே கால் வைக்க முடியாததுபோலே தோழிமார் குழுவிலே கால் பொருந்தப்பெறாத அவள் என்னிலும் துணிவு மிக்கவளன்றே. (பெருந்தெருவே) தொழிமாரை விட்டு அரண்மனையில் ஒரு மூலையிலிருந்தாளோ? அஸூர்யம் பச்யையான ராஜகுமாரியாயிருந்தும் ராஜவீதியிலன்றே நடந்து சென்றாள். (தாரார் தடந்தோள் தளைக் காலன்பின்போனான்) தன் தந்தையாலே விலங்கிடப் பட்டிருக்கிற வத்ஸராஜனாகிற தன் காதலனின் பின்னே போனாள். (தாரார் தடந்தோள் தளைக்காலன்) காலிலேயிருக்கும் விலங்கைக் கணிசியாமல், தோளிலேயுள்ள மாலையையும், அதைத்தாங்கும் தோளின் அழகையும்கண்டு அவனை ஆசைப்பட்டன்றே போனாள். (ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே) அப்படி அவன்பின்னே போனவளை ஊரார் கொண்டாடினார்களேயொழிய இகழவில்லையே. [இக்கதை பாஸனுடைய நாடகமொன்றிலும் ப்ருஹத்கதை முதலான பழைய நூல்களையும், வரலாறுகளையும் மூலமாகக்கொண்ட கதாஸரித்ஸாகரத்தில் பனிரண்டாவது தரங்கத்திலும் விவரிக்கப்பட்டுள்ளது.]

ஆரானுங் கற்பிப்பார் நாயகரே நானவனைக் 68

மற்று கற்பிப்பார்—எனது துணிவுக்கு எதிர்த்தட்டான பொறுமையை உபதேசித்தவர்கள், ஆரானும்—ஆராயிருந்தாலும், நாயகரே — அவர்கள் எனக்கு நியாமகராவரோ? (அவர்கள் பேச்சை நான் கணிசிக்க மாட்டேன்) நான் அவனை–நான் அவனுடைய,

---

(மற்றெனக்கிங்காரானும் கற்பிப்பார் நாயகரே) இத்துணிவுக்குப் புறம்பான வார்த்தைசொல்லிக் கற்பிப்பார் எனக்கு நாயகரல்லர். "பயிலுந் திருவுடையார் யவரேலு மவர்கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமர்" என்றிருக்கும் நிலைதவிர்ந்தேன். இத்துணிவுக்குடன் பட்டார் எனக்கு நாயகர்; 'க்ரமப்ராப்தி பொறுக்கவேணும்' என்றிருப்பார் எனக்கு நாயகரல்லர். "அன்னையென் செய்யிலென் ஊரென் சொல்லிலென்"

(நான்) இத்துணிவுக்குப் புறம்பானாரெல்லாரையும் விட்டிருக்கிற நான். (அவனை) ஸ்வவ்யதிரிக்தரெல்லாரையும் விடுவித்தவனை. (நானவனை) பந்தடிக்கவென்று புறப்பட்ட நான் குடக்கூத்தாடப் புறப்பட்டவனை யென்றுமாம். வழி பறிக்கப் புறப்பட்டு வழிபறியுண்டேனென்றபடி.

---

(மற்றெனக்கிங்கு ஆரானும் கற்பிப்பார் நாயகரே) இத்துணிவுக்கு மாறுபட்ட வார்த்தை சொல்லி என்னைத்திருத்த நினைப்பார் என் தலைவரல்லர். "பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர் பயிலும் பிறப்பிடை தோறு எம்மையாளும் பரமரே" [திருவாய் 3-7-1] என்றும் "தாள்தொழுவார் காண்மின் என் தலைமேலாரே" [பெரிய திரு 7-4-1] என்றுமிருக்கும் நிலை தவிர்ந்தேன். இத்துணிவுக்கு ஒப்பியூர் என்தலைவர். "காலக்ரமத்தில் அவனை அடையலாம்; அதுவரை பொறு" என்பார் என் நாயகரல்லர்; எனக்கு வேண்டாதாரே. "அன்னையென் செய்யிலென் ஊரென் சொல்லிலென்" [திருவாய் 5-3-6] என்ற பராங்குசநாயகியின் நிலைபோன்றது இப்பரகாலநாயகியின் இந்நிலையும்.

(நான்) இத்துணிவை ஆமோதிக்காதவர்கள் அனைவரையும் விட்டொழித்திருக்கும் நான்; (அவனை) தன்னைத் தவிர்ந்த அனைவரையும் விடும்படி செய்த அவனை. (நானவனை) பந்தடிக்க என்று புறப்பட்ட நான், குடக்கூத்தாடப் புறப்பட்ட அவனை என்றும் கொள்ளலாம்; என் அழகாலே அவனைக் கொள்ளைகொள்ளப்புறப்பட்டு, என் உள்ளத்தைக் அக்குடக்கூத்தனுக்குக் கொள்ளை கொடுத்தேன் என்று கருத்து.

காரார் திருமேனி காணு மளவும்போய்ச்
சீரார் திருவேங் கடமே திருக்கோவல் 69

கார் ஆர் திருமேனி காணும் அளவும்போய்—காளமேகத்திருவுருவைக் கண்டு களிக்கும் வரையில் ஊரூராகப்போய், சீர் ஆர் திருங்கடமே...... வடமதுரை— சீர்மைமிக்க திருவேங்கட மலை, திருக்கோவலூர்,

---

(காரார் திருமேனி காணுமளவும்போய்) காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவிறே அடியிலே இப்படிப் பட்டது. இத்துணிவு எவ்வளவும் செல்லக்கடவதென்னில்: காரார்திருமேனி கண்டதுவே காரணமாகப் பிறந்ததுணிவு காரார்திருமேனி காணுமளவும் செல்லக்கடவதிறே. இவளுடைய உத்யோகத்தைக்கண்ட தோழி "அவனோடு ஸம்ச்லேஷிக்கக்கடவை" என்ன, பண்டும் கண்டமாத்ரத்திலேயாயிற்று இப்பாடுபட்டது. இப்போதும் கண்டு விடுமித்தனை.

நீ காணும்படி என்னென்னில்; (சீரார் திருவேங்கடமே) அவன் குணங்கள் கொண்டாடியிருக்கும் தேசமெங்கும் புக்கு என்வடிவைக்காட்டி அவன் குணத்தையழித்துப் பெறக்

---

(காரார் திருமேனி காணுமளவும் போய்) முதலில் காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவன்றோ இவள் இப்பாடுபட்டது. மடலெடுக்கப் புறப்பட்ட உன் துணிவு எதுவரையில் நிலைத்துநிற்கும் எனில்: காரார் திருமேனி கண்டதுவே காரணமாகப் பிறந்த துணிவு காரார் திருமேனி காணுமளவும் செல்லுவதே பொருத்தமுடைத்தன்றோ என்கிறாள். அன்றிக்கே, இவளுடைய இம்முயற்சியைக்கண்ட தோழி "நீ அவனோடு கூடக்கடவாய்" என்று நல்வார்த்தை சொல்ல, "அவனோடு கூடவேண்டுமென்னும் அவசியமுமில்லை; முன்பும் அவனைக் கண்டவுடன்தான் இப்பாடு பட்டது. இப்போதும் கண்டுவிட்டால் போதுமானது" என்கிறாளாகவுமாம்.

நீ காணும் வழியென்ன? எனில்: (சீரார் திருவேங்கடமே......) அவன் ஒவ்வொரு குணங்களை வெளிப்படுத்தியிருக்குமிடமாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் ஊரெல்லாம் புகுந்து, விரஹம்தின்ற என் உடம்பைக்

**ஊரே மதிட்கச்சி யூரகமே பேரகமே**

*மதிள் சூழ்ந்த காஞ்சி நகரத்திலுள்ள ஊரகம், அப்பக்குடத்தான் ஸந்நிதி,*

---

*கடவேன். (சீரார் திருவேங்கடமே) நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிற நிலையாயுள்ள ஏற்றமுண்டிறே திருமலைக்கு; அங்கே சென்று என் வடிவைக்காட்டி அவன் உபயவிபூதிக்கு ஆளாகாதபடி பண்ணுகிறேன்.*

*(திருக்கோவலூரே) "ஆச்ரிதரிரண்டு மூன்றுபேர் நின்ற மண்" என்று அம்மண்ணையுகந்து "வாசல் கடைகழியாஉட் புகாக் காமர் பூங்கோவலிடைகழியே பற்றி" என்று நிற்*

---

காட்டி அவன் குணத்தை அழிப்பதன்மூலம் அவனைக் கதறியோடிவரச் செய்து, காட்சியைப் பெறுவேன். இனி, அவன் குணக்கொடிநாட்டி யிருக்கும் சில முக்கியமான ஊர்களைப் பேசுகிறாள்,–(சீரார் திருவேங்கடமே) சீர்மைமிக்க திருவேங்கடம்; **"மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான்"** [அமலனாதி 3] **"கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே"** [திருவாய் 1-8-3] **"தண்ணருவி வேங்கடமே வானோர்க்கும் விண்ணோர்க்கும் வைப்பு"** [நான்-திருவ 45] என்கிறபடியே நித்யஸூரிகளுக்கும், நித்ய ஸம்ஸாரிகளுக்கும் ஒரு சீராக முகங்காட்டி நிற்கிற ஏற்றம் உண்டன்றோ திருமலைக்கு. அங்கே சென்று, 'இவன் எனக்கு முகங்காட்டின அழகைப் பார்த்தீர்களா' என்று கூவிச்செல்வதன்மூலம் இவன் உபயவிபூதிக்கும் நாயகனாகாதபடி பண்ணுகிறேன்.

(திருக்கோவலூரே) 'முதலாழ்வார்களில் முதலில் ஒருவர் கிடந்து, பிறகு இருவரிருந்து, பின்னர் மூவர் நின்ற இடம்" என்னும் காரணத் தாலே அம்மண்ணை உகந்து,

> **"நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்**
> **பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்**
> **கடைகழியா உட்புகா காமர் பூங்கோவல்**
> **இடைகழியே பற்றி யினி"** [முதல்திருவ 86]

என்கிறபடியே அம்மண்ணின் மணத்தை முகர்ந்துகொண்டு இன்றும் எழுந் தருளியிருக்கிறானாக ப்ரஸித்தமன்றோ. அங்கே சென்று 'அவன் அடிச்சியான

கிறஞக ப்ரஸித்தமிறே. அங்கே சென்று "அவன் ஆச்ரிதை யான என்னைக் கைவிட்டபடி பாருங்கோள்" என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

(மதிள்கச்சி ஊரகமே) உள்ளுக்கிடக்கிற வஸ்துவின் சீர்மைக்குப் போரும்படியாக மதிளையுடைய திருக்கச்சியில் திருவூரகத்திலே எல்லாரோடும் வரையாதே பொருந்தும் ஸ்வபாவனென்று தெரியும்படி திருவுலகளந்தருளின வ்யா ஜத்தைப் ப்ரகாசிப்பித்து நிற்கிருனிறே; அங்கே சென்று என் வடிவைக்காட்டி, "என்னை வரைந்தபடி பாருங்கோள்" என்கிறேன்.

(பேரகமே) மதிளுமின்றியே ஆற்றங்கரையிலே திருப் பேரிலே வழிப்போவாரும் தன்னைக்காணும்படி திறந்த வாச லாய்த்தன்னை ஸர்வஸ்வதாநம்பண்ணிக் கிடக்கிருனென்று ப்ரஸித்தமிறே. அங்கே சென்று என் வடிவைக் காட்டி

---

என்னைக் கைவிட்டபடியைப் பாருங்கோள்' என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

(மதிள் கச்சி ஊரகமே) உள்ளேயிருக்கும் பரம்பொருளின் பெருமைக் குத் தக்கபடியான திண்மைமிக்க மதிளையுடைய திருக்கச்சியில் திருவூ ரகத்தில் திரிவிக்கிரமவுருவோடு விளங்குகையாலே, திருவுலகளந்தருளுவது என்னும் வியாஜத்தாலே வஸிஷ்ட்ட சண்டாளவிபாகமற அனைவரையும் ஒரு வரம்பில்லாமல் உடைமைப்பொருள்கள் என்னும் காரணத்தாலேயே பெற்றதாய் குழந்தையைத் தடவிக்கொடுப்பதுபோலே திருவடியாலே தடவிக்கொடுத்து நின்ற நீர்மையை வெளியிட்டு நிற்கிருனன்றே. அங்கே சென்று என் உடம்பைக்காட்டி "என்னை மாத்திரம் தொடுவதில்லை என்று வரம்புகட்டிக்கொண்டிருப்பதைப் பாருங்கோள்" என்கிறேன்.

(பேரகமே) அங்கேயாவது மதிளாகிற வரம்புண்டு; அப்படி ஒரு மதிளுமில்லாமல் இரண்டாற்றுக்கு நடுவிலே திருப்பேர் நகரிலே வழிப் போக்கர்களும் தன்னைக் காணும்படி திறந்த வாசலாய்த் தன்னையும் தனதையும் நமக்குக் கொடுத்துநிற்கிருன் என்று பிரசித்தமன்றே. அங்கே

**பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே 70**
**பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர்**

*சலியாமற் கிடந்த மருத மரங்களை முறித்த கண்ணன் எழுந்தருளியிருக்கிற திருவெள்ளறை, திருவெஃகா, பெயர்பெற்ற திருவாலி நகர், திருத்தண்கால், திருநறையூர், குட்டநாட்டுத் திருப்புலியூர்,*

---

*"அவன் ஸர்வஸ்வதாநம் பண்ணுகிறபடி பாருங்கோள்" என்கிறேன்.*

*(பேராமருதிறுத்தான் வெள்ளறையே) பேராமரு தென்றது அஸுராவேசத்தாலேபேராதே நின்றதென்னுதல், தளர்நடையிட மருதிறுத்தானென்னுதல். ஸ்த்தாவரங்களிலுமகப்பட அஸுராவேசமுண்டாயிரா நின்றது; அஸுராவேசமில்லாதபடி பரிவருள்ள திருவெள்ளறையிலே நின்றருளியிருக்கிறானிறே. அங்கே சென்று என்வடிவைக் காட்டிப் "பரிவையான எனக்கு முகந்தந்தபடி பாருங்கோள்" என்கிறேன்.*

---

சென்று என் உடம்பைக்காட்டி "அவன் அனைத்தையும் அடியார்க்கு அளித்திருக்கும்படியைப் பாருங்கோள்" என்கிறேன்.

(பேரா மருதிறுத்தான் வெள்ளறையே) 'பேராமருது' என்று மருதுக்கு விசேஷணமாகக்கொண்டு அஸுராவேசத்தாலே பேராமல்நின்ற மருது என்று பொருளுரைக்கலாம்; "பொய்மாயமருதான அசுரரைப்பொன்றுவித்து" என்றார் பெரியாழ்வாரும்; அல்லது, 'பேரா' என்றது 'பேர்ந்து' என்றதாய், தளர்நடையிட்டுச்சென்று மருதமரங்களை முறித்தான் என்பதாகவும் கொள்ளலாம். 'மருதிறுத்தான் வெள்ளறையே' என்றதால் மூலைக்கும் பூண்டுகளெல்லாம் அஸுராவேசமுள்ள திருவாய்ப்பாடியிலிருந்த குறைதீர, "திருவெள்ளறை நின்றாய்! அந்தியம்போதிதுவாகும் அழகனே! காப்பிட வாராய்" என்னும் பெரியாழ்வார் வழிவந்த பெரியோர்கள் வாழும் திருவெள்ளறையில் அவர்களுக்கு முகங்கொடுத்து நிற்கிறானன்றோ; அங்கே சென்று என் வடிவைக்காட்டி 'பரிவையான எனக்கு முகங்கொடுத்தபடியைப் பாருங்கள்' என்று பறைசாற்றுகிறேன். (வெஃகாவே) திருமழிசையாழ்வார்,

**"கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டா—துணிவுடைய**

(வெஃகாவே) ஆச்ரிதன் "போ" என்ன, படுக்கை சுருட்டிக்கொண்டு அவன்பின்னே போய், "கிட" என்ன, காற்கடை தலைமாடாகக்கிடந்தானாக 'ஆச்ரிதன்சொன்னபடி செய்தான்' என்று ப்ரஸித்தமிறே; நான் சொன்னபடி செய்தானாகவில்லையேயென்று என் வடிவைக் காட்டுகிறேன்.

(பேராலி) பிறந்த ஊருமாய்த் திருப்பதியுமாய் எனக்குத் தன்னை முற்றூட்டாக்குகிறானென்றிறே (நாட்டிலே) ப்ரஸித்தி; அங்கே சென்று எனக்கு முற்றூட்டாக இவன் உடம்பு கொடுத்தபடி என்னுடம்பிலே பாருங்கோளென்கிறேன். "ஏன்றான்? இவள் திருவாலியிலேயன்றோ இருக்கிறது. திருவாலியிலேசென்று பழியிடுவேனென்னுமது கூடாதே" என்னில், அதுவும் அஸத்கல்பமாய்க் கிடக்கிறது காணுமிவளுக்கு.

---

**செந்நாப்புலவனும் யான் போகின்றேன் நீயும் உன்**
**பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்"**

என்றவுடன் படுக்கையைச் சுருட்டிக்கொண்டுபோய்,

**"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய**
**செந்நாப்புலவனும் யான் போக்கொழிந்தேன் நீயும் உன்**
**பைந்நாகப் பாய் விரித்துக்கொள்"**

என்றவுடன் முன்பிருந்த கால்மாடு தலைமாடாம்படி கிடந்து, 'அடியார் **சொன்ன வண்ணம் செய்தான்'** என்று பெயர்பெற்றுக் கிடக்கிறானன்றோ; அங்கு சென்று, 'நான் சொன்னவண்ணம் செய்தானா பாருங்கள்' என்று கூறி என் வடிவைக்காட்டி அவன் பெயரை அழிக்கிறேன்.

(பேராலி) பிரசித்தி பெற்ற திருவாலி; நான் பிறந்த ஊருமாய், திவ்ய தேசமுமாய் எனக்குத் தன்னை முழுஉணவாகக் கொடுக்கிறான் என்றன்றோ உலகத்தில் பிரசித்தி. அங்கே சென்று "எனக்கு முழுஉணவாக இவன் தன்னுடம்பைக் கொடுத்த அழகை என்னுடம்பிலே பாருங்கள்; என்னை எவ்வளவு நாளாகப் பட்டினி போட்டிருக்கிறான் என்று காணுங்கள்" என்கிறேன். ":இவள் திருவாலியிலேயன்றோ இருக்கிறது. 'திருவாலியிலே சென்று தூற்றுவேன்' என்பது பொருந்துமோ?" என்னில்: அத்திருப்பதி

ஆராமஞ் சூழ்ந்த வரங்கங் கணமங்கை 71

அழகிய தோட்டங்கள் சூழ்ந்த திருவரங்கம், திருக்கண்ணமங்கை,

(தண்கால்) குளிர்ந்தகாற்றுப்போலே ஆச்ரிதருடைய ச்ரமம் தீரஉதவும் ஸ்வபாவனென்றிறே "தண்கால்" என்று பேராயிற்று; அங்கேசென்று, என் ச்ரமம் தீரஉதவினபடி பாருங்கோளென்று என் வடிவைக்காட்டுகிறேன்.

(நறையூர்) தன் ஸ்வாதந்த்ர்யமெல்லாம் செல்லாமே பிராட்டி ஸ்வாதந்த்ர்யமேயாகவெண்ணி அவளுக்கு பவ்யனு யிருக்கிறுனென்று ப்ரஸித்தமிறே, அங்கேசென்று, இவன் பிராட்டிக்கு பவ்யனுனபடி என் வடிவிலே பார்த்துக் கொள்ளுங்கோளென்கிறேன்.

(திருப்புலியூர்)*மெல்லிலைச்செல்வ வண்கொடிப் புல்கவீங் கிளந்தாள் கமுகிறே. அவன் நின்ற ஊரில் ஸ்த்தாவரங்களு முட்பட பரஸ்பரம் மிதுநமாய்ச் சேர்ந்து வர்த்திக்குமென் றிறே ப்ரஸித்தி; அங்கே சென்று என்னுேடு சேர்ந்தபடி பாருங்கோளென்கிறேன்.

---

இருந்தும் இல்லாததாகவே தோற்றுகிறபடியால் அருகிலிருக்கிறது என்னும் நினைவில்லை இவளுக்கு.

(தண்கால்) குளிர்ந்த காற்றுப்போலே அடியாருடைய சிரமங்களைத் தீர்க்கும் தன்மையை உடையவன் என்றன்றே 'தணகால்' என்று பெயராயிற்று. அத்திருப்பதிக்குச்சென்று "என் துன்பம்தீர உதவின அழகைக் கண்படைத்தவர்களெல்லாம் காணுங்கள்" என்று என்வடிவைக் காட்டுகிறேன்.

(நறையூர்) தன் ஸ்வாதந்திரியம் ஒன்றும் விலை செல்லாமல் பிராட்டிக்கே ப்ராதாந்யம் கொடுத்து அவளுக்கு அடங்கி நடக்கிறுன் என்று பிரசித்தமன்றே. அங்கே சென்று, "இவன் அவளுக்கு அடங்கிநடக்கும் வைபவத்தை அவளுடையவளான என் வடிவிலே பார்த்துக் கொள்ளுங்கள்" என்கிறேன்.

(திருப்புலியூர்) "மெல்லிலைச் செல்வ வண்கொடிப்புல்க வீங்கிளந்தாள் கமுகின்" [திருவாய் 8-9-7] என்கிறபடியே அவன் நிற்கிற ஊரில் கூட நிற்கும் தாவரங்களும் ஆணும் பெண்ணும் சேர்ந்தே வாழும் என்றன்றே பிரசித்தி; அங்கே சென்று 'நான் நாயகனுேடு சேர்ந்திருக்கும் அழகைப் பாருங்கள்' என்கிறேன்.

(ஆராமம்சூழ்ந்தவரங்கம்) உகந்தருளின தேசங்களெல்லாம் பகலிருக்கையாய் ஆச்ரிதரக்ஷணத்துக் கேகாந்தஸ்த்தலமென்று கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிறானாயிருக்கிறது; "வன்பெருவானகமுய்ய" இத்யாதியிற் சொல்லுகிறபடியே;

---

(ஆராமம் சூழ்ந்த அரங்கம்) தோட்டங்களால் சூழப்பெற்ற அரங்கம்; இங்கு 'ஆராமம்" [தோட்டம்—நந்தவனம்] என்றது மற்றைத்திவ்ய தேசங்களை; மற்றைத் திவ்யதேசங்களால் சூழப்பெற்ற அரங்கம் என்றபடி. ஸ்ரீரங்கஸார்வபௌமனுக்குத் திருவரங்கம் அடியாரை அளிப்பதற்குரிய நித்யவாஸஸ்த்தானமாகவும், மற்றைத் திருப்பதிகள் ஆங்காங்கு வேட்டைக்குச் செல்லும்போது பகலிலே தங்கும் தோட்டங்களாயிருப்பதாகவும் ஆழ்வார்களின் திருவுள்ளம். ராஜாக்கள் ஆங்காங்கு வேட்டைக்குச் செல்லும்போது பகலிருக்கை எனப்படும் சில தங்குமிடங்களிலே தங்கி இளைப்பாறி இரவில் அரண்மனைக்கு வந்து சேருவர்களன்றோ. அது போலே என்று கொள்க. திருவாய் மொழி வெள்ளைச்சுரிசங்கு (7—3) இருபத்து நாலாயிரப்படி ப்ரவேசத்தில்—

"'நாயகன் ம்ருகயாதி வ்யாஜத்தாலே தென்திருப்பேரையிலே இருந்தான்; நானும் அங்கே புக்கல்லது தரியேன்' என்ன," என்று தொடங்கி, "'ஆராமம் சூழ்ந்த அரங்கம்' என்று திருப்பதிகள் பெருமாளுக்குப் பகலிருக்கையாகையாலே, 'தென் திருப்பேரையிலே போனான்' என்று அங்கே போகத்தேடுகிறாள்."

என்றுள்ள ஸ்ரீஸூக்திகள் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தும். திருவரங்கத்திலிருந்துகொண்டே பரமபுருஷன் உபயவிபூதியையும் ரக்ஷிக்கிறான் என்பதை,

> **"வன்பெரு வானகமுய்ய அமரருய்ய**
> **மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய**
> **துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச்**
> **சுகம்வளர அகமகிழும் தொண்டர்வாழ**
> **அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும்**
> **அணியரங்கன் திருமுற்றத்து"** [பெரு-திரு 1-10]

என்று குலசேகரப்பெருமாள் அருளிச்செய்தாரன்றோ. அவன் செங்கோல் செலுத்தும் அவ்விடத்திலே சென்று என் வடிவைக்காட்டி 'இதுவோ என்னை ரக்ஷிக்கும் அழகு? *அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர், ஈங்கோர் பெண்பால்

**காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்**

*நீலமணி வண்ணனான கண்ணபிரானது திவ்ய தேசமாகிய திருவிண்ணகர்,*

---

அங்கேசென்று என் வடிவைக்காட்டி என்னுடைய ரக்ஷணம் பண்ணினபடி பாருங்கோளென்கிறேன்.

(கணமங்கை) "கண்களாரளவும் நின்று கண்டுகொண் டேன்" என்று நான் சொன்னேனிறே; அங்ஙன் சொன்னது அவனைப் பேணினேனத்தனை; நான் கண்ணாரக் கண்டேனோ? இல்லையோ? என்று என்வடிவைக் காட்டுகிறேன்.

(காரார்மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்) பரம பதத்தைவிட்டுக் குறைவாளர்க்கு முகங்கொடுக்கத் திரு விண்ணகரிலே வந்தான். "தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழல்" என்று ப்ரஸித்தமிறே; குறைவாட்டியா யிருக்கிற எனக்கு முகம் தந்தானோ? இல்லையோ? என்று என்வடிவைக் காட்டுகிறேன்.

---

பொருளோ எனும் இகழ்வோ? இவற்றின் புறத்தாள் என்றெண்ணோ தெருளோம் அரவணையீர்' [திருவிருத்தம் 33]" என்று அனைவருமறியக் கதறுகிறேன்.

(கணமங்கை) "கண்களாரளவும் நின்று கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே" [பெரிய திருமொழி 7-10-9] என்று நான் சொன்னே னன்றோ; அப்படிச் சொன்னது அவனைக் கண்ணாரக்காண ஆசையைத் தெரிவித்துக்கொண்டதித்தனை; 'இப்படி ஆசைப்பட்ட நான் கண்ணாரக் கண்டேனா இல்லையா என்பதை என் வடிவிலே பார்த்துக்கொள்ளுங்கள்' என்று அவ்வூராரிடம் சென்று என் வடிவைக் காட்டுகிறேன்.

(காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்)நிறைவுடையார் நிறைந்த பரமபதத்தை விட்டுக் குறைவுடையார் கூடியிருக்குமிடத்தில் அவர்களுக்கு முகங்கொடுக்கத் திருவிண்ணகர்க்கு வந்து அத்தாலே நிறம்பெற்று நிற்ப வனாகப் பெயர்பெற்றிருப்பவன். "தன்னொப்பாரில்லப்பன் தந்தனன்தனதாள் நிழலே" [திருவாய் 9-3-9] என்று நம்மாழ்வாரும் அருளினரன்றோ; 'குறைவுடையாளான எனக்கு முகங்கொடுத்தானோ, இல்லையோ கண்டு கொள்ளுங்கள்' என்று என்வடிவைக் காட்டுகிறேன்.

**சீரார் கணபுரஞ் சேறை திருவழுந்தூர்** 72

*சீர்மைபெற்ற திருக்கண்ணபுரம், திருச்சேறை, தேரழுந்தூர்,*

---

(சீரார் கணபுரம்) "கண்ணபுர மொன்றுடையானுக் கடியேனொருவர்க்குரியேனோ" என்று 'நான் தனக்கு அநந்யார்ஹையாகத் தாலிகட்டியிருக்க, அங்கே சென்று என்னைத் தனக்குப் புறம்பாக்கினபடி பாருங்கோள்' என்று என் வடிவைக்காட்டுகிறேன்.

(சேறை) "மண்சேர முலையுண்டமாமதலாய்" என்று தாய்முலைக்கும் வேற்றுமுலைக்கும் வாசியறியாத முக்தனென்று ப்ரஸித்தமிறே; அங்கேசென்று என்வடிவையும் முலையையும் காட்டி என்னை ஸ்பர்சித்தானோ? இல்லையோ? என்கிறேன்.

(திருவழுந்தூர்) திருவாய்ப்பாடியில் ஆஶ்ரிதர் கரஸ்பர்சம்பட்ட த்ரவ்யத்தாலல்லது தனக்குச் செல்லாது என்னுமிடம் ப்ரகாசிக்க நிற்கிறவிடமிறே; அங்கேசென்று ஆஶ்ரித ஸ்பர்சமே இவனுக்கு தாரகமாயிருக்கிறபடி பார்க்கலாகாதோ என்று என்வடிவைக் காட்டுகிறேன்.

---

(சீரார் கணபுரம்) பரகால நாயகிக்குப் புக்ககமாயிருக்கும் சீர்மைமிக்க கண்ணபுரம். "கண்ணபுரமொன்றுடையானுக்கடியேன் ஒருவர்க்குரியேனோ?" [பெரியதிரு 8-9-3] என்று "நான் அவனுக்கே உரியவளாகத் தாலிகட்டியிருக்க, என்னைத் தவிக்கவிட்டபடியைப் பாருங்கோள்" என்று அங்கே சென்று என் னுடம்பைக் காட்டுகிறேன்.

(சேறை) "கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போல் கூந்தலாளை, மண்சேர முலையுண்ட மாமதலாய்" [பெரியதிருமொழி 7-9-1] என்று தாய்முலைக்கும் மற்றுள்ளார் முலைக்கும் வித்தியாசம் தெரியாத கைக்குழந்தை என்று பிரஸித்தமன்றோ. அங்கே சென்று என் வடிவையும் முலையையும் காட்டி, 'என் முலை விஷயத்தில் இவன் பக்ஷபாதங்காட்டின படியைக் காணீர்' என்கிறேன்,

(திருவழுந்தூர்) திருவாய்ப்பாடியில் அடியார் கைதொட்ட வெண்ணை கிடையாவிடில் தனக்கு உயிர்தரியாது என்னும் நிலை வெளிப்படும்படி ஆமருவியப்பனாய் நிற்கிற இடமன்றோ. அங்கே சென்று அடிச்சியான என் ஸ்பரிசம் இவனுக்கு தாரகமாயிருக்கிற அழகை என் உடம்பிலே பார்க்கலாகாதோ என்று என் மெலிந்தவுடலைக்காட்டுகிறேன்.

காரார் குடந்தை கடிகை கடல்மல்லை
ஏரார் பொழில்சூ ழிடவெந்தை நீர்மலை 73

*நீர் நிறைந்த திருக்குடந்தை, கடிகைத் தடங்குன்று (அதாவது—சோளஸிம்ஹபுரம்), திருக்கடல்மல்லை, அழகிய சோலைகள் சூழ்ந்த திருவிடவெந்தை, திருநீர்மலை,*

---

*(காரார் குடந்தை) ச்ரமஹரமான திருக்குடந்தையிலே "குடந்தையெங் கோவலன்" என்று ஆஸ்ரிதபவ்யனான க்ருஷ்ணன் வந்து கண்வளர்ந்தருளுகிறானென்று ப்ரஸித்தமிறே; அங்கேசென்று என்வடிவைக்காட்டி இவன் ஆஸ்ரிதபவ்யனோ? அபவ்யனோ? என்னுமிடம் ஸாதிக்கிறேன்.*

*(கடிகை) "கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்தவக்காரக்கனி" என்று ப்ரஸித்தமிறே; அங்கேசென்று தன்னுடைய ரஸ்யதை ஆர்க்குக் கண்டதென்கிறேன்.*

*(கடல்மல்லை) திருக்கடல்மல்லையில் திருவநந்தாழ்வானையும்விட்டு ஆஸ்ரிதனுக்காக தரைக்கிடை கிடக்கிறானயிறே கிடக்கிறது; அங்கேசென்று இவனோ, நானோ, தரைக்கிடை கிடக்கிறார்? என்று என்வடிவைக் காட்டுகிறேன்.*

---

(காரார் குடந்தை) களைப்பாற்றும் குடந்தைநகரிலே "குடந்தை எம் கோவலன்" [திருவாய் 10-9-7] என்று அடியார்க்கடியனான கண்ணன் வந்து கண்வளர்கின்றான் என்று பிரஸித்தமன்றோ. அங்கே சென்று என் வடிவைக் காட்டி, 'இவன் அடியார்க்கு அடியனோ கொடியனோ?' என்னும் விஷயத்தை நிரூபிக்கிறேன்.

(கடிகை) "கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த அக்காரக்கனி" [பெரியதிரு 8-9-4] என்று கற்கண்டு பழுத்துக்கனிந்ததுபோலே இனியனென்று ஸுப்ரஸித்தமன்றோ. அங்கே சென்று தன் இனிமையை இவன் சுமந்து நிற்பது யாருக்காக? தானே அனுபவிக்கவோ? "பக்தாநாம்" "ஜிதந்தே" [பக்தர்களுக்காக] என்பது பொய்யோ? என்று கேட்கிறேன்.

(கடல்மல்லை) திருக்கடல்மல்லையிலே திருவநந்தாழ்வானையும் விட்டு, புண்டரீகன் என்னும் அடியான் ஒருவனுக்காகத் தரையிலே கிடக்கிறான் என்று பெயர் பெற்றிருக்கிறானன்றோ. அங்கேசென்று, 'என்னைப் பெற இவன் தரையிலே கிடக்கிறானோ, இவனைப்பெற நான் தரையிலே கிடக்கிறேனோ என்பதை இருவர் வடிவிலேயும் பார்த்துக் கொள்ளுங்கோள்' என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

(ஏரார் பொழில்சூழிடவெந்தை) ஜாத்யுசிதமான செருக்குக்குப் போக்குவீடாகச் சோலைகளையுடைத்தான திருவிடவெந்தையிலே ஸ்ரீபூமிப்பிராட்டி பக்கல் தனக்குண்டான வ்யாமோஹம் "பார்வண்ண மடமங்கைபத்தர்" என்னும்படி வடிவிலே தோற்ற நிற்கிறுனிறே; அந்த:புரபரிகரமான என்னைப் படுத்தின பாட்டைக்காட்டி, அவளுக்கு வ்யாமுக்தனானபடி இதுவோ? என்று தன் வ்யாமோஹத்தையெல்லாம் நிலைநிறுத்துகிறேன்.

(நீர்மலை) "நீர்வண்ணன் நீர்மலைக்கேபோவேன்" என்னும்படி அடக்கம் குடிபோனர்க்கு க்லேசந்தீரும்படி ஒதுங்க நிழலாயிருக்கும் திருநீர்மலையென்றிறே ப்ரஸித்தி; அடக்கம் குடிபோன எனக்கு அத்தேசத்திலே புகவொண்ணுதபடி இருக்கிறபடியை என்வடிவில் பாருங்கோள் என்கிறேன்.

(சீராரும் மாலிருஞ்சோலை) ஆர்யர்களிகழ்ந்த தெற்குத் திக்கிலே அங்குத்தை ஸ்த்தாவரங்களோடும் தன்னேடும் வாசியற நின்று ம்லேச்சர்க்ககப்பட முகங்கொடுக்கும்

---

(ஏரார் பொழில் சூழ் இடவெந்தை) காட்டுப்பன்றியாகையாலே சாதிக்குரிய செருக்குக்குப் போக்குவிடத் தகுந்த நந்தவனங்களையுடையதான திருவிடவெந்தையிலே ஸ்ரீபூமிப்பிராட்டியிடம் தனக்குண்டான மயக்கம் "பார்வண்ணமடமங்கை பத்தர்" [திருநெடு 18] என்னும்படி தன் வடிவிலே தோற்ற நிற்கிறுனன்றே. அங்கேசென்று பிராட்டியின் அடிமையான என்னைப் படுத்தின பாட்டைக்காட்டி. "அவள்பால் இவன் காட்டும் அன்பு உண்மையோ, வெளிவேஷமோ, காணீர்" என்று அவன் அன்பை அளந்து காட்டிவிடுகிறேன்.

(நீர்மலை) "நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன்" [திருநெடு 18] என்னும்படி அவனைப் பெறவிரும்பி அடக்கமிழந்தார்க்குத் துன்பம் தீரும்படி ஒதுங்க நிழலாயிருக்கும் திருநீர்மலையெனும் திவ்யதேசம் என்றன்றே பிரஸித்தி. அடக்கம் நீங்கி மடலெடுக்கும் நிலையிலிருக்கும் எனக்கு அத்தேசத்திலும் புகமுடியாதபடியிருக்கிறபடியை என் வடிவிலே காணுங்கோள் என்கிறேன்.

(சீராரும் மாலிருஞ்சோலை) நல்லோர்களான வைதிகர்கள் ஆதிகாலத்தில் இகழ்ந்திருந்த தெற்குத் திக்கிலே அங்குள்ள தாவரங்களைப்போலே அசையாமல் நின்று,

**சீராரும் மாலிருஞ் சோலை திருமோகூர்**
**பாரோர் புகழும் வதரி வடமதுரை** 74
**ஊராய வெல்லா மொழியாமே நானவனை**

*அழகிய திருமாலிருஞ்சோலை, திருமோகூர், உலகத்தாரனைவரும் துதிக்கின்ற ஸ்ரீபதரிகாச்ரமம், வடதிசை மதுரை(முதலிய)ஊர் ஆய எல்லாம் ஒழியாமே-திவ்ய தேசங்களாயுள்ளவற்றில் ஓரிடமும் தப்பாமல் (எங்கும் புகுந்து)*

---

நீர்மையையுடையனாய் இருக்கிறானிறே; அங்கேசென்று என் வடிவைக்காட்டி எனக்கு முகங்கொடுக்கும்படியெல்லாம் நிலைநிறுத்துகிறேன்.

(திருமோகூர்) "திருமோகூராத்தன்" என்று ஆச்ரிதரோடு அவிபாகரஸ மனுபவிக்கிறானாயிறே இருக்கிறது.

(பாரோர்புகழும்வதரி)என் பேற்றுக்குத்தானோ, நானோ, தபஸ்ஸு பண்ணினாரார்?என்று என் வடிவைக்காட்டுகிறேன்.

(வடமதுரை) ஸித்தாச்ரமமாய் ஸ்ரீவாமநனெழுந்தருளியிருந்து தபஸ்ஸு பண்ணி, லவணவதம்பண்ணி ஸ்ரீசத்ருக்

---

**"புனத்தினைக் கிள்ளிப் புது அவி காட்டி**
**உன் பொன்னடி வாழ்க வென்று**
**இனக்குறவர் புதியது உண்ணும்**
**எழில் மாலிருஞ்சோலையெந்தாய்"** [பெரியாழ்திரு 5-3-3]

என்கிறபடியே தாழ்ந்தார்க்குங்கூட முகங்கொடுக்கும் ஸௌலப்ய ஸௌசீல்யங்களை உடையவனாயிருக்கிறானன்றோ. அங்கே சென்று என் வடிவைக் காட்டி எனக்கு முகங்காட்டின அழகை ஊரறியச்சொல்லி அவன் குணங்கள் பரத்வ தௌச்சீல்யங்களேயென்று நிலைநாட்டுகின்றேன்.

(திருமோகூர்) "திருமோகூர் ஆத்தன்" [திருவாய் 10-1-6] [ஆத்தன் ஆப்தன்] என்று அடியாரோடு மனம் மெய்மொழிகளாலே பிரிவின்றி இன்புறும் ஆப்தன் என்று பெயர்பெற்றுக்கிடக்கிறானன்றோ. அங்கே சென்று 'இவனுடைய ஆப்தி இருந்தபடி காணீர்' என்று காட்டுகிறேன்.

(பாரோர் புகழும் வதரி) நரர்களுடைய பேற்றுக்கு நாராயணனாகிய தான் தவம் புரிந்த இடம் என்று புவியோர் புகழும்படியிருக்குமிடமன்றோ. அங்கு சென்று, 'தவம் புரிந்த உடம்பு என்னுடையதா இவனுடையதா என்பதைக் கண்படைத்தாரனைவரும் கண்டு சொல்லுங்கள்' என்று என் வடிவைக் காட்டுகிறேன்.

நாழ்வான் படைவீடுசெய்திருந்து ராஜ்யம்பண்ணி, ஸர்வேச்வரன் தான்வந்து திருவவதரித்து இப்படியாலே பகவத் ஸம்பந்தம் மாருதேசமிறே ஸ்ரீமதுரை; நான் தோற்றி அத்தையும் கைவிட்டபடி பாருங்கோளென்கிறேன்.

(ஊராயவெல்லாமொழியாமே) ஒரிடத்தேயிருந்து இரண்டொருகாற் சொல்லிவிடுகிறேனே? சொல்லிச்சொல்லாத ஊரெல்லாம் புகக்கடவேன். வேணுமாகில் என் பின்னேவந்து பட்டோலை எழுதிக்கொள்ளுங்கள். (நான்) அவன் புக்கவிடம்புக்கு அவனை அழிக்கக்கடவநான். (அவனை) என்னையுமிப்பாடுபடுத்தி அர்ச்சகபராதீனனென்று காஹளம் பிடித்திருக்கிறவனை.

இனி அறுமிடத்தையெல்லாம் சொல்லியற வேணுமிறே (ஓரானை கொம்பொசித்தோரானை கோள்விடுத்த சீரானை) ஆனையான ஏகஜாதித்வம் பொருந்தியிருக்கச்செய்தே

---

(வடமதுரை) முதலில் ஸித்தாச்ரமமாயிருக்கையில் ஸ்ரீவாமனன் எழுந்தருளியிருந்து தவம் செய்தவிடமாய், ராமாவதாரகாலத்தில் ஸ்ரீசத்ருக்னன் லவணனை வதைத்து இதைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டவிடமாய், பிறகு ஸர்வேச்வரன் தானே கண்ணனாய்த் திருவவதரித்தவிடமாய், இப்படி பகவத்ஸம்பந்தம் நீங்காததேசம் மதுரையென்பது "**மதுரா நாம நகரீ புண்யா பாபஹரீ சுபா**" [மதுரையென்னும் நகரம் புண்ணியமாயும் பாவத்தைபழிப்பதாகவும் சுபமாகவுமிருக்கிறது] என்கிறபடியே ப்ரமாண ப்ரஸித்தமன்றோ. நான் தோன்றினதாலே அவ்விடத்தையும் விட்டு அவன் ஓடிவிட்டதைப் பாருங்கள் என்று அங்கு சென்று காண்பிக்கிறேன்.

(ஊராயவெல்லாம் ஒழியாமே) ஓரிடத்திலிருந்து இரண்டொருதடவை சொல்லி விட்டுவிடுவேனோ? வாய்விட்டுச் சொல்லாத ஊரெல்லாம் புகுந்து புறப்படுவேன். என்னால் சொல்லி மாளாது. வேண்டுமானால் என்பின்னே வந்து பட்டோலையிலே நான் புகுந்து புறப்படும் ஊரையெல்லாம் எழுதிக்கொள்ளுங்கள். (நான்) அவன் எனக்கு பயந்து ஒளிந்து கொள்ளப் புகுந்தவிடமெல்லாம் சென்று அவனுடைய கொடிகட்டிநிற்கும் குணங்களையெல்லாம் கெடுத்து அழிக்கவல்ல நான். (அவனை) என்னையும் இப்பாடுபடுத்தி அர்ச்சகபராதீனனென்று முழங்கிக்கொண்டிருக்கும் அவனை.

அர்ச்சாவதாரத்துப் பெருமைகளை அழித்ததோடு நிற்பேனோ? குணங் கொண்டாடியிருக்கும் அவதாரங்களிலும் புகுந்து குணத்தைக் கெடுப்பேன் என்கிறாள்,–(ஓரானை கொம்பொசித்து ஓரானை கோள் விடுத்த சீரானை)

ஓரானை கொம்பொசித் தோரானை கோள்விடுத்த
சீரானைச் செங்க ணெடியானைத் தேன்துழாய்த்

ஓர் ஆனை கொம்பு ஒசித்து ஓர் ஆனை கோள் விடுத்த சீரானை—குவலயாபீடமென்ற ஒரு யானையின் கொம்பை முறித்தும் கஜேந்திரனென்கிற மற்றொருயானையின் இடரைப்போக்கியும் பக்ஷபாதியெனும் பெருமை பெற்றவனாய், செம் கண் நெடியானை—சிவந்த கண்களையுடையனாய்க் கொண்டு, எனக்கு எட்டாதேயிருப்பவனாய், தேன் துழாய்—(என்னைப் பிரிந்ததால்) தேனொழுகுகின்ற திருத்துழாய்,

ஓரானையைக் கொல்லுகையாவதென்? ஓரானையை ரக்ஷிக்கையாவதென்? இதிலே கண்டதிறே இவன், ஒருமுலை பாலும் ஒருமுலை சீயுமாய்ப்போரும் பக்ஷபாதியென்னுமிடம். (சீரானை) இப்படி பொரி புறந்தடவி ரக்ஷிக்கிற குணங்களையுடையவனை வெளியிடவிறே புகுகிறேன்.

(செங்கணெடியானை) அகவாயில் வாத்ஸல்யத்துக்கெல்லாம் ப்ரகாசகமான திருக்கண்களைக்கொண்டு எனக்கெட்டாதேயிருக்கிறவனை. சேர்த்துக் குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கெட்டாமல் வைப்பாரைப்போலே.

(தேன்துழாய்த் தாரானை) ஆசைப்பட்டாரைப் பிரிந்து தனியிருக்க அமையுங்காணும் மார்பில் மாலை மதுஸ்யந்தியாகை

இதுவும் ஆனையாய், அதுவும் ஆனையாயிருக்கச்செய்தே, குவலயாபீடமாகிற ஓரானையைக்கொன்று கஜேந்திரனென்கிற ஓரானையைக் காப்பாற்றின பக்ஷபாதத்தை பார்த்தீர்களா? இதிலிருந்தே தெரியுமே இவன் ஒருமுலை பாலும் ஒருமுலை சீயுமாய், ஒருகண் வெண்ணெயும் ஒருகண் சுண்ணாம்புமாயிருக்கிறான் என்பது. (சீரானை) வெளியிலே வெல்லம்தடவி இனித்திருப்பதாய் உள்ளே சுவையற்றிருக்கும் பொரிபோலே வெளிவேஷத்திற்கு ரக்ஷிப்பதுபோலே தோற்றமளிப்பதாய், உண்மையில் நலிவதான குணங்களையுடையவனை உலகெலாம் அறியும்படி வெளியிடப்போகிறேன்.

(செங்கண் நெடியானை) உள்ளேயிருக்கும் வாத்ஸல்யத்தைக் காட்டும் செந்தாமரைக்கண் இருந்து என்னபயன்? நெடியானாயன்றோ இருக்கிறான். எனக்கு எட்டாதவனாயன்றோ இருக்கிறான். வாசனைத் திரவியங்கள் சேர்த்துக் குளிரவைத்த தண்ணீரை தாகத்தோடு வருவார்க்கு எட்டாமல் வைப்பாரைப்போலே எனக்கு எட்டாதபடியன்றோ திருக்கண்களை வைத்திருக்கிறான். (தேன்துழாய்த்தாரானை) ஆசைப்பட்டாரைப் பிரிந்து

தாரானைத் தாமரைபோற் கண்ணனை யெண்ணருஞ்சீர்ப் 76
பேரா யிரமும் பிதற்றிப் பெருந்தெருவே
ஊரா ரிகழிலு மூரா தொழியேன்நான் 77

தாரானை—மாலையையுடையனாய், தாமரைபோல் கண்ணனை அவனை—தாமரைபோன்ற திருக்கண்களையுடையனான அப்பெருமானைக் குறித்து, எண் அரு சீர் பேர் ஆயிரமும் பிதற்றி—எண்ணமுடியாத (கொடிய) குணங்களுக்கு வாசகமான (புதிய) ஸஹஸ்ர நாமமொன்றைப் பிதற்றிக் கொண்டு, பெரு தெருவே-பெரிய ராஜவீதிவழியே, ஊரார் இகழிலும்-(என்னை) ஊரிலுள்ளாரெல்லாரும் பழித்தாலும்; நான்-நான்,

---

க்கு. (தாமரைபோல் கண்ணனை) ஆசைப்பட்டாரைப் பிரிந்த அன்றுமுதல் நாள்தோறும் செவ்விபிறக்கும் திருக்கண்களையுடையவனை. (எண்ணருஞ் சீர்ப்பேராயிரமும்பிதற்றி)குண கதநம்பண்ணுகைக்கொரு ஸ்ரீஸஹஸ்ரநாமமுண்டிறே; அப்படி குணஹாநிக்கும் ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமம் பண்ணுகிறேன்.

நீ சொல்லப்படுகிற ஸஹஸ்ரநாமந்தன்னைச் சொல்லிக் காணுயென்ன; நால்வரிருவர்க்குச் சொல்லிவிடுவேனோ ஒரு மூலையிலிருந்து? இல்லையாகில் என்செய்வாயென்ன; (பெரும்தெருவே) நடுத்திருவீதியிலே புறப்படக்கடவேனென்கிறாள். (ஊராரிகழிலும்) "ஊரார்இகழ்ந்திடப் பட்டாளே?" என்று அவளை ஊரார்கொண்டாடினாற்போலே

---

தனியேயிருக்கும்போதுதான் இவன் மார்பில் மாலை தேன் சொரியும் பொழும்; தேன்துழாய்த்தாரானாயிருந்தும் தேன்துழாய் தாரான்(தாரான்) ஆகவேயிருக்கிறான். (தாமரைபோல் கண்ணனை) ஆசைப்பட்ட என் போன்றாரைப் பிரித்ததிலிருந்து தொடங்கி தினந்தோறும் புதிதுபுதிதாகக் காட்சியளிக்கும் திருக்கண்களை உடையவனை. (எண்ணருஞ்சீர்ப் பேராயிரமும் பிதற்றி) குணத்தைச் சொல்லுவதற்கு எண்ணவெண்ண இனிக்கும் ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமம் உண்டன்றோ. அப்படியே குணக்கேட்டுக்கும் ஒரு ஸ்ரீஸஹஸ்ரநாமம் பண்ணுகிறேன்.

'நீ சொல்லப்போகிற ஸஹஸ்ரநாமத்தைச் சொல்லிக்காட்டு' என்ன ஒரு மூலையிலே முடங்கியிருந்து நாலுபேர் இரண்டுபேருக்குச் சொல்லி விட்டுவிடுவேனோ? இல்லையாகில்என்னசெய்வாய்? என்ன,-(பெரும்தேருவே) நடுத்தெருவிலே அதிலும் ராஜவீதியிலே புறப்படப்போகிறேன் என்கிறாள். (ஊரார் இகழிலும்) "ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே" [சிறிய திருமடல் 68] என்று அவளை ஊரார் கொண்டாடினாற்போலே என்னையும்

**வராா்பூம் பெண்ணை மடல்.**

வார் ஆர் பூ பெண்ணை மடல்ஊராதொழியேன் நீண்டுஅழகிய பனையைக் கொண்டு மடலூர்வதை நிறுத்த மாட்டேன் (மடலூர்ந்தே தீர்வேன்.)

---

என்னையுந் தலையாலே சுமப்பர்கள்; சுமவாதே இகழ்ந்தார்களேயாகிலும். (ஊராதொழியேன்நான்) இவர்கள் கொண்டாடாதே பழிசொன்னார்களேயாகிலும் நான் மடலூருகை தவிரேன். (வாரார்பூம் பெண்ணைமடல்) கையிலே ப்ரஹ்மாஸ்த்ரமிருக்கச்செய்தே எதிரிகள் கையிலே எளிவரவுபடுவாரைப்போலே, என்கையிலே மடலிருக்க அபிமதம்கிடையாதிருக்கவேணுமோ எனக்கு? (வாரார்பூம் பெண்ணை மடல்) ஒழுகு நீண்டு தர்சநீயமான பனைமடலிருக்கிறபடி கண்டறிதியே? ப்ரஹ்மாஸ்த்ரமிருக்கிறபடி கண்டறிதியே?

பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
சிறியதிருமடல் வ்யாக்யானம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

## கம்பர் பாடல்

**ஊரா தொழியே னுலகறிய வொண்ணுதலீர்**
**சீரார் முலைத்தடங்கள் சேரளவும்—பாரெல்லாம்**
**அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர்**
**மன்றோங்க வூர்வன் மடல்.**

---

தலையாலே சுமந்து கொண்டாடுவார்கள். அப்படிக் கொண்டாடாமல் இகழ்ந்தார்களேயாகிலும் நான் மடலூர்வதை விடமாட்டேன். (வாரார் பூம் பெண்ணை மடல்) கையிலே ப்ரஹமாஸ்த்திரமிருக்க எதிரிகளான இந்திரஜித் முதலானோரிடம் தாழ்ச்சியுற்ற அவர்களைப்போலே என் கையில் பனைமடலிருக்க என் விருப்பம் நிறைவேறாமலிருக்குமோ? (வாரார் பூம் பெண்ணை மடல்) நீண்டதாய் அழகியதான பனைமடல் என் கையிலிருப்பதைப் பார்த்தீர்களா? என்னுடைய ப்ரஹ்மாஸ்த்ரமிருந்தபடியைக் கண்டீர்களோ?

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகாசிரியரான
ஸ்ரீகிருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய
சிறியதிருமடல் வ்யாக்யானம் முற்றிற்று.